https://www.al-feqh.com/ta



சுத்தமும் தண்ணீரும்

பொருளடக்கம்

சுத்தம்

சுத்தத்தின் வரைவிலக்கணம்

சுத்தத்தின் வகைகள்

1. அகச் சுத்தம்

2. புறச் சுத்தம்

தண்ணீர்

தண்ணீரின் வகைகள்

1. சுத்தமான தண்ணீர்

2. அசுத்தமான தண்ணீர்

சுத்தம்

மொழி ரீதியில் சுத்தம்

அசுத்தங்களை விட்டும் சுத்தமாகுதல், நீங்குதல்,

நடைமுறை ரீதியில்

தொடக்கிலிருந்து சுத்தமாகுதல், நஜீஸிலிருந்து நீங்குதல்

https://www.al-feqh.com/ta

சுத்தத்தின் வகைகள்





சுத்தத்தின் வகைகள்

1. உள்ரங்க சுத்தம்

இது இணைவைப்பு, பாவம், அதோடு தொடர்புடைய விட்டும் நீங்கும் உளச் சுத்தத்தை குறிக்கின்றது. உள்ளத்திலிருந்து இணைவைப்பு பூரணமாக இல்லாமல் இருப்பதே உண்மையான சுத்தமாக இருக்கின்றது. அல்லாஹ் கூறுகிறான்:

{ஈமான் கொண்டவர்களே! நிச்சயமாக இணை வைத்து வணங்குவோர் அசுத்தமானவர்களே!} [தவ்பா – 28]

மேலும் நபியவர்கள் கூறினார்கள்: «நிச்சயாக ஒரு இறைவிசுவாசி நஜீஸாகமாட்டான்»(புஹாரி,முஸ்லிம்).

https://www.al-feqh.com/ta

2. புறச் சுத்தம்

இது தொடக்குகளிலிருந்தும், நஜீஸ்களிலிருந்தும் உடலை சுத்தமாக்குதலை குறிக்கின்றது. மேலும் இது இரண்டு வகைப்படும்.

தொழுகையை தடுக்க கூடிய தொடக்கு

1- தொடக்கிலிருந்து சுத்தமாகுதல்

தொடக்கு – இது மனித உடம்பில் ஏற்படும் தொடக்கை குறிப்பிடுகின்றது. இது சுத்தத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் ஒரு முஸ்லிமுடைய இபாதத்தை மேற்கொள்ளாமல் தடுக்கின்றது. உதாரணமாக தொழுகை, கஃபாவை தவாப் செய்தல். இன்னும் பல உதாரணங்கள் இருக்கின்றன. தொடக்கு இரண்டு வகைப்படுகின்றன.

சிறு தொடக்கு

வுழுச் செய்வதை அவசியமாக்கும் தொடக்கை இது குறிக்கும். உதாரணமாக சிறுநீர், மலம் கழித்தல், அதே போன்று வுழுவை முறிக்கும் அனைத்தும் இதனுள் அடங்கும். ஒருவர் மேற்படி காரியங்களில் இருந்து சுத்தமாக வுழு செய்ய வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்: {அல்லது உங்களில் எவரும் மல ஜலம் கழித்து வந்தாலும், அல்லது நீங்கள் பெண்களைத் தீண்டி (உடல் உறவு கொண்டி)ருந்தாலும் (உங்களைச் சுத்தப்படுத்திக் கொள்ள) உங்களுக்குத் தண்ணீர் கிடைக்காவிட்டால் (தயம்மும் செய்து கொள்ளுங்கள்; அதாவது) சுத்தமான மண்ணைக் (கையினால் தடவிக்) கொண்டு அவைகளால் உங்கள் முகங்களையும், உங்களுடைய கைகளையும்}. [மாயிதா – 06]



வுழு சிறு தொடக்கை சுத்தப்படுத்தக் கூடியது.

பெருந் தொடக்கு

குளிப்பு பெறுந் தொடக்கை சுத்தப்படுத்தக் கூடியது.

குளிப்பை அவசியமாக்கும் தொடக்கை இது குறிக்கும். உதாரணமாக உடலுறவு கொள்ளல், மாதவிடாய், அதே போன்று வுழுவை முறிக்கும் அனைத்தும் இதனுள் அடங்கும். ஒருவர் மேற்படி காரியங்களில் இருந்து சுத்தமாக வுழு செய்ய வேண்டும். : {நீங்கள் பெருந்தொடக்குடையோராக (குளிக்கக் கடமைப் பட்டோராக) இருந்தால் குளித்து(த் தேகம் முழுவதையும் சுத்தம் செய்து)க் கொள்ளுங்கள்; உங்களுக்குத் தண்ணீர் கிடைக்காவிட்டால் (தயம்மும் செய்து கொள்ளுங்கள்; அதாவது) சுத்தமான மண்ணைக் (கையினால் தடவிக்) கொண்டு அவைகளால் உங்கள் முகங்களையும், உங்களுடைய கைகளையும் தடவிக் கொள்ளுங்கள்}. [மாயிதா – 06].

மேலும் ஒருவர் சுத்தத்தின் போது வுழு செய்யவோ அல்லது குளிக்கவோ இடர் ஏற்படுமிடத்து அவர் தயமும் செய்து கொள்ளலாம்.

2. நஜீஸிலிருந்து சுத்தமாகுதல்

இது உடல், ஆடை, இடம் என்பவற்றிலிருந்து நஜீஸை நீக்குவதை குறிக்கின்றது. நஜீஸை நீக்குவது வாஜிபாகும். அல்லாஹ் கூறுகின்றான்: {உம் ஆடைகளைத் தூய்மையாக ஆக்கி வைத்துக் கொள்வீராக}. [முத்தத்திர் – 04] நபியவர்கள் கூறினார்கள்: «கப்றில் அதிகமான வேதனைகளுக்கு சிறுநீரே காரணமாகும்»(ஆதாரம் இப்னு மாஜா).

உடலை சுத்தப்படுத்தல்

மேலும் நபியவர்கள் கூறினார்கள்: «உங்களில் ஒருவர் பள்ளியினுள் நுழைந்தால் அவரது பாதணியினை பார்க்கட்டும், அதில் நஜீஸான ஏதாவது இருப்பின் அதனை நீக்கி விட்டு தொழட்டும்» (ஆதாரம் அபூதாவுத்).

இடத்தை சுத்தம் செய்தல்

ஆடையை சுத்தம் செய்தல்

https://www.al-feqh.com/ta

தண்ணீர்

தண்ணீரின் வகைகள்

நீரின் வகைகள்

முதலாவது – சுத்தமான நீர்

இது தன்னளவில் சுத்தமானதோடு பிறவற்றையும் சுத்தப்படுத்தும். உதாரணமாக :

1. பரிசுத்தமான நீர்

படைக்கப்பட்டது போல நிலையாக இருக்கும் நீர். மழை, பனிக்கட்டி போல வானத்திலிருந்து இறங்கப்பட்டவை, அல்லது கடல், ஆறு, கிணறு போன்ற நிலத்தில் தேங்கி ஓடிக் கூடிய நீர். அல்லாஹ் கூறுகிறான்: {இன்னும், அவன்தான் தன்னுடைய திருபை (மழை)க்கு முன்னே காற்றுகளை நன்மாராயமாக அனுப்பி வைக்கின்றான்; மேலும், (நபியே!) நாமே வானத்திலிருந்து தூய்மையான நீரையும் இறக்கி வைக்கிறோம்}. *[அல் புர்கான் – 48]*

மேலும் அல்லாஹ் கூறுகிறான்: {அவன் உங்கள் மீது வானிலிருந்து மழை பொழியச் செய்தான்} *[அன்பால் - 11]*.

நபியவர்கள் பிரார்த்தனை செய்யும் போது பின்வருமாறு கேட்பார்கள்: «"யா அல்லாஹ் எனது பாவங்கை பனிக்கட்டி, நீர்களை கொண்டு கழுவுவாயாக!»*(புஹாரி முஸ்லிம்)*.

மேலும் நபியர்கள் கூறினார்கள்: «"கடல் நீர் சுத்தமானதாகும். அதில் செத்தவைகளும் உங்களுக்கு அனுமதிக்கப்பட்டதாகும்»*(ஆதாரம் அஹ்மத், அபூதாவுத்)*.

கிணறுகள்

மழை

ஆறுகள்

கடல்கள்

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

2. பயன்படுத்திய நீர்

இது வுழு செய்தவர், குளித்தவரின் உடல் உறுப்புகளிலிருந்து கீழே விழும் நீரை குறிக்கின்றது. இந்த நீரை சுத்தம் செய்ய பயன்படுத்தாலாம். இதனை பின்வரும் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களது செய்தி உறுதிப்படுத்துகின்றது. நபியர்களின் சில: «மனைவியர்களில் சிலர் பெரிய பாத்திரத்தில் கடமையான குளிப்பை நிறைவேற்றுவார்கள்.21 நபியவர்கள் அந் நீரில் வுழு செய்ய நாடினார்கள். அப்போது நபியவர்களது மனைவியர் கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே நான் குளிப்பு கடமையான நிலையில் இருக்கிறேனே! என கேட்டார்கள். அதற்கு நபியவர்கள் நிச்சயாக நீருக்கு குளிப்பு கடமை கிடையாது“ என்றார்கள்» (ஆதாரம் திர்மிதி).

3. சுத்தமான பொருள் கலந்த நீர்

இது சுத்தமான பொருள் கலந்த நீரை குறிக்கின்றது. உதாரணமாக மர இலைகள், மண், தூசியுள்ள நீர் தாங்கிகள், மேலும் அது தண்ணீர் என்ற தண்மையை மாற்றாமல் இருக்க வேண்டும். நபியவர்களது மகள் மரணித்த போது குளிப்பட்டும் சந்தர்பம் வரும் போது நபியவர்கள் கூறினார்கள்: «அவரை மூன்று அல்லது நான்கு அல்லது அதற்கு அதிகமாக கழுவுங்கள், இலந்தை கலந்த நீரை கொண்டு கழுவுங்கள். இறுதியில் கற்பூரத்தை கொண்டும் கழுவுங்கள்» (புஹாரி முஸ்லிம்).

மண் கலந்த நீர்

நீர் தொட்டியில் உள்ள துசி

இலை கலந்த நீர்

மாற்றமடைந்த நீர்

நீர் மாற்றவடைவதை இது குறிக்கின்றது. இதன் காரணமாக நீர் என்ற நிலையில் இருந்து அது மாறிவிடும். உதாரணமாக தேனீர், பானம். இவை இரண்டையும் கொண்டு சுத்தம் செய்ய முடியாது. இதற்கு நீர் என்ற பெயர் கூறப்பட மாட்டாது.

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

கறி

தேனீர்

மை

பானம்

4. அசுத்தமானவை கலந்த நீர் ஆனால் மாற்றம் ஏற்படாதவை.

இது நஜீஸ் கலந்துள்ள (நீரை) குறிக்கின்றது. உதாரணமாக சிறு நீர், செத்தவை. ஆனால் நீருடைய பண்பை அந்த நஜீஸ் மாற்றவில்லை. இந்த நீர் சுத்தமானதாகும். நபியவர்கள் புழாஆ என்ற கிணற்றைப்பற்றி கூறும் போது «அதனுடைய நீர் சுத்தமாகும் அதனை எதும் நஜீஸாக்காது.» (ஆதாரம் அஹ்மத், திர்மிதி). இங்கு கிணற்றிற்கு அருகாமையில் மக்கள் அழுக்குகளை போடக் கூடியவர்களாக இருந்தார்கள். மழை நீர் அந்த அழுக்குகளை கிணற்றிற்குள் வழிந்தோட செய்யும். ஆனாலும் அந்த கிணற்று நீர் அதிகமாக இருப்பதால் இந்த அழுக்குகள் விழுந்தாலும் அத் தண்ணீரில் எந்த மாற்றமும் ஏற்பட வில்லை.

இரண்டாவது – நஜீஸான நீர்

இது நஜீஸ் நீரில் கலந்து விடுவதை குறிக்கும். உதாரணம். சிறுநீர், செத்தவை. இதன் காரணமாக அந்த நீரின் பண்புகளான நிறம், மணம், சுவை ஆகியவையோ அல்லது அவற்றில் ஏதாவது ஒன்றோ மாற்றமடைந்தால் அந்த நீர் நஜீஸ் என்பது (இமாம்களின்) ஏகோபித்த முடிவாகும். இதனை பயன்படுத்த முடியாது.

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

செத்தவை கலந்து மாற்றமடைந்த தண்ணீர்

செத்தவை கலந்து மாறாத தண்ணீர்

https://www.al-feqh.com/ta

கேள்வி

1. நீர் அடிப்படையில் சுத்தமானது. ஆனால் ஒரிடத்தில் தண்ணீர இருக்கிறது அது சுத்தமானதா? நஜீஸானதா? (என கேட்டால்) அடிப்படையில் அது சுத்தமானது. அதில் கஷ்டப்பட்டு தேடுவது அவசியமில்லை. மேலும் நஜீஸான நீரில் ஒருவர் இது சந்தேகம் கொண்டால் அது அடிப்படையில் நஜீஸ் ஆகும்.

2. ஸம்ஸம் நீரை கொண்டு சுத்தம் செய்யலாம். இதனை பின்வரும் செய்தி உறுதிப்படுத்துகின்றது. நபியவர்கள் ஸம்ஸம் நீர் உள்ள வாளியை கொண்டு வரச் செய்தார்கள். பின்னர் அதனை பருகிவிட்டு, வுழூச் செய்தார்கள் (ஸஜ்ல் – பெரிய வாளி)

https://www.al-feqh.com/ta

2 நஜீஸின் சட்டங்கள்

பொருளடக்கம்

நஜீஸின் வரைவிலக்கணம்

நஜீஸின் வகைகள்

1. மனித சிறுநீர்

2. மாதவிடாய் இரத்தம்

3. மிருகங்கள், சாப்பிட அனுமதிக்கப்பட்ட மிருகங்களது சிறுநீர், மலம்

4. செத்தவைகள்

5. பன்றி இறைச்சி

6. நாயின் உமிழ் நீர்

7. மதி

8. வதி

நஜீஸை சுத்தம் செய்யும் வழிமுறைகள்

மொழி ரீதியில் நஜீஸ்

அழுக்குகள்

இஸ்லாமிய பரிபாஷையில்

இஸ்லாம் நீக்கும் படி ஏவிய அழுக்குகள்

நஜீஸின் வகைகள்

1. மனிதனுடைய சிறுநீர்

அஃராபி ஒருவர் பள்ளிவாயலில் சிறு நீர் கழித்த செய்தியில் நபியவர்கள் கூறினார்கள் «நிச்சயமாக இது பள்ளிவாயல் இதில் சிறுநீர் கழிப்பதோ? அல்லது அழுக்குகளை போடுவதற்கோ பொருத்தமான இடம் கிடையாது. நிச்சயமாக இது அல்லாஹ்வை நினைவு கூறும், தொழுகை நிறைவேற்றும், குர்ஆன் ஓதும் இடமாகும்»(1 புஹாரி முஸ்லிம்)

2. மாதவிடாய் இரத்தம்

ஹவ்ழா பின்த் யஸார் அவர்கள் «நபியவர்களிடம் வந்து " அல்லாஹ்வின் தூதர் அவர்களே என்னிடம் ஒரு ஆடை மாத்திரமே இருக்கின்றது. அதில் மாதவிடாய் இரத்தம் படுகின்றது. என்றதும் நபியவர்கள் அதற்கு " நீர் சுத்தம் அடைந்தால் மாதவிடாய் இரத்தம் பட்ட இடத்தை கழுவிவிட்டு, அதை (அணிந்து) தொழுவீராக" என்றார்கள்» (ஆதாரம் அபூதாவுத்).

மாதவிடாய் இரத்தம் தவிர்ந்த ஏனைய இரத்தம் சுத்தமானது. அது வெட்டப்பட்டு ஓடுகின்ற இரத்தமாகவோ(வெட்டப்பட்ட இரத்தம் – வெட்டப்பட்ட இடத்திலிலுந்து வளிந்தோடும் இரத்தம்.) அல்லது அது அல்லாத இரத்தமாக கூட இருக்கலாம். மேலுள்ள தகவலை பின்வரும் செய்தி உறுதிப்படுத்துகின்றது. «ஒருவர் தொழுது கொண்டிருக்கும் போது முஷ்ரிகான நபர் ஒருவர் தொழுகையாளியின் மீது ஈட்டி எறிந்தான். அதன் மூலம் அவர் காயமடைந்தார். அதிலிருந்து இரத்தம் ஓடிக் கொண்டிருந்தது. அவர் தொழுகை தொடராக நிறைவேற்றிக் கொண்டிருந்தார்» (ஆதாரம் அபூதாவுத்)

3. மிருகங்கள், இறைச்சி உண்ண அனுமதிக்கப்பட்டவைகளின் சிறுநீர்

இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் கூறினார்கள் «நபியவர்கள் மலசலம் கழிக்கச் சென்றார்கள். என்னிடம் மூன்று கற்கள் எடுத்துவரும் படி ஏவினார்கள். நான் இரண்டு கற்களை மாத்திரமே பெற்றுக் கொண்டேன். இன்னொரு கல்லை தேடினேன். அதை என்னால் பெற முடியவில்லை. ஈற்றில் மிருகத்தின் விட்டையை கண்டெடுத்து நபியவர்களிடம் கொடுத்தேன். அதில் இரண்டு கற்களை கொண்டு சுத்தம் செய்தார்கள். மிருக விட்டையை கீழே போட்டார்கள். பின்னர் அது அசுத்தமானது என்றார்கள்» (ரிக்ஸ் – குப்பை) (ஆதாரம் புஹாரி)

https://www.al-feqh.com/ta

சாப்பிடுவதற்கு ஆகுமான மிருகங்களது சிறுநீர், விட்டையின் சட்டம் என்ன?

சாப்பிடுவதற்கு ஆகுமாக்கப்பபட்ட மிருகங்களது சிறுநீர், விட்டை என்பன சுத்தமானதாகும். அனஸ் (ரழி) அவர்கள் கூறினார்கள் மதீனாவிற்கு சில மக்கள் கூட்டம் வந்தார்கள். அவர்கள் நோய்வாய்ப்பபட்டிருந்தனர். நபியவர்கள் அவர்களை ஸத்கா என்ற ஒட்டகம் இருக்கும் இடத்திற்கு அனுப்பி அதனுடைய சிறுநீரையும் பாலையும் அருந்துமா று பணித்தார்கள்.33

4.செத்தவைகள்

மார்க்க வரையறைப்படி அறுக்காமல் மூச்சுத் திணறி செத்தவைகளை குறிக்கும். அல்லாஹ் {கூறுகிறான் (நபியே!) நீர் கூறும்: “தானாக இறந்தவைகளையும் வடியும் இரத்தத்தையும் பன்றியின் மாமிசத்தையும் தவிர உண்பவர்கள் புசிக்கக் கூடியவற்றில் எதுவும் தடுக்கப்பட்டதாக எனக்கு அறிவிக்கப்பட்டதில் நான் காணவில்லை” - ஏனெனில் இவை நிச்சயமாக அசுத்தமாக இருக்கின்றன. அல்லது அல்லாஹ் அல்லாதவற்றின் பெயர் சொல்லி அறுக்கப்பட்டது பாவமாயிருப்பதனால் - (அதுவும் தடுக்கப்பட்டுள்ளது) - ஆனால் எவரேனும் நிர்ப்பந்திக்கபட்டு, வரம்பை மீறாமலும் பாவம் செய்ய நினைக்காமலும் புசித்துவிட்டால் - (அவர்மீது குற்றமாகாது ஏனெனில்) நிச்சயமாக உங்கள் இறைவன் மிக்க மன்னிப்போனாகவும், பெருங் கருணையுடையோனுமாகவும் இருக்கின்றான்}. [அன்ஆம் – 145]

ஒரு மிருகம் அறுப்பதற்கு முன்னர் உயிரோடிருக்கும் போதே அதிலிருந்து சிறிய துண்டை வெட்டியதும் இதற்குள் அடங்கும்.

செத்தவைகள்

1. செத்த மீனும் வெட்டுக்கிளியும்

நபியவர்கள் கூறினார்கள் «இரண்டு செத்தவைகள், இரத்தம் ஆகியன எமக்கு ஹலாலாக்கப்பட்டுள்ளது. இவை செத்தவைகளில் மீனும் வெட்டுக்கிளியும், இரத்தமுள்ளவைகளில் கல்லீரலும், மண்ணீரலுமாகும்»(ஆதாரம் அஹ்மத்).

மீன்

வெட்டுக்கிளி

2. அறுத்து இரத்தம் ஓட்டப்படாமல் செத்தவைகள்

ஈ

நபியவர்கள் கூறினார்கள் «உங்களில் ஒருவரது பாத்திரத்தில் ஈ விழுந்து விட்டால் (முதலில்) அதை அவர் (அதிலேயே) முக்கி அமிழ்த்தி பிறகு வெளியில் எடுக்கட்டும்; ஏனெனில் ஈயின் இரண்டு இறக்கைகளில் ஒன்றில் நோயும், மற்றொன்றில் நிவாரணமும் உள்ளது»(ஆதாரம் புஹாரி).

5. பன்றி இறைச்சி

(நபியே!) நீர் கூறும்: {“தானாக இறந்தவைகளையும் வடியும் இரத்தத்தையும் பன்றியின் மாமிசத்தையும் தவிர உண்பவர்கள் புசிக்கக் கூடியவற்றில் எதுவும் தடுக்கப்பட்டதாக எனக்கு அறிவிக்கப்பட்டதில் நான் காணவில்லை” - ஏனெனில் இவை நிச்சயமாக அசுத்தமாக இருக்கின்றன. அல்லது அல்லாஹ் அல்லாதவற்றின் பெயர் சொல்லி அறுக்கப்பட்டது பாவமாயிருப்பதனால் - (அதுவும் தடுக்கப்பட்டுள்ளது) - ஆனால் எவரேனும் நிர்ப்பந்திக்கபட்டு, வரம்பை மீறாமலும் பாவம் செய்ய நினைக்காமலும் புசித்துவிட்டால் - (அவர்மீது குற்றமாகாது ஏனெனில்) நிச்சயமாக உங்கள் இறைவன் மிக்க மன்னிப்போனாகவும், பெருங் கருணையுடையோனுமாகவும் இருக்கின்றான்}. [அன்ஆம் – 145]

பன்றி

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

6. நாயின் உமிழ் நீர்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். «உங்களுடைய பாத்திரத்தில் நாய் நக்கினால் அதனை ஏழு முறை கழுவவும். அதில் ஒரு முறை மண் போட்டு கழுவவும்» (3. புஹாரி முஸ்லிம்).

நக்குதல் – பாத்திரத்தில் நாய் நுழைப்பதை குறிக்கின்றது. அது பாத்திரத்தில் உள்ளவைகளை உண்டாலும், உண்ணாவிட்டாலும் அது ஒன்று தான்.

நாயின் வீணி

7. மதி

இது வெள்ளை நிற மென்மையான நீரை குறிக்கும். விளையாடுகின்ற போது அல்லது உடலுறவை நினைக்கின்ற போது இது வெளியாகின்றது. இச்சை இல்லாமல், பாய்ந்து இது வெளியாக மாட்டாது. மேலும் இது வெளியாகுவதால் சோர்வு ஏற்படாது. அத்தோடு இது வெளியாகுவது அவருக்கு தெரியாமல் கூட இருக்கலாம்.

நபியவர்களுடைய செய்தியில் அலி (ரழி) அவர்கள் நபியவர்களிடம் மதியைப் பற்றி வினவினார்கள். அதற்கு: «நபியவர்கள் வுழு செய்து கொள்ளுங்கள், அத்தோடு உங்களது ஆணுறுப்பை கழுவிக் கொள்ளுங்கள்» (4. ஆதாரம் முஸ்லிம்).

8. வதி

இது வெள்ளை நிற நீரை போன்றதாகும். சிறுநீ கழித்த பின்னர் வெளியாகும் கணமான நீராகும்.

இந்திரியத்தில் இருந்து சுத்தமாகுதல்

இந்திரியம் – இது வெள்ளை நிறமான கணமான நீராகும். இச்சை ஏற்படும் போது பாய்ந்து வெளியேறக் கூடியதாகும். இது வெளியாகும் போது சோர்வு ஏற்படும். அது வெளிப்படும் போது அருவருப்பான மணம் வீசும். ஈச்சமரத்தின் கதிர் வெளிப்படும் போது அல்லது மாவு பிசையும் போது ஏற்படும் மணத்தை போன்று இருக்கும்.

இது சுத்தமானதாகும். அது நஜீஸாக இருந்தால் அதனை அவசியம் கழுவ வேண்டும் என நபியவர்கள் ஏவியிருப்பார்கள். இந்திரியம் காயாமல் இருந்தால் கழுவினால் போதுமானது. அது காய்ந்திருந்தால் சுரண்டுவது போதுமானது.

ஆயிஷா ரழி அவர்கள் கூறினார்கள். « நபியவர்கள் இந்திரியத்தை கழுவுவார்கள். பின்னர் அதே ஆடையுடன் தொழுவதற்காக செல்வார்கள், அந்த ஆடை கழுவப்பட்டிருப்பதற்கான அடையாளத்தை நான் பார்த்திருக்கிறேன்» (புஹாரி முஸ்லிம்).

இன்னொரு அறிவிப்பில் «(காய்ந்த) இந்திரியத்தை சுரண்டிய அடையாளம் இருக்கும் ஆடையுடன் நபியவர்கள் தொழுவதை கண்டிருக்கிறேன்» (புஹாரி முஸ்லிம்)

காயாமல் இருந்தால் கழுவுதல்

காய்ந்திருந்தால் சுரண்டுதல்

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

மதுபானம்

மதுபானம் வெளிப்படையில் சுத்தமானது. அதை குடிப்பது பெரும்பாவம் என்பதால் உள்ரங்கமாக நஜீஸாகும்

{ஈமான் கொண்டோரே! மதுபானமும், சூதாட்டமும், கற்சிலைகளைவழிபடுதலும், அம்புகள்எறிந்து குறி கேட்பதும், ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல்களிலுள்ளவையாகும்; ஆகவே நீங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் - அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள்}.[மாயிதா – 90] அருவருக்கத்தக்க செயல் என்பது உள்ரங்கமானது என்பதை குறிக்கின்றது. சூதாட்டம், கற்றசிலையை வணங்குதல் போன்று வெளிப்படையாதனை அது குறிக்கவில்லை

மதுபானம்

https://www.al-feqh.com/ta

நஜீஸை சுத்தப்படுத்தும் வழிமுறைகள்

1. நிலத்தில் உள்ள நஜீஸை சுத்தம் செய்தல்

பூமியில் நஜீஸ் பட்டிருந்தால் அது நீர் மூலமோ ஏனையவற்றின் மூலமோ நீங்கி விடும். அஃராபியின் செய்தியில் அவர் பள்ளியில் சிறுநீர் கழித்த «போது அவரை விட்டு விடுங்கள் *(ஊற்றுங்கள் – கொட்டுங்கள்)* அந்த சிறுநீர் மீது வாளியில் *(வாளி – நீர் நிரப்பப்பட்ட பாத்திரம்)* அல்லது பாத்திரத்தில் *(வாளி – நீர் நிறப்பப்பட்ட பெரிய வாளி)* தண்ணீர் கொண்டு ஊற்றுங்கள். »*(புஹாரி, முஸ்லிம்)*. என கூறினார்கள்.

மேலும் நஜீஸ் ஓடக் கூடியதாக இருந்தால் அது காய்கின்ற போது சுத்தமடையும். கிலாபா ரழி அவர்கள் கூறினார்கள் «பூமி காய்ந்து விட்டால் அது சுத்தமடைந்து *(தூய்மைப்படுத்தல் – சுத்தப்படுத்தல்)* விடும்.» *(ஆதாரம் புஹாரி)*.

பூமியில் ஓடக் கூடிய நஜீஸ்

ஓடக் கூடிய நஜீஸை காய வைத்தல்

2. நஜீஸான நீரை சுத்தம் செய்தல்.

நஜீஸுடைய அடையாளம் மாறும் வரை அதனுள் தண்ணீரை அதிகப்படுத்தல். நவீன சுத்தப்படுத்தும் பதார்த்தங்களை சேர்ப்பதன் மூலமும் அதனை சுததப்படுத்தலாம்.

நவீன முறையும் சுத்தம் செய்தல்

தண்ணீரை அதிகரித்து சுத்தம் செய்தல்

3. ஆடையில் பட்ட நஜீஸை நீக்குதல்.

ஆடையில் நஜீஸ் நீங்கும் வரை கழுவுதல். புழிதல், உரஞ்சி கழுவுதல்

நஜீஸான ஆடையை சுத்தம் செய்தல்

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

4. விரிப்பபை சுத்தப்படுத்துதல்

நீரால் கழுவுதல் அல்லது நவீன சுத்தப் பதார்த்தங்கள் மூலம் சுத்தம் செய்தல், காயவைத்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் நஜீஸை நீக்கலாம்.

விரிப்பை சுத்தம் செய்தல்

5. செத்தவைகளின் தோலை சுத்தம் செய்தல்.

1. சாப்பிடுவதற்கு அனுமதிக்கப்பட்ட செத்த பிராணிகளின் தோல்

இதனை உலர வைத்தால் சுத்தமாகும். நபியவர்கள் கூறினார்கள் «தோலை உலர வைத்தால் (தோல் – உலர வைப்பதற்கு முன்னர் உள்ள நிலை) அது சுத்தமாகும்» (முஸ்லிம்).

உலர வைத்தல் – கெட்ட நாற்றம் நீங்கி மென்மையாவதற்கான பதார்த்தங்களை கலந்து பதப்படுத்துவதை குறிக்கும்..

உலர வைத்தல்

சாப்பிடுவதற்கு அனுமிக்கப்பட்ட மிருகங்கள்

2. சாப்பிட முடியாத மிருகங்களின் தோல்

அறுப்பதற்கு அனுமதிக்கப்படாத மிருகங்களின் தோல் அது உயிரோடு இருந்தாலும் அல்லது உலர வைத்தாலும் சுத்தமாகாது.

சாப்பிட அனுமதிக்கப்படாத மிருகங்கள்

https://www.al-feqh.com/ta

6. உணவு உட்கொள்ளாத ஆண், பெண் பிள்ளைகளின் சிறுநீரை சுத்தம் செய்தல்.

பெண் பிள்ளையின் சிறுநீர் பட்ட இடத்தை கழுவ வேண்டும். ஆண் குழந்தையின் சிறுநீர் பள்ள இடத்தில் நீரால் தெளித்தால் போதுமானது. நபியவர்கள் கூறினார்கள் «பெண்குழந்தையுடைய சிறுநீரை கழுவ வேண்டும். ஆண் குழந்தையின் சிறுநீர் மீது நீரைத் தெளிக்க வேண்டும்.»(ஆதாரம் அபூதாவுத்) என கூறினார்கள்

ஆண் குழந்தையின் சிறுநீர் மீது தண்ணீரை தெளித்தல்

பெண் பிள்ளையின் சிறுநீரை கழுவுதல்

7. நாய் நக்கியவற்றை சுத்தம் செய்தல்.

பாத்திரத்தில் நாய் நக்கினால் அதனை ஏழு முறை கழுவ வேண்டும். அதில் ஒரு முறை மண் போட்டு கழுவ வேண்டும். நபியவர்கள் கூறினார்கள் «. உங்கள் ஒருவருடைய பாத்திரத்தில் நாய் வாயை விட்டால் அப்பாத்திரத்தை ஏழு முறை கழுவுங்கள். அதில் ஒரு முறை மண் போட்டுக் கழுவுங்கள்»(புஹாரி முஸ்லிம்). என கூறினார்கள்.

ஒரு தடவை ஆறு தடவை

மண்ணால் சுத்தம் குளிப்பதன் மூலம் சுத்தம் செய்தல்

8. மதி, வதியை சுத்தம் செய்தல்

ஆணுறுப்பை சுத்தம் செய்து வுழுச் செய்ய வேண்டும். நபியவர்கள் அலி ரழி அவர்களுக்கு கூறினார்கள் «நீங்கள் வுழு செய்து கொண்டு, ஆணுப்பை கழுகுவீராக என்றார்கள்» (புஹாரி முஸ்லிம்).

ஆடையில் மதி, வதி பட்டிருப்பின் அதில் நீரைத் தெளிப்பதன்மூலம்சுத்தமடையவைக்கலாம். ஸஹ்ல் பின் ஹனீப் அவர்கள் நபியவர்களிடம் கேட்டார்கள் «யாரசூலல்லாஹ் எனது ஆடையில் மதி அல்லது வதியை கண்டால் என்ன செய்வது என கேட்டார்கள். அதற்கு நபியவர்கள் கைப்பிடியளவு நீரை எடுத்து அதனுள் தெளியுங்கள். அந்த அடையாளம் நீங்கும் வரை தெளியுங்கள். என்றார்கள்.» (ஆதாரம் அபூதாவுத்).

9. மாதவிடாய் இரத்தத்தை சுத்தம் செய்தல்.

நீரைக் கொண்டு கழுவ வேண்டும். அதனுடைய அடையாளங்கள் இருந்தால் பிரச்சினையில்லை. நபியவர்கள் கூறினார்கள் «தண்ணீர் மட்டும் சுத்தம் செய்ய போதுமானது. அதனுடைய அடையாளம் இருந்தால் எந்தப் பிரச்சினையும் இல்லை» (ஆதாரம் அபூதாவுத்).

10. பாதணியை சுத்தம் செய்தல்

நஜீஸ் நீங்கும் வரை பூமியில் தேய்த்தல். நபியவர்கள் கூறினார்கள்.«உங்களின் பாதணியில் ஏதாவது நஜீஸை மிதித்தால், மண்ணில் (தேய்ப்பதே) அதனை சுத்தமாக்கும்»(ஆதாரம் அபூதாவுத்).

பாதணையியை பூமியில் தேய்ப்பதன் மூலம் சுத்தம் செய்தல்

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

11. நீட்டமான ஆடையை சுத்தம் செய்தல்

நஜீஸ் பட்ட ஆடையுடன் சுத்தமான இடத்தில் நடந்தால் பூமி அந்த நஜீஸை சுத்தமாக்கி விடும். நபியவர்கள் கூறினார்கள் «சுத்தமான இடத்தில் நடந்தால் பின்னர் இது சுத்தமாகிவிடும்» (ஆதாரம் அபூதாவுத்).

பூமியில் (நடப்பதன்) மூலம் பெண்ணின் ஆடை சுத்தமாகும்.

12. திண்மமான உணவுப் பொருட்களை சுத்தம் செய்தல்.

தின்மமான பொருளில் நஜீஸ் விழுந்தால் நஜீஸ் விழுந்த இடத்தை மாத்திரம் அகற்றி விட்டால் போதுமானது. ஏனனில் எஞ்சியவை அடிப்படையிலேயே சுத்தமானதாகும். மேலுள்ள செய்தியை பின்வரும் செய்தி உறுதிப்படுத்துகின்றது. «பட்டரில் எலி விழுந்ததைப் பற்றி நபியவர்களிடம் கேட்கப்பட்ட போது " அதனையும் அது விழுந்த இடத்தையும் சுத்தம் செய்வீராக! பின்னர் அந்த பட்டரை சாப்பிடுங்கள் என்றார்கள்.» (ஆதாரம் புஹாரி).

பட்டரில் விழுந்த எலி

13. கண்ணாடி, கண்ணாடி பாத்திரங்களை சுத்தம் செய்தல்.

நஜீசுடைய அடையாளம் நீங்கும் வரை துடைக்க வேண்டும்.



கண்ணாடி பொருட்கள் தடவுவதன் மூலம் சுத்தமாகும்.

நஜீஸ் பற்றிய சட்டங்கள்

1. நஜீஸ் என்ற பண்பு வராமல் இருக்கும் வரையில், பொருட்கள் அனைத்தும் அடிப்படையில் சுத்தமானதாகும்.

2. எதாவது ஒன்றில் நஜீஸ் விழுந்து அது விழுந்த இடம் தெரியவில்லையாயின் அப்பொருளை முற்றாக கழுக வேண்டும்.

3. நஜீஸ் இன்னொரு பொருளாக மாறுவதன் மூலமாக. உதாரணமாக கழுதையின் விட்டையை எரிக்கின்ற போது ஏற்படும் சாம்பல் சுத்தமானது. இது போல சுத்தமாகும்.

(பிராணியின்) விட்டை சாம்பலாக மாறினால் அது சுத்தமானதாகும்.

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

எஞ்சியவைகள்

எஞ்சியவைகள்

ஒருவர் ஒரு பாத்திரத்தில் அருந்தி விட்டு மீதமுள்ளதை இது குறிக்கின்றது.

நஜீஸ் என்ற நிலை வராத வரை, எஞ்சியவைகள் அடிப்படையில் சுத்தமானது.

1. சுத்தமான எஞ்சிய (உணவுகள்)

(அ) மனிதன் சாப்பிட்டு எஞ்சியவைகள்

மேலுள்ள செய்தியை பின்வரும் சம்பவம் உறுதிப்படுத்துகின்றது. «மாதவிடாய் காலத்தில் ஆயிஷா ரழி அவர்கள் குடித்த (நீர்) மீதமுள்ளதை நபியவர்கள் குடித்தார்கள். மேலும் ஆயிஷா ரழி அவர்கள் வாய் வைத்துக் குடித்த அதே இடத்தில் நபியவர்களும் வாய் வைத்துக் குடித்தார்கள்» (ஆதாரம் முஸ்லிம்).

(ஆ) பூனை உண்டு எஞ்சியவைகள்

நபியவர்கள் கூறினார்கள். «பூனை ஒரு பாத்திரத்தில் நீர் அருந்தினால் அந்த நீர் சுத்தமானதாகும். ஏனனில் பூனை உங்களுக்கு வளர்ப்புப் பிராணியாகும்» (ஆதாரம் திர்மிதி).

பூனை சாப்பிட்டு எஞ்சியவைகள்

பொருடக்கம்

எஞ்சிய உணவின் வரைவிலக்கணம்
சுத்தமான எஞ்சியவைகள்
1. மனிதன் சாப்பிட்டு எஞ்சியவைகள்
2. பூனை சாப்பிட்டு எஞ்சியவைகள்
3. இறைச்சியை உண்பவைகள் சாப்பிட்டு எஞ்சியவைகள்
நஜீஸான எஞ்சியவைகள்
1. நாய் சாப்பிட்டு எஞ்சியவைகள்
2. பன்றி சாப்பிட்டு எஞ்சியவைகள்

(இ) இறைச்சி உண்ணக் கூடிய மிருகங்கள், கோவேறு கழுதை, கழுதை, வேட்டை மிருகங்கள், வேட்டைப் பறவைகள் இது போன்றன சாப்பிட்டு எஞ்சியவைகள்.

இது சுத்தமானதாகும். ஏனனெனில் அடிப்படையில் இது சுத்தமானதாகும். இது நஜீஸ் என்பதற்கு எவ்வித ஆதாரமும் கிடையாது. ஏனெனில் நபியவர்கள் கழுதையில் பிரயாணம் செய்தார்கள். மேலும் அவர்களுடைய காலத்தில் சவாரி செய்பவர்களாக இருந்தார்கள்.

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

வேட்டைப் பறவைகள் சாப்பிட்டு எஞ்சியவைகள்

வேட்டைப் பிராணிகள் சாப்பிட்டு எஞ்சியவைகள்

கழுதை சாப்பிட்டு எஞ்சியவைகள்

இறைச்சி உண்டும் மிருமங்கள் சாப்பிட்டு எஞ்சியவைகள்

2. நஜீஸான எஞ்சிய (உணவுகள்)

(அ) நாய் சாப்பிட்டு எஞ்சியவைகள்.

நபியவர்கள் கூறினார்கள் «உங்களுடைய பாத்திரத்தில் நாய் வாயைப் போட்டால் ஏழு முறை கழுவுங்கள். அதில் ஒரு முறை மண் போட்டு கழுவுகள். (அதுவே அதை சுத்தப்படுத்தும்) »(புஹாரி முஸ்லிம்).

நாய் சாப்பிட்டு எஞ்சியவைகள்

(ஆ) பன்றி சாப்பிட்டு எஞ்சியவை

பன்றி சாப்பிட்டு எஞ்சியவை தடுக்கப்பட்டவையாகும். அல்லாஹ் கூறுகிறான் {(நபியே!) நீர் கூறும்: "தானாக இறந்தவைகளையும் வடியும் இரத்தத்தையும் பன்றியின் மாமிசத்தையும் தவிர}.[அன்ஆம் – 145]அருவருக்கத்தக்க செயல் என்பது இங்கு நஜீஸ் என்பது அதோடு தொடர்பு பட்டிருந்தாலும் அது நஜீஸ் தான்.

பன்றி சாப்பிட்டு எஞ்சியவைகள்

மனித சுத்தம்

மனிதன் என்பவன் தன்னளவில் சுத்தமானவனாவான். அவன் முஸ்லிமாக அல்லது காபிராக இருந்தாலும் சரியே!. நபியவர்கள் கூறினார்கள் ''நிச்சயமாக ஒரு முஃமின் நஜீஸாக மாட்டான்''.(புஹாரி முஸ்லிம்) மேலுள்ள செய்தியை பின்வரும் செய்தி உறுதிப்படுத்துகின்றது. நபியவர்கள் முஷ்ரிக்களுடைய.(மஸாதா – தண்ணீர் எடுக்கப்படும் ஓர் இடம்.) மஸாதா (புஹாரி முஸ்லிம்) {என்ற இடத்தில் வுழு செய்பவர்களாக இருந்தார்கள். அல்லாஹ் கூறுகிறான். ஈமான் கொண்டவர்களே! நிச்சயமாக இணை வைத்து வணங்குவோர் அசுத்தமானவர்களே; ஆதலால், அவர்களின் இவ்வாண்டிற்குப் பின்னர் சங்கை மிகுந்த இப் பள்ளியை (கஃபத்துல்லாஹ்வை) அவர்கள் நெருங்கக் கூடாது; (அதனால் உங்களுக்கு) வறுமை வந்து விடுமோ என்று நீங்கள் பயந்தீர்களாயின் - அல்லாஹ் நாடினால் - அவன் அதி சீக்கிரம் அவன் தன் அருளால் உங்களைச் செல்வந்தர்களாக்கி விடுவான் - நிச்சயமாக அல்லாஹ் (எல்லாம்) அறிந்தவனாகவும், ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்.} [தௌபா – 28] இங்கு உள்ரங்கமான நஜீஸையே குறிப்பிடுகின்றது.

https://www.al-feqh.com/ta

4 பாத்திரங்கள்

பொருளடக்கம்

தங்கம், வெள்ளி பாத்திரங்களை பயன்படுத்தல்

பாத்திரம் பற்றிய வரைவிலக்கணம்

1. குடிக்க, உண்ண பயன்படுத்தல்

2. வேறு தேவைகளுக்காக பயன்படுத்தல்

3. வெள்ளி பொதிக்கப்பட்ட பாத்திரத்தை பயன்படுத்தல்

பாத்திரங்கள்

பாத்திரம் என்பது நீர், ஏனையவைகளை உள்ளடக்கி பாதுகாக்கும் ஒரு பொருளை குறிக்கின்றது.

தங்க, வெள்ளி பாத்திரங்களை பாவித்தல்.:

1. உண்ணல், பருகுதல் போன்றவற்றின் போது தங்க வெள்ளி பாத்திரங்களை பயன்படுத்தல்.

இவ்விரண்டையும் பாவிப்பது ஹராமாகும். நபியவர்கள் கூறினார்கள் «தங்க, வெள்ளி பாத்திரங்களில் நீங்கள் பருக வேண்டாம். தங்கம், வெள்ளி போன்ற தட்டில் சாப்பிட வேண்டாம். அவர்களுக்கு அது இவ்வுலகில் மாத்திரமே கிடைக்கும். ஆனால் எங்களுக்கு மறுமையில் கிடைக்கும்»(புஹாரி முஸ்லிம்).

மேலும் நபியவர்கள் கூறினார்கள். «யார் வெள்ளிப்பாத்திரத்தில் அருந்துகின்றாரோ அவருக்கு மறுமையில் அவருடைய வயிற்றில் நெருப்பிலாலான தண்டணை வழங்கப்படும்» (புஹாரி முஸ்லிம்).

வெள்ளிப் பாத்திரத்தில் சாப்பிடுதல்

தங்கப்பாத்திரத்தில் சாப்பிடுதல்

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

2. வேறு தேவைகளுக்காக தங்கம், வெள்ளியை பயன்படுத்துதல்.

வேறு தேவைக்காக தங்கம், வெள்ளி போன்றவற்றை பயன்படுத்தலாம். உதாரணமான வுழு செய்வதற்கு பயன்படுத்தாலாம். மேலுள்ள செய்தியை பின்வரும் செய்தி உறுதிப்படுத்துகின்றது. «உம்மு ஸலமா ரழி அவர்கள் நபியவர்களது மூடி உள்ள வெள்ளியால் ஆன சிறு கிண்ணம் (ஜுல்ஜுல் – மணி போன்ற சிறிய பாத்திரம்) ஒன்றை வைத்திருந்திருந்தார்கள்» (4. ஆதாரம் புஹாரி).

வெள்ளி கேத்தலில் வுழுச் செய்தல்

1. வெள்ளி பொதிக்கப்பட்ட பாத்திரம்

தேவைகளுக்காக வெள்ளி பொதிக்கப்பட்ட பாத்திரங்களை பயன்படுத்தலாம். என்பதை பின்வரும் செய்தி உறுதிப்படுத்துகின்றது. «நபியவர்களுடைய பாத்திரம் உடைந்து விட்டது. பின்னர் வெடிப்புள்ள இடத்தை வெள்ளியை கொண்டு உருக்கி ஒட்டினார்கள்» (ஆதாரம் புஹாரி)

வெள்ளி பொதிக்கப்பட்ட பாத்திரத்தை பயன்படுத்தல்

ஆண்கள் தங்கம் அணிதல்

ஆண்கள் தங்கம் அணிவது தடுக்கப்பட்டுள்ளது. இதனை பின்வரும் செய்தி உறுதிப்படுத்துகிறது. அபூ மூஸா அஷ்அரி ரழி அவர்கள் அறிவிக்கின்றார்கள். நபியவர்கள் கூறினார்கள் «பட்டாடையும் தங்கமும் எனது உம்மதில் ஆண்களுக்கு ஹறாமாகும். பெண்களுக்கு ஹலாலாகும்»(அதாரம் திர்மிதி).

https://www.al-feqh.com/ta

5

இயற்கை தேவையை நிறை வேற்றுதல்

பொருளடக்கம்

மலசலம் கழிக்கும் போது அனுமதிக்கப்பட்டவை.

மலசலம் கழிக்கும் போது தடுக்கப்பட்டவை.

மலசலம் கழிக்கும் போது வெறுக்கத்தக்கவை.

மண்ணால், கற்களால் சுத்தம் செய்தல்.

மலசலம் கழிப்பது பற்றிய வரைவிலக்கணம்

மலசலம் கழிப்பதன் நுட்பம்

மலசலம் சட்டம்

கற்கலால் சுத்தம் செய்வதற்கான நிபந்தனைகள்

இயற்கை தெவையை நிறைவேற்றும் போது அவசிமானவை.

1. மலசலம் கழிக்கும் போது மக்கள் பார்க்காத வண்ணம் அவ்றத்தை மறைத்தல் நபியவர்கள் கூறினார்கள் «ஜின்களினதும் மனிதனுடைய பார்வையை விட்டும் மறைக்க உங்களில் ஒருவர் மலசலம் கழிக்கச் சென்றால் பிஸ்மில்லாஹ் என கூறட்டும் என்றார்கள்»(ஆதாரம் திர்மிதி).

2. உடையிலோ அல்லது உடலிலோ நஜீஸ் தென்பட்டால் இதனை நீக்குதல் அல்லது கழுவுதல். மேலுள்ள செய்தியை பின்வரும் செய்தி உறுதிப்படுத்துகின்றது. «நபியவர்கள் இரண்டு கப்றுகளை கடந்து சென்றார்கள். அப்போது இந்த இரண்டு கப்றுகளும் வேதனை செய்யப்படுகின்றது. அதில் ஒன்று சிறுநீர் (சிறுநீரில் இருந்து தவிர்ந்து கொள்ளுதல்) கிழித்து விட்டு சுத்தம் செய்யவில்லை என கூறினார்கள்.»(ஆதாரம் அபூதாவுத்).

3. தண்ணீரால் அல்லது கற்களால் சுத்தம் செய்தல். அனஸ் ரழி அவர்கள் அறிவிக்கின்றார்கள் «நபியவர்கள் மலசலம் கழிக்கச் சென்றால் நானும் சில சிறுவர்களும் தண்ணீர் உள்ள பாத்திரத்தை (இன்ஸத் – சிறிய குச்சி) சுமந்து செல்வோம் நபியவர்கள் அதிலிருந்து கழுவிக் கொள்வார்கள்»(புஹாரி முஸ்லிம்).

மலசலம் கழிக்கும் போது தடுக்கப்பட்டவைகள்.

1. வெட்டை வெளிகளில் மலசலம் கழிக்கும் போது கிப்லாவை முன்னோக்குவதோ அல்லது பின்னோக்குவதோ கூடாது. ஆனால் கட்டிடங்களுக்குள் கிப்லாவை முன்னோக்கியோ அல்லது பின்னோக்கியோ இருப்பதில் பிரச்சினை

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

இல்லை. ஆனால் முன்னோக்காமலும், பின்னோக்காமலும் இருப்பது சிறந்தது. நபியவர்கள் கூறினார்கள் «நீங்கள் மலசலம் கழிக்கச் சென்றால் கிப்லாவை முன்னோக்கவோ? அல்லது பின்னோக்கவோ வேண்டாம். மாறாக கிழக்கிலோ அல்லது மேற்கிலோ ஆக்கிக் கொள்ளுங்கள்» (புஹாரி முஸ்லிம்).

2. மனிதர்கள் பயணம் செல்லும் பாதை, ஒன்று கூடும் இடம், நிழல் தரும் இடங்கள் போன்றவற்றில் மலசலம் கழிக்க கூடாது. நபியவர்கள் கூறினார்கள் «அல்லகானீன்களை பயந்து கொள்ளுங்கள். அதற்கு நாங்கள் அல்லகானீன்கள் என்றால் என்ன என்று கேட்டோம் அதற்கு நபியவர்கள் "அவர்கள் தான் மக்கள் பயணிக்கும் பாதையிலும் நிழலிலும் மலசலம் கழிப்பவர்கள்." என்று கூறினார்கள்» (ஆதாரம் முஸ்லிம்),

3. ஓடாமல் தேங்கி நிற்கும் தண்ணீரில் சிறுநீர் கழிப்பது கூடாது. உதாரணமாக குழியலறை நீர்த் தொட்டி. நபியவர்கள் கூறினார்கள். «ஓடாமல் தேங்கி நிற்கும் நீரில் சிறுநீர் கழிக்க வேண்டாம். பின்னர் அதில் குழிக்கவும் வேண்டாம்» (புஹாரி முஸ்லிம்).

4. குர்ஆன் பிரதியை மலசல கூடத்திற்குள் எடுத்துச் செல்வது கூடாது.

வெட்ட வெளிகளில் மலசலம் கழித்தல்

மக்கள் பயணிக்கம் பாதைகளில் மலசலம் கழித்தல்

தேங்கி நிற்கும் நீரிலுள்ள சிறுநீர்

தேங்கி நிற்கும் நீரில் சிறுநீர் இருந்தால் பற்றிரியா போன்ற தொற்று நோய்கள் ஏற்படுகின்றது. இந்த பற்றிரியாக்கள் மூலம் நோய்க்கான புழுக்கள் உருவாகின்றன. (காயதுல் அஹ்மத் "நவீன முறையில் நபி வழி மருத்துவம்.)

மலசலம் கழிக்கும் போது ஆகுமானவை

1. வெட்ட வெளிகளில் மலசலம் கழிக்கும் போது மக்களை விட்டும் தூரமாக இருத்தல்

2. மலசல கூடம் நுழையும் «போது ஆண், பெண் ஷைத்தானிடமிருந்து நான் பாதுகாவல் தேடுகிறேன்» (புஹாரி முஸ்லிம்). என பிரார்த்தனை செய்தல்.

3. மலசல கூடம் நுழையும் போது இடது காலை முற்படுத்தல் வெளியாகும் போது வலது காலை முற்படுத்தல்

4. வெளியாகும் போது «அல்லாஹ்விடம் மன்னிப்பு கேட்கிறேன்» (ஆதாரம் அபூதாவுத்) என பிரார்த்தித்தல்.

இடதை முற்படுத்தி நுழைதல்

வலதை முற்படுத்தி வெளியாகுதல்

https://www.al-feqh.com/ta

மலசலம் கழிக்கும் போது ஆகுமானவை

1. மலசலம் கழிக்கும் போது பேசுதல். அல்லது அவசியமின்றி ஏனையவர்களுடன் பேசுதல். நபியவர்கள் கூறினார்கள் «ஒரு மனிதன் நபியவர்கள் சிறுநீர் கழிக்கம் போது கடந்து சென்றார். அப்போது நபியவர்களுக்கு அவர் ஸலாம் சொன்னார். ஆனால் நபியவர்கள் அதற்கு பதிலளிக்கவில்லை» (ஆதாரம் முஸ்லிம்).

2.அல்லாஹ்வை நினைவு கூறும் ஏதாவது ஒன்றை கொண்டு நுழைதல். ஆனால் அது திருடப்படும் என்ற பயம் இருப்பின் கொண்டு செல்லலாம்.8.

3. வலக்கையால் மறைவுறுப்பை தொடுதல் அல்லது நீரையோ அல்லது கல்லை கொண்டோ வலக்கரத்தால் சுத்தம் செய்தல் என்பன வெறுக்கத்தக்க செயலாகும். நபியவர்கள் கூறினார்கள் «உங்களில் ஒருவர் சிறுநீர கழிக்கும் போது தனது வலக் கரத்தால் பிடிக்க வேண்டாம். மேலும் வலக்கரத்தால் மலத்தை துடைக்கவும் வேண்டாம்» (புஹாரி முஸ்லிம்),

4. தீங்கு விளைவிக்கும் விஷ ஜந்துக்கள் உள்ள பொந்துகளுக்குள் சிறுநீர் கழிக்க வேண்டாம்



மலசலம் கழிக்கும் போது பேசுதல்

பொந்தினுள் சிறுநீர் கழித்தல்

திருக்குர்ஆனுடன் மலசல கூடத்தில் நுழைதல்

அல்லாஹ்வை நினைவு கூறும் பொருட்களுடன் மலசல கூடத்திற்குள் நுழைதல்.

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

நின்று கொண்டு நிறுநீர் கழித்தல்

ஒருமனிதனுக்குநின்றுகொண்டுசிறுநீர்கழிப்பதை விட கீழே குந்தி கழிப்பது பாதுகாப்பாகும். குதைபா ரழி அவர்கள் கூறுகின்றார்கள் «நபியவர்களிடம் சுபாதா (சுபாதா – வீட்டில் இருந்து கூட்டிய குப்பைகள், மண், அழுக்குகள் வீசப்படும் இடத்தை குறிக்கின்றது. ஆதாரம் புஹாரி) மக்கள் வந்தார்கள். அவர்கள் நின்றவாறு சிறுநீர் கழித்தார்கள்»(ஆதாரம் புஹாரி). இப்னு மன்திர் ரஹ் கூறுகிறார்கள் ” குந்தி கொண்டு சிறுநீர் கழிப்பு அவர்களுக்கு மிக ஏற்மானதாகும், எனினும் நின்று கொண்டு கழிப்பது அனுமதிக்கப்பட்டது.

https://www.al-feqh.com/ta

நீராலும், கற்களாலும் சுத்தம் செய்தல்

நீரால் சுத்தம் செய்தல்.

முன்னாலும் பின்னாலும் மல சலத்தினுடைய அடையாளம் நீங்கும் வரை தண்ணீரால் கழுவி சுத்தம் செய்தல்.

கற்களால் சுத்தம் செய்தல்

முன்னாலும் பின்னாலும் மல சலத்தினுடைய அடையாளம் நீங்கும் வரை கற்களால் கழுவி சுத்தம் செய்தல்.

கற்களாலும், தண்ணீராலும் சுத்தம் செய்தலின சட்டம்

தண்ணீரை கொண்டு சுத்தம் செய்வது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. அனஸ் ரழி அவர்கள் கூறினார்கள் «நபியவர்கள் மலசலம் கழிக்கச் சென்றால் நானும் சில சிறுவர்களும் தண்ணீர் உள்ள பாத்திரத்தை சுமந்து செல்வோம் நபியவர்கள் அதிலிருந்து கழுவிக் கொள்வார்கள்» (புஹாரி முஸ்லிம்).

மேலும் இரண்டு நிபந்தையின் அடிப்படையில் கற்களால் சுத்தம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளன.

1. மலசலம் வரும் இடத்திற்குள் மாத்திரம் அது இருக்க வேண்டும். மலசலம் வரும் இடத்தை விட்டும் தாண்டினால் தண்ணீரால் மாத்திரமே சுத்தம் செய்ய வேண்டும்.

2. கற்களால் சுத்தம் செய்வதாக இருப்பின் மூன்று கற்களை கொண்டு முன் பின் துவாரங்களில் உள்ள நஜீஸ் நீங்கும் வரை சுத்தம் செய்ய வேண்டும்.

தண்ணீராலும், கற்களாலும் சுத்தம் செய்வதன் நுட்பம்

1. சுத்தமும், நஜீஸை நீக்குதலும்

2. துப்பரவு செய்தலும், நோய்க் கிருமிகளிடம் இருந்து தூரமாகுதலும்.

பயன்கள்

காற்று வெளியானால் தண்ணீரால் சுத்தம் செய்வது அவசியமில்லை. தண்ணீரால் சுத்தம் செய்வது கற்களால் சுத்தம் செய்வதை விட சிறந்தது. அதுவே சுத்தமாகுதலிற்கு மிக நெருக்கமானதாகும்.

கற்களை கொண்டு சுத்தம் செய்வதற்கான நிபந்தனைகள்

1. சுத்தம் செய்யும் பொருட்கள் சுத்தமாக இருக்க வேண்டும். நஜீஸை கொண்டு சுத்தம் செய்ய முடியாது.

2. சுத்தம் செய்யும் பொருட்கள் ஆகுமானதாக இருக்க வேண்டும். தடுக்கப்பட்டவைகளை கொண்டு சுத்தம் செய்ய முடியாது.

3. சுத்தம் செய்யும் நஜீஸான இடத்தை விட்டும் துப்பரவாக இருக்க வேண்டும்.

4. எலும்பு, விட்டைகளை கொண்டு சுத்தம் செய்ய கூடாது. ஸல்மான் இப்னு பாரிஸ் ரழி அவர்கள் கூறினார்கள். «நபியவர்கள் மலசலம் கழிக்கும் போது கிப்லாவை முன்னோக்குவதையும், வலது கையால் சுத்தம் செய்வதையும், மூன்று கற்களை விட குறைவாக சுத்தம் செய்வதையும், மிருகங்களது எலும்பு, (விட்டை) விட்டைகளை90 கொண்டு சுத்தம் செய்வதையும் தடுத்தார்கள்»(ஆதாரம் முஸ்லிம்).

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

5. தடுக்கப்பட்டவைகளை கொண்டு சுத்தம் செய்யக் கூடாது. உதாரணம் – உணவுகள், ஏதாவது எழுதப்பட்ட காகிதங்கள்.

மேலும் சுத்தமான கற்கள், திசு பேப்பர்கள், சுத்தமான பேப்பர்கள், துணிகள் போன்றவற்றால் சுத்தம் செய்ய பயன்படுத்தலாம்.

துணிகளை கொண்டு சுத்தம் செய்தல்

எலும்பைக் கொண்டு சுத்தம் செய்தல்

திசு பேப்பரை கொண்டு சுத்தம் செய்தல்

உணவைக் கொண்டு சுத்தம் செய்தல்

கற்களை கொண்டு சுத்தம் செய்தல்

தடுக்கப்பட்ட காகிதங்களை கொண்டு சுத்தம் செய்தல்

தண்ணீரால் சுத்தம் செய்யும் போது வலக்கையை முற்படுத்தல்.

தண்ணீரால் சுத்தம் செய்யும் போது வலக்கையை முற்படுத்துவது கூடாது. நபியவர்கள் கூறினார்கள் «உங்களில் ஒருவர் சிறுநீர கழிக்கும் போது தனது வலக் கரத்தால் பிடிக்க வேண்டாம். மேலும் வலக்கரத்தால் மலத்தை துடைக்கவும் வேண்டாம்»(ஆதாரம் முஸ்லிம்).

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

6 இயற்கையான சுன்னத்துகள்

பொருளடக்கம்

இயற்கை மரபுகள் ஓர் அறிமுகம்
1. பற்துலக்குதல்
2. நாசிக்கு நீர் செலுத்துதலும், அதனை சிந்தி விடுதலும்.
3. (மலசலம் சென்ற பின்) தண்ணீரால் சுத்தம் செய்தல்
4. மீசையை கத்தரித்தல்
5. தாடியை வளர விடுதல்
6. குளித்தல்
7. (ஆண்கள், பெண்கள்) கத்னா செய்தல்
8. நகங்களை வெட்டுதல்
9. அக்குள் முடிகளை நீக்குதல்
10. விரல் ஓரங்கள், மடிப்புக்களை கழுவுதல்

இயற்கையான சுன்னத்துகள்

அழகிய குணங்களை, அழகான அம்சங்களையும் மனிதர்கள் மீது அல்லாஹ் இயற்கையாகவே ஏற்படுத்தியுள்ளான்.

ஆயிஷா ரழி அவர்கள் அறிவிக்கின்றார்கள். நபியவர்கள் கூறினார்கள் «இயற்கை மரபுகள் பத்தாகும். (அவை) மீசையை கத்தரிப்பது,தாடியை வளரவிடுவது, பற்துலக்குவது, நாசிக்கு நீர் செலுத்துவது, நகங்களை வெட்டுவது, விரல் இடைகளை கழுவுதல், அக்குள் முடிகளை அகற்றுதல்,மர்ம உறுப்புக்களின் முடிகளை அகற்றுதல், (மலசலம் கழித்த பின்) தண்ணீரால் சுத்தம் செய்வது போன்றனவாகும்»(ஆதாரம் முஸ்லிம்)

1) பற்துலக்குதல்

பற்துலக்குதல்

அராக் மரத்தினுடைய தண்டு அல்லது அது போன்ற வற்றின் மூலம் பற்களை சுத்தம் செய்யலாம். அதன் மூலம் பற்களில் உள்ள அழுக்குகளையும் துர்நாற்றத்தையும் நீக்கலாம்.

அனைத்து நேரங்களிலும் பற்துலக்குவது சுன்னதாக்கப்பட்டுள்ளது. நபியவர்கள் கூறினார்கள் «பற்துலக்குவது வாய்யை சுத்தப்படுத்துவதோடு அல்லாஹ்விடத்தில் விரும்பத்த ஒன்றுமாகும்» (ஆதாரம் அஹ்மத்).

என்றாலும் பின்வரும் சந்தர்ந்ப்பங்களில் பற்துலக்கலாம்.

1. வுழுச் செய்யும் போது

நபியவர்கள் கூறினார்கள். «எனது உம்மத்திற்கு சிரமமில்லை எனின் ஒவ்வொரு வுழுவிலும் பற்துலக்குமாறு நான் ஏவியிருப்பேன்»(ஆதாரம் அஹ்மத்). என கூறினார்கள்

பற்துலக்குதல்

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

2. தொழுகையின் போது

நபியவர்கள் கூறினார்கள். «எனது உம்மத்திற்கு சிரமமில்லை எனின் ஒவ்வொரு தொழுகையிலும் பற்துலக்குமாறு நான் ஏவியிருப்பேன்» என கூறினார்கள் (புஹாரி முஸ்லிம்).

3. வீட்டினுள் நுழைந்த பின்னர்

மிக்தாம் ரழி அவர்கள் அறிவிக்கின்றார்கள் «ஆயிஷா ரழி அவர்களிடம் நபியவர்கள் வீட்டினுள் நுழைந்தால் எதனை முதலில் செய்வார்கள் எனக் கேட்டேன். அதற்கு அவர்கள் " பற்துலக்குவார்கள்» (ஆதாரம் முஸ்லிம்).

4. தூக்கத்திலிருந்து எழுந்த பின்னர்

ஹுதைபா ரழி அவர்கள் கூறினார்கள் «நபியவர்கள் தூங்கி எழுந்தவுடன் பற்துலக்க கூடியவர்களாக இருந்தார்கள்»(ஆதாரம் புஹாரி).

5. குர்ஆன் ஓதுவதற்கு முன்னர்

அலி ரழி அவர்கள் பற்துலக்குமாறு ஏவினார்கள். பின்னர் நபியவர்கள் கூறியதாக அறிவித்தார்கள் «ஒரு அடியான் பற்துலக்கி தொழுகைக்காக எழுந்தால் அவருக்கு பின்னால் மலக்குமார்கள் நின்று கொண்டு அவரது கிராஅத்தை கேட்கிறார்கள். அவரது வாயோடு மிக நெருக்கமாக அம் மலக்கு இருப்பார். மலக்குடைய வாயின் உட்பகுதியில் குர்ஆனை தவிர வேறு ஏதும் உட்புகுவதில்லை. எனவே குர்ஆனுக்காக வேண்டி உங்களது வாய்களை சுத்தம் செய்து கொள்ளுங்கள்.»(ஆதாரம் பஸ்ஸார்).

பற்துலக்குவதன் பயன்கள்

இது இவ்வுலகில் வாய் சுத்தத்தையும் மறுமையில் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தையும் ஏற்படுத்தி தருகின்றது. மேலும் பற்களுக்கு பலத்தை ஏற்படுத்துகின்றது. பற்களுடைய ஈறுகளை வலிமையாக்கி அழகிய குரலை வழங்குவதோடு ஓர் அடியானுக்கு உற்சாகத்தையும் அளிக்கின்றது.

2) வாய் கொப்பளித்தலும் நாசிக்கு நீர் செலுத்துதலும்.

வாய் கொப்பளித்தல்

வாயினுள் தண்ணீரை நுழைத்து வாயை அசைப்பதை இது குறிக்கின்றது.

நாசிக்கு நீர் செலுத்துதல்

மூக்கினுள் நீரை செலுத்தி சிந்துவதை இது குறிக்கும்.

வாய் கொப்பளித்தல்



நாசிக்கு நீர் செலுத்துதல்

https://www.al-feqh.com/ta

3) தண்ணீரால் சுத்தம் செய்தல்

தண்ணீரால் சுத்தம் செய்தல்

முன், பின் துவாரங்களால் ஏதேனும் வெளியேறினால் அவற்றை தண்ணீரை கொண்டு சுத்தம் செய்வதை இது குறிக்கும்.

4) மீசையை கத்தரித்தல்

அழகிற்காகவும், நேர்த்தியாக வைத்திருப்பதற்காகவும் மேலும் காபிர்களுக்கு மாறு செய்ய வேண்டும் என்பதற்காகவும் இஸ்லாம் மீசையை கத்தரிப்பதை சுன்னத்தாக்கியுள்ளது.

5) தாடியை வளர விடுதல்.

அது வரும் போது வெட்டாமல் விட வேண்டும்.

மீசையை கத்தரித்தல்

தாடியை வளர விடுதல்.

தாடியை வெட்டுதல்

தாடியை வெட்டுவது தடுக்கப்பட்டுள்ளது. மேலும் தாடியை வெட்டாமல் விட்டு விடும் படி ஏவல்கள் வந்துள்ளன. நபியவர்கள் கூறினார்கள். «மீசையை கத்தரியுங்கள்,(தாடியை கத்தரித்தல்)தாடியை வளர விடுங்கள்,(தாடியை வெட்டாமல் விட்டு விடுகள். அதில் மாற்றம் செய்ய வேண்டாம்.) நெருப்பு வணங்கிகளுக்கு மாறு செய்யுங்கள்”(தாடியை வெட்டாமல் விட்டு விடுகள். அதில் மாற்றம் செய்ய வேண்டாம்) என கூறினார்கள்.» (ஆதாரம் முஸ்லிம்).

6) மர்ம உறுப்பைச் சுற்றியுள்ள முடிகளை அகற்றுதல்

மர்ம உறுப்பைச் சுற்றியுள்ள முடிகளை அகற்றுதல்

மர்ம உறுப்பை சூழ உள்ள முடிகளை அகற்றுவதை இது குறிக்கின்றது.

மர்ம உறுப்பைச் சுற்றியுள்ள முடிகளை அகற்றுவதன் நன்மைகள்

மர்ம உறுப்பைச் சுற்றியுள்ள முடிகளை அகற்றுவது ஒரு மனிதனது உடலினது ஆரோக்கியத்திற்கும், உடற் சக்திக்கும், அமைதிக்கும் உந்து சக்தியாக அமைகின்றது. ஏனனில் மர்ம உறுப்புக்களில் அதிகமான முடிகள் வளர்ந்திருந்தால் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் பற்றிரீயாக்கள் தோற்றம் பெற காரணமாகின்றன.

7) (ஆண்,பெண்) கத்னா செய்தல்

ஆண்களுக்கான கத்னா

ஆணுறுப்பில் முன்னால் (தலைப்பகுதியில்) உள்ள தோலை நீக்குதல்.

பெண்களுக்கான கத்னா

இது பெண்ணுறுப்பில், ஆண்குறி நுழையும் இடத்தில் உள்ள மேலதிகமான துண்டை நீக்குவதை குறிக்கும்.

நபியவர்கள் உம்மு அதிய்யாவிற்கு கூறினார்கள் «கத்னா செய்து கொள், உன் இச்சையை நீக்கிக் கொள்ளாதே. அது முகத்திற்கு பிரகாரமாகும். அது உன் கணவரிடம் நெருக்கத்தை ஏற்படுத்தும்» (ஆதாரம் ஹாகிம்.).

ஆண்களுக்கு கத்னா செய்வது வாஜிப் ஆகும். பெண்களுக்கு சுன்னத் ஆகும். சுன்னத் செய்வதுடைய நுட்பம் – ஆண்களுடைய ஆண்குறியின் முன் பகுதியில் உள்ள தோலை நீக்குவதன் மூலம் தோலில் ஏற்படும் நஜீஸ்களை சுத்தம் செய்யலாம். பெண்களுடைய கத்னாவை பொறுத்த வரை அது அழகிற்காகவாகும்.

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

8) நகங்களை வெட்டுதல்

இது நீளமாக நகங்களை வளர விடாமல் வெட்டுவதை குறிக்கின்றது.

நகம் வெட்டுதல்

9) அக்குள் முடிகளை நீக்குதல்

இது அக்குள் பகுதிகளில் உள்ள முடிகளை அகற்றுவதை குறிக்கின்றது. இதன் மூலம் துர்நாற்றம் போன்ற விடயங்களில் இருந்து துப்பரவாகிக் கொள்ளலாம்.

அக்குள் முடிகளை அகற்றுதல்

10) விரல்களின் ஓரங்களை கழுவுதல்

ஓரங்கள்

விரல்களுக்கிடையுள்ள இடவுகளை குறிக்கின்றது.

சில உலமாக்கள் காதின் ஓரம், கழுத்தின் ஓரம் போன்ற மடிப்புக்கள் உள்ள உடற்பகுதிகளையும் இது உள்ளடக்குவதாக குறிப்பிடுகின்றனர்.



மடிப்புக்கள்

"

நாற்பது நாட்கள்

நகங்களை வெட்டுதல், அக்குள் முடிகளை அகற்றுதல், மீசையை கத்தரித்தல் போன்ற விடயங்களை நாற்பது நாட்களுக்கு மேல் அகற்றாமல் இருப்பது வெறுக்கத்தக்க ஒன்றாகும்.

அனஸ் ரழி அவர்கள் அறிவிக்கின்றார்கள் «நாற்பது நட்களுக்கு மேல் மீசையை கத்தரிக்காமல், நகங்களை வெட்டாமல், அக்குள் முடிகளை வெட்டாமல், விட வேண்டாம் என நபியர்கள் அதனுடைய கால எல்லையை எமக்கு கூறினார்கள்» (அதாரம் திர்மிதி).

"

https://www.al-feqh.com/ta

7 வுழு

மொழி ரீதியில் வுழு

அழகும், சுத்தமும் ஆகும்

இஸ்லாமிய பரிபாஷையில்

தூய எண்ணத்துடன் குறிப்பிட்ட சில உறுப்புக்களை தண்ணீரால் சுத்தம் செய்வதை குறிக்கின்றது.

பொருளடக்கம்

வுழுவின் வரைவிலக்கணம்.
வுழுவின் சட்டம்.
வுழுவின் சிறப்புக்கள்.
வுழுச் செய்யும் முறைகள்.
வுழுவின் நிபந்தனைகள்.
வுழுவின் பர்ளுகள்.
வுழுவின் சுன்னத்துக்கள்.
வுழுவை முறிப்பவைகள்

வுழுவின் சட்டங்கள்

வுழுவானது சில வேளை வாஜிபாக ஆக்கப்பட்டுள்ளது. சில வேளை ஆகுமாக்கப்பட்டுள்ளது.

(அ) மூன்று சந்தர்ப்பங்களில் வுழுச் செய்வது வாஜிபாகும்.

1. தொழுகையின் போது

அல்லாஹ் கூறுகிறான். {"முஃமின்களே! நீங்கள் தொழுகைக்குத் தயாராகும்போது, (முன்னதாக) உங்கள் முகங்களையும், முழங்கைகள் வரை உங்கள் இரு கைகளையும், கழுவிக் கொள்ளுங்கள்} [மாயிதா – 06]

2. கஃபாவை தவாப் செய்யும் போது

நபியவர்கள் கூறினார்கள் «நீங்கள் சுத்தமாகும் வரை கஃபாவை தவாப் செய்ய வேண்டாம்.»(ஆதாரம் புஹாரி).

தொழுகைக்காக வுழுச் செய்தல்

தவாப் செய்யும் போது வுழுச் செய்தல்

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

3. குர்ஆனை தொடும் போது

அல்லாஹ் கூறுகினறான் {தூய்மையானவர்களைத் தவிர (வேறெவரும்) இதனைத் தொட மாட்டார்கள்} [அல்வாகிஆ 79]

குர்ஆனை தொடும் போது வுழுச் செய்தல்

(ஆ) வுழு ஆகுமாக்கப்பட்ட சந்தர்ப்பங்கள்

நபியவர்கள் கூறினார்கள் «ஒரு முஃமினுக்கு வுழுவே பாதுகாப்பாகும்.»(ஆதாரம் அஹ்மத்). ஒவ்வொரு தொழுகையின் போதும் வுழுச் செய்தல், அல்லாஹ்வை திக்ர் செய்யும் போது அல்லது துஆ செய்யும் போது, குர்ஆனை ஓதும் போது, தூங்கச் செல்லும் போது, குளிக்கும் முன்னர், மய்யத்தை சுமந்து சென்றவர், சிறு தொடக்கின் பின்னர் சந்தர்ப்பங்களில் வுழுச் செய்வது ஆகுமாக்கப்பட்டுள்ளது.

அல்லாஹ்வை திக்ர் செய்யும் போது வுழுச் செய்தல்

தூங்கும் போது வுழுச் செய்தல்

குர்ஆன் ஓதும் போது வுழுச் செய்தல்

குர்ஆனை சுமந்த பின்னர் வுழுச் செய்தல்

வுழுவின் சிறப்புகள்

1. அல்லாஹ்விடம் விருப்பத்தை ஏற்படுத்தித் தருகின்றது

அல்லாஹ் கூறுகிறான் {இன்னும் தூய்மையாக இருப்போரையும் நேசிக்கின்றான்} [அல்பகறா – 222]

2. நபியவர்களுடைய சமுதாயத்திற்கு அடையாளமாக நாளை மறுமையில் முகம் பிரகாசமுடையவர்களாக வருவார்கள்.

நபியவர்கள் கூறினார்கள் «எனது சமுதாயத்தவர்களுடைய முகங்கள் நாளை மறுமையில் வுழுச் செய்ததன் காரணமாக பிரகாமாகவர்களாக வருவார்கள். உங்களில் யாருக்கு சக்தி இருக்கின்றதோ அவர்கள் தங்களுடைய முகத்தின் ஒளியை அதிகரிக்க அப்படி செய்யட்டும். » (புஹாரி முஸ்லிம்).

3. தவறுகளுக்கும் பாவங்களுக்கும் மன்னிப்பு

நபியவர்கள் கூறினார்கள். «யார் ஒருவர் சிறந்த முறையில் வுழுச் செய்கிறாரோ! அவருடைய நகங்களில் இருந்து நீர் வழியும் வரை அவருடைய உடம்பிலிருந்து பாவங்கள் வெளியேறுகின்றன.» (ஆதாரம் முஸ்லிம்).

4. நன்மைகள் அதிகரிக்கின்றது.

நபியவர்கள் கூறினார்கள் «பாவங்களை இல்லாமல் செய்யும், அந்தஸ்தை உயர்த்தும் ஒரு விடயத்தை நான் அறிவித்து தரட்டுமா என கேட்டார்கள். அதற்கு ஸஹாபாக்கள் ஆம் என்றார்கள். அதற்கு நபியவர்கள் ”கஷ்டமான நேரங்களில் வுழுவை பூரணமாக செய்வது,(வெறுப்பு – மக்கள் வெறுக்க கூடிய விடயங்களை குறிக்கின்றது.) பள்ளிவாயல்களுக்கு அதிகமான எட்டு வைத்துச் செல்வது., ஒரு தொழுகைக்கு பின்னால் அடுத்த தொழுகையை எதிர்பார்த்திருப்பது, இவற்றை பற்றி பிடித்துக் கொள்ளுங்கள்.» (ஆதாரம் முஸ்லிம்).

வுழுச் செய்யும் முறைகள்

1. மனதால் நீயத்து வைத்தல்.

2. பிஸ்மி சொல்லி ஆரம்பித்தல் (பிஸ்மில்லா என கூறல்)

3. இரண்டு மணிக்கட்டு மூன்று முறை கழுவுதல்.

4. மிஸ்வாக் செய்தல்

5. வாய் கொப்பளித்து நாசிக்கு நீர் செலுத்தி சிந்தி விடுதல். வாய்க்கு நீர் செலுத்துதல் – வாய்க்குள் நீர் செலுத்தி வாயை அசைத்தல். நாசிக்கு நீர் செலுத்துதல். வாய் கொப்பளித்தல் நாசிக்கு நீர் செலுத்தல் ஆகியன ஒரே நேரத்தில் செய்ய வேண்டும். சிந்துதல் – நாசியில் உள்ள நீரை வெளியே சிந்துதல்.

6. முகம் கழுவுதல் (மூன்று தடவை செய்தல்) இதன் போது தாடியை குடைந்து கழுவுதல். முகத்தினுடைய எல்லை – நீளமாக நெற்றியில் முடி முளைத்தள்ள இடத்தில் இருந்து கீழுள்ள கழுத்து வரை கழுவுதல், அகலமாக வலது காது ஆரம்பிக்கும் இடத்திலிருந்து இடது காது ஆரம்பிக்கும் இடம் வரையிலாகும்.

7. பின்னர் வலக்கையை அதன் முழங்கை வரை மூன்று முறை கழுவுதல். இதே போன்று இடக் கரத்தையும் கழுவுதல்.

8. தலையை மஸ்ஹ் செய்தல். தலையின் முற்பகுதியிலிருந்து பிடரி முடி வரை சென்று மீண்டும் முன்னர் ஆரம்பித்த இடத்தில் நிறுத்தல். (இதனை ஒரு முறை மாத்திரம் செய்ய வேண்டும்.)

9. காதின் உட்பகுதியை விரல்களால் மஸ்ஹ் செய்தல்.

10. வலது காலை கரண்டை வரை கழுவுதல். இதே போன்று இடது காலிலும் செய்தல் (இதனையும் மூன்று முறை செய்தல்)

11. இறுதியில் பின்வரும் துஆவை ஓத வேண்டும். «அஷ்ஹது அன்லாயிலாக இல்லல்லாஹ், வஹ்தஹு லா ஷரீக லஹு. வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரசூலுஹு, (ஆதாரம் முஸ்லிம்)

அல்லாஹும்ம அஜ்அல்னி மினத் தவ்வாபீன வஜஅல்மினி மினல் முததஹ்ஹிரீன். (ஆதாரம் திர்மிதி)

சுபஹானக அல்லாஹும்ம வபி கம்திக அஸ்ஹது அன் லாயிலாக இல்லா அன்த அஸ்தஃபிருக வஅதுபு இலய்க. »(ஆதாரம் நஸாயி)

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

வுழுச் செய்யும் முறை

1

இரண்டு மணிக்கட்டு வரை கழுவுதல் (மூன்று தடவை)

2



வாய் கொப்பளித்தல் (மூன்று தடவை)

3

நாசிக்கு நீர் செலுத்துதல் (மூன்று தடவை)
நாசிக்கு நீர் செலுத்துதல்

4

சிந்தி விடுதல் (மூன்று தடவை)
மூக்கில் உள்ள நீரை சிந்தி விடுதல்

https://www.al-feqh.com/ta

5



முகம் கழுவுதல் (மூன்று தடவை)

6

தாடியை குடைந்து கழுவுதல்

7

முழங்கை வரை கைகளை கழுலுதல் (மூன்று தடவை)

8

தலையை மஸ்ஹ் செய்தல்

9

காதின் நடுப்பகுதியை கழுவுதல் (ஒரு தடவை)

10

கால்களை கரண்டை வரை கழுவுதல் (மூன்று தடவை)
கால் இரண்டையும் நன்றாக கழுவுதல்

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

வுழுவின் நிபந்தனைகள்

1. நீர் சுத்தமாக இருத்தல்

2. தண்ணீர் ஆகுமானதாக இருக்க வேண்டும். திருடிய தாக இருக்கக் கூடாது.

3. உடலில் தண்ணிர் படாமல் இருப்பவைகளை நீக்குதல்.

4. கஷ்டமான நேரங்களில் வுழுவை பூரணமாக செய்தல்

பெயிண்ட் போன்றவற்றை நீக்குதல்

வுழுவின் பர்ளுகள்

1.எண்ணம் – அதனுடைய இடம் உள்ளமாகும். அதனை மொழிவது கூடாது. வுழு செய்வதற்கான எண்ணம் வைக்கவில்லையாயின் அதற்கு கூலி வழங்கப்பட மாட்டாது.

2.முகம் கழுவுதல். அதோடு சேர்த்து வாய் கொப்பளித்து நாசிக்கு நீர் செலுத்துதல்.

3.முழங்கை வரை கையை கழுவுதல்

4. தலையை மஸ்ஹ் செய்தல் அதோடு காதையும் மஸ்ஹ் செய்தல்.

5.கரண்டை வரை இரு கால்களையும் கழுவுதல்

6. ஒழுங்கு முறைப்படி செய்தல்.

பற்துலக்குதல்

வுழுவின் சுன்னத்துகள்

1.முதலாவது வுழுவில் மூன்று முறை மணிக்கட்டுவரை கைகளை கழுவுதல்

2.பற்துலக்குதல்.

3.வுழுவுடைய உறுப்புக்களை மூன்று முறை கழுவுதல். தலையையும் காதையும் ஒரு தடவையை அதிகரிக்காமல் மஸ்ஹ் செய்தல்.

4.வுழுவுடைய உறுப்புக்களில் வலதை முற்படுத்தல்.

5.முழங்கையையும் கரண்டிகாலையும் கழுவும் போது கொஞ்சம் அளவை அதிகரித்தல்.

6.தாடியை குடைந்து கழுவுதல்

7. கை, கால் விரல் இடைகளை நன்கு கழுவுதல்.

8.கையை பொறுத்த வரை அதில் நீரால் தெளிப்பது கூடாது.

உறுப்புக்களை நீட்டுதல்.

விரல் இடைகளை கழுவுதல்

https://www.al-feqh.com/ta

9. தண்ணீரை வீண் விரயம் செய்தல்.

நபியவர்கள் கூறினார்கள் «எனது உம்மத்தில் சிலர் தண்ணீர்வை வீண்விரயம் செய்ய கூடியவர்களாக இருப்பார்கள்»(ஆதாரம் அபூ தாவுத்) அதாவது வுழு செய்யும் தண்ணீரை வீண் விரயம் செய்வார்கள்.

10.வுழுச் செய்த பின் துஆ செய்தல். நபியவர்கள் கூறினார்கள் «உங்களில் ஒருவர் வுழுச் செய்தால் அதனை தொடர்ந்து பின்வரும் துஆவை ஓதட்டும். " அஷ்ஹது அன்லாயிலாக இல்லல்லாஹ், வஹ்தஹு லா ஷரீக லஹூ. வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹூ வரசூலுஹு, அல்லாஹூம்ம அஜ்அல்னி மினத் தவ்வாபீன வஜஅல்மினி மினல் முததஹ்ஹிரீன். அவருக்கு சுவர்க்கத்தினுடைய எட்டு வாயில்கள் திறக்கப்படும். அதின் அவர் நாடியவாறு நுழையலாம். »(ஆதாரம் திர்மிதி).

11.வுழு செய்த பின் இரண்டு ரகஅத் சுன்னத் தொழுதல். நபியவர்கள் கூறினார்கள் «யார் நான் செய்தது போன்று வுழுச் செய்து கொண்டு இரண்டு ரக்ஆத்கள் சுன்னத் தொழுகிறாரோ அவருடைய முன்சென்ற பாவங்கள் மன்னிக்கப்படும்» (புஹாரி முஸ்லிம்) என கூறினார்கள்.

வுழுவை முறிக்கும் காரியங்கள்.

1.முன்,பின் துவாரங்களால் ஏதேனும் வெளியாகுதல்.(முன்,பின்துவாரம்) உதாரணம்சிறுநீர், மலம், துர்நாற்றம் போன்றன. நபியவர்கள் கூறினார்கள். «வுழுச் செய்யாதவரை உங்களில் ஒருவருடைய தொழுகை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது» (ஆதாரம் முஸ்லிம்).

2.ஆழ்ந்த தூக்கம். தன்னை மறந்து ஆழ்ந்து தூங்குவதால் வுழு முறிவடையும்.

3.ஒட்டக இறைச்சி சாப்பிடுதல். ஜாபிர் இப்னு ஸம்ர ரழி அவர்கள் அறிவிக்கிறார்கள் " நபியவர்களிடம் «ஒருவர் வந்து ஒட்டக இறைச்சி சாப்பிட்டால் வுழு செய்ய வேண்டுமா? என கேட்டார். அதற்கு நபியவர்கள் ஆம்» என்றார்கள். (ஆதாரம் முஸ்லிம்).

4.நேரடியாக மர்ம உறுப்பை தொடுதல் " புஷ்ரா பின்த் ஸப்வான் ரழி அவர்கள் நபியவர்கள் கூறியதை கேட்டதாக அறிவிக்கிறார்கள் «யாராவது தனது மர்ம உறுப்பை தடவினால் வுழுச் செய்து கொள்ளட்டும்»(ஆதாரம் அபீதாவுத்) என்றார்கள்.

ஆழ்ந்த தூக்கம்

ஒட்டக இறைச்சி சாப்பிடுதல்

கேள்வி

1. ஒரு முஸ்லிம் தூக்கத்திலிருந்து எழுந்து வுழுச் செய்ய சென்றால் தனது கையை மூன்று முறை கழுவாமல் பாத்திரத்தில் கையை நுழைக்க வேண்டாம். நபியவர்கள் கூறினார்கள். «ஒருவர் தூக்கத்திலிருந்து எழுந்தால் தனது கைகளை மூன்று முறை கழுவாமல் பாத்திரத்தில் நுழைக்க வேண்டாம். ஏனனில் இரவு நேரங்களில் அவரது கை எங்கிருந்தது என அவருகே தெரியாமல் இருக்கும்»(புஹாரி முஸ்லிம்).

2.கட்டாயம் கழுவ வேண்டிய பகுதிகள் கழுவப் பட்டுள்ளதா என்பதில் கவனமாக இருக்க வேண்டும். குறிப்பாக கை,கால் விரல் இடைகள், தாடி, காதின் உட்பகுதி, முழங்கை, கரண்டைக்கால்

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

(காலின் முற்பகுதி) போன்ற கழுவப்பட்டுள்ளனவா என்பதை கவனமாக பார்க்க வேண்டும். நபியவர்கள் கூறினார்கள் «கால்களை (சரியான முறையில்) கழுவாதவர்களுக்கு கேடுதான்». (ஆதாரம் முஸ்லிம்)

3. ஒருவர் உறுதியாக சுத்தம் செய்த பின்னர் வுழு முறிந்ததா? என சந்தேகம் ஏற்பட்டால் அவர் சுத்தம் என்றே முடிவெடுக்க வேண்டும். அதே போன்று அவர் சுத்தமில்லாத நிலையில் வுழு செய்தேனா? இல்லையா? என சந்தேகம் என்றால் சுத்தமில்லை என்றே முடிவெடுக்க வேண்டும்.

4. ஒரு தடவை அல்லது இரண்டு தடவை உறுப்புக்களை கழுவலாம். அல்லது சிலதை ஒரு தடவையும்,சிலதை இரு தடவையும் கழுவலாம். அல்லது மூன்று தடவையும் கழுவலாம்.

5.ஒருவர் மறதியாக வுழுச் செய்யாமல் தொழுது, பின்னர் அவருக்கு வுழுச் செய்யவில்லை என்பது ஞாபகம் வந்தால் அவர் தொழுகையை மீட்டித் தொழ வேண்டும்.

6.ஒருவர் வுழுச் செய்த பின் நஜீஸ் பட்டால் நஜீஸை மாத்திரம் நீக்கினால் போதுமானது. மீண்டும் வுழுச் செய்ய தேவையில்லை. ஏனெனில் அது தொடக்கு கிடையாது



காதிற்கும், தாடிக்கும் இடைப்பபட்ட பகுதி

தூங்கி எழுந்த பின் பாத்திரத்தில் கையை நுழைக்காமல் இருத்தல்

கால் விரல்களின் இடைகளை கழுவுதல் கரண்டை கால்

வுழுவும் பொதுவான தேகாரோக்கியமும்.

ஐக்கிய நாடுகள் சபையால் வெளியிடப்பட்ட மூல இதழில் வெளியான ஒரு கட்டுரையில்: “மூன்றாம் உலக நாடுகளில் குருட்டுத்தன்மைக்கு பிரதான காரணமாக விளங்கும் டிரோகோமாவின் பரவுதலைக் குறைப்பதற்காக முஸ்லீம் சமூகங்களில் தொழுகைக்காக வுழுச் செய்தல், நேர்த்தியாக குளித்தல் ஆகியவை உதவுகின்றன. உலகம் முழுவதும் சுமார் 500 மில்லியன் மக்கள் இந்த நோய்க்கு ஆளாகியுள்ளனர். முஸ்லிம்கள் போன்று தொழுகைக்காக சுத்தமாகுவது போன்றவற்றை பின்பற்றினால் இப்படியான நோய்கள் முஸ்லிம் சமூகத்தை விட்டும் நீங்கியது போன்று ஏனைய சமூகங்களை விட்டும் நீங்கி விடும். (நவீன விஞ்ஞான ஒளியில் நபியவர்களது மருத்துவம். (கியாதுல் அஹ்மத்).

அவசியமில்லை

தண்ணீரை வீண்விரயம் செய்தல்

1.வுழுவின் போது நீயத்தை வெளிப்படுத்துவது அவசியமில்லை.

2.நீரை வீண்விரயம் செய்தல்.

3. உடலுறுப்புக்களை மூன்று முறைக்கு மேல் கழுவுதல்.

«ஒரு நாட்டுப்புற அரபி ஒருவர் நபியர்களிடம் வந்து வுழுவைப்பற்றி கேட்டார். நபியவர்கள் மூன்று தடவை (உறுப்புக்களை கழுவி) வுழுச் செய்து காட்டினார்கள். பின்னர் இதுவே வுழுவாகும். யார் இதற்கு மேல் அதிகப்படுத்துகிறாரோ அவர் பிழையாக செய்கிறார் அல்லது திரிவுபடுத்துகிறார் அல்லது அநியாயம் செய்கினறார்»(ஆதாரம் அபூதாவுத்). என்றார்கள்.

என்றாலும் மூன்று முறை கழுவி வுழுவுடைய உறுப்பு சுத்தமடையவில்லை என்னில் அதற்கு அதிகமாக கழுவுவது ஆகுமானது. உதாரணமாக ஒருவருடைய கையில் பெயிண்ட் பட்டிருப்பின் அது நீங்கும் வரை கழுவுதல்.

கஷ்டமான நேரத்திலும் நேர்த்தியாக வுழு செய்தல். ஒரு மனிதர் வுழுச் செய்தார்

காலின் நகப்பகுதியை அவர் கழுவாமல் விட்டார். இதனைப் பார்த்த நபியவர்கள் திரும்ப «உனது வுழுவை நல்ல முறையில் ஒழுங்குற செய்» (ஆதாரம் முஸ்லிம்). என்றார்கள். பின்னர் அவர் வுழுச் செய்துவிட்டு தொழுதார்.

வுழு பூரணமடையாமல் இருப்பதில் உள்ளடங்குபவைகள்

(அ) கால்களை பூரணமாக கழுவாமல் இருத்தல்.

(ஆ) இரண்டு கைகளையும் ஆடையின் பட்டுன்கள் இறுக்கமாக இருக்கும் போது பூரணமாக கழுவாமல் இருத்தல்.

(இ) தாடிக்கும் காதிற்கும் இடைப்பட்ட பகுதிகளை பூரணமாக கழுவாமல் இருத்தல்.

(ஈ) வலக்கையுடன் சேர்த்து இடக்கரத்தை பூரணமாக கழுவாமல் இருத்தல்.

(உ) பெயிண்ட் உள்ள நிலையில் வுழு செய்தல்.

(ஊ) பெண்கள் வுழுச் செய்யும் போது விரல்களில் தண்ணீர் படாதவாறு அழகுபடுத்தப்பட்ட நிலை.

(எ) தண்ணீர் கடக்காதவாறு கால் விரல்களை வைத்துக் கொள்ளல்.

5. பிடரியை கழுவுதல்

- ஆனால் வுழுச் செய்ய முன்னர் அல்லது பின்னர் தேவையனின் கழுவிக் கொள்ளலாம்.

6. பிரத்தியோகமான எந்த துஆவும் வுழுவுடைய நேரத்தில் இல்லை.

- ஒவ்வொரு வுழுவுடைய உறுப்பையும் கழுவுகின்ற போது பிரத்தியோகமாக துஆ ஓதல்.

- வுழுவுடைய உறுப்புக்களை கழுவும் போது ஸம்ஸம் என்ற பிரத்தியோகமான துஆவை ஓதுதல்

7. உள்ளத்தில் ஏற்படும் ஊசலாட்டங்கள் – இதனை

பொறுத்தவரை செய்தான் அடியார்களோடு விளையாடும் செயலாகும். வுழு முறிந்ததா? அல்லது எதனையும் விட்டுவிட்டேனா என்ற சந்தேகத்தை ஷைத்தான் உள்ளத்தில் தோற்றுவிக்கிறான்.

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

8 எட்டாவது பாடம் (இரண்டு காலுறை, பாதணி, பெண்டச், காய கட்டு போன்றவைகளில் மஸ்ஹ் செய்தல்

காலுறை

காலில் அணியப்படும் தோலிலினால் செய்யப்பட்ட (காலணி)

காலுறை (சொக்ஸ்)

காலில் அணியப்படும் பஞ்சை கொண்டு செய்யப்பட்ட காலுறை

(காலில் அணியப்படும் தோல்,பஞ்சை கொண்டு செய்யப்பட்ட) காலுறை மீது மஸ்ஹ் செய்வதன் சட்டம்

(காலில் அணியப்படும் தோலிலினால் செய்யப்பட்ட (காலணி) காலில் அணியப்படும் பஞ்சை கொண்டு செய்யப்பட்ட) காலுறை மீது மஸ்ஹ் செய்வதை இஸ்லாம் அனுமதித்துள்ளது. அது தொடர்பாக அதிகமான ஹதீஸ்கள் இடம் பெற்றுள்ளன. அனஸ் இப்னு மாலிக் ரழி அவர்கள் அறிவிக்கின்றார்கள். «காலுறையின் மீது செய்வது பற்றி கேட்கப்பட்ட போது அவர்கள் கூறினார்கள் ” நபியவர்கள் அவ்விரண்டின் மீதும் மஸ்ஹ் கூடியவர்களாக இருந்தார்கள்» (புஹாரி முஸ்லிம்).

பொருளடக்கம்

(காலில் அணியப்படும் தோலிலினால் செய்யப்பட்ட (காலணி) காலில் அணியப்படும் பஞ்சை கொண்டு செய்யப்பட்ட) காலுறை பற்றிய வரைவிலக்கணம்

அதன் மீது மஸ்ஹ் செய்வதன் சட்டம்

அதன் மீது மஸ்ஹ் செய்வதன் நிபந்தனைகள்

அதன் மீது மஸ்ஹ் செய்யும் முறை

அதன் மீது மஸ்ஹ் செய்யும் கால அளவு

அதன் மீது மஸ்ஹ் செய்வதை முறிக்க கூடியவகள்

பெண்டச், காய கட்டு, பிளாஸ்டர் போன்றவற்றின் மீது மஸ்ஹ் செய்தல்

பெண்டச், காய கட்டு, பிளாஸ்டர் பற்றிய அறிமுகம்

மஸ்ஹூ ஆகும் என்பதற்கான ஆதாரம்

மஸ்ஹ் செய்வதன் நிபந்தனைகள்

மஸ்ஹ் செய்வது எவ்வாறு?

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

(காலில் அணியப்படும் தோல்,பஞ்சை கொண்டு செய்யப்பட்ட) காலுறை மீது மஸ்ஹ் செய்வதின் நிபந்தனைகள்

1. சுத்தமானதின் பின்னரே அவற்றை அணிய வேண்டும். முகிரா ரழி அறிவிக்கின்றார்கள் " «நபியவர்களுடன் ஒரு பயணத்தில் இருந்தேன். அப்போது (வுழு செய்யும் வேளை) நபியவர்களை காலுறையை கழற்ற முன்றேன். நபியவர்கள் அதற்கு "அதனை விடுங்கள் அவற்றை சுத்தமாகவே அணிந்துள்ளேன்" என்றார்கள். பின்னர் அதன் மீது மஸ்ஹ் செய்தார்கள்.»(புஹாரி முஸ்லிம்).

2. காலுறை கரண்டை கால் வரை முழுவதும் மறைக்கப்பட வேண்டும். கரண்டையை மறைக்காத காலுறை மீது மஸ்ஹ் செய்ய முடியாது.

3. காலுறை சுத்தமான பொருட்களால் செய்யப்படிருக்க வேண்டும்.

4. ஆகுமான பொருட்களால் காலுறை செய்யப்பட்டிருக்க வேண்டும். உதாரணமாக ஆண்களுக்கு பட்டாலான காலுறை அணிய முடியாது.

5 .காலுறை மஸ்ஹ் செய்ய அனுமதிக்கப்பட்ட காலம். நபியவர்கள் கூறினார்கள் " ஊரில் இருப்பவருக்கு ஒரு நாளும் ஒரு இரவுமாகும். பிரயாணிக்கு மூன்று நாட்களாகும்" அதை விட அதிகமாக செய்ய முடியாது.

6.சிறு தொடக்கிற்கு மாத்திரமே மஸ்ஹ் அனுமதிக்கப்பட்டுள்ளது. பெருந்தொடக்கிற்கு மஸ்ஹ் செய்ய முடியாது. ஸப்வான் பின் அஸ்ஸால் ரழி அறிவிக்கின்றார்கள் «நீங்கள் பிரயாணியாக இருந்தால் காலுறை மீது மஸ்ஹ் செய்யும் படி நபியவர்கள் ஏவினார்கள். பின்னர் குளிப்பு கடமையாக்கும் செயற்பாட்டை தவிர சிறுநீர், மலம், தூக்கம் போன்றன ஏற்படும் சந்தர்ப்பங்களில் காலுறையை கழட்ட தேவையில்லை »(ஆதாரம் புஹாரி). என கூறினார்கள்.

இங்கு குளிப்பு கடமையாக்கும் நிகழ்வு ஏற்பட்டால் குளிப்பதற்காக காலுறையை கழட்ட வேண்டும். பின்னர் மீண்டும் அணிய வேண்டும்.

(காலில் அணியப்படும் தோல்,பஞ்சை கொண்டு செய்யப்பட்ட) காலுறை மீது மஸ்ஹ் செய்யும் முறை

ஈரக் கையால் இரண்டு கால்களின் மேற்பரப்பை மாத்திரம் மஸ்ஹ் செய்ய வேண்டும். காலின் ஆரம்பத்திலிருந்து விரல் வரை ஒரு தடவை தடவ வேண்டும். வலது காலுக்கு வலக்கரத்தையும் இடக்காலுக்கு இடக்கரத்தையும் முற்படுத்த வேண்டும். காலின் கீழ் பகுதியை மஸ்ஹ் செய்ய கூடாது. அலி ரழி அவர்கள் கூறினார்கள் «காலுறையை கீழே மஸ்ஹ் செய்வதை மேற் பகுதியில் மஸ்ஹ் செய்வதே மார்க்க நிலைப்பாடாகும். ஏனனில் நபியவர்கள் காலுறையின் (மேற்பகுதியில்) வெளிப்பகுதியில் மஸ்ஹ் செய்வதை நான் கண்டேன்»(ஆதாரம் அபூதாவுத்). என்றார்கள்

இரண்டு கைகளாலும் மஸ்ஹ் செய்தல்

https://www.al-feqh.com/ta

(காலில் அணியப்படும் தோல், பஞ்சை கொண்டு செய்யப்பட்ட) காலுறை மீது மஸ்ஹ் செய்யும் கால அளவு

ஊரில் உள்ளவருக்கு ஒரு நாளும் ஒரு இரவுமாகும். பிரயாணிக்கு மூன்று நாட்களாகும். அலி ரழி அவர்கள் கூறினார்கள். நபியவர்கள் «பிரயாணிக்கு மூன்று நாட்களும், ஊரில் உள்ளவர்களுக்கு ஒரு நாளும் (மஸ்ஹ் செய்யும் காலமாக) ஆக்கினார்கள் » (ஆதாரம் நஸாயி).

மஸ்ஹ் செய்யும் காலத்தின் கணிப்பு

தொடக்கின் பின்னர் முதலாவது மஸ்ஹ் ஆரம்பமாகும். ஒருவர் சுத்தமான நிலையில் காலுறை அணிந்து பின்னர் தொடக்கு (சிறுநீர், மலம்) ஏற்பட்டு பின்னர் அவர் வுழு செய்து மஸ்ஹ் செய்தால் அவருக்கு அதிலிருந்து ஒரு நாளும் ஒரு இரவும் கணக்கிலப்படும் (24 மணித்தியாலம்.)

உதாரணமாக. – ஒரு மனிதர் வுழுச் செய்து கால்களை கழுவி பின்னர் காலுறை அணிகிறார். பின்னர் சுபஹ் தொழுகிறார். காலை 10 மணியளவில் அவருக்கு (மலமே, சிறுநீரோ) சிறு தொடக்கு ஏற்பட்டு அவருடைய வுழு முறிந்து விடுகிறது. இப்போது 11 மணியளவில் ளுஹா தொழ வேண்டும் என எண்ணி அவர் வுழு செய்கிறார். அப்போது காலுறை மீது மஸ்ஹ் செய்கிறார் எனின் அடுத்த நாள் காலை 11 மணி வரை அவர் காலுறை மீது தொடராக மஸ்ஹ் செய்யலாம்.

இது ஊரில் உள்ள ஒருவருக்குரிய சட்டமாகும். பிரயாணி இது போன்று மூன்று நாட்களுக்கு செய்ய வேண்டும்.

பிரயாணிக்கு 24 மணித்தியாலங்கள்

பிரயாணிக்கு 72 மணித்தியாலங்கள்

(காலில் அணியப்படும் தோல், பஞ்சை கொண்டு செய்யப்பட்ட) காலுறை மீது மஸ்ஹ் செய்வதை முறிக்கும் காரியங்கள்.

1. காலம் முடிவடைதல்

2. இரண்டு காலுறையையோ அல்லது அதில் ஒன்றையோ கழட்டுதல்.

3. பெருந்தொடக்கு ஏற்படுதல். ஸப்வான் பின் அஸ்ஸால் ரழி அறிவிக்கின்றார்கள் «நீங்கள் பிரயாணியாக இருந்தால் காலுறை மீது மஸ்ஹ் செய்யும் படி நபியவர்கள் ஏவினார்கள். பின்னர் குளிப்புகடமையாக்கும்செயற்பாட்டைதவிரசிறுநீர், மலம், தூக்கம் போன்றன ஏற்படும் சந்தர்ப்பங்களில் காலுறையை கழட்ட தேவையில்லை » (ஆதாரம் திர்மிதி). என கூறினார்கள்.

காலுறையின் மேற்பகுதியில் மஸ்ஹ் செய்தல்.

கரண்டையை மஸ்ஹ் செய்தல்

காலுறையை கழட்டுவது மஸ்ஹை முறித்து விடும்.

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

பெண்டச் கட்டு, பெண்டச், ப்ளாஸ்டர் ஆகியவை மீது மஸ்ஹ் செய்தல்.

பெண்டச் கட்டு

முறிவுகள் ஏற்படும் போது ஏதாவது பொருட்களை வைத்து சுற்றி கட்டுப் போடுவதை குறிக்கின்றது.

பெண்டச்

காயம், எரி காயத்தின் போது துணி போன்றவற்றால் மருந்தை வைத்து சுற்றி வைப்பதை குறிக்கும்.



பிளாஸ்டர்

மருந்தை வைத்து காயத்தின் மீது ஒட்டும் பிளாஸ்டரை குறிக்கும்.



பெண்டச் மீது மஸ்ஹ் கூடும் என்பதற்கான ஆதாரம்

ஜாபிர் ரழி அவர்கள் கூறினார்கள் «நாங்கள் பிரயாணம் சென்றோம். அப்போது எங்களில் ஒருவருக்கு கல் பட்டு காயம் ஏற்பட்டது. பின்னர் அவருக்கு குளிப்பு கடமையான நிலை ஏற்பட்ட போது அவர் ஸஹாபாக்களிடம் கேட்டார், எனக்கு தயமம் செய்வதற்குரிய சலுகைகள் உண்டா? என. அப்போது ஸஹாபாக்கள் நீர் தண்ணீரை பெற்றால் உனக்கு தயமம் செய்ய சலுகை இல்லை என அவர்கள் கூறினார்கள். அப்போது அம் மனிதர் குளித்தார். பின்னர் மரணித்து விட்டார். ஸஹாபாக்கள் நபியவர்களிடம் வந்து நடந்தவற்றை கூறினார்கள். அப்போது நபியவர்கள் கூறினார்கள் " அவரை கொலை செய்து விட்டீர்கள், அல்லாஹ்வின் சாபம் அவர்கள் மீது உண்டாவதாக நீங்கள் அறியாதவைகளை மற்றவர்களுக்கு சொல்லாதீர்கள். அறியாமைக்கு உரிய நிவாரணம் கற்றலாகும். அவருடைய காயத்தில் துணியால் கட்டி விட்டு அதன் மீது செய்திருக்கலாம். பின்னர் உடலின் ஏனையை பகுதிகளை அவர் கழுவியிருக்கலாம் என்று கூறினார்கள்»(ஆதாரம் அபூதாவுத்).

பெண்டச், பிளாஸ்டர் மீது மஸ்ஹ் செய்வதற்கான நிபந்தனைகள்

1. பெண்டச் காயத்தில் மாத்திரமே அணியப்பட வேண்டும். அதற்கு மேலதிகமான இடங்களில் அணியக் கூடாது.

2. அதனை கட்டும் போது வுழுவில் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. அதற்கென்று கால எல்லை கிடையாது. அதனை அணியும் காலமெல்லாம் மஸ்ஹ் செய்யலாம். தொடக்குகள் ஏற்பட்டாலம் மஸ்ஹ் செய்வது கூடும். எப்போது காய கட்டை கழட்ட வேண்டம் என்ற அவசியம் ஏற்படுகின்றதோ அப்போது அதனை அவசியம் கழட்ட வேண்டும். வுழுச் செய்யும் போது அதன் மீது கழுவ வேண்டும்.

3. ப்ளாஸ்டரை பொருத்தவரை அதனை கழட்டுவதும் அதனை ஒட்டுவதும் இலகுவான ஒன்றாகும். அதில் கவனிக்க –

- அதனை கழட்டுவது இலகுவான சந்தர்ப்பங்களில்

பாதிப்பு இல்லை என்ற போது அதன் கீழுள்ளவற்றை கழுவ வேண்டும். அதனை கழட்டுவதால் காயம் இலேசாகாது எனின் அதன் கீழுள்ளவைகளை கழுவி பின்னர் ஒட்டலாம்.

- அதனை கழட்டுவது கஷ்டம் எனின் பாதிப்பு ஏற்படாது எனின் அதன் கீழுள்ள பகுதியை கழுவ வேண்டும். அதனை கழட்டுவது காயம் குணமடைய தாமதம் ஏற்படும் என்றிருப்பின் வுழுவுடைய அந்த உறுப்பை மஸ்ஹ் செய்ய வேண்டும்.

பெண்டச், பிளாஸ்டர் மீது மஸ்ஹ் செய்யும் முறை

ஒருவர் அவ்வுறுப்பை சுத்தம் செய்ய வேண்டி வந்தால் அதில் அப்பொருள் ஏதாவது இருப்பின் அதனை சூழ உள்ளவற்றை கழுவ வேண்டும். பின்னர் அது பூராகவும் மஸ்ஹ் செய்ய வேண்டும். போடப்பட்டுள்ள கட்டு அல்லது பேன்டேச் உறுப்பை விட்டு தாண்டியதாக இருந்தால் அதனை சுத்தம் செய்வது அவசியமாகும். அதன் மீது மஸ்ஹ் செய்ய தேவையில்லை.

காய கட்டு மீது மஸ்ஹ் செய்யும் முறை

பெண்டச் (பெரியது) மீது மஸ்ஹ் செய்யும் முறை



ப்ளாஸ்டர் மீது மஸ்ஹ் செய்தல்.

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

மஸ்ஹ் செய்யும் காலத்தை கணக்கிடுவது எப்படி?



ஒரு மனிதர் வுழுச் செய்து கால்களை கழுவி பின்னர் காலுறை அணிகிறார். பின்னர் சுபஹ் தொழுகிறார். காலை 10 மணியளவில் அவருக்கு (மலமே,சிறுநீரோ) சிறு தொடக்கு ஏற்பட்டு அவருடைய வுழு முறிந்து விடுகிறது. இப்போது 11 மணியளவில் லுஹா தொழ வேண்டும் என எண்ணி அவர் வுழு செய்கிறார். அப்போது காலுறை மீது மஸ்ஹ் செய்கிறார் எனின் அடுத்த நாள் காலை 11 மணி வரை அவர் காலுறை மீது தொடராக மஸ்ஹ் செய்யலாம்.

இது ஊரில் உள்ள ஒருவருக்குரிய சட்டமாகும். பிரயாணி இது போன்று மூன்று நாட்களுக்கு செய்ய வேண்டும்.

https://www.al-feqh.com/ta

9

குளிப்பு

https://www.al-feqh.com/ta

பொருளடக்கம்

குளிப்பு என்றால் என்ன?

குளிப்பு கடமையாகும் அம்சங்கள்

1.விந்து வெளியாகுதல்

2.உடலுறவு கொள்ளல்

3.இஸ்லாத்தினுள் நுழைதல்

4.மாதவிடாய் இரத்தம் நிற்றல்

5.மரணம்

குளிக்கும் முறை

குளிப்பவர்களுக்கு தடுக்கப்பட்டவை

ஆகுமான குளிப்புகள்

மொழி ரீதியில்

சிலவற்றை தண்ணீரால் சுத்தப்படுத்துல்

இஸ்லாமிய பரிபாஷையில்

அல்லாஹ்வை வணங்கும் நோக்கில் ஒழுங்கான அமைப்பில் உடலை தண்ணீரால் பூரணமாக கழுவுதல்.

குளிப்பு கடமையாகும் அம்சங்கள்

1.விந்து வெளியாகுதல்

விந்து – கட்டியான இச்சையின் போது பாய்ந்து வெளியாகும். அழுகிய முட்டையுடை வாசம் கொண்டதாகும். {நீங்கள் பெருந்தொடக்குடையோராக (குளிக்கக் கடமைப் பட்டோராக) இருந்தால் குளித்து (த் தேகம் முழுவதையும் சுத்தம் செய்து)க் கொள்ளுங்கள் } [மாயிதா -06] அலி ரழி அவர்களுக்கு நபியவர்கள் கூறினார்கள் «துள்ளிக்குதித்து நீர் வெளியானால் நீர் குளிப்பீராக!»(ஆதாரம் அபூதாவுத். துள்ளிக்குதிக்கும் நீர் என்பது விந்தாகும்.

கேள்வி

1.ஒருவர் கனவு கண்டு விந்து வரவில்லையானால் அவர் குளிக்க தேவையில்லை. அவர் எழுந்த பின்னர் விந்து வெளியேறினால் அவர் மீது குளிப்பு கடமாகும்.

https://www.al-feqh.com/ta

2.ஒருவருக்கு விந்து வெளிப்பட்டு அவர் கனவு காணவில்லை என்றாலும் அவருக்கு விந்து வெளியானதால் குளிப்பு கடமையாகும். நபியவர்கள் கூறினார்கள் «நிச்சயமாக தண்ணீர் தண்ணீரே» (ஆதாரம் முஸ்லிம்). அதாவது விந்து வெளிப்படும் போது குளிக்க வேண்டும்.

3.விந்து வெளியானதாக உணர்ந்து விந்து வெளியாகவில்லையாயின் அவர் குளிக்க தேவையில்லை.

4.இச்சையில்லாமல் நோய் காரணமாக விந்து வந்தாலும் குளிப்பு கடமையில்லை.

5.ஒருவர் குளிப்பு கடமையானால் குளிக்க வேண்டும். பின்னர் குளிப்பு கடமையானால் அவர் மீண்டும் குளிக்க தேவையில்லை. ஏனனில் அது பெரும்பாலும் இச்சையால் வெளிப்படவில்லை. அவர் வுழுச் செய்தால் சரி.(பேணுதலாகும்)

6. ஒருவர் தூக்கத்திலிருந்து எழுந்து ஈரமான ஒன்றை காண்கிறார். ஆனால் அது என்ன என்பதை அறியவில்லை என்னின். அதற்கு மூன்று காரணங்களாக அமையலாம்.

1. அது விந்தாக இருக்கலாம். அப்படியான சந்தர்ப்பத்தில் அவர் கனவு காணா விட்டாலும் அல்லது கண்டாலும் குளிப்பது கடமையாகும்.

2. அது விந்து அல்லாத ஒன்றாக இருக்கலாம். அப்படியானசந்தர்ப்பங்கில் குளிப்புகடமையில்லை. அதனுடைய சட்டம் சிறுநீருடைய சட்டமாகும்.

3.இது விந்தா? இல்லலையா? என்ற சந்தேகம் இருக்கலாம். அப்போது அவர் பேணுதலாக நடந்து கொள்ளலாம். அது விந்தாக இருக்கும் என்று தோன்றினால் அது விந்து தான். அல்லது மதியாக இருக்குமோ என்று தோன்றினால் அது மதியாகும். ஆனால் எதுமே தோன்றவில்லையாயின் அவர் குளித்துக் கொள்வது பேணுதலான விடயமாகும்.

4.ஒருவர் விந்து வெளிப்பட்டதை காண்கிறார். ஆனால் அது எப்போது வெளியானது என்பதை அறியவில்லை என்றிருப்பினும் அவர் குளிக்க வேண்டும். அப்போது அறியாத நிலையில் அவர் தொழுதிருந்தாலும் குளித்த பின்னர் மீண்டும் அத்தொழுகையை தொழ வேண்டும்.

2.உடலுறவில் ஈடுபடுதல்

இது ஆண்குறியும் பெண்குறியும் ஒன்றாக இணைவதை குறிக்கின்றது. இது ஆணுடைய முன்பகுதி பூரணமாக பெண்ணுறுப்பில் நுழைவதையும் குறிக்கின்றது. இதன் போது விந்து வெளிப்பட்டாலும் சரியே வெளிப்படா விட்டாலும் சரியே(குளிப்பு கடமையாகும்.) நபியவர்கள் கூறினார்கள். «ஆணுறுப்பும் பெண்ணுறுப்பும் ஒன்றாக இணைந்தால் அவர்களுக்கு குளிப்பு கடமையாகும்.» (ஆதாரம் திர்மிதி).

3.இஸ்லாத்திற்குள் நுழைதல்.

«நபியவர்கள் ஹைஸ் பின் ஆஸிம் இஸ்லாத்திற்கு வந்த போது அவர்களை குளிக்குமாறு ஏவினார்கள்»(ஆதாரம் அபூதாவுத்)

4.மகப்பேறு, மாதவிடாய் இரத்தம் நிற்கும் போது

ஆயிஷா ரழி அறிவிக்கின்றார்கள் " பாதிமா பின்த் குபைஷ் அவர்களுக்கு நபியவர்கள் கூறினார்கள்: «உங்களுக்கு மாதவிடாய் ஏற்பட்டால் தொழுகையை விடுங்கள். அது நின்று விட்டால் குளித்துவிட்டு தொழுங்கள்» (புஹாரி முஸ்லிம்). என்றார்கள்."

இங்கு மாதவிடாய்க்குரிய சட்டமே மகப்பேற்றுக்கும் சட்டமாகும்.

5.மரணம்

நபிமார்களுடைய மகன் மரணித்த வேளை குளிப்பாட்டும் போது நபியவர்கள் கூறினார்கள் «அவரை மூன்று முறை அல்லது ஐந்து முறை அல்லது அதற்கு அதிகமாக கழுவுங்கள்»(புஹாரி முஸ்லிம்).

என்றார்கள்.

குளிக்கும் முறை

குளிப்பு கடமையானவர் கடமையான குளிப்பை குளிக்கிறோம் என்ற எண்ணதில் தனது உடல் முழுவதையும் தண்ணீரால் குளிப்பது கடமையாகும். ஆனாலும் நபியவர்கள் எப்படி குளிப்பதற்கு காட்டித்தந்தார்களோ அப்படி குளிப்பது ஆகுமான

https://www.al-feqh.com/ta

ஒன்றாகும். உம்முல் முஃமின் மைமுனா ரழி அவர்கள் அறிவிக்கின்றார்கள். «நபியர்கள் குளிப்பு கடமையானர்களாக வுழுச் செய்தார்கள். தன்னுடைய வலக்கரத்தால் இடக்கரத்தை இரண்டு தடவை அல்லது மூன்று தடவை கழுவினார்கள். பின்னர் மர்ம உறுப்பை கழுவினார்கள். பின்னர் பூமியில் அல்லது சுவரில் இரண்டு தடவை அல்லது மூன்று தடவை அடித்தார்கள். பின்னர் வாய் கொப்பளித்தார்கள். நாசிக்கு நீர் செலுத்தி சிந்திவிட்டார்கள். பின்னர் முகத்தையும் கைகையையும் கழுவினார்கள். பின்னர் தலையின் மீது தண்ணீரை ஊற்றினார்கள். பின்னர் தனது உடம்பை கழுவினார்கள். பின்னர் கீழ் இறங்கி கால்களை கழுவினார்கள். நான் அவர்களுக்காக துணி கொண்டு வந்தேன். அதை அவர்கள் பெறவில்லை. பின்னர் தனது கையால் வாங்கினார்கள்»(ஆதாரம் புஹாரி).

அதன் பிரகாரம் குளிக்கும் முறை

1. கையை இரண்டு அல்லது மூன்று முறை கழுவுதல்
2. மர்ம உறுப்பை கழுவுதல்
3. பூமியில் அல்லது நிலத்தில் இரண்டு அல்லது மூன்று முறை அடித்தல்
4. கால்கள் அல்லாமல் தொழுகைக்காக வுழுச் செய்வதை போன்று வுழு செய்தல்
5. தலையில் தண்ணீரால் ஊற்றுதல்
6. உடம்பை கழுவுதல்
7. இறங்கி வந்து (தள்ளி நின்று) கால்களை கழுவுதல்

பயன்கள்

- குளிப்புக் கடமையான பெண் தனது கொண்டையை அவிழ்க்க வேண்டிய தேவை கிடையாது. முடி நனனையும் வரையில் கொண்டையை கழுவினால் போதுமானது.

- ஒரு பெண் மாதவிடாய், மகப்பேற்றிலிருந்து குளித்த பின் மணம் பூசிய பஞ்சினை கொண்டு இரத்தம் வந்த இடத்தில் தேய்ப்பது ஆகுமானது.

- குளிப்பாளி குளித்த பின்னர் அவரது தொழுகை ஏற்றுக் கொள்ளப்படும். அவர் வுழுச் செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி.

1

2

3

4

5

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

குளிப்பு கடமையானவருக்கு தடுக்கப்பட்டவைகள்

1.தொழுகை

அல்லாஹ் கூறுகிறான் {நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் ஓதுவது இன்னது என்று நீங்கள் அறிந்து கொள்ள முடியாதவாறு நீங்கள் போதையில் இருக்கும்போது தொழுகைக்கு நெருங்காதீர்கள்; அன்றியும் குளிப்புக் கடமையாக இருக்கும்போது குளிக்கும் வரை (பள்ளிக்குள் செல்லாதீர்கள்; பள்ளியை) பாதையாக கடந்து சென்றால் தவிர}. [நிஸா – 43].

தொழுகை

2.கஃபாவை தவாப் செய்தல்

நபியவர்கள் கூறினார்கள் «அல்லாஹ்வின் வீட்டை தவாப் செய்வது வணக்கமாகும்.» (அதாரம் நஸாயி).

கஃபாவை வலம் வருதல்

3.குர்ஆனை தொடுதல்

அல்லாஹ் கூறுகிறான் {தூய்மையானவர்களைத் தவிர (வேறெவரும்) இதனைத் தொட மாட்டார்கள்}. [வாகிஆ 79], நபியவர்கள் கூறினார்கள் «சுத்தம் இல்லாமல் குர்ஆனை குர்ஆனை தொட வேண்டும்» (மாலிக் – முஅத்தா).

குர்ஆனை தொடுதல்

4.குர்ஆன் ஓதுதல்

அலி ரழி அவர்கள் அறிவிக்கின்றார்கள் «நபியவர்கள் இயற்கை தேவைக்கு சென்றால் குர்ஆனை ஓதுவார்கள், எங்களுடன் இணைந்து இறைச்சி சாப்பிடுவார்கள். குளிப்புக் கடமையான நிலையில் இவற்றை செய்யமாட்டார்கள்» (ஆதாரம் திர்மிதி)

குர்ஆனை ஓதுதல்

https://www.al-feqh.com/ta

5.வழிப்போக்கர் அல்லாதவர்கள் பள்ளியில் தரித்தல்

அல்லாஹ் கூறுகிறான் {நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் ஓதுவது இன்னது என்று நீங்கள் அறிந்து கொள்ள முடியாதவாறு நீங்கள் போதையில் இருக்கும்போது தொழுகைக்கு நெருங்காதீர்கள்; அன்றியும் குளிப்புக் கடமையாக இருக்கும்போது குளிக்கும் வரை (பள்ளிக்குள் செல்லாதீர்கள்; பள்ளியை) பாதையாக கடந்து சென்றால் தவிர} [நிஸா – 43].

பள்ளியில் தங்குதல்

ஆகுமான குளிப்புகள்

1-ஜூம்ஆ தினத்தில் குளித்தல் «யார் ஜூம்ஆ தினத்தன்று வுழுச் செய்கின்றாரே அதில் அருள் இருக்கின்றது. மேலும் யார் அத்தினத்தில் குளிக்கின்றாரோ அதுவே சிறந்த குளிப்பாகும்» (ஆதாரம் அபூதாவுத்) என நபியவர்கள் கூறினார்கள்..

2-ஹஜ்,உம்ராவில் இஹ்றாம் அணியும் போது குளித்தல் ஸைத் பின் தாபித் ரழி அவர்கள் «நபியவர்கள் இஹ்றாம் அணிய ஆடைகளை களைந்து விட்டு குளிப்பதை நான் பார்த்தேன்» (ஆதாரம் திர்மிதி).

3-மையத்தை குளிப்பாட்டிய பின்னர் குளித்தல் நபியவர்கள் கூறினார்கள் «யார் மையத்தை குளிப்பாட்டுகிறாரோ அவர் குளித்துக் கொள்ளட்டும்.» (ஆதாரம் இப்னுமாஜா).

4-உடலுறவில் ஈடுபடும் ஒவ்வொரு தடவையும் குளித்தல் ராபிஃ ரழி அவர்கள் கூறினார்கள் «நபியவர்கள் இரவில் தன் மனைவி மார்களிடம் செல்லக் கூடியவர்களாக இருந்தார்கள். பின்னர் அங்கும் இங்கும் குளித்தார்கள். பின்னர் நான் கூறினேன் யாரசூலல்லாஹ் ஒரே தடவையில் குளிக்க முடியாத என. அப்போது நபியவர்கள் கூறினார்கள் ”இது என்னை சுத்தப்படுத்தும், எனக்கு வாசனையுமாகும். மேலும் என்னை சுத்தப்படுத்தும்» (ஆதாரம் அபூதாவுத்).

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

அவசியமில்லை

1-குளிப்பு கடமையானவர் தொழுகை நேரம் முடியும் வரை குளிப்பை தாமதப்படுத்த கூடாது.

2-பெண்கள் மாதவிடாயில் இருந்து சுத்தமாகும் நிலையில் பர்ளான தொழுகையை விடுதல். லுஹருடைய நேரம் நெருங்கும் முன்னர் சுத்தமடைந்தால் அவர் குளித்து விட்டு, தொழ வேண்டும். நபியவர்கள் கூறினார்கள் " சூரியன் உதிப்பதற்கு முன்னர் சுபஹுடைய ரக்அத்தை அடைந்து கொண்டால் அவர் சுபஹ் தொழுகையை அடைந்து கொண்டார். எவர் சூரியன் மறைவதற்கு முன்னர் அஸருடைய ஒரு ரக்ஆத்தை அடைந்து கொள்கிறாரோ அவர் அஸரை அடைந்து கொள்கி றார். (புஹாரி முஸ்லிம்)

https://www.al-feqh.com/ta

10 தயமம்

பொருளடக்கம்

தயமம் என்றால் என்ன?

தயமம் இன் சட்டங்கள்

தயமம் செய்வதற்கான ஆதாரங்கள்

தயமம் செய்வதன் நுட்பம்

தயம் எப்போது செய்யப்படும்?

தயமம் செய்யும் முறை

தயமம் இன் பர்ளுகள்

தயமத்தை முறிப்பவைகள்.

மொழி ரீதியில்

நாடுதல், ஒன்றை நோக்கி நிறைவேற்றல்

இஸ்லாமிய பரிபாஷையில்

சுத்தம் ஆக வேண்டும் என்ற நோக்கில் சுத்தமான மண்ணை கொண்டு முகத்தையும் கை இரண்டையும் தடவுவதை குறிக்கும்.

தயமம் இன் சட்டங்கள்

தொழுகை போன்ற கடமையான வணக்கங்களின் போது சுத்தம் செய்ய தண்ணீர் இல்லாத போதும் அல்லது தண்ணீர் பயன்படுத்தினால் தீங்கு ஏற்படும் என்கின்ற போது தயமும் செய்யலாம். குர்ஆன் ஓதுதல் போன்னற சுன்னத்தான வணக்கங்களின் போது தயமம் செய்வது அனுமதிக்கப்பட்டுள்ளது.

தயமம் ஆகுமாகும் என்பதற்கான ஆதாரம்

1. {உங்களைச் சுத்தப்படுத்திக் கொள்ள) உங்களுக்குத் தண்ணீர் கிடைக்காவிட்டால் (தயம்மும் செய்து கொள்ளுங்கள்; அதாவது) சுத்தமான மண்ணைக் (கையினால் தடவிக்) கொண்டு அவைகளால் உங்கள் முகங்களையும், உங்களுடைய கைகளையும் தடவிக் கொள்ளுங்கள் }[மாயிதா 6].

2. நபியவர்கள் கூறினார்கள் «எனக்கு ஐந்து விடயங்கள் வழங்கப்பட்டுள்ளது. எனக்கு முன்னர் யாருக்கும் இது வழங்கப்படவில்லை. ஒரு மாத காலம் அச்சமின்றி வாழும் சந்தர்ப்பம். மேலும் பூமி எனக்கு சுத்தமாக தொழுமிடமாக்கப்பட்டுள்ளது. உங்களில் யாராவது தொழுவதற்கு நாடினால் (பூமியில்) தொழுது கொள்ளட்டும்»(ஆதாரம் புஹாரி).

தயமம் செய்வதன் நுட்பம்

1. நபியவர்களின் உம்மத்திற்கு இலகுவிற்காக.

2. சில தண்ணீர் பாவிக்க முடியாத நிலமைகளில் ஏற்படும் தீங்குகளிலிருந்து தவிர்ந்து நடக்க. உதாரணம். நோய், கடுமையான குளிர் போன்ற சந்தர்ப்பங்கள்.

3. தொடராக இபாதத் செய்வதற்காக, தண்ணீர் இல்லை என்ற காரணத்தினால் இபாதத் தடைப் படாமல் இருப்பதற்காக வேண்டி.

தயமம் எப்போது கடமைகும்?

1. தண்ணிர் கிடைக்காத போது

அல்லாஹ் கூறுகிறான் {உங்களைச் சுத்தப்படுத்திக் கொள்ள) உங்களுக்குத் தண்ணீர் கிடைக்காவிட்டால் (தயம்மும் செய்து கொள்ளுங்கள்; அதாவது) சுத்தமான மண்ணைக் (கையினால் தடவிக்) கொண்டு அவைகளால் உங்கள் முகங்களையும், உங்களுடைய கைகளையும் தடவிக் கொள்ளுங்கள் } [மாயிதா 6].

என்றாலும் மனிதன் தேடி ஏதாவது தண்ணீர் கிடைக்கவில்லையன்றால்

2. தண்ணீர் கிடைத்தும் அதனை பாவிப்பதற்கு இயலாத சந்தர்ப்பங்களில்

நோயாளி, உடற் பருமன் பெருத்தவர்கள் அவர்களால் நடமாட முடியாமை போன்றவர்கள். அவர்களுக்கு வுழுச் செய்ய உதவியாளர்கள் இல்லை என்றால் (அவர் தயமம் செய்யலாம்)

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

வயது முதிர்ச்சி நோயாளி

3.தண்ணீரை பாவிப்பதால் தீங்கு ஏற்படும் என பயந்தால்.

அதில்:

(அ) நோய் ஏற்பட்ட நிலையில் தண்ணீரை பாவித்தால் நோய் அதிகரிக்கும் என்ற நிலை.

(ஆ) கடும் பனி ஏற்பட்டு அதனை பாவித்தால் அல்லது குளித்தால் தீங்கு ஏற்படும் என பயந்தால் «நபியவர்கள் அம்ரு இப்னு ஆஸ் ரழி அவர்கள் கடுமையான குளிரின் போது தயமம் செய்ததை அனுமதித்தார்கள். »(ஆதாரம் அபூதாவுத்).

(இ) ஒருவர் தூர பிரதேசத்தில் உள்ளார் அவரிடமுள்ள தண்ணீர் குடிப்பதற்கு மாத்திரமே போதுமானது. அவருக்கு வேறு எவராலும் தண்ணீர் கொண்டுவர முடியவில்லை

தயமம் செய்யும் முறை

1.மண்ணின் மீது ஒரு தடவை கையால் அடித்தல்

2.கையை பிரட்டி புழுதி நீங்கும் படி தட்டுதல்

3.பின்னர் முகத்தை ஒரு தடவை மஸ்ஹ் செய்தல்

4.கையின் மேற்பகுதியை தடவுதல், வலது கரத்தை இடது கையாலும், இடது கரத்தை வலது கரத்தாலும் தடவுதல்

தயமம் செய்வதற்கான ஆதாரம் «நபியவர்கள் தனது கரத்தை பூமியின் மீது அடிப்பார்கள். பின்னர் அதிலுள்ள (புழுதியை) ஊதினார்கள். பின்னர் அதனை கொண்டு முகத்தையும் கையையும் மஸ்ஹ் செய்தார்கள்»(புஹாரி முஸ்லிம்)



https://www.al-feqh.com/ta

தயமம் செய்யும் முறை

ஒரே தடவையில் மண்ணின் மீது அடித்தல்

மண்ணை ஊதுதல்

முகத்தின் மீது மஸ்ஹ் செய்தல்

இடக்கரத்தால் வலக்கரத்தின் மீது மஸ்ஹ் செய்தல்

வலக்கரத்தால் இடக்கரத்தின் மீது மஸ்ஹ் செய்தல்

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

தயமம் இன் பர்ளுங்கள்

1.தூய எண்ணம்

2.முகத்தை தடவுதல்

3.இரண்டு கரங்களையும் தடவுதல்

4.முறையாக செய்தல் முகத்தை மஸஹ் செய்து பின்னர் கையை மஸ்ஹ் செய்ய வேண்டும்.

5.தொடராக செய்தல் – முகத்தை மஸ்ஹ் செய்த உடனேயே கையை மஸ்ஹ் செய்தல்.

தயமத்தை முறிக்கும் காரியங்கள்

1.தண்ணீரை பெறுதல்

2.வுழுவை முறிக்கும் காரியங்கள் அனைத்தும் தயமத்தை முறிக்கும். உதாரணம் காற்று வெளியாதல்

3. குளிப்பை கடமையாக்கும் அனைத்தும்

4.நோய், தீங்கு நீங்குதல் போன்ற சந்தர்ப்பத்தில் தயமம் செய்ய முடியாது.

தண்ணீரை பெறுதல்

கேள்வி

1.தண்ணீர் இல்லாத நேரத்தில் தயமம் செய்து தொழும் தொழுகையானது ஒருவர் தண்ணீரால் வுழுச் செய்து மலசலத்தை அடக்கி கொண்டு தொழுவதை சிறந்தது.

2.சுவர், விரிப்பு போன்றவைகளில் தயமம் செய்ய முடியாது. அதில் மண்,புழுதி இருக்குமானால் தயமம் செய்யலாம்.

3. தயமம் செய்த ஒருவர் தயமத்தை முறிக்காதவரை பர்ளான,சுன்னதான வணக்கங்களை செய்யலாம்.

4.தயமம் செய்தவரை பின்தொடர்ந்து வுழுச் செய்தவர் தொழலாம். «அம்ர் இப்னு ஆஸ் ரழி அவர்கள் கடும் குளிர் காரணமாக தயமம் செய்து கொண்டு ஸஹாபாக்களுக்கு தொழுகை நடத்தினார்கள். அதனை நபியவர்கள் அங்கிகரித்தார்கள்»(ஆதாரம் அபூதாவுத்).

5.ஒருவர் தயமம் செய்து தொழுகிறார், பின்னர் தொழுகையுடைய நேரம் முடிவதற்கு முன்னர் தண்ணீர் கிடைத்தால் அவர் தொழுகையை மீட்டத் தேவையில்லை. «ஸைதில் குத்ரி ரழி அவர்கள் அறிவிக்கின்றார்கள் " இரண்டு மனிதர்கள் பயணம் செய்கின்றனர். அப்போது தொழுகைக்கான நேரம் வந்தது. ஆனால் அவர்களிடம் தண்ணீர் இல்லை. பின்னர் சுத்தமான மண்ணால் தயமம் செய்து தொழுதார்கள், பின்னர் அந்த நேரத்தில் தண்ணீரை பெற்றுக் கொண்டார்கள், அதில் ஒருவர் வுழுச் செய்து தொழுகையை மீண்டும் தொழுதார். மற்றவர் மீண்டும் தொழவில்லை. பின்னர் இருவரும் நபியவர்களிடம் வந்தார்கள். நடந்தைவற்றை கூறினார்கள். அதற்கு நபியவர்கள் கூறினார்கள்" யார் தொழவில்லையோ அவர் சுன்னாவை நடைமுறைப்படுத்தினார். அவருக்குரிய கூலி வழங்கப்படும். மேலும் சொன்னார்கள் யார் வுழுச் செய்து தொழுதாரோ அவருக்கு இரண்டு கூலி வழங்கப்படும் என்றார்கள்» (ஆதாரம் அபூதாவுத்).

6.ஒருவர் தயமம் செய்கிறார்ஃ பின்னர் தண்ணீரை பெறுவாராயின் அல்லது தொழுவதற்கு முன்னர் தண்ணீர் கிடைத்துவிட்டது எனின் அவர் தண்ணீரை கொண்டு வுழுச் செய்ய வேண்டும். «நபியவர்கள் கூறினார்கள் " ஒருவர் பத்து வருடமாக தண்ணீரை பெறவில்லையனின் சுத்தமான தண்ணீர் ஒரு முஸ்லிமை சுத்தமாக்கும். ஆனால் அவன் தண்ணீரை பெற்றால் அவனுக்கு அதுவே சிறந்ததாகும்» (ஆதாரம் திர்மிதி).

7.தண்ணீர் திரும்ப பெறலாம் என்ற சந்தர்ப்பம் இருக்குமானால் தயமம் செய்வதை தாமதிக்க வேண்டும். யார் தண்ணீர் கிடைக்காது என்று நிராசை அடைகின்றானோ அவன் தயமம் செய்வது ஆகுமானது. ஏனனில் தொழுகையில் சிறந்த தொழுகை அதனுடைய நேரத்தில் தொழுவதாகும்.

8. மனிதன் தெழுகையினுடைய நேரம் முடிகின்றது என பயந்து அவர் தண்ணீரை பயன்படுத்த சக்தி பெற்று தண்ணீரை பெறுவாராயின் அவர் தயமம் செய்ய முடியாது. தொழுகையுடைய நேரம் முடிந்தாலும் அவர் மீது வுழு கடமையாகும்.

9.ஒரு முஸ்லிம் எந்த நிலையிலும் தொழுகையை விட முடியாது. தண்ணீர் கிடைக்காமை அல்லது நீரை பயன்படுத்த முடியாமை . போன்ற நிலைகளில் தயமம் செய்ய வேண்டும். அவருக்கு தயமம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டடாலும் அவர் அசுத்தமான நிலையிலும் தொழுகையை நிறைவேற்ற வேண்டும். அவர் அத்தொழுகையை மீட்டித் தொழ தேவையில்லை. அவர்களுக்கு பாகிது தாஹிரைன் என்று சொல்லப்படும். (இரண்டு சந்தர்ப்பங்களிலும் சுத்தம் செய்ய முடியாதவர்கள்). அல்லாஹ் கூறுகிறான். {உங்கள் சக்திக்குட்பட்ட வரை அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள்.}. [தஆபுன் – 16]

மண் கிடைக்காமை

“

அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்ட உண்மை

மண்ணில் சுத்தப்படுத்தக் கூடிய அனுக்கள் உள்ளன. அவைகளால் கிருமிகளையும் சுத்தப்படுத்த முடியும். அதே போல் கண்ணுக்கு புலப்படாத நுண்ணங்கிகளை கூட சுத்தப்படுத்த முடிகின்றது.

”

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

11

மாதவிடாய், தொடர்இரத்தப் போக்கு, மகப்பேற்று இரத்தம்

https://www.al-feqh.com/ta

பொருளடக்கம்

மாதவிடாய்

மாதவிடாய் என்றால் என்ன?

மாதவிடாய் இரத்தத்தின் தன்மை

மாதவிடாய் ஏற்படும் வயதும் காலமும்

தொடர் இரத்தப் போக்கு

தொடர் இரத்தப் போக்கு என்றால் என்ன?

மாதவிடாய்க்கும் தொடர் இரத்தப் போக்கும் இடையான வித்தியாசம்

தொடர் இரத்தப் போக்கின் நிலைகள்

மகப்பேறு இரத்தம்

மகப்பேறு இரத்தம் என்றால் என்ன?

மகப்பேற்றின் காலம்

மகப்பேற்றின் சட்டங்கள்

மாதவிடாய், மகப்பேறு காலங்களில் தடுக்கப்பட்டவைகள்.

மாதவிடாய்

மொழி ரீதியில்

ஓடக் கூடியது.

இஸ்லாமிய பரிபாஷையில்

எந்தக் காரணமும் இன்றி குறிப்பிட்ட நேரங்களில் சுகதேகியாக இருக்கும் போது பெண்ணின்கற்பப்பையிலிருந்துவெளியாகும் இரத்தத்தை குறிக்கும்.

மாதவிடாய் இரத்தத்தின் தன்மை

கருஞ் சிவப்பு நிறத்திலான கடும் சூடான துர்நாற்றம் வீசக் கூடிய ஒன்றாகும். இதன் போது கடுமையான சூட்டை பெண்கள் உணருவார்கள்.

மாதவிடாய் ஏற்படும் வயது.

மாதவிடாய் ஆரம்பிதற்கென பிரத்தியோகமான வயது கிடையாது. அது பெண்ணின் சூழல்,இயல்பு முகபாவணைகளை பொறுத்து மாற்றம் பெறும். என்றாலும் ஒரு பெண் எப்போது மாதவிடாய் இரத்தத்தை பார்க்கிறாளோ அப்போது அவள் மாதவிடாய் நிலையை அடைகிறாள்.

மாதவிடாய் காலம்

நிர்னயிக்கப்பட்ட எல்லை இதற்கு கிடையாது. சில பெண்களுக்கு மூன்று நாட்கள், சிலர் நான்கு நாட்கள், சில பெண்களுக்கு பெரும்பாலும் ஆறு அல்லது ஏழு நாட்கள் மாதவிடாய் ஏற்படுகிறது. நபியவர்கள் ஹம்னா பின்த் ஜஹ்ஸ் அவர்கள் அதிக

https://www.al-feqh.com/ta

நாட்கள் மாதவிடாயில் இருந்த போது கூறினார்கள் «மாதவிடாய் காலமாக ஆறாக அல்லது ஏழாக (ஆக்கிக் கொள்ளுங்கள்). அதனை அல்லாஹ்வே அறிந்தவன். பின்னர் கடமையான குளிப்பை நிறைவேற்றுங்கள்»(ஆதாரம் அபூதாவுத்).

கேள்வி

1.கர்ப்பமாகவுள்ளவர்களுக்கு மாதவிடாய் அடிப்படையில் ஏற்படாது. கற்பகாலத்தின் இடையே அவருடைய அடிவயிற்றில் நோவு ஏற்பட்டு இரத்தம் வந்தால் அது மகப்பேற்று இரத்தமாகும். ஆனாலும் கற்பகாலத்தின் ஆரம்பத்தில் வயிற்றில் நோவின்றி இரத்தம் வந்தால் அது மாதவிடாய் இரத்தமாகும்.

2.ஒரு பெண்ணிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள காலத்திற்கு முன்னரோ அல்லது பின்னரோ மாதவிடாய் ஏற்பட்டால் அவர் மாத ஆரம்பத்தில் மாதவிடாய் ஏற்பட்டு பின்னர் மாத இறுதியிலும் கண்டால் அல்லது அவளது மாதவிடாய் காலம் வழக்கத்திற்கு மாறாக குறைந்தாலோ அல்லது அதிகரித்தாலோ, அவள் எப்போது இரத்தத்தை காண்கிறாளோ அதுவே மாதவிடாய் இரத்தமாகும். எப்போது சுத்தமாகிறாளோ அப்போதே அது சுத்தமாகும். 3.பெண்ணிற்கு வெள்ளை நிறத்திலான ஒன்று வெளியாகின்ற போது அவள் துப்பரவாகிவிட்டாள் என அறியப்படும். வெள்ளை நிரமான அது மாதவிடாய் நின்ற பின்னர் வெளியாகும் ஒன்றாகும். அந்த நீர் வெளியாகவில்லையாயின் இரத்தம் காய்ந்து வந்தால் சுத்தமாகுவாள். அல்லது அவளுடைய பெண்ணுறுப்பில் பஞ்சை நுழைத்து அதில் உள்ள இரத்தம் காய்ந்திருந்தால் அது நின்றவிட்டதாகும்.

மாதவிடாய் உடைய சட்டம்

1.பிரவுன் மற்றும் மஞ்சள் நிற (இரத்தத்தின்) சட்டம்

பிரவுன் மற்றும் மஞ்சள் நிற (இரத்தத்தின்) அடையாளம்

ஸூப்ர்

இது மஞ்சள் நிறமான பெண்ணிலிருந்து வெளிப்படும் இரத்தமாகும்.

குத்ரா

இது கறுப்பிற்கும் மஞ்சளுக்கும் இடைப்பட்ட ப்ரவ்ன் நிற இரத்தமாகும்.

பிரவுன் மற்றும் மஞ்சள் நிற (இரத்தத்தின்) சட்டம்

ஒரு பெண் மஞ்சள் நிற இரத்தத்தை காண்கிறாள். அல்லது ப்ரவுன் நிறைத்தையோ அல்லது மஞ்சளுக்கும் கருப்பிற்கும் இடைப்பட்ட நிறத்தில் காண்கிறாள். அல்லது அதோடு தொடர்புபட்ட ஒன்றை காண்கிறாள் எனின் அதற்கு இரண்டு நிலைகள் இருக்கின்றன.

1-அதனை மாதவிடாய் காலத்தில் கண்டால் அல்லது சுத்தமாகுவதற்கு முன்னர் தொடராக வந்தால்

இந் நிலைகளில் அது மாதவிடாய் இரத்தமாகும். ஆயிஷாரழிஅவர்கள்அறிவிக்கின்றார்கள்«பெண்கள் சிலர் மஞ்சள் நிறம் வெளிப்படும் நேரத்தில் துணி,(துர்ஜ் - பெண்கள் மாதவிடாய் இரத்தம் எஞ்சியுள்ளதா என பார்க்க பயன்படுத்தும் துணி பஞ்சு (குர்சுபு – பஞ்சு) போன்றவற்றை உட்செலுத்தினர். (பரிசேதித்தனர்) அவர்களுக்கு சொல்லப்பட்டது ” மாதவிடாய் நிற்பதற்கான வெள்ளை நீர் வரும் வரை அவசரப்பட வேண்டாம். அதன் பின்னர் நீங்கள் மாதவிடாயிலிருந்து சுத்தமாகலாம்.» (மாலிக் முஅத்தா).

2-சுத்தமாகின்ற காலத்தில் கண்டால்

இந்த நேரத்தில் எதுவும் செய்ய தேவையில்லலை. குளிக்கவோ வுழுச் செய்வதோ அவசியமில்லை. உம்மு அதிய்யா ரழி அறிவிக்கின்றார்கள் «சுத்தமானதன் பின்னர் மஞ்சள், ப்ரவ்ன் நிறம் வெளிப்பட்டால் நாங்கள் எதுவும் செய்யமாட்டோம்»(தொடர் இரத்தப் போக்கின் நிலைகள்).

2.மாதவிடாய் தடைப்படுவதன் சட்டம்

ஒரு பெண் ஒருநாள் இரத்தத்தையும் மறுநாள் அது நிற்பதையும் கண்டால் அல்லது அது போன்றதை கண்டால் அது இரண்டு நிலைப்படும்.

1.அது அவளுடன் தொடர்ந்து இருக்கும்

அது தொடர் இரத்தப் போக்காகும்.

2.அது துண்டிக்கப்பட்டிருப்பின்

சில வேளை அவள் சுத்தமாக இருக்கின்றாள் அல்லது சில வேளை அவளுக்கு இரத்தம் வருகின்றது எனின் அவருக்கு இரண்டு சட்டங்கள் உள்ளன.

1.அந்த இரத்தம் தடுபட்டால் அது மாதவிடாய் இரத்தமாக கணிக்கப்படும்.

https://www.al-feqh.com/ta

2.சுத்தமான காலத்தில் அவள் வெள்ளை நீரை கண்டால் அது சுத்தமான காலமாகும். அது குறைவாக இருப்பினும் அல்லது அதிகமாக இருப்பினும் சரியே. அது குறைவான நாளாக அல்லது கூடுதலான நாளாக இருப்பினும் சரியே

சுத்தத்திற்கான அடையாளம்

மஞ்சள் அடையாளம்

ப்ரவுன் அடையாளம்

தொடர் இரத்தப் போக்கு

தொடர் இரத்தப் போக்கு

பெண்ணிருப்பில் இருந்து நிறுத்தப்படாமல் தொடந்து வெளியாகும் இரத்தத்தை குறிக்கும்.

மாதவிடாய்க்கும் தொடர் இரத்தப் போக்கிற்கும் இடையான வேறுபாடுகள்

மாதவிடாய் இரத்தம்	தொடர் இரத்தப் போக்கு இரத்தம்
கட்டியான கருமை	மெல்லிய சிவப்பு
துர்நாற்றமுடையது	துர்நாற்றம் இல்லை
உறையாமல் இருக்கும்	உறையக் கூடியது
கருப்பையிலிருந்து வெளியேறும்	கருப்பையின் கீழ் நரம்பு பகுதியிலிருந்து வரும்
வழமையான இரத்தம்	நோய்கான இரத்தமாக இருக்கும்
சில நேரங்களில் வெளியாகும்	குறிப்பிட்ட நேரம் கிடையாது

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

தொடர் இரத்தப் போக்கின் நிலைகள்

முதலாவது நிலை – தொடர் இரத்தப் போக்கிற்கு முன்னர் மாதவிடாய் இரத்தத்தை பற்றி அறிந்திருக்க வேண்டும்.

இது வழமையக கணக்கெடுக்கப்பட்டு மாதத்தில் எஞ்சிய ஏனைய நாட்கள் இரத்தப் போக்காக கணிக்கப்படும். ஆயிஷா ரழி அறிவிக்கிறார்கள். «பாத்திமா பின்த் குபைஷ் ரழி கேட்டார்கள் ''நபியவர்களே! நான் சுத்தமாகவில்லை. ஆனால் தொழுது வருகின்றேன்.'' ''அதற்கு நபியவர்கள் கூறினார்கள் ''இல்லை அது நோயாகும். மாதவிடாய் ஏற்படாத காலத்தில் தொழுங்கள். பின்னர் குளித்து தொழுகள்» (ஆதாரம் புஹாரி). என்றார்கள்.

இரண்டாவது நிலை. – வழமையை அறியவில்லை ஆனால் மாதவிடாய் இரத்தத்தையும் தொடர் போக்கு இரத்தத்தையும் அறிந்திருக்கிறார்.

அந்த பாகுபாடு முலம் செயற்படல். இதனை பாத்திமா பின்த் குபைஷ் ரழி அவர்களின் செய்தி உறுதிப்படுத்துகின்றது.«அவர் மாதவிடாய் நிலையில் இருந்தார். நபியவர்கள் அவருக்கு கூறினார்கள் ''மாதவிடாய் இரத்தமாக கறுப்பாக இருப்பதை அறிந்தால் நீர் தொழுவதை நிறுத்திவிடு, ஆனால் இரத்த போக்காக இருந்தால் வுழுச் செய்து கொண்டு தோழுவீராக! ஏனனனில் அது கழிவாகும்» (ஆதாரம் அபூதாவுத்).

மூன்றாம் நிலை – வழமையும் அறியவில்லை, வித்தியாசத்தையும் அறியவில்லை.

பெரும்பாலான பெண்களுக்கு இது இடம்பெறுவதுண்டு. ஒவ்வொரு மாதமும் ஆறு அல்லது ஏழு நாட்கள் மாதவிடாய் ஏற்படும். முதலில் காணும் இரத்தம்மா தவிடாய் ஆகும். அதன் பின்னர் ஏற்படுவது தொடர் இரத்த போக்காகும். நபியவர்கள் ஹம்னா பின்த் ஜஹ்ஸ் ரழி அவர்களுக்கு கூறினார்கள் «ஆறு அல்லது ஏழு நாட்கள் மாதவிடாய் உனக்கு ஏற்படும். அதனை அல்லாஹ் அறிவான். பின்னர் இரத்தம் துண்டிக்கப்பட்டால் சுத்தமாகி 23 அல்லது 24 நாட்கள்தொழுவீராகநோன்புநோற்பீராக. அதற்குரிய கூலி கிடைக்கும். ஒவ்வொரு மாதமும் இவ்வாறே நிறைவேற்றுவாயாக. பெண்கள் மாதவிடாய் ஏற்பட்டுஅவர்கள்சுத்தமடையும்எல்லையைபோல» (ஆதாரம் அபூதாவுத்).

நான்காவது நிலை – வழமையையும் அறிந்து அது இரண்டையும் அறியக் கூடியவராக இருத்தல்.

இதில் அவர் வழமையை மாத்திரம் கணக்கிட்டு கொள்ளட்டும். வழமையையே பெண்ணிற்குரிய எல்லையாகும். வழமையை அவள் மறந்தால், பிரித்து அறிந்து செயலாற்றட்டும்.

கேள்வி

1. ஒரு பெண் மாதவிடாய் நேரத்தை அறிந்து மாதவிடாய் நாட்களின் எண்ணிக்கை மறந்தால் பெரும்பாண்மையான பெண்களின் வழமைப்படி கணக்கிலிட வேண்டும்.

2. ஒரு பெண் மாதவிடாயின் நாட்களின் எண்ணிக்கையை அறிந்துள்ளாள். ஆனால் மாதவியாயின் காலத்தையும், அல்லது மாதத்தின் முதலாவதிலா என்பதை மறந்து விட்டாள் எனின் அப்போது மாதத்தின் முதவாவது பகுதியை அவள் கணக்கிட்டு கொள்ளட்டும். ஆனால் மாத்தின் அரைப் பகுதியில் அவளுக்கு மாதவிடாய் வரும் என கூறினால் அவளுக்கு கணக்கில் எடுக்க முடியாது போகும். அப்போது மாதத்தின் அரை நாளை முதலாவது நாளாக மாதவிடாய் நாளாக எடுத்துக் கொள்ளட்டும்.

3. மாதவிடாயின் காலம் நிறைவுற்ற நிலையில் அவளுக்கு தொடர் இரத்தப்போக்கு உள்ளது. அப்போது அவள் குளிக்கிறாள் பின்னர் அவளுடைய பெண்ணுறுப்பில் இரத்த அடையாளத்தை உணர்கிறாள் என்றால் அவளுக்கு சுத்தமாவரின் சட்டமாகும். அவள் தொழுகை, நோன்பு போன்றவற்றை நிறைவேற்றலாம். வுழுச் செய்த பின்னர் இரத்தம் வெளியானால் எந்தப் பிரச்சனையும் இல்லை. ஏனனில் அவள் மன்னிக்கப்படுகிறான். அவள் பின்வரும் மூன்று வடிவங்களில் சுத்தமாகிறாள்.

https://www.al-feqh.com/ta

அ- அவளுடைய பெண்ணுறுப்பில் உள்ளவற்றை கழுவிய பின்னர் எல்லா தொழுகைக்கும் அவள் வுழுச்செய்ய வேண்டும். நபியவர்கள் பாத்திமா பின்த் அபீஹய்ஸ் ரழி அவர்களுக்கு கூறினார்கள் «ஒவ்வொரு தொழுகைக்கும் வுழுச் செய்து தொழுவீராக» (ஆதாரம் அபூதாவுத்).

ஆ- ழுஹறை அஸர் தொழுகைக்கு முன்னர் வரை பிற்படுத்த வேண்டும். அப்போது குளித்து விட்டு லுஹரையும் அஸரையும் தொழ வேண்டும். நபியவர்கள் ''ஹம்னா பின்த் ஹஜ்ஸ் ரழி அவர்களுக்கு கூறினார்கள் «உங்களுக்கு சக்தி இருப்பின் லுஹரை பிற்படுத்தி அஸரை முற்படுத்துங்கள், பின்னர் குளித்து இரண்டு தொழுகைகளையும் ஒன்றாக தொழுங்கள். மஃரிபை பிற்படுத்தி, இஷாவை முற்படுத்துங்கள். பின்னர் குளித்து அவ்விரண்டு தொழுகைகளையம் ஒன்றாக தொழுங்கள்'' அப்படி செய்தால் குளித்துவிட்டு சுபஹ் தொழுகையை நிறைவேற்றுங்கள். உங்களுக்கு சக்தி இருப்பின் நோன்பு நோருங்கள்» (ஆதாரம் அபூதாவுத்

இ- ஒவ்வொரு தொழுகைக்கும் குளித்தல். «உம்மு ஹபீபா ரழி அவர்கள் ஏழு வருடங்கள் தொடர்போக்குடையவராக இருந்தார்கள் இதைப் பற்றி நபியவர்கள் கேட்டார்கள். அவரை குளிக்கும் படி நபியவர்கள் ஏவினார்கள். அவர் ஒவ்வொரு தொழுகைக்கும் குளிக்கக்கூடியவராக இருந்தார்கள்.» (ஆதாரம் புஹாரி).

4. கற்பப்பையில் அறுவைச் சிகிச்சை செய்ததன் காரணமாக இரத்தம் வெளியேறுமானால் அதற்கு இரண்டு நிலைகள் உள்ளன.

அ. அது மாதவிடாய் இரத்தம் இல்லை என அறிந்து கொள்வார். இதற்கு தொடர் இரத்தப்போக்கின் சட்டமும் கிடையாது. அவர் தொழுகையை நிறைவேற்ற வேண்டும். அது காரண இரத்தமாகும். ஒவ்வொரு தொழுகைக்கும் அவர் வுழுச் செய்ய வேண்டும்.

ஆ. சில வேளை அது மாதவிடாய் இரத்தம் என அறிந்தால் அதற்கு இரத்தப்போக்குடைய சட்டமாகும்.

5- இரத்தப் போக்குடையவர் உடலுறவு கொள்ளலாம். ஏனனில் மார்க்கத்தின் அதற்கு தடைகள் இல்லை.

மகப்பேறு இரத்தம்

மகப்பேறு இரத்தம்

பிள்ளை பெற்றதன் காரணமாக பெண்ணின் கற்பப்பையிலிருந்து வெளியேறும் இரத்தம்

மகப்பேற்றின் காலம்

வரையறுக்கப்பட்ட எல்லை இதற்கு கிடையாது. பெரும்பாலும் நாற்பது நாட்களாகும். நாற்பது நாட்களுக்கு முன்னர் அவர் சுத்தமானால் அவர் குளித்துவிட்டு தொழ வேண்டும்..

மகப்பேற்றின் சட்டங்கள்

1. ஒரு பெண் குழந்தை பெற்று, இரத்தம் வெளியேற வில்லை எனின் அவர் வுழுச் செய்து கொண்டு தொழ வேண்டும். அவர் குளிக்க தேவையில்லை. இது அரிதும் அரிதாக நடைபெறும் ஒன்றாகும்.

2. நாற்பது நாட்களுக்கு அதிகமாக இரத்தம் வந்தால் வழமை போல 40 க்கு பிறகு அது தானாக நின்று விடும். இரத்தம் தடைப்படுவதற்குரிய நிலை நெருங்குவது வெளிப்பட்டால் தாமதிப்பது நல்லது. அந்த இரத்தம் தொடருமானால் அது தொடர் போக்கு இரத்தமாகும். அவர் தொடர் இரத்தப் போக்கின் சட்டத்தை பின் தொடர வேண்டும்.

3. 40 நாட்களுக்கு முன்னர் அவர் சுத்தமாகினால் அவர் சுத்தமாகிறாள் அவர் குளித்துவிட்டு தொழுகை, நோன்பு போன்றவைகளை நிறைவேற்றலாம். அத்தோடு கணவனுடன் உடலுறவு கொள்ளலாம்.

4. 40 நாட்களுக்கு முன்னர் சுத்தமாகி பின்னர் 42 ம் நாள் மீண்டும் இரத்தம் வெளிப்பட்டால் அவர் பின்வருவனவற்றை கவனிகக் வேண்டும்.

(அ) அது மகப்பேறு இரத்தம் என்னின் அது அதுவே என கருத வேண்டும்.

(ஆ) அது மகப்பேறு இரத்தம் இல்லை எனின் அவர் குளித்து சுத்தமாக வேண்டும்.

5. குழந்தை வயிற்றில் உருவானால் வெளியாகும் இரத்தம் மகப்பேற்று இரத்தமாகும். குழந்தை பூரணமாக இல்லாமல் கருப்பையிலிருந்து இரத்தம் வெளியாகின்றது எனின் அதற்கு மூன்று நிலைகள் காணப்படுகின்றது.

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

(அ) முதல் 40 நாட்களுக்கு முன்னர் இருந்தால் அது கெட்ட இரத்தமாகும். அப்போது குளித்து விட்டு தொழுது, நோன்பு நோற்கலாம்.

(ஆ) 80 நாட்களுக்கு பின்னர் இரத்தம் வந்தால் அது மகப்பேற்று இரத்தமாகும்.

(இ) 80 நாட்களுக்கும் 40 நாற்களுக்கும் இடைப்பட்டதாக இருந்தால் குழந்தை உருவான அறிகுறிகள் வெளிப்பட்டால் அது மகப்பேற்று இரத்தமாகும். அது அல்லாது போனால் கெட்ட இரத்தமாகும்.

மாதவிடாய், மகப்பேறு காலத்தில் தடுக்கப்பட்டவைகள்

1.உடலுறவு கொள்ளள்

அல்லாஹ் கூறுகிறான், {மாதவிடாய் பற்றியும் உம்மிடம் வினவுகிறார்கள்; நீர் கூறும்: "அது (ஓர் உபாதையான) தீட்டு ஆகும்; ஆகவே மாதவிடாயின் போது பெண்களை விட்டும் விலகியிருங்கள்; அவர்கள் தூய்மையாகும் வரை அவர்களை அணுகாதீர்கள்}[பகறா -222]

இவ் வசனம் இறங்கும் போது நபியவர்கள் கூறினார்கள் «திருமணத்தை தவிர அனைத்தையும் செய்யுங்கள் என்றார்கள்» (ஆதாரம் முஸ்லிம்).

கேள்வி

1.மாதவிடாய் காலத்தில் மனைவியுடன் உடலுறவு கொள்வது பாவமாகும். அப்படி செய்தால் அதற்கு குற்றப்பரிகாரம் செய்ய வேண்டும்.

பரிகாரம் – தினார் அளவு ஸதகா கொடுக்க வேண்டும். அல்லது அரைவாசி திர்கம் அளவுடைய தங்கம் கொடுக்க வேண்டும். இப்னு அப்பாஸ் ரழி அவர்கள் கூறினார்கள் "ஒரு பெண் நபியவர்களிடம் வந்து நான் மாதவிடாய் நிலையில் இருக்கும் போது (உடலுறவு கொண்டேன்) எனக்கு என்ன தீர்வு என கேட்டார். அதற்கு நபியவர்கள் «தீனார் அல்லது அதன் அரவாசியை கொடுங்கள்168 »(ஆதாரம் அபூதாவுத்).

என்றார். தினார் – 4.25 கிராம் தங்கம்.

2.ஒரு பெண் சுத்தமாகி குளிக்கும் வரை அவள் கணவன் உடலுறவு கொள்ளவில்லை எனின், அல்லாஹ் கூறுகிறான் {மாதவிடாய் பற்றியும் உம்மிடம் வினவுகிறார்கள்; நீர் கூறும்: "அது (ஓர் உபாதையான) தீட்டு ஆகும்; ஆகவே மாதவிடாயின் போது பெண்களை விட்டும் விலகியிருங்கள்; அவர்கள் தூய்மையாகும் வரை அவர்களை அணுகாதீர்கள்; அவர்கள் தூய்மையடைந்த பின் அல்லாஹ் எப்படி கட்டளையிட்டிருக்கின்றானோ அதன்படி அவர்களிடம் செல்லுங்கள்}.[பகறா – 222]..

2.தொழுகை

நபியவர்கள்கூறினார்கள் «மாதவிடாய் ஏற்பட்டால் தொழுகையை விடுங்கள், அதிலிருந்து சுத்தமானால் சுத்தமாகி பின்னர் தொழுங்கள் »(ஆதாரம் அபூதாவுத்). என்றார்கள்.

கேள்வி

1.ஒரு பெண் சுத்தமானால் அவள் விட்ட தொழுகைகளை மீட்டித் தொழ தேவையில்லை. மேலுள்ள செய்தியை பின்வரும் ஆயிஷா ரழி அவர்களது செய்தி உறுதிப்படுத்துகின்றது. «(மாதவிடாய் நீங்கினால்) நோன்பை நாங்கள் கழாச் செய்வோம், தொழுகையை கழாச் செய்யமாட்டோம்» (புஹாரி முஸ்லிம்).

2.ஒரு மாதவிடாய் பெண் தொழுகையை பூரணமாக அடைந்தால் அவள் தொழுவது வாஜிபாகும். அவள் முதல் நேரத்தை அல்லது கடைசி நேரத்தை அடைந்தாலும் சரியே. அவள் தொழுகையுடை நேரத்தின் ஒரு பகுதியை மாத்திரம் அடைந்தால் அவளுக்கு தொழுகை கடமையில்லை. நபியவர்கள் கூறினார்கள் «யார் தொழுகையில் ஒரு ரக்அத்தை அடைந்து கொள்கிறாரோ அவர் தொழகையை அடைந்தவராவார்» (புஹாரி முஸ்லிம்).

3.நோன்பு

நபியவர்கள் கூறினார்கள் «மாதவிடாய் நேரத்தில் நேன்பு,தொழுகை நிறைவேற்ற வேண்டுமா? என கேட்கப்பட்ட போது "இல்லை»(ஆதாரம் புஹாரி). என்றார்கள்.

https://www.al-feqh.com/ta

கேள்வி

ஒரு பெண் பஜ்ர்க்கு முன்னர் சுத்தமானால் அவர் அந்த நோன்பை நோற்க வேண்டும். அவள் பஜ்ர் தொழுகைக்கு பின்னால் குளிப்பதாக இருந்தாலும் சரி

4.குர்ஆனை தொடுதல்

அல்லாஹ் கூறுகிறான் {தூய்மையானவர்களைத் தவிர (வேறெவரும்) இதனைத் தொட மாட்டார்கள்}. [வாகிஆ – 79].

நபியவர்கள் கூறினார்கள் «சுத்தமில்லாமல் குர்ஆனை தொட வேண்டாம்» (மாலிக் முஅத்தா).

5.கஃபாவை தவாப் செய்தல்

ஆயிஷா ரழி அவர்களுக்கு நபியவர்கள் கூறினார்கள் «ஹஜ்ஜை இவ்வாறு நிறைவேற்றுங்கள், சுத்தமாகாமல் கஃபாவை தவாப் செய்யாதீர்கள்» (புஹாரி முஸ்லிம்).

இப்னு அப்பாஸ் ரழி அவர்கள் கூறினார்கள் «அவர்களது காலத்தில் கஃபாவை தவாப் செய்யும் படி ஏவப்பட்டது. தாவிடாய் பெண்களை தவிர» (புஹாரி முஸ்லிம்).

6.வழிப்போக்கர்களை தவிர ஏனையவர்கள் பள்ளியில் தரித்தல்.

அல்லாஹ் கூறுகிறான் {நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் ஓதுவது இன்னது என்று நீங்கள் அறிந்து கொள்ள முடியாதவாறு நீங்கள் போதையில் இருக்கும்போது தொழுகைக்கு நெருங்காதீர்கள்; அன்றியும் குளிப்புக் கடமையாக இருக்கும்போது குளிக்கும் வரை (பள்ளிக்குள் செல்லாதீர்கள்; பள்ளியை) பாதையாக கடந்து சென்றால் தவிர}. [நிஸா – 43].

நபியவர்கள் கூறினார்கள் «நிச்சயமாக நான் மாதவிடாய் உள்ளவர்களும், குளிப்பு கடமையானவர்களும் பள்ளிக்கு வர அனுமதிக்கமாட்டேன்»(ஆதாரம் – அபூதாவுத்).

கேள்வி

1-மாதவிடாய் பெண் மாதவிடாய் இரத்தம் பள்ளியை அசுத்தமாக்கும் என பயப்படவில்லை எனின் அவள் பள்ளியை கடப்பதில் பிரச்சினையில்லை. அல்லாஹ் கூறுகிறான். {பள்ளியை) பாதையாக கடந்து சென்றால் தவிர. }. (நிஸா – 43).

2. பெருநாள் திடலில் தரிப்பது தடுக்கப்பட்டுள்ளது. நபியவர்கள் கூறினார்கள் «மாதவிடாய் பெண்கள் திடலுக்கு வருவதை தடுத்தார்கள்»(புஹாரி முஸ்லிம்). ஆனாலும் திடலுக்கு குத்பாவை கேட்பதற்கு, நல்ல விடங்களை கேட்க, அதன் பால் முஸ்லிம்களை அழைக்க செல்வது ஆகுமானது

7.விவாகரத்து

மதவிடாய் காலத்தில் பெண்ணை விவாகரத்து கூறுவது ஹறாமாகும். அல்லாஹ் கூறுகிறான்{நபியே! நீங்கள் பெண்களைத் “தலாக்” சொல்வீர்களானால் அவர்களின் “இத்தா”வைக் கணக்கிட ஏற்ற வகையில் (மாதவிடாய் அல்லாத காலங்களில்) தலாக் கூறுங்கள்}[தலாக் – 01], தலாக் சொல்வீர்களானால் அவர்களின் “இத்தா”வைக் கணக்கிட ஏற்ற வகையில் (மாதவிடாய் அல்லாத காலங்களில் சொல்லுதல்)



1

தொழுகையின் நிலையும் சட்டமும்

பொருளடக்கம்

தொழுகையின் வரைவிலக்கணம்

இஸ்லாத்தில் தொழுகையின் வகிபாகம்

தொழுகையின் சிறப்பு

தொழுகையின் சட்டம்

யார் மீது தொழுகை கடமை

தொழுகையை விடுவதன் சட்டம்

மொழி ரீதியில்

பிரார்த்தனை

பரிபாஷையில்

குறிப்பிட்ட சொற்களை, செயற்பாடுகளை கொண்டு அல்லாஹ்வை வணங்குவதை குறிக்கின்றது. இது தப்பீரை கொண்டு ஆரம்பித்து ஸலாத்தை கொண்டு முடிவடைகின்றது.

இஸ்லாத்தில் தொழுகையின் வகிபாகம்

1. இஸ்லாத்தின் தூண்களில் இரண்டாவது தூண் தொழுகையாகும். நபியவர்கள் கூறினார்கள் «இஸ்லாம் ஐந்து தூண்களின் மீது நிறுவப்பட்டுள்ளது. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வை தவிர வேறு யாருமில்லை என சாட்சி கூறுதல், நிச்சயமாக முஹம்மத் நபியவர்கள் அல்லாஹ்வின் தூதர் என சாட்சி கூறுதல், தொழுகையை நிலைநாட்டுதல்.......» (புஹாரி முஸ்லிம்).

2. தொழுகை மிகச் சிறந்த அமலாகும். நபியவர்கள் கூறினார்கள் «சிறந்த அமல் தொழுகையை அதன் உரிய நேரத்தில் தொழுவதாகும்» (ஆதாரம் திர்மிதி).

3. முஸ்லிமையும் காபிரையும் பிரித்துக் காட்டுவது தொழுகையாகும். நபியவர்கள் கூறினார்கள் «முஸ்லிமுக்கும், ஷிர்க், குப்ர் (செய்பவரும்) இடையான வேறுபாடு தொழுகையை விடுவதாகும்»(ஆதாரம் முஸ்லிம்).

4. தொழுகை இஸ்லாத்தின் தூணாகும். அல்லாஹ்வை ஒருமைப்படுத்திய பின்னர் செய்ய வேண்டிய முதலாவது அம்சமாகும். நபியவர்கள் கூறினார்கள் «இதுவே இஸ்லாத்தின் தலையாய விடயமாகும். அது தொழுகையாகும்» (ஆதாரம் அஹ்மத்).

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

தொழுகையின் சிறப்பு

1. தொழுகை என்பது தொழுபவருக்கு ஒளியாகும். நபியவர்கள் கூறினார்கள் «தொழுகை ஒளியாகும்.» (ஆதாரம் முஸ்லிம்).

2. தொழுகை பாவங்களுக்கு பரிகாரமாகும். அல்லாஹ் கூறுகிறான் {பகலின் (காலை, மாலை ஆகிய) இருமுனைகளிலும், இரவின் பகுதியிலும் நீங்கள் தொழுகையை நிலைப்படுத்துவீராக - நிச்சயமாக நற்செயல்கள், தீச்செயல்களைப் போக்கிவிடும் - (இறைவனை) நினைவு கூறுவோருக்கு இது நல்லுபதேசமாக இருக்கும்..}. [ஹூத் – 114]

நபியவர்கள்கூறினார்கள்«உங்களுடைகதவுகளுக்கு முன்னால் ஆறு ஓடிக் கொண்டிருக்கின்றது. அதில் அவர் ஒரு நாளைக்கு ஐந்து முறை குளித்தால் அவரது உடம்பில் அழுக்கு (அழுக்குகள் – ஊத்தைகள்) இருக்குமா? என கேட்டார்கள். அதற்கு ஸஹாபாக்கள் அழுக்குகள் எஞ்சியிருக்காது என்றார்கள். அதற்கு நபியவர்கள் – அதே போன்றுதான் ஐந்து வேளை தொழுதால் அல்லாஹ் அவரது பாவங்களை மன்னிக்கிறான்» (புஹாரி முஸ்லிம்).

3. தொழுகை சுவனம் நுழைய காரணமாகும். நபியவர்கள் ரபீஆ இக்னு கஅப் ரழி அவர்கள் சுவர்க்கத்தில் எது அழகு என கேட்ட போது பின்வருமாறு கூறினார்கள்«ஸுஜூதியில் அதிகமாக உனது உள்ளத்தை நிறுத்துவாயாக» (ஆதாரம் முஸ்லிம்).

தொழுகையின் சட்டம்

அல்குர்ஆன், சுன்னா, இஜ்மாவின் அடிப்படையில் ஐவேளை தொழுகை வாஜிபாகும்.

1-அல்குர்ஆன்- அல்லாஹ் கூறுகிறான் {தொழுகையைக் கடைப் பிடியுங்கள்; ஜகாத்தையும் (ஒழுங்காகக்) கொடுத்து வாருங்கள் ருகூஃ செய்வோரோடு சேர்ந்து நீங்களும் ருகூஃ செய்யுங்கள்}. [பகறா- 43]

2. சுன்னா – நபியவர்கள் கூறினார்கள் «இஸ்லாம் ஐந்து தூண்களின் மீது நிறுவப்பட்டுள்ளது. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வை தவிர வேறு யாருமில்லை என சாட்சி கூறுதல், நிச்சயமாக முஹம்மத் நபியவர்கள் அல்லாஹ்வின் தூதர் என சாட்சி கூறுதல், தொழுகையை நிலைநாட்டுதல், ஸகாத் கொடுத்தல், ஹஜ் செய்தல், ரமழான் மாதத்தில் நோன்பு நோற்றல் ஆகியனவாகும்» (புஹாரி முஸ்லிம்).

தல்ஹா இப்னு உபைதுல்லாஹ் ரழி அறிவிக்கிறார்கள். நபியவர்களிடம் இஸ்லாம் என்றால் என்னவென்று கேட்கப்பட்டது. அதற்கு நபியவர்கள் கூறினார்கள் «ஒவ்வொரு நாளும் ஐந்து நேரம் தொழுதல், என்றார்கள் அதற்கு அவர் வேறு ஏதாவது உண்டா என கேட்டபோது, நபியவர்கள், சுன்னத்தான தொழுகையை தவிர வேறு ஏதுமில்லை என்றார்கள்»(புஹாரி முஸ்லிம்).

3. இஜ்மா – இமாம்கள் அனைவரும் ஒரு நாளைக்கு ஐந்து நேரம் தொழுகை கடமை என்பதில் ஒருமித்த கருத்தில் உள்ளனர்.

யார் மீது தொழுகை கடமை?

முஸ்லிமான, பருவ வயதை அடைந்த, புத்தியுள்ள, ஆண், பெண் மீதும் கடமையாகும்.

தொழுகையை மீட்டுதல்

ஒருவர் இஸ்லாத்தை ஏற்றால் அவர் காபிராக இருக்கும் போது விட்ட தொழுகைகளை மீட்ட தேவையில்லை. ஏனனெனில் இஸ்லாம் அதற்கு முந்தியவைகளை மன்னிக்கின்றது.

www.al-feqh.com/ta

தொழுகையை விடுதன் சட்டம்

1. தொழுகையை விடுவது வாஜிபை நிராகரிப்பதாகும்.

அவர் அறியாதவராக இருப்பின் அறிந்து கொள்ள வேண்டும். அவர் தொடராக நிராகரிப்பராக இருப்பின் அவர் காபிராவார். அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும், அனைத்து முஸ்லிம்களின் ஏகோபித்த முடிவுகளையும் நம்பமறுக்கிறார்.

2. சோம்பேறித்தனமாக தொழுகையை விடுதல்.

எவர் வேண்டுமென்று சோம்பேறித்தனமாக தொழுகையை விடுகின்றாரோ அவர் காபிராவார். ஆட்சியாளர்கள் அவரை தொழுகையின் பக்கம் அழைக்க வேண்டும். மூன்று நாட்கள் அவர் தவ்பா செய்ய வேண்டும். தவ்பா செய்யவில்லை என்றால் மதம்மாறியவர் என்பதற்காக கொல்லப்படுவார். நபியவர்கள் கூறினார்கள் «எமக்கும் அவர்களுக்கும் இடையிலான உடன்படிக்கை தொழுகையாகும். எவர் அதனை விடுகின்றாரோ அவர் நிராகரிப்பாளராவார்» (ஆதாரம் திர்மதி), நபியவர்கள் கூறினார்கள் «முஸ்லிமுக்கும், ஷிர்க், குப்ர் (செய்பவரும்) இடையான வேறுபாடு தொழுகையை விடுவதாகும்» (ஆதாரம் முஸ்லிம்).

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

சிறுவர்களது தொழுகை

சிறுவர்கள் ஏழு வயதை அடைந்தால் அவர்களை தொழுமாறு ஏவ வேண்டும். அதற்காக அவர்களை பயிற்சியளிக்க வேண்டும். அவர்கள் பத்து வயதாகி தொழவில்லையனின் காயம் ஏற்படாதவாறு அடிக்க வேண்டும். நபியவர்கள் கூறினார்கள் «உங்களுடைய பிள்ளைகள் ஏழு வயதை அடைந்தால் அவர்களை தொழுமாறு ஏவுங்கள். அவர்கள் பத்து வயதாகியும் தொழவில்லை எனின் அவர்களுக்கு அடித்து தெழுவியுங்கள்» (ஆதாரம் அபூதாவுத்).



https://www.al-feqh.com/ta

அதானும் இகாமதும்

பொருளடக்கம்

-அதான் இகாமதின் வரைவிலக்கணம்

-அதான் இகாமதின் சட்டம்

-அதானின் நுட்பம்

-அதான் எப்போது கடமையானது? அதன் காரணம்

-அதானின் சிறப்பு

-அதானின் நிபந்தனைகள்

-அதானின் சுன்னத்கள்

-அதான் இகாமதின் முறை

-அதானை கேட்பவர் செய்ய வேண்டியவை

அதான் இகாமதின் சட்டங்கள்

அதான்

குறிப்பிட்ட பிரார்த்தனை மூலம் தொழுகையின் நேரம் வந்துவிட்டது என்பதை அறிவிப்பதாகும்.

இகாமத்

குறிப்பிட்ட பிரார்த்தனை மூலம் தொழுகை நடைபெறப் போகின்றது என்பதை அறிவிப்பதாகும்.

அதான் இகாமத்தின் சட்டம்

1-கூட்டமாக இருப்பவர்களுக்குரிய உரிமை

பிரயாணியாகவோ அல்லது ஊரில் இருந்தாலும் அது பர்ளு ஹிபாயாவாகும் பர்ளு ஹிபாயா – இது சிலர் மேற்கொண்டார் ஏனையவர்கள் பாவியாக மாட்டார்கள். – கடமையான ஐவேளை தொழுகைக்கு மாத்திரம் – ஏனனில அவை இஸ்லாமிய உணர்வுகளின் வெளிப்பாடாகும். அதனை மறைப்பது கூடாது. நபியவர்கள் கூறினார்கள் «தொழுகையுடைய நேரம் வந்துவிட்டால் உங்களில் ஒருவர் அதான் சொல்லட்டும். பின்னர் உங்களில் பெரியவர் தொழுகை நடாத்தட்டும்.» (புஹாரி முஸ்லிம்).

2-தனியாக இருப்பவருக்குரிய உரிமை

இது சுன்னத்தாகும். உக்பத் இப்னு ரழி அவர்கள் அறிவிக்கிறார்கள். நபியவர்கள் கூறுவதை கேட்டேன் «மலை பிரதேசத்தில் உயர்திலுள்ள ஷலியத் – மலையின் தலை பகுதியில் உள்ள உயர்வான துண்டு. ஆட்டு இடையனை கண்டு அல்லாஹ் ஆச்சிரியப்படுகின்றான். அவன் தொழுகைக்காக அதான் கூறுகிறான். இன்னும் தொழுகிறான். பின்னர் அல்லாஹ் கூறுகிறான் – இந்த அடியானை பாருங்கள். அதான் கூறி தெழுகையை நிலைநாட்டுகிறான். என்னை அஞ்சுகிறான். எனது அடியானை நான் மன்னிக்கிறேன். அவனை சுவனத்தினுள் நுழைவிக்கிறேன். » (ஆதாரம் நஸாஈ)

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

அதான் இகாமத்தின் நுட்பம்

1-தொழுகையின் நேரத்தையும் இடத்தையும் அறிவிக்கிறது.

2-ஜமாஅத் தொழுகையை நாடுகின்றது.

3- அருட்கொடுகளை பெற தொழுகையை நிலை நாட்டுவதன் பால் வணக்கசாலிகளை விழிப்படைய செய்கிறது. மேலும் மறந்தவர்களுக்கு நினைவூட்டுகின்றது.

அதான் எப்போது கடமையானது? அதன் காரணம்

ஹிஜ்ரி முதலாம் ஆண்டு அதான் கடமையாக்கப்பட்டது. காரணம் –தொழுகைக்கான நேரம் நெருங்கி விட்டது என மக்கள் அறிந்து கொள்ள என்ன செய்யலாம் என முஸ்லிம்கள் மஷூரா செய்யும் போது. ஓரிரவு அப்துல்லாஹ் இப்னு ஸைத் ரழி அவர்கள் கனவில் மணியை நாகூஸ் – மணி சுமந்தவாறு ஒரு மனிதரை கண்டார்கள். அவரிடம் ஸைத் ரழி ”இந்த மணி ஓசையை நாங்கள் பின்பற்றலாமா” என கேட்டார். அதற்கு அம் மனிதர் ”இதனை கொண்டு என்ன செய்ய போகின்றீர்கள் என கேட்டார்” அதற்கு ஸைத் ரழி அவர்கள் ”இதனை கொண்டு தொழுகைக்காக அழைப்போம்” என்றார்கள். அதற்கு அம்மனிதர் ” இதனை விட சிறந்த ஒன்றை அறிவிக்கவா என கேட்டார்” அதற்கு அப்துல்லாஹ் ரழி அவர்கள் ”ஆம்” என்றார்கள். அவருக்கு அதானை கற்பித்தார். பின்னர் இகாமத்தையும் கற்பித்தார். (ஆதாரம் தாரமி) காலையில் நபியவர்களிடம் வந்து தான் கனவில் கண்டதை கூறினார்கள். அதற்கு நபியவர்கள் «அது அல்லாஹ்வின் நாட்டப்படி உண்மையான கனவுதான். பிலாலிடம் சென்று அவருக்கு கற்றுக் கொடுப்பீராக! அவர் உம்மை விட சிறந்த குரல்வளம் மிக்கவர்.»(ஆதாரம் அபூதாவுத்).

அதானின் சிறப்பு

1-அவருடைய குரலுக்காக மறுமை நாளில் அல்லாஹ்விடத்தில் சாட்சி கூறும். நபியவர்கள் கூறினார்கள்«முஅத்தினுடைய சத்தத்தை கேட்டும் ஜின்களோ, மனிதர்களோ, அல்லது வேறு ஏதாவதோ நாளை மறுமை நாளில் அவருக்கு சாட்சி சொல்லாமல் இருப்பதில்லை» (ஆதாரம் புஹாரி).

2-அதனுடைய சிறப்பை அறிவார்களானால் மனிதர்கள் அதான் சொல்ல போட்டி போடுவார்கள். நபியவர்கள் கூறினார்கள் «அதானுடைய, முதல் வரிசையுடைய சிறப்பை அறிவார்களானால் அதனை அடைந்து கொள்ள போட்டி போடுவார்கள் இஸ்திஹாம் – சக்தியுள்ளவர்கள் நேரத்தோடு செல்தல்.»(ஆதாரம் புஹாரி).

அதானின் நிபந்தனைகள்

1-முஸ்லிமாக, ஆணாக, சுயாதீனமுடையவராக இருக்க வேண்டும்.

2- அழகாக கூறக் கூடியவராக இருத்தல்.

3- தொடராக நீண்ட இடைவெளி விடாமல் அதான் கூறுதல்

4- தொழுகைக்காக உரிய நேரம் வருதல்.

அதானின் சுன்னத்கள்

1-கிப்லாவை முன்னோக்குதல்.

2-தொடக்குகளில் இருந்து முஅத்தின் சுத்தமாக இருத்தல்.

3-ஹையலல் ஸலா, ஹையாலல் பலாஹ் என்ற இடங்களில் வலது, இடது புறங்களில் திரும்பக் கூடியவராக இருத்தல்.

4-அதான் கூறும் போது காதுகளில் விரலை வைக்க வேண்டும்.

5-கவனமான முறையில் மிக அழகிய தொனியில் அதான் கூறல்.

6- ஒழுங்காக அதன் வரிசைப்படி அதான் கூறுதல்.

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

அதான் இகாமதின் முறைகள்

1-அதான் கூறும் ஒழுங்கு

அல்லாஹு அக்பருல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பருல்லாஹு அக்பர், அஷ்ஹது அ(ன்)ல்லாயிலாஹ இல்லல்லாஹ் , , அஷ்ஹது அ(ன்)ல்லாயிலாஹ இல்லல்லாஹ் ,அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ் , அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ் , ஹய்ய அலஸ் ஸலாஹ், ஹய்ய அலஸ் ஸலாஹ், ஹய்ய அலல் ஃபலாஹ், ஹய்ய அலல் ஃபலாஹ், அல்லாஹு அக்பருல்லாஹு அக்பர், லாயிலாஹ இல்லல்லாஹ் (முஸ்லிம்)(ஆதாரம் முஸ்லிம்).

2-அதான் கூறும் ஒழுங்கு

அல்லாஹு அக்பருல்லாஹு அக்பர், அஷ்ஹது அ(ன்)ல்லாயிலாஹ இல்லல்லாஹ், அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ், ஹய்ய அலஸ் ஸலாஹ், ஹய்ய அலல் ஃபலாஹ், கத்காமதிஸ்ஸலாஹ் கத்காமதிஸ்ஸலாஹ், அல்லாஹு அக்பருல்லாஹு அக்பர், லாயிலாஹ இல்லல்லாஹ்

காதுகளில் விரல்களை வைத்தல்.

அதானை கேட்பவர்கள் செய்ய வேண்டியவைகள்

1-முஅத்தின் சொல்வது போன்று கூற வேண்டும். ”ஹையலல் ஸலா, ஹையாலல் பலாஹ்” லாஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லா என கூற வேண்டும். (ஆதாரம் புஹாரி) என கூற வேண்டும்..

2-அதானின் பின்னால்

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லை(த்)த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்ன(க்)க ஹமீது(ன்)ம் மஜீத். அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்ன(க்)க ஹமீது(ன்)ம் மஜீத்.(ஆதாரம் முஸ்லிம்).

3-அதானுக்கு பின்னர் நபியவர்கள் மீது ஸலவாத்து சொன்ன பின்னர் பின்வரும் துஆவை ஓத வேண்டும்அல்லாஹும்ம ரப்ப ஹாதிஹித் தஃவதித் தாம்ம(த்)தி வஸ்ஸலா(த்)தில் காயிம(த்)தி ஆ(த்)தி முஹம்மதனில் வஸீல(த்)த வல்ஃபழீல(த்)த வப்அஸ்ஹு ம(க்)காம(ன்)ம் மஹ்மூதனில்லதீ வஅத்தஹ் (ஆதாரம் புஹாரி).

4- பின்னர் அதானுக்கும் இகாமத்திற்கும் இடையில் தனக்காக பிராத்தித்துக் கொள்ளலாம். அந்த துஆ நிராகரிக்கப்படமாட்டாது. நபியவர்கள் கூறினார்கள் «அதானுக்கும் இகாமத்திற்கும் இடையான துஆ நிராகரிக்கப்படமாட்டாது» (ஆதாரம் அஹ்மத்).

அதான் இகாமத்தின் சட்டங்களில் உள்ளவைகள்

1-இரண்டு தொழுகையை சேர்த்து ஒரு அதான் கூறுவது போதுமானது உதாரணம் லுஹர், அஸர் தொழுகைக்கு ஒரே அதான். ஆனால் ஒவ்வொரு தொழுகைக்கும் இகாமத் கூற வேண்டும்.

2-தொழுகைக்கு இகாமத் சொல்லப்பட்டால் பின்னர் தொழுகை தாமதிக்கப்பட்டால் இரண்டாவதாக இகாமத் சொல்ல தேவையில்லை.

3- முஅத்தின் சொற்களை மொழிதலில் தவறு செய்தல்.

(அ) «ஆலாகு அக்பர்» என்று கேள்வியாக கூறல்.

(ஆ) «அல்லாஹூ ஆக்பார்», என்று பாவிற்கு பின்னால் அலிபை சேர்த்தல் கூறல்..

(ஆ) «அல்லாஹூ அக்வார்», என்று வாவை அதிகரித்தல் கூறல்.

4-இகாமத் சொல்லப்பட்டால் சுன்னத்தான தொழுகை தொழுவது கூடாது. இகாமத் சொல்லப்பட்டால் சுன்னத்தான தொழுகையை ஆரம்பித்தால் அது கொஞ்சமாக இருந்தால் அதனை

https://www.al-feqh.com/ta

பூர்த்தி செய்வர். பின்னர் இமாமுடன் பர்ளான தொழுகைக்கு நுழைந்து கொள்வார்.

5-பருவ வயதை அடைந்த சிறுவர்களின் அதான் ஏற்றுக் கொள்ளப்படும்.

6-மறதி, தூக்கம் காரணமாக தவறப்பட்ட தொழுகைகளுக்கு அதான், இகாமத் கூற வேண்டும். நபியவர்கள் ஸஹாபாக்கள் சூரியன் உதயமாகும் வரை தூங்கிய போது «பிலால் ரழி அவர்களுக்கு அதான் கூறும் படி ஏவினார்கள். பின்னர் அவர்கள் வுழுச் செய்தார்கள், பின்னர் பஜ்ருடைய இரண்டு ரக்அத் தொழுதார்கள். பின்னர் பிலாலிடம் இகாமத் சொல்லும்படி ஏவினார்கள். பின்னர் அவர்களுக்கு ஸுபஹ் தொழுகையை நடத்தினார்கள்». (ஆதாரம் அபூதாவுத்)

7-அவசியமில்லாமல் அதான் கூறிய பின்னர் பள்ளியை விட்டு வெளியேறுவது கூடாது. அபூ ஹுறைறா ரழி அறிவிக்கின்றார்கள் «நபியவர்கள் அதான் கூறிய பின்னர் தொழாமல் வெளியேற வேண்டாம் என எங்களுக்கு ஏவினார்கள்». (ஆதாரம் அஹ்மத்)

8-இரண்டு ஷகாதத் உடைய நிலைகளில் சத்தத்தை உயர்த்துவது மார்க்கமாக்கப்பட்டுள்ளது. அதே போன்று இரண்டு இரண்டாக சொல்லும் போது சத்தத்தை உயர்தி மீட்டுவார். இதனை நபியவர்களது சுன்னா உறுதிப்படுத்துகின்றது (ஆதாரம் அபூதாவுத்).

அவசியமில்லை

1-அதானில் இராகம், சுருதி சேர்ப்பது அவசியமில்லை. அதனால் அதானின் எழுத்து, வசனங்களில் கூடுதல், அல்லது குறைவுகள் ஏற்படும்.

2-அதானுக்கு பின்னால் நபியவர்கள் மீது ஸலவாத்து சொல்லும் போது சத்தத்தை உயர்த்துவது அவசியமில்லை.

3-"கத்காமதிஸ் ஸலா" என்ற இடத்தில் சில கூறுவது போல "அகாமஹுல்லாஹு வஅதாமஹா" என கூறுவது அவசியமில்லை.

பஜ்ர் தொழுகையின் அதான்

பஜ்ருக்கு இரண்டு அதன்கள் மாரக்கமாக்கப்பட்டுள்ளது. ஒன்று பஜ்ருடைய நேரம் வருதற்கு முன்னால் கூறுவது. இரண்டு பஜ்ருடைய நேரத்தில் கூறுவதாகும். முதலாவது பாங்கு கூறும் போது முஅத்தின் «அஸ்ஸலாது ஹைரும் மினன் நவ்ம்» என இருமுறை கூற வேண்டும். நபிவர்கள் கூறினார்கள்«பஜ்ருக்கு முதல் அதான் கூறினால் அஸ்ஸலாது ஹைரும் மினன் நவ்ம் அஸ்ஸலாது ஹைரும் மினன் நவ்ம் என கூறட்டும்.». (ஆதாரம் அபூதாவுத்)

அதான் ஷைத்தானை விரட்டுகிறது.

அபூ ஹுறைறா ரழி அறிவிக்கின்றார்கள் "தொழுகைக்காக (பாங்கு சொல்லி) அழைக்கப்படும் போது ஷைத்தான் பாங்கு சப்தத்தைக் கேட்கக்கூடாது என்பதற்காக சப்தத்துடன் காற்றை விட்டுக் கொண்டு திரும்பி ஓடுகிறான். பாங்கு சொல்லி முடித்ததும் முன்னே வருகின்றான். தொழுகைக்கு இகாமத் சொல்லப் பட்டால் (மீண்டும்) திரும்பி ஓடுகிறான். இகாமத் சொல்லி (தத்வீப் என்பதில் நாடப்படுவது இகாமத் ஆகும்.) முடித்ததும் முன்னே வருகின்றான். (தொழுகையில் ஈடுபட்டுள்ள) மனிதருடைய உள்ளத்தில் ஊடுருவி ஊசலாட்டத்தை ஏற்படுத்தி, இதை நினைத்துப் பார்; அதை நினைத்துப் பார் என்று அவர் அதற்கு முன் நினைத்திராத விஷயங் களை அவருக்கு நினைவூட்டிக் கூறுகின்றான். எந்த அளவிற்கென்றால், அந்த மனிதர் தாம் எத்தனை ரக்அத்கள் தொழுதோம் என்பதை அறியாதவராக மாறிவிடுகிறார்." (ஆதாரம் புஹாரி)

பயன்கள்

1-அதான் கூறிய பின்னர் பள்ளியை விட்டு வெளியேறுவது கூடாது. அபூ ஹுறைறா ரழி அறிவிக்கின்றார்கள் "ஒரு மனிதன் அதான் கேட்ட பின்னர் பள்ளியை விட்டு வெளியேறிய போது நிச்சளமாக இவர் அபா காஷிமுக்கு மாறு செய்தவர்." என்றார்கள்.

2- சுன்னத்தான தொழுகைகளுக்கு அதானோ, இகாமதோ கிடையாது. அதே போன்று இரு பெரநாட்கள், மழை வேண்டி தொழுதல், ஜனாஸா தொழுகை, கிரகண தொழுகை போன்றவைகளுக்கும் அதானோ, இகாமதோ கிடையாது

3-கூறுகிறார் முஅத்தின் ஒரு விவசாயியின் வாழ்க்கைக்குப் பிறகு மழை அல்லது கடுமையான குளிரில்: உங்கள் இடத்தில் ஜெபியுங்கள்

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

தொழுகையின் நிபந்தனைகள்

பொருளடக்கம்

1-தொழுகையின் நேரம் வருதல்

2-தொடக்குகளிலிருந்து சுத்தமாகுதல்

3-ஆடை, உடல், தொழுமிடம் சுத்தமாக இருத்தல்.

4-அவ்ரத்தை மறைத்தல்

5- கிப்லாவை முன்னோக்குதல்.

முதலாவது - தொழுகையின் நேரம் வருதல்

பர்ளான தொழுகைகளை அதனுடைய நேரத்திற்கு முன்னரோ, பின்னரோ தொழுவது கூடாது. அல்லாஹ் கூறுகிறான் {நிச்சயமாக குறிப்பிட்ட நேரங்களில் தொழுகையை நிறைவேற்றுவது முஃமின்களுக்கு விதியாக்கப் பெற்றுள்ளது} [நிஸா -103]

அதாவது குறிப்பிட்ட நேரத்தில் தொழுவதாகும்.

அபூ மூஸா அஷ்அரி ரழி அவர்கள் அறிவிக்கின்றார்கள் «நபியவர்களிடம் ஒரு மனிதர் வந்து தொழுகையின் நேரங்கள் குறித்து வினவினார். அப்போது அவருக்கு நபி (ஸல்) அவர்கள் (வாய்மொழியாக) பதிலேதும் கூறவில்லை. (பின்வருமாறு செய்துகாட்டினார்கள்:) வைகறை புலர்ந்ததும் ஃபஜ்ர் தொழுகைக்காக இகாமத் (கூறச்) சொன்னார்கள். அப்போது (இருள் இருந்த காரணத்தால்) மக்களில் சிலர் சிலரை அறிந்துகொள்ள இயலவில்லை. பிறகு பிலால் (ரலி) அவர்களிடம் (லுஹர் தொழுகைக்காக பாங்கும் இகாமத்தும் கூறுமாறு) உத்தரவிட்டார்கள். சூரியன் உச்சியிலிருந்து சாய்ந்ததும் லுஹ்ர் தொழுகைக்காக பிலால் (ரலி) அவர்கள் இகாமத் சொன்னார்கள். அப்போது ஒரு மனிதர் “நண்பகலாகிவிட்டது” என்று கூறினார். ஆனால், நபி (ஸல்) அவர்கள் எல்லாரையும் விட அறிந்தவர்களாக இருந்தார்கள். பிறகு பிலால் (ரலி) அவர்களிடம் (அஸ்ர் தொழுகைக்கு பாங்கும் இகாமத்தும் கூறுமாறு) உத்தரவிட, பிலால் (ரலி) அவர்கள் சூரியன் உயர்ந்திருக்கவே அஸ்ர் தொழுகைக்காக இகாமத் சொன்னார்கள். பிறகு பிலால் (ரலி) அவர்களிடம் (மஃகரிப் தொழுகைக்காக பாங்கும் இகாமத்தும் கூறுமாறு) உத்தரவிட, பிலால் (ரலி) அவர்கள் சூரியன் மறைந்தபோது மஃக்ரிப் தொழுகைக்காக இகாமத் சொன்னார்கள். பிறகு பிலால் (ரலி) அவர்களிடம் (இஷாத் தொழுகைக்கு பாங்கும் இகாமத்தும் கூறுமாறு) உத்தரவிட, பிலால் (ரலி) அவர்கள் செம்மேகம் மறைந்தபோது இஷாத் தொழுகைக்கு இகாமத் சொன்னார்கள்.

மறுநாள் ஃபஜ்ர் தொழுகையைப் பிற்படுத்தித் தொழுதார்கள். எந்த அளவிற்கென்றால் தொழுகையை முடித்துத் திரும்பியபோது ஒருவர் “சூரியன் உதயமாகிவிட்டது” அல்லது “சூரியன் உதிக்கப்போகிறது” என்று கூறினார். பிறகு லுஹ்ர் தொழுகையைப் பிற்படுத்தித் தொழுதார்கள். அது முந்திய நாள் அஸ்ர் தொழுத நேரத்திற்கு நெருக்கமாக இருந்தது. பிறகு அஸ்ர் தொழுகையைப் பிற்படுத்தித் தொழுதார்கள். எந்த அளவிற்கென்றால் தொழுகையை முடித்துத் திரும்பியபோது ஒருவர் “சூரியன் சிவந்துவிட்டது” என்று கூறினார்.

பிறகு மஃக்ரிப் தொழுகையைச் செம்மேகம் மறையும்வரை பிற்படுத்தினார்கள். பிறகு இஷாத் தொழுகையை இரவின் முந்திய மூன்றிலொரு பகுதி நேரமாகும்வரை பிற்படுத்தினார்கள். விடிந்ததும் வினாத்தொடுத்த அந்த மனிதரை அழைத்து “இவ்விரு (நாட்களின் தொழுகை) நேரங்களுக்கும் இடைப்பட்ட நேரமே (ஐவேளைத் தொழுகைகளின்) நேரமாகும்” என்று கூறினார்கள்» (ஆதாரம் முஸ்லிம்)

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

தொழுகையுடைய நேரங்கள். அவை -

1-பஜ்ருடைய நேரங்கள்

பஜ்ர் உதமாகியது முதல் இதன் நேரம் ஆரம்பிக்கின்றது. – கிழக்கு வானில் வெள்ளை வெளிப்படுவதிலிருந்து சூரியன் உதிக்கும் வரை

-ழுஹருடைய நேரம்

ழுஹருடைய நேரம் முடிந்ததிலிருந்து ஒவ்வொரு பொருட்களின் நிழலும் அது போல ஒரு அளவு வந்ததிலிருந்து சூரியன் மறையத் துவங்கும் வரை

4-மஃரிப் தொழுகையின் நேரம்

சூரியன் மறைந்ததிலிருந்து அடிவானிலுள்ள சிவப்பு மறையும் வரை– அதாவது செவ்வொளி என்பது சூரியன் மறையும் போது அடிவானில் தெரியும் ஒளி.

5-இஷா தொழுகையின் நேரம்

சூரியன் மறைந்ததிலிருந்து இரவின் நடுப்பகுதி வரை. நபியவர்கள் கூறினார்கள் «இஷாவுடைய நேரம் இரவின் அரைவாசி, நடுப்பகுதியாகும்» (ஆதாரம் முஸ்லிம்).

தற்காலத்தில் தொழுகை நேரங்களை அறிய கலண்டர்கள் மூலம் இலகுவாக்கப்பட்டுள்ளது.

பஜ்ர் தொழுகை

ழுஹர் தொழுகை



அஸர் தொழுகை

மஃரிப் தொழுகை

இஷா தொழுகை

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

அவசியமில்லை

-தொழுகையில் இறுக்கமான ஆடை. அவ்ரத்தை வெளிப்படுத்தும் மெல்லிய ஆடை, அவ்றத்தை மறைத்தல், ஆடையை கரண்டையை விட நீளமாக ஆக்குதல் போன்றன.

-உருவப்படமுள்ள ஆடையினை தொழுகையல் அணிதல்.

-கப்றுகள் உள்ள பள்ளிவாயிலில் தொழுதல். நபியவர்கள் கூறினார்கள் «உங்களுக்கு முன் இருந்தவர்கள் நபிமார்களுடைய கப்றுகளை வணக்கஸ்தலமாக ஆக்கிக்கொண்டார்கள். நீங்களும் பள்ளிகளை அவ்வாறு ஆக்க வேண்டாம். அதனை தடுப்பதற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன்.». (ஆதாரம் முஸ்லிம்)

பயன்கள்

1-நேரம் முடிவதற்கு முன்னர் ஒரு ரக்அத்தை அடைந்தால் அவர் அந்த தொழுகையை அடைந்து கொள்வார். நபியவர்கள் கூறினார்கள் «யார் ஒரு ரக்அத்தை அடைந்து கொள்கிறாரோ அவர் தொழுகையை அடைந்து கொள்வார்» (புஹாரி முஸ்லிம்)

2- தூக்கம், மறதி காரணமாக தவறவிடப்பட்ட தொழுகைகளை உடனே தொழுவது வாஜிபாகும். நபியவர்கள் கூறினார்கள் «யார் தொழுகையை மறந்து விடுகின்றாரோ அவர் ஞாபகம் வரும் போது தொழுது கொள்ளட்டும். அதுவே அவருக்கு பரிகாரமாகும்» (புஹாரி முஸ்லிம்)

இரண்டாவது – தொடக்குகளில் இருந்து சுத்தமாகுதல்.

1-சிறு தொடக்குகளில் இருந்து சுத்தமாகுதல்

அதற்கு வுழு செய்ய வேண்டும். நபியவர்கள் கூறினார்கள் «தொடக்குகளில் இருந்து வுழுச்செய்து சுத்தம் அடையாத வரை உங்களுடைய தொழுகை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது». (ஆதாரம் புஹாரி)

2-பெருந்தொடக்கிலிருந்து சுத்தமாகுதல்

இதன் போது குளிக்க வேண்டும். அல்லாஹ் கூறுகிறான். {குளித்து (த் தேகம் முழுவதையும் சுத்தம் செய்து)க் கொள்ளுங்கள்} [மாயிதா – 06]

இதில் தொடக்கை பற்றி கூறப்பட்டுள்ளது. தொடக்குடைய ஒரு பகுதி இருப்பினும் அத் தொழுகை செல்லுபடியற்றதாகும். ஒருவர் வுழு முறிந்தால் தொழுகையை பூரணப்படுத்த வேண்டிய அவசியம் கிடையாது. ஏனெனில் அனைத்தும் சரியாக இருந்தாலே ஸலாம் கொடுக்க வேண்டும். இடையில் வுழு முறிந்தால் ஸலாம் கொடுக்கும் வரை காத்திருக்க வேண்டிய அசியம் இல்லை

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

மூன்றாவது – ஆடை,உடல்,இடம் என்பன சுத்தமாயிருத்தல்

1-ஆடையை சுத்தமாக வைத்திருத்தல்

அல்லாஹ் கூறுகிறான் {உம் ஆடைகளைத் தூய்மையாக ஆக்கி வைத்துக் கொள்வீராக}[முத்தத்திர் – 04]

ஆடையை சுத்தம் செய்தல்

2-உடலை சுத்தப்படுத்தல்

மேலுள்ள செய்தியை பின்வரும் செய்தி உறுதிப்படுத்துகின்றது. நபியவர்கள் இரண்டு கப்றுகளை கடந்து சென்றார்கள். அப்போது சொன்னார்கள் «இவை இரண்டும் வேதனை செய்யப்படுகின்றது. அதில் ஒருவர் பெருமையடித்ததன் காரணமாகவும், மற்றவர் சிறுநீர் கழிக்கும் போது சரியான முறையில் சுத்தம் செய்யவில்லை (சிறுநீரை சுத்தம் செய்யவில்லை) என்றார்கள்» (ஆதாரம் அபூதாவுத்).

3-இடம் சுத்தமாக இருத்தல்

அரபியுடைய செய்தியில் அவர் பள்ளியில் சிறுநீர் கழித்த போது நபியவர்கள் கூறினார்கள் «அவரை விடுங்கள் (ஊற்றுங்கள்) சிறுநீர் மீது தண்ணீர் வாளியால் (நீரை நிறப்பக் கூடிய பெரிய வாளி) ஊற்றுங்கள்» (புஹாரி முஸ்லிம்)

இடத்தை சுத்தம் செய்தல்

தொழுகையும் நஜீஸும்

ஒருவர் நஜீஸ் இருப்பது தெரியாமல் அல்லது மறதியாக தொழுதால் அவருடைய தொழுகை ஏற்றுக் கொள்ளப்படும். இதனை பின்வரும் சம்பவம் உறுதிப்படுத்துகின்றது.«நபியவர்கள் தொழ வரும் போது பாதணியை கழட்டி விட்டு தொழுதார்கள். மக்களும் பாதணிகளை கழட்டினார்கள். நபியவர்கள் பள்ளியை விட்டு வெளியேறும் போது ஏன் நீங்கள் கழட்டினீர்கள் என நபியவர்கள் கேட்டார்கள். அதற்கு ஸஹாபாக்கள் "நீங்கள் கழட்டியதை பார்த்தோம், அதனால் கழட்டினோம் என்றார்கள்" அதற்கு நபியவர்கள் கூறினார்கள் " ஜிப்ரில் அலை வந்து அதில் நஜீஸ் இருப்பதாக கூறினார்கள். உங்களில் ஒருவர் பள்ளிக்கு வந்தால் பாதணியை பிரட்டிப் பார்க்கட்டும், அதில் நஜீஸை கண்டால் அதனை பூமியில் தேய்க்கட்டும். பின்னர் அதோடு தொழட்டும்»(ஆதாரம் அபூதாவுத்).

இதிலிருந்து நஜீஸ் இருந்தால் தொழும் போது அதனைநீக்குவதுவாஜிபாகும்.பின்னர்தொருகையை தொடர்வார். அதனை முன்னுள்ள செய்தி உறுதிப்படுத்துகிறது. அதற்கு சக்தி பெறவில்லை என்றால் தொழுகை செல்லுபடியற்றவையாகும்.

பூமி முழுவதும் பள்ளிவாயலாகும்.

பூமி முழுவதும் பள்ளிவாயலாகும். இதிலே தொழுவது ஏற்றுக் கொள்ளப்படும். நபியவர்கள் கூறினார்கள் «பூமி எனக்கு சுத்தமாக தொழுகைக்காக சுத்தமாக்கப்பட்டுள்ளது. என்னுடைய சமுதாயத்தில் ஒருவர் தொழ நாடினால் தொழுது கொள்ளட்டும்». (புஹாரி முஸ்லிம்)அதே போல சில இடங்கள் தடுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக மண்ணறையில் (ஜனாஸா தொழுகை விதிவிலக்கானது), கழிப்பறையில் தொழுதல். நபியவர்கள் கூறினார்கள் «பூமி அனைத்தும் பள்ளியாகும். மண்ணறைகளையும் கழிப்பிடத்தை தவிர» (ஆதாரம் திர்மிதி)

அதே போல் ஒட்டக தொழுவம். நபியவர்கள் கூறினார்கள் : «ஒட்டக தொழுவத்தில் தொழ வேண்டாம்» (ஆதாரம் திர்மிதி). ஒட்டக தொழுவம் – ஒட்டகங்கள் கட்டி வைக்கப்படும் இடம்.

மண்ணறையில் தொழுதல்



கழிப்பறையில் தொழுதல்

https://www.al-feqh.com/ta

நான்காவது – அவ்றத்தை மறைத்தல்

ஆணுடைய அவ்றத் – தொப்புள் தொடக்கும் முடங்கால் வரை மறைத்தல்

தொழுகையில் பெண்ணின் அவ்றத் – முகத்தையும் கையையும் தவிர அனைத்தையும் மறைத்தல்



www.al-feqh.com/ta

தோட்புயத்தை மறைத்தல்

தொழுபவர் தோட்புத்தை மறைப்பது வாஜிபாகும். நபியவர்கள் கூறினார்கள் «உங்களில் ஒருவர் ஒரு ஆடையோடு தொழ வேண்டாம். அதில் தோட்புயத்தை மறைக்காமல் (தோழ வேண்டாம்)» (புஹாரி முஸ்லிம்).

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

ஐந்தாவது – கிப்லாவை முன்னோக்குதல்

கஃபாவே கிப்லாவாகும். அல்லாஹ் கூறுகிறான். {(நபியே!) நாம் உம் முகம் அடிக்கடி வானத்தை நோக்கக் காண்கிறோம்; எனவே நீர் விரும்பும் கிப்லாவின் பக்கம் உம்மைத் திடமாக திருப்பி விடுகிறோம்; ஆகவே நீர் இப்பொழுது (மக்காவின்) மஸ்ஜிதுல் ஹராம் பக்கம் உம் முகத்தைத் திருப்பிக் கொள்ளும்.} (பகறா – 144)

சில விடங்களை நாம் கவனிக்க வேண்டும்.

1-மஸ்ஜிதுல் ஹராமில் கஃபாவை முன்னோக்கி தொழுவது வாஜிபாகும். ஆனால் தூரத்தில் தொழுபவர் கஃபாவுடைய திசையை நோக்கி தொழுவார். நபியவர்கள் கூறினார்கள் «கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையே கிப்லா உள்ளது» (ஆதாரம் திர்மிதி).

2-பிரயாணியுடைய சுன்னத்தான தொழுகை – முடியுமானவரை தொழுகைக்காக கிப்லாவை முன்னோக்க வேண்டும். அதற்கு இயலாது போனால் பிரயாணத்தின் திசையை நோக்கி தொழ வேண்டும். நபியவர்கள் கூறினார்கள் «பிரயாணத்தின் திசையை நோக்கி சுன்னத்தான தொழுகையை நிறைவேற்ற கூடியவர்களாக இருந்தார்கள். பின்னர் வித்ர் தொழுவார்கள். வேறு எந்த தொழுகையையும் தொழவில்லை» (ஆதாரம் அபூதாவுத்)

யார் ஹரத்தில் உள்ளே தொழுகிறாரோ

கிப்லாவை அறியாதவர் என்ன செய்ய வேண்டும்.?

கட்டடங்களுக்குள் இருப்பவர்கள்ரகில் கிப்லாவை அறியவில்லையனில் அருகில் இருப்பவர்களிடம் கேட்க வேண்டும். அல்லது பள்ளிவாயின் திசை, அல்லது திசைகாட்டிகள், சூரியன், சந்திரன் ஆகியவை மூலம் அறிந்து கொள்ளலாம். அதற்கு சக்தி பெறவில்லையானால் அவருடைய பெரும்பாண்மையான எண்ணத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். அல்லாஹ் கூறுகிறான். {ஆகவே, உங்களால் இயன்ற வரை அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள்}. [தகாபுன் – 16]

யார் கஃபாவை விட்டும் தூர இடங்களில் தொழுகிறாரோ

https://www.al-feqh.com/ta

4 தொழுகையின் ஒழுங்குகள்

தொழுகை மகத்தான இபாதத் ஆகும். அதன் போது ஒரு முஸ்லிம் தனது உள்ளத்தையும், உடலையும் அல்லாஹ்வை நோக்கியதாக இருக்க வேண்டும். உள்ளத்தாலும், உடலாலும் அதற்காக தயாராகுவது அவசியமாகும். அதனை நிறைவேற்றுவதில் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். அவற்றுள் பின்வரும் அம்சங்கள் மார்க்கமாக்கப்பட்டுள்ளன.

பொருளடக்கம்

1-உளத்தூய்மை

2-வுழுவை முறையாக செய்தல்

3-தொழுகைக்கு நேரத்தோடு செல்லல்.

4-அல்லாஹ்வை நினைவு கூர்தல்

5- தொழுகைக்கு அமைதியாகவும் கண்ணியமாகவும் நடந்து செல்லுதல்

6-பள்ளியில் நுழையும் போது, வெளியேறும் போது துஆ ஓதுதல்

7-உட்காராமல் இரண்டு ரக்அத்கள் தொழுதல்

8- விரல்களை கோர்வை செய்வது கூடாது.

9-பிரார்த்தனைகளில் ஈடுபடுதல்

10- தொழுகையில் பயபக்தியோடு தொழுதல்

11-நபியவர்களது சுன்னாவை பற்றிப்பிடித்தல்

1-உளத்தூய்மை

அல்லாஹ் கூறுகிறான் {அல்லாஹ்வுக்கு வணக்கத்தை தூய்மையாக்கியவர்களாக (தவறான வழியிலிருந்து விலகி சரியான வழியில்) பிடிப்புள்ளவர்களாக அல்லாஹ்வை அவர்கள் வணங்க வேண்டும்; மேலும் தொழுகையை அவர்கள் நிலைநாட்டவேண்டும்; மேலும் ஜகாத்தை அவர்கள் வழங்க வேண்டும் என்பதைத் தவிர (வேறெதுவும்) அவர்களுக்குக் கட்டளையிடப்படவில்லை. இதுதான் நேரான மார்க்கமாகும்}. (பய்யினா – 05)

அல்லாஹ்வுக்காக செய்கின்றோம் என்ற எண்ணம் இல்லாது போனால் அந்த அமலை அல்லாஹ் ஏற்றுக் கொள்ளமாட்டான். அதே போல முகஸ்துதிக்கும், மற்றவர்களின் நன் மதிப்பை பெற வேண்டும் என்று செய்தாலும் ஏற்க மாட்டான். அவ்வாறே ஷிர்க் உடைய எந்த வகைக்குள் உள்ளடங்கினாலும் அல்லாஹ் அதனை ஏற்கமாட்டான்.

2-வுழுவை ஒழுங்காக செய்தல்

இது வுழுவை பரிபூரணமாக செய்வதை குறிக்கின்றது. அபூஹுறைறா ரழி அவர்கள் அறிவிக்கின்றார்கள். நபியவர்கள் கூறினார்கள் « (உங்கள்) தவறுகளை அல்லாஹ் மன்னித்து, தகுதிகளை உயர்த்தும் செயல்கள் சிலவற்றை உங்களுக்கு நான் சொல்லட்டுமா? என்று கேட்டார்கள். மக்கள், ஆம்; (சொல்லுங்கள்) அல்லாஹ்வின் தூதரே! என்று கூறினர். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், (அவை:) சிரமமான சூழ்நிலைகளிலும் அங்கத் தூய்மையை முழுமையாகச் செய்வதும், (குளிர் போன்ற கஷ்டமான நிலையிலும் நேர்த்தியாக செய்வதை குறிக்கின்றது.) பள்ளிவாசல்களை நோக்கி அதிகமான காலடிகளை எடுத்துவைத்துச் செல்வதும், ஒரு தொழுகைக்குப் பின் அடுத்தத் தொழுகையை எதிர்பார்த்துக் காத்திருப்பதும் ஆகும். இவைதாம் கட்டுப்பாடுகளாகும் (அல்லாஹ்வை வணங்கும் விடயத்தில் கட்டுப்பாட்டோடு நடத்தல்.) என்று கூறினார்கள்» (ஆதாரம் முஸ்லிம்)

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

3-தொழுகைக்கு நேரகாலத்தோடு செல்லுதல்.

இது தொழுகையை எதிர்பார்த்தவர்களாக பள்ளிக்கு நேரகாலத்தோடு செல்வதை குறிக்கின்றது. அபூஹுறைறா ரழி அவர்கள் அறிவிக்கின்றார்கள். நபியவர்கள் கூறினார்கள் «உங்களில் ஒருவர் தொழுகையை எதிர்பார்த்திருக்கும் போதெல்லாம் அவர் தொழுகையிலேயே இருக்கிறார்.» (ஆதாரம் புஹாரி).

4-அல்லாஹ்வை நினைவு கூர்தல்.

-வீட்டை விட்டு வெளியேறும் போது அல்லாஹ்வை நினைவு கூர்தல்.அப்போது பின்வருமாறு கூற வேண்டும். «பிஸ்மில்லா, தவகல்து அலல்லாஹ், வலா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்.'' (ஆதாரம் அபூதாவுத்) '' அல்லாஹும்ம இன்னி அஊது பிக அன் அழில்ல அவ் உழல்ல, அவ் அஸில்ல அவ் உஸல்ல, அவ் அழ்லிம அவ் உழ்லம, அவ் அஜ்ஹல அவ் யுஜ்ஹில அலய்ய» (ஆதாரம் அபூதாவுத்) -பள்ளியினுள் நுழையும் போது பின்வரும் துஆவை ஓத வேண்டும். «அல்லாஹும்ம மஜ்அல் பி கல்பி நூறா, வபி லிஸானி நூறா, வஜ்அல் பி ஸம்இ நூறா, வஜ்அல் பி பஸரி நூறா, வஜ்அல் பி கல்பி நூறா, வமின் அமாமி நூறா, வஜ்அல் மின் பவ்கி நூறா, வமின் தஹ்தி நூறா, அல்லாஹும்ம அஃதினி நூறா » (ஆதாரம் முஸ்லிம்).

5-கண்ணியமாகவும் அமைதியாகவும் பள்ளிக்கு நடந்து செல்லுதல்

நபியவர்கள் கூறினார்கள் «நீங்கள் இகாமத் சொல்லுவதைச் செவியுற்றால் தொழுகைக்குச் செல்லுங்கள். அப்போது நீங்கள் அமைதியான (நடக்கும் போது அமைதியை பேணுதல்) முறையிலும் கண்ணியமாகவும் (கண்ணியமாக, பார்வையை தாழ்த்துதல்) செல்லுங்கள். அவசரமாகச் செல்லாதீர்கள். உங்களுக்குக் கிடைத்த ரக்அத்களை (ஜமாஅத்துடன்) தொழுங்கள்; உங்களுக்குத் தவறிப் போனதைப் பூர்த்தி செய்யுங்கள்».(புஹாரி முஸ்லிம்)

6-பள்ளியில் நுழையும் போது பிரார்த்தனை செய்தல்

பள்ளியில் நுழையும் போது வலக்காலை முற்படுத்த வேண்டும். பின்னர் «அஊது பில்லாஹில் அழீம், வபிவஜ்ஹில் கரீம், வசுல்தானிஹில் கதீம் மினஸ் ஷைதானிர் ரஜீம்'' (ஆதாரம் அபூதாவுத்) ''பிஸ்மில்லாஹி, வஸ்ஸலாது வஸ்ஸலாமு அலா ரசூலில்லாஹ்'' (ஆதாரம் முஸ்லிம்) '' அல்லாஹும்ம அப்தஹ்லி அபுவாப ரஹ்மதிக» (ஆதாரம் முஸ்லிம்) என கூற வேண்டும்.

-பள்ளியை விட்டு வெளியேறும் போது இடக்காலை முற்படுத்த வேண்டும். பின்னர்

«பிஸ்மில்லாஹி, வஸ்ஸலாது வஸ்ஸலாமு அலா ரசூலில்லாஹ், அல்லாஹும்ம இன்னி அஸ்அலுக மின் பழ்லிக, அல்லாஹும்ம அஃஸிம்னி மினஸ் ஷைதானிர் ரஜீம்» (ஆதாரம் இப்னு மாஜா).

https://www.al-feqh.com/ta

7-இரண்டு ரக்அத்கள் தொழாமல் உட்கார வேண்டாம்

நபியவர்கள் கூறினார்கள் «உங்களில் ஒருவர் பள்ளியில் நுழைந்தால் இரண்டு ரக்அத்கள் தொழாமல் உட்கார வேண்டாம்.» (புஹாரி முஸ்லிம்).

8-விரல்களை கோர்வை செய்வது கூடாது.

நபியவர்கள் கூறினார்கள் «உங்களில் ஒருவர் நல்ல முறையில் வுழுச் செய்து கொண்டு பள்ளிக்குச் சொல்கிறார். அவர் தொழும் போது தமது விரல்களை தொழுகையில் கோர்வை செய்ய வேண்டாம்» (ஆதாரம் அபூதாவுத்).

9-பிரார்த்தனைகளில் ஈடுபடுதல்.

தொழுகையை எதிர்பார்த்தவனாக குர்ஆன் ஓதுதல், துஆ கேட்டல் போன்றவைகளில் ஈடுபடுதல். உள்ளடத்தில் ஊசலாட்டம் ஏற்படாத வண்ணம் பிரார்த்தனைகளில் ஈடுபடுதல்..

10-பயபக்தியோடு தொழுதல்.

அதுவே உயிலோட்டமுள்ள தொழுகையின் வெளிப்பாடாகும். அச்சமில்லாத தொழுகை உயிரில்லாத உடலைப் போன்றது. இப்னு ரஜப் ரஹ் அவர்கள் அறிவிக்கின்றார்கள் ”பயபக்கியுடைய அடிப்படை – அது உள்ளத்தை மிருதுவாக்கி இலகு படித்தி அமைதியை ஏற்படுத்துகின்றது. உள்ளம் அச்சமடைந்தால் உடலுறுப்பு அதற்கு அதற்கு அடிபணிந்து கட்டுப்படுகின்றது. (நூல் பயபக்தி – இப்னு ரஜப்)

பயபக்தியுடைய இடம் உள்ளமாகும்.

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

11-தொழுகையில் நபியவர்களது சுன்னாவை கடைப்பிடித்தல்.

தொழுகை ஓர் இபாதத் ஆகும். நபியவர்களது வழிகாட்டல் அதற்கு அவசியமாகும். அது தவிர்த்து ஒன்றை கூறுவதோ? அல்லது செய்வதோ? கூடாது. நபியவர்கள் கூறினார்கள் «என்னை எவ்வாறு தொழக் கண்டீர்களோ அவ்வாறே தொழுங்கள்» (ஆதாரம் புஹாரி).



https://www.al-feqh.com/ta

5

தொழுமிடத்தில் தடுப்பு வைத்தல்

தொழுமிடத்தில் தடுப்பு வைத்தல்

தொழுபவர் தனக்கு முன்னால் தன்னுடைய கை நீட்டமளவிற்கு ஏதாவது ஒன்றை வைப்பதை இது குறிக்கின்றது.

சுத்ராவிற்கான மார்க்க ஆதாரம்

ஊரில் இருக்கும் போதும் பிரயாணத்தின் போதும் சுத்ராவை ஏற்படுத்துவதை மார்க்கம் கடமையாக்கியுள்ளது. அது நபீலான , பர்ளான தொழுகையானாலும் அதே போன்று பள்ளியுள்ளேயும் பள்ளி அல்லாத இடங்களில் அதனை பேண வேண்டும். நபியவர்கள் கூறினார்கள். «உங்களில் ஒருவர் தொழுவதற்கு முற்பட்டால் அவருக்கு நெருக்கமா இருக்கும் வகையில் சுத்ராவை ஏற்படுத்தட்டும். » (ஆதாரம் அபூதாவுத்).

வஹ்ப் ரழி அவர்கள் கூறுகின்றார்கள். «நபியவர்கள் மினாவில் தொழுகை நடாத்தினார்கள். மரக்குற்றியால் ஒரு கோடு கீறினார்கள். அதற்கு இடையில் நாம் இரண்டு ரக்அத்கள் தொழுதோம். » (ஆதாரம் அஹ்மத்).

பொருளடக்கம்

-சுத்ராவின் வரைவிலக்கணம்

-சுத்ராவிற்கான மார்க்க ஆதாரம்

-சுத்ராவின் சட்டம்

-சுத்ராவின் நுட்பம்

-சுத்ராவின் சட்டங்களில் உள்ளவை

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

சுத்ராவின் சட்டம்

சுத்ரா என்பது வாஜிபாகும். தனியாக, இமாமாக தொழுபவர்களை சுத்ரா வைக்குமாறு நபியவர்கள் ஏவினார்கள். அதன் காரணமாக ஒரு முஸ்லிம் தொழும் போது அவருக்கு முன்னால் சுத்ராவை ஏற்படுத்துவது அவசியமாகும். சுத்ரா மூலம் தொழுகையாளியை கடப்பவர் தடுக்கப்படுவார். நபியவர்கள் கூறினார்கள் «சுத்ரா இல்லாமல் தொழ வேண்டாம். யாரையும் உங்களை கடந்து செல்ல விட வேண்டாம். அவ்வாறு சென்றால் அவரோடு போராட்டும்»(ஆதாரம் இப்னு ஹுஸைமா)

சுத்ராவின் நுட்பம்

இஸ்லாம் தொழுகையாளிக்கு சுத்ராவை வைப்பதை மார்க்கமாக்கியுள்ளதுடன் அதில் அதிக நுட்பங்கள் நிறைந்திருக்கின்றன. அவை

1-தொழுகையாளிக்கு இடையில் கடந்து செல்பவர்களை தடுக்க.

2-தொழுகையில் அவரது சிந்தனை சிதறாமல் இருக்க வழிவகை செய்கிறது. சிந்தனையில் மூழ்காமல் தொழுகையில் தொடர உதவுகிறது.

3-பெண்கள், கறுப்பு நாய்,கழுதை போன்றன குறுக்கறுத்து தொழுகை தடுபடாமல் இருப்பதற்கான முயற்சியாக அமையும்.

«அபூதர் அல்கிஃபாரீ (ரலி) அவர்கள், உங்களில் ஒருவர் (திறந்தவெளியில்) தொழ நிற்கும் போது தமக்கு முன்னால் வாகன (ஒட்டக)த்தின் (சேணத்திலுள்ள) சாய்வுக்கட்டை போன்றது இருந்தால் அதுவே அவருக்குத் தடுப்பாக அமைந்துவிடும். சாய்வுக்கட்டை போன்றது இல்லாவிட்டால் கழுதை, பெண் மற்றும் கறுப்புநாய் ஆகியன அவரது (கவனத்தை ஈர்த்து) தொழுகையை முறித்துவிடும் என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்றார்கள். உடனே நான், அபூதர் (ரலி) அவர்களே! சிவப்பு நிற நாய், மஞ்சள் நிற நாய் ஆகியவற்றை விட்டுவிட்டுக் கறுப்பு நிற நாயை மட்டுமே குறிப்பிடக் காரணம் என்ன? என்று கேட்டேன். அதற்கு அவர்கள், என் சகோதரரின் புதல்வரே! நீங்கள் என்னிடம் கேட்டதைப் போன்றே நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள் கறுப்பு நாய் ஷைத்தான் ஆகும் என்று கூறினார்கள் என்றார்கள்» (ஆதாரம் முஸ்லிம்).

https://www.al-feqh.com/ta

சுத்ராவின் சட்டங்களில் உள்ளவை

1- இமாமும் தனியாக தொழுபவரும் சுத்ராவை ஏற்படுத்துவது அவசியமாகும். அவர் மஃமுமாக இருந்தால் இமாமே அவருக்கு சுத்ராவாகும். அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள் «அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (விடைபெறும் ஹஜ்ஜின்போது) மினாவில் (தடுப்பு எதையும் முன்னோக்காமல்) மக்களுக்குத் தொழுவித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது நான் பெட்டைக் கழுதை (பெண் ஒட்டகம்) யொன்றில் பயணித்தபடி (அவர்களை) நோக்கிச் சென்றேன். -அந்த நாளில் நான் பருவ வயதை நெருங்கிவிட்டிருந்தேன்.- (தொழுதுகொண்டிருந்தவர்களின்) அணிக்கு முன்னால் நான் கடந்துசென்று (கழுதையிலிருந்து) இறங்கி அதை மேயவிட்டு விட்டுத் தொழுகை அணியினூடே நுழைந்து (நின்று)கொண்டேன். அ(வ்வாறு நான்தொழுகைஅணியைக்கடந்துசென்ற)தற்காக என்னை யாரும் ஆட்சேபிக்கவில்லை» (புஹாரி முஸ்லிம்).

2- தொழுபவருக்கு இடையில் கடப்பது கூடாது. அவ்வாறு செய்பவர் பாவியாக மாறுகிறார். நபியவர்கள் கூறினார்கள் «தொழுபவரின் குறுக்கே செல்பவர் பற்றி நபி(ஸல்) அவர்களிடமிருந்து செவியுற்றதை அறிந்து வருமாறு என்னை அபூ ஜுஹைம்(ரலி) அவர்களிடம் ஸைத் இப்னு காலித்(ரலி) அனுப்பு வைத்தார். 'தொழுபவருக்குக் குறுக்கே செல்பவர், அதனால் தமக்கு ஏற்படும் பாவத்தைப் பற்றி அறிந்திருந்தால் அவருக்குக் குறுக்கே செல்வதற்குப் பதில் நாற்பது நாள்கள் நின்று கொண்டிருப்பது அவருக்கு நல்லதாகத் தோன்றும்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஜுஹைம்(ரலி) விடையளித்தார்கள். இதன் அறிவிப்பாளர்களில் ஒருவரான ». அபுன் னழ்ரு என்பவர் 'நாற்பது ஆண்டுகள்' என்று கூறினார்களா? அல்லது 'நாற்பது மாதங்கள்' அல்லது 'நாற்பது நாள்கள்' என்று கூறினார்களா? என்பது சரியாக தமக்கு நினைவில்லை என்கிறார்." (புஹாரி முஸ்லிம்)

ஆனால்கடந்துசெல்பர்தொழுவருக்குபின்னாலோ அல்லது தூரமாகவோ, அல்லது சுத்ராவிற்கு முன்னாலோ சென்றால் அதில் பிரச்சினை கிடையாது.

3-தொழுகையில் கடந்து செல்பவரை தடுப்பதற்கான வழிமுறையாகும். «'உங்களில் எவரேனும் தமக்கு முன்னால் 'தடுப்பு' வைத்துத் தொழும்போது, எவரேனும் குறுக்கே செல்ல முயன்றால் அவரைத் தடுக்க வேண்டும்; அதை அவர் எதிர்த்தால் அவருடன் சண்டையிட வேண்டும்» (புஹாரி முஸ்லிம்). ஏனெனில் அவர் நிச்சயம் ஷைத்தானாவார்' என்று நபி(ஸல்) அவர்கள் கூற செவியுற்றுள்ளேன்' என அபூ ஸயீத்(ரலி) கூறினார்.

4-உலமாக்கள் மஸ்ஜிதுல் ஹராமில் இதற்கு விதிவிலக்களித்துள்ளனர். அதே போன்று அதில் கைகளால் தடுப்பது என்பது மிகவும் சிரமமாக கடினமான ஓர் காரியமாகும்.

5- தொழுபவர் சுவரை, தூண்களை சுத்ராவாக ஏற்படுத்த முடியும். தடி போன்றவைகளை வைத்து தொழவும் முடியும்.

6-தொழுபவருக்கும் சுத்ராவிற்கும் இடையில் உள்ள அளவு ஒரு ஆடு கடந்து செல்லும் அளவாகும். நபியவர்கள் கூறினார்கள் ஸஹ்ல் இப்னு ஸஃது(ரலி) அறிவிக்கிறார்கள் «நபி(ஸல்) அவர்கள் தொழுமிடத்துக்கும் சுவற்றுக்குமிடையே ஓர் ஆடு நடக்குமளவுக்கு இடைவெளி இருக்கும்» (புஹாரி முஸ்லிம்).

www.al-feqh.com/ta

பெண்கள் தொழுகையில் குறிக்கிடுதல்

இங்குள்ள செய்தியில் பெண்ணை கழுதைக்கும், கறுத்த நாய்க்கும் ஒப்பிடும் விதமாக வரவில்லை. ஆனால் ஒரு வரைசையில் கூறப்படுள்ளதால் அவை மூன்றும் ஒரே காரணம் என்ற அர்த்தம் கிடையாது. கறுத்த நாய் குறிக்கிட்டதால் தொழுகை முறியும் என்ற செய்தியில் நாயுடைய அதே சட்டம் கழுதைக்கம், பெண்ணும் உள்ளது என்ற அர்த்தமோ, விளக்கமோ இல்லை.

அச் செய்தியில் கறுத்த நாய் ஷைத்தான் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்காக வேண்டி கழுதையும், பெண்ணையும் ஷைத்தான் என்று கருத முடியாது. பெண்ணும், கழுதையும் வேறு கருத்தில் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இங்கு பெண்ணை பயன்படுத்தியன் காரணமாக அவள் குறிக்கிடும் போது தொழுகையின் சிந்தனை தொழுகையாளியை விட்டும் நீங்க வாய்ப்புள்ளது. ஒரு ஆண் குறுக்கறும் போதும், பெண் குறுக்கறுக்கும் போதும் அதில் பெண் குறுக்கிடும் சந்தர்ப்பங்களில் அவனது தொழுகையில் சஞ்சலங்கள், தீய எண்ணங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. அதனாலேயே அது தடுக்கப்பட்டிருக்கலாம்.

6 தொழும் முறை

நபியவர்கள் கூறினார்கள் «என்னை எவ்வாறு தொழக் கண்டீர்களோ அவ்வாறே தொழுங்கள்'' (ஆதாரம் புஹாரி). ''அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (அல்லாஹு அக்பர் என்று) தக்பீர் கூறித் »

ஆயிஷா ரழி அவர்கள் அறிவிக்கின்றார்கள் «தொழுகையைத் துவக்குவார்கள்; அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்... என்று (குர்ஆன்) ஓத ஆரம்பிப்பார்கள். ருகூஉச் செய்யும்போது தலையை உயர்த்தவுமாட்டார்கள்; ஒரேடியாகத் தாழ்த்தவுமாட்டார்கள். மாறாக, நடுநிலையாக வைத்திருப்பார்கள். ருகூஉவிலிருந்து தலையை உயர்த்தினால் நிமிர்ந்து நிற்காமல் சஜ்தாவுக்குச் செல்லமாட்டார்கள். சஜ்தாவிலிருந்து தலையை உயர்த்தினால் நேராக நிமிர்ந்து உட்காராமல் (இரண்டாவது) சஜ்தாச் செய்ய மாட்டார்கள். ஒவ்வோர் இரண்டு ரக்அத்திலும் அத்தஹிய்யாத் ஓதுவார்கள். (அந்த அமர்வில்) இடது காலை விரித்துவைத்து, வலது காலை நட்டுவைப்பார்கள். மேலும், ஷைத்தான் உட்காருவதைப் போன்று (கால்களை நட்டுவைத்து, புட்டத்தைத் தரையில் படியவைத்து) உட்கார வேண்டாம் என்றும், மிருகங்கள் உட்காருவதைப் போன்று முழங்கைகளைத் தரையில் பரப்பி வைத்து உட்கார வேண்டாம் என்றும் தடை விதித்துவந்தார்கள். அவர்கள் சலாம் கூறியே தொழுகையை முடிப்பார்கள்» (ஆதாரம் முஸ்லிம்).

பொருளடக்கம்

1-கிப்லாவை முன்னோக்குதலும் ஆரம்ப தக்பிர் கட்டுதலும்

2-சூரதுல் பாத்திஹா ஓதுதல்

3-ருகூஃ செய்தலும் நிலைக்கு வருதலும்

4-ஸுஜூது செய்தலும் அதில் எழும்புதலும்

5-அத்தஹியாத்

6-ஸலாம் கொடுத்தல்

7-தொழுகைக்கு பின்னால் துஆ செய்தல்

கிப்லாவை முன்னோக்குதலும் ஆரம்ப தக்பிர் கட்டுதலும்

-தொழுகையை நாடியவராக கிப்லாவை முன்னோக்கி நிற்க வேண்டும். அல்லாஹ்விற்கு முன்னால் நிற்கிறோம் என்ற உணர்வுடனும் பயபக்தியோடும் தொழுகையில் நிற்க வேண்டும்.

-பின்னர் தொழுகைக்காக நீய்யத் வைக்க வேண்டும். நீயத்துடைய இடம் உள்ளமாகும். அதனை வாயால் மொழிவது கூடாது. அப்படி செய்வது பித்அத் ஆகும். நபியவர்கள் கூறினார்கள் «செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொருத்தே அமைகின்றன. ஒவ்வொருவருக்கும் அவர் எண்ணியதே கிடைக்கிறது» (புஹாரி முஸ்லிம்)

-பின்னர் கையை தோட்புயம் அல்லது காது வரை உயர்த்தி ''அல்லாஹூ அக்பர்'' (ஆதாரம் முஸ்லிம்) என கூற வேண்டும்.

-இடக் கையின் மீது வலக் கையை வைத்து (ஆதாரம் அஹ்மத்) நெஞ்சின் மீது வைக்க வேண்டும். அதே போல வலக்கையால் இடக் கையை பிடித்துக் கொள்ள வேண்டும்.

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

சூரதுல் பாத்திஹா ஓதுதல்

-தொழுபவர் தலையை குனிந்தவராக ஸூஜூதுடைய இடத்தில் தனது பார்வையை வைக்க வேண்டும். (ஆதாரம் புஹாரி)

«சுபஹானக அல்லாஹூம்ம வபிகம்திக, தபாரக இஸ்முக, வதஆலா ஜத்துக, வலாஇலாக ஃருக». (ஆதாரம் முஸ்லிம்)

-பின்னர் உள்ரங்கமாக «அஊதுபில்லாஹி மினஸ் ஷைதானிர் ரஜீம், பிஸ்மில்லாஹி ரஹ்மானிர் ரஹீம்».(ஆதாரம் முஸ்லிம்) என கூற வேண்டும்.

-அதன் பின்னர் சூரதுல் பாத்திஹா (ஆதாரம் புஹாரி) ஓத வேண்டும். பின்னர் ஆமின் என கூற வேண்டும். அதாவது விடையளிக்கப்பட்டது என்ற பொருளாகும்.

-சூரதுல் பாத்திஹா ஓதய பின்னர் முதல் இரண்டு ரக்அத்திலும் வேறு ஒரு சூறா ஓத வேண்டும். அதே போல சுபஹ், மஃரிப், இஷா ஆகிய தொழுகையில் முதல் இரண்டு ரக்அத்திலும் சூரதுல் பாத்திஹாவை வெளிப்படையாக ஓதுவார்.

ருகூஃ செய்தலும் நிலைக்கு வருதலும்

தொழுபவர் கையை உயர்த்தி தக்பீர் சொல்லி ருகூஃ செய்ய வேண்டும். விரல்களால் முட்டங்கால்களை பிடித்தவறாக இருப்பார். முதுகையும் தலையையும் சமமாக வைத்துக் கொள்வார். பின்னர் மூன்று முறை «ஸூபஹான ரப்பில் அழீம்» என்று கூறுவார்.(ஆதாரம் திர்மிதி)

பின்னர் உயர்ந்த்தவராக (இமாம் அல்லது மஃமும்) பின்வருமாறு கூறுவார் «ஸமியல்லாஹூ லிமன் ஹமிதா» (ஆதாரம் திர்மிதி) பின்னர் (அனைவரும்) «ரப்பனா வலகல் ஹம்து மில்அஸ் ஸமாவாதி, வமில்அல் அர்ழி, வமில்அ பயினகுமா, வமில்அ மாஷிஃத மின் ஷைய்யின் பஃத்»(ஆதாரம் திர்மிதி) அதே போன்று இந் நிலையில் ருகூஃவிற்கு முன்னர் இருந்த்து போல கைகளை நெஞ்சில் வைப்பது சுன்னத்தாகும்.

ஸூஜூது செய்தலும் அதில் எழும்புதலும்

-தக்பீர் சொல்லியவராக ஸூஜூத் செய்வார். முதலில் முட்டங்காலை தரையில் வைத்து பின்னர் கையை (ஆதாரம் அபூதாவுத்) வைப்பார். பின்னர் நெற்றியும், மூக்கும் தரையில் பட வேண்டும். தனது இரண்டு கைகளையும் அவரது காதின், தோட்புயத்தின் அருகில் பூமியில் விரித்து வைக்க வேண்டும். அப்போது விரல்கள் கிப்லாவை நோக்கியிருக்க வேண்டும். பூமியில் படாமல் முழங்கையை (முழங்கைக்கும் மணிக்கட்டிற்கும் இடையான உறுப்பு)

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

உயர்த்துவார். இன்னும் அவரது கையை வயிற்றில் இருந்தும் விலாப்புறத்திலிருந்தும், (தோளுக்கும் முழங்கைக்கும் இடைப்பட்ட உறுப்பு) தொட்டையிலிருந்தும் (ஆதாரம் புஹாரி) தள்ளி வைக்க வேண்டும். பின்னர் «ஸுபஹான ரப்பியல் அஃலா» என மூன்று முறை கூறுவார். இன்னும் ஸுஜூதில் அதிகமான பிரார்த்தனைகளை மேற்கொள்ள வேண்டும். (ஆதாரம் முஸ்லிம்)

-பின்னர் கையை உயர்த்தாமல் தக்பீர் சொன்னவராக தலையை உயர்த்துவார். அப்போது இடக்காலை விரித்து (ஆதாரம் முஸ்லிம்) வலக்காலை நட்டி உட்காருவார். பின்னர் கிப்லாவை நோக்கி தனது விரலை விரித்தவராக அவரது தொடையில் வைப்பார். அப்போது

«அல்லாஹும்மஃபிர்லி, வர்ஹம்னி, வஜ்புர்னி, வஹ்தினி, வர்சுக்னி».(ஆதாரம் திர்மிதி)

-பின்னர் தக்பீர் கூறி முதலாவது செய்த்து போன்று இரண்டாவது ஸுஜ்த் செய்வார்.

-பின்னர் தக்பீர் கூறியவராக தலையை உயர்த்துவார். பின்னர் சிறிய அமர்வில் இருப்பார். அதற்கு ஜல்ஸதுல் இஸ்திறாஹா எனப்படுகின்றது. மாலிக் இப்னு அல்ஹுவைரிஸ்(ரலி) அறிவிக்கிறார்கள்

நபி(ஸல்) அவர்கள் தொழுததை பார்த்திருக்கிறேன். அவர்கள் தொழுகையின் «ஒற்றைப் படையிலான ரக்அத்களின்போது உட்காராமல் (அடுத்த ரக்அத்துக்காக) எழமாட்டார்கள்» (ஆதாரம் புஹாரி)

-கையை ஊண்டியவராக இரண்டாவது ரக்அத்திற்கு தக்பீர் கூறியவராக எழும்ப வேண்டும். (ஆதாரம் புஹாரி)

- பின்னர் முதல் ரக்அத்தில் செய்தது போன்று இரண்டாம் ரக்அத்திலும் செய்வார். என்றாலும் அது வஜ்ஜஹத் ஓதுமிடம் என கூறப்படமாட்டாது.

அத்தஹிய்யாத்து இருப்பு

தொழுபவர் முதலிரண்டு ரக்அத்களை பூர்த்தி செய்தால் முதலாவது அத்தஹியாத்தில் அமருவார். இடது காலை விரித்து வலதுகாலை நட்டி வைக்க வேண்டும். அவரது கையை தொடையில் வைப்பார். வலது கையில் உள்ள சின்ன விரலையும், மோதிர விரலையும் மடிப்பார், நடு விரலையும் பெருவிலையும் சேர்த்து வட்ட வடிவில் வைப்பார். அத''தஹஜயாத்தின் போது தனது ஆட்காட்டி விரலை உயர்த்தி சுட்ட்டிக்காட்டுவதை போன்று வைக்க வேண்டும். அதனை தனது கண்களால் பார்த்தவராக

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

பின்வருமாறு ஓத வேண்டும்

« அத்தஹிய்யாது லில்லாஹி வஸ்ஸலாது தையிபாது, அஸ்ஸலாமு அலைக, அய்யுஹன் நபிய்யு வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு , அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹி ஸதலிஹீன், அஷ்ஷஹது அன்லாயிலாக இல்லல்லாஹ் வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹூ வரசூலுஹூ » .(ஆதாரம் புஹாரி)- -பின்னர் இரண்டு ரக்அத்திற்கு அதிகமான தொழுகையாக இருந்தால் தக்பீர் கூறியவராக எழும்புவார். அப்போது தக்பீருடன் கைகளை உயர்த்தி ஏனைய ரக்அத்களில் சூரதுல் பாத்திஹாவை மாத்திரம் ஓத வேண்டும்.

-கடைசி அத்தஹியாத்தில் தவருக்கில் (ஆதாரம் அபூதாவுத்) அமர வேண்டும். தவருக் என்பது – வலது காலை நட்டி வைத்து இடது காலை வலக்காலுக்கு கீழால் வெளிப்படுத்தி வைப்பதை குறிக்கும். பின்னர் முதல் அத்தஹியாத்தில் ஓதிய துஆவிற்கு பின்னர் பின்வரும் துஆவை ஓத வேண்டும். «அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின், கமா ஸல்லைத அலா இப்றாஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்க ஹமீதும் மஜீத், அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா இப்றாஹீம வஅலா ஆலி இப்றாஹீம இன்னக ஹமீதும் மஜீத்».(ஆதாரம் புஹாரி)

-பின்னர் பின்வருமாறு ஓத வேண்டும். «அல்லாஹும்ம இன்னி அஊதிபிக மின் அதாபி ரஹன்னம, மின் அதாபில் கப்ர், வமின் பித்னதில் மஹ்யா வம்மாதி, வமின் ஷர்ரி மஸீஹி தஜ்ஜால்»(ஆதாரம் புஹாரி)

ஸலாம் கொடுத்தல்

தொழுகையின் இறுதியில் தொழுகையாளி வலது பக்கம் ஸலாம் கொடுக்க வேண்டும். அப்போது «அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்» (ஆதாரம் முஸ்லிம்) என கூற வேண்டும். அவ்வாறே இடது பக்கமும் செய்ய வேண்டும். .

ஆரம்ப தக்பீர்

பாத்திஹா ஓதுதல்



ருகூஃ செய்தலும், அதிலிருந்து உயர்தலும்

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

ஸுஜூதும், அதிலிலுந்து எழும்புதலும்

இரண்டுஸ ஸுஜூதிற்கிடையில் அமர்தல்

இறுதி அத்தஹியாத்திற்காக உட்காருதல்

ஸலாம் கொடுத்தல்

www.al-feqh.com/ta

தொழுகையின் பின்னர் ஓத வேண்டிய துஆக்கள்.

- «அஸ்தஃ்ஃபி[F]ருல்லாஹ் » (மூன்று முறை), «அல்லாஹும்ம அன்(த்)தஸ் ஸலாம் வமின்கஸ் ஸலாம் தபா[B]ரக்(த்)த தல் ஜலாலி வல் இக்ராம். (ஆதாரம் முஸ்லிம்)

- லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீ(க்)க லஹு லஹுல் முல்(க்)கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர். அல்லாஹும்ம லாமானிஅ லிமா அஃதைத(த்)த வலாமுஃதிய லிமா மனஃ(த்)த வலா யன்ப[F]வு தல்ஜத்தி மின்(க்)கல் ஜத் (ஆதாரம் புஹாரி)

-லாயிலாக இல்லலாஹூ வஹ்தஹூ லாஷரீக லகு, லகுல் முல்கு வலகுல் ஹம்து அலா குல்லி ஷையின் கதீர், லாஹல்ல வலா குவ்வத இல்லா பில்லாஹி, லா இலாக இல்லா அன்த, வலா நஃபுது இல்லா இய்யஹூ, லகு முல்கு வலகுல் பழ்லு வலகு தனாயில“ ஹஸன், லாயிலாக இல்லால்லாஹூ, முஹ்லிஸீன லகுத் தீன வலவ் கரிகல் காபிரூன்” (ஆதாரம் முஸ்லிம்)

https://www.al-feqh.com/ta

-சுபஹான அல்லாஹ், அல்லாஹம்துலில்லாஹ், வஅல்லாஹூ அக்பர். (33 தடவை) ”லாயிலாக இல்லால்லாஹூ வஹ்தகு லாஷரிக லகு, லகுல் முல்கு வலகுல் ஹம்து அலா குல்லி ஷையின் கதீர்”
(ஆதாரம் முஸ்லிம்)

- அல்லாஹூம்ம அயின்னி அலா திக்ரிக, வசுக்ரி இபாத்திக, வகுஸ்னி, இபாத்திக»(ஆதாரம் அபூதாவுத்)

-ஆயதுல் குர்ஸி, சூரத்துல் இஹ்லாஸ், பலக், நாஸ்
(ஆதாரம் நஸாயி)

-அல்லாஹூம்ம அயின்னி அலா திக்ரிக, வசுக்ரிக, வகுஸ்னி இபாததிக

“

கேள்வி

பெண்களும் ஆண்கள் தொழும் முறையைப் போலவே தொழ வேண்டும்.

”

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

7 தொழுகையின் சட்டங்கள்

1-உட்கார்ந்து தொழுதல்

(அ) சுன்னத்தான தொழுகையில்

நின்று கொண்டு தொழுபவரை விட உட்கார்ந்து தொழுபவருக்கு அரைவாசி நன்மை கிடைக்கிறது. நபியவர்கள் கூறினார்கள் «நின்று தொழுதால் அது சிறந்ததாகும். உட்கார்ந்து தொழுதால் நின்று தொழுபவரின் கூலியில் பாதியே அவருக்கு உண்டு. படுத்துத் தொழுதால் உட்கார்ந்து தொழுபவரின் கூலியில் பாதியே அவருக்கு உண்டு». (ஆதாரம் புஹாரி) ஆனால் தக்க காரணங்களோடு ஒருவர் தொழுவாரானால் அவருக்கு பூரணமான நன்மை கிடைக்கும். நபியவர்கள் கூறினார்கள். «அடியான் ஆரோக்கியமானவனாய், ஊரிலிருக்கும்போது செய்யும் நற்செயல்களுக்குக் கிடைப்பது போன்ற (அதே) நற்பலன் அவன் நோயுற்று விடும்போது அல்லது பயணத்தில் இருக்கும்போது அவனுக்கு எழுதப்படும்». (ஆதாரம் புஹாரி)

(ஆ) பர்ளான தொழுகைகளில்

நிற்பதற்கு சக்தியிருப்பவர் பர்ளான தொழுகைகளில் உட்கார்ந்து தொழுவது கூடாது.

பொருளடக்கம்

உட்கார்ந்து தொழுதல்

எண்ணம்

பாத்திஹா ஓதுதல்

ஆமீன் கூறல்

இமாமுடைய அமைதி

வெளிப்படையாக பர்ளான தொழுகையை கழாச் செய்தல்

கையை உயர்த்துதல்

ரக்அத்தை அடைந்து கொள்ளல்.

நிதானத்தை பேணல்

நாவை அசைத்தல்

ஸுஜூதின் அமைப்பு

விரலால் சுட்டிக்காட்டுதல்

www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

2-நிய்யத்

நீய்யத்தில் உள்ள சட்டங்கள்

1-தொழுகையில் நீயத்தை துண்டிப்பது கூடாது. யார் தொழுகையில் நீயத்தை துண்டிக்கிறாரோ அவரது தொழுகையும் துண்டிக்கப்பட்டு விடும். அவர் அதனை ஆரம்பத்திலிருந்து செய்வது வாஜிபாகும்.

2-சுன்னத்தான தொழுகைக்காக ஒருவர் தக்பீர் கட்டியபின்னர் அதனை அவர் பர்ளு தொழுகையாக மாற்ற முடியாது.

3-ஒருவர் பர்ளு தொழுகையை தனியாக தொழுவதற்கு தக்பீர் கட்டுகிறார். அப்போது ஒரு கூட்டம் ஜமாஅத் தொழுகை நிறைவேற்ற வந்தால் அந்த தொழுகையை அவர் சுன்னத்தான தொழுகையாக மாற்றி இரண்டு ரக்அத்தை பூரணமாக தொழுது ஸலாம் கொடுத்த பின்னர் ஜமாஅத் உடன் இணைந்து தொழுது கொள்வார்.

3-பாத்திஹா ஓதுதல்

பாதிஹா ஓதுவது வாஜிபாகும். அவர் வெளிப்படையான தொழுகைகளில் மஃமுமாக இருப்பினும் சரியே. உபாதா இப்னு ஸாமித் ரழி அவர்கள் அறிவிக்கின்றார்கள் «நாங்கள் நபியவர்களுக்கு பின்னால் சுன்னத் தொழுது கொண்டிருந்தோம். அப்போது நபியவர்கள் ஓதினார்கள். நானும் அவ்வாறே ஓதிக் கொண்டிருந்தேன். இமாமுக்கு பின்னால் நீங்கள் ஓதினீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு "ஆம்" என்று கூறினோம். அதற்கு நபியவர்கள் " சூரதுல் பாத்திஹாவை தவிர வேறு எதுவும் செய்ய வேண்டாம். யார் அதனை ஓத வில்லையோ அவருக்கு தொழுகை இல்லை" என்றார்கள்» (ஆதாரம் அபூதாவுத்).

4-ஆமீன் கூறுதல்

இது தொழுபவர் ஆமீன் கூறுவதை குறிக்கின்றது. இதனை ஓதுவது அனைத்து தொழுகையாளிலும் சுன்னத்தாகும். அவர் இமாமாக, மஃமுமாக, தனியாக, கூட்டாக, பர்ளு, சுன்னத், ஆகிய அனைத்து நிலையிலும் கூறலாம். அது போல சத்தத்தை வெளிப்படுத்தும் தொழுகையில் ஆமினை வெளிப்படுத்தியும், சத்தத்தை வெளிப்படுத்தாத தொழுகையில் ஆமினை வெளிப்படுத்தாமலும் கூற வேண்டும். நபியவர்கள் கூறினார்கள் «இமாம் ஆமின் கூறும்போது நீங்களும் ஆமின் கூறுங்கள்! ஒருவர் கூறும் ஆமீன் வானவர்கள் கூறும் ஆமினுடன் ஒத்து அமையுமாயின் அவரின் முன்சென்ற பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன» (ஆதாரம் புஹாரி)

5-இமாமின் மௌனம்

1-வஜ்ஜஹத் ஓதுவதற்காக ஆரம்ப தக்பீருக்கும், கிராஅதிற்கும் இடையில் மௌனமாக இருத்தல்.

2- பாத்திஹாவிற்கும் அடுத்த சூறாவிற்கும் இடையில் மௌனமாக இருக்க வேண்டும் என உறுதியான நபிமொழிகள் இல்லை.

3-ருகூஃவிற்கு முன்னர் சூறா ஓதிய பின்னர் இமாம் அமைதியாக இருக்கலாம்.

6-வெளிப்படையாக பர்ளான தொழுகையை கழாச் செய்தல்

தவறவிடப்பட்ட ஒரு தொழுகையை கழாச் செய்ய நாடினால் அதனை சத்தமாக ஓதி தொழுவதா? அல்லது உள்ரங்கமாக ஓதி தொழுவதா? இதன் போது தொழுகையை மாத்திரமே நோக்க வேண்டும். கழாச் செய்யும் நேரத்தை பார்க்க கூடாது. பகல் நேரத்தில்

வெளிப்படையான தொழுகை (சுபஹ், மஃரிப், இஷா) தொழுதால் அதில் வெளிப்படுத்தியே ஓத வேண்டும்.

சுன்னதான தொழுகையில் உள்ரங்கமாக ஓதுவது சுன்னத்தாகும். ஆனால் வெளிப்படுத்தி ஓத வேண்டும் என வந்துள்ள சுன்னத்தான தொழுகைகளில் வெளிப்படுத்தி ஓத வேண்டும். உதாரணம் - தராவிஹ், கிரகண தொழுகை

7-இரு கைகளையும் உயர்த்துதல்

பின்வரும் சந்தர்ப்பங்களில் கைகளை உயர்த்த வேண்டும்.

1-ஆரம்ப தக்பீரின் போது

2-ருகூஃ செய்யும் போது

3-ருகூஃவில் .ருந்து எழும் போது

4-முதல் அத்தஹியாத்திலிருந்து எழும்பும் போது

8-ரக்அத்தை அடைந்து கொள்ளல்.

மஃமூம் இமாமுடன் ருகூ.வை அடைந்து கொண்டால் அவர் அந்த ரக்அத்தை அடைந்து கொள்வார். நபியவர்கள் கூறினார்கள் «யார் ருகூஃவை அடைந்து கொள்கிறாரோ அவர் தொழுகையின் ரக்அத்தை அடைந்து கொண்டவராவார்» (ஆதாரம் அபூதாவுத்)

9- அமைதியை பேணல்

தொழுகையில் அமைதியைப் பேணுவது ருகூன் ஆகும். அமைதியை பேணாத தொழுகை பூரணத்துவமடையாது. அபூ ஹூறைறா ரழி அறிவிக்கின்றார்கள்«நபி (ஸல்) அவர்கள் (மஸ்ஜிதுந் நபவீ) பள்ளிவாசலுக்கு வந்தார்கள். அப்போது ஒரு மனிதர் பள்ளிவாசலுக்கு வந்து (அவசரமாக அவசரமாக) தொழலானார். (தொழுது முடித்ததும்) அவர் வந்து அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு சலாம் சொன்னார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பதில் சலாம் சொல்லிவிட்டு நீர் திரும்பச் சென்று தொழுவீராக. ஏனெனில், நீர் முறையாகத் தொழவில்லை என்று சொன்னார்கள்.

அந்த மனிதர் திரும்பிப்போய் முன்பு தொழுததைப் போன்றே மீண்டும் தொழுதுவிட்டு நபி (ஸல்) அவர்களிடம் வந்து சலாம் சொன்னார். அப்போதும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் வ அலைக்கஸ் ஸலாம் (உன் மீதும் சாந்தி நிலவட்டும்) என்று பதில் சலாம் சொல்லிவிட்டு, நீர் (முறையாகத்) தொழவில்லை. எனவே, திரும்பச் சென்று தொழுவீராக என்று கூறினார்கள். இவ்வாறு மூன்று தடவை நடந்தது. பிறகு அந்த மனிதர் சத்திய (மார்க்க) த்துடன் தங்களை அனுப்பியவன் மீதாணையாக! இதைவிடச் சிறந்த முறையில் எனக்குத் தொழத் தெரியாது. எனவே, எனக்கு (தொழுகை முறையை)க் கற்றுத்தாருங்கள் என்று கேட்டார்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், நீர் தொழுகைக்கு நின்றதும் (அல்லாஹு அக்பர் என்று) தக்பீர் கூறுவீராக. பிறகு குர்ஆனில் உமக்குத் தெரிந்ததை ஓதிக்கொள்வீராக. பிறகு (குனிந்து) ருகூஉச் செய்வீராக. அதில் (சற்று நேரம்) நிலைகொள்வீராக. பின்னர் தலையை உயர்த்தி நேராக நிற்பீராக. பிறகு சிரவணக்கம் (சஜ்தா) செய்வீராக. அதில் சற்று நேரம் நிலைகொள்வீராக. பின்னர் தலையை உயர்த்தி (சற்று நேரம்) நன்றாக அமர்வீராக. பிறகு இதே (நடை)முறையை உமது தொழுகை முழுவதிலும் கடைப்பிடிப்பீராக என்று சொன்னார்கள்». (ஆதாரம் புஹாரி)

10-நாவை அசைத்தல்

உள்ளத்தால் குர்ஆன் ஓதுதல், தக்பீர் கூறுதல், துஆக்கள் ஓதுதல் போன்றவைகளை மொழிவது மாத்திரமல்லாமல் நாவையும், உதடுகளையும் குறைந்து அசைக்க வேண்டும். .

11-ஸூஜூதின் உறுப்புக்கள்

ஸஜதாவுடைய உறுப்புக்கள் ஏழாகும். நபியவர்கள் கூறினார்கள் «ஓர் அடியான் சுஜூது செய்யும் போது ஏழு உறுப்புக்கள் (நிலத்தில் படுகின்றன). அவை – அவனுடைய முகம், அவனுடைய இரு உள்ளங்கை, அவனுடைய இரு முட்டங்கால், அவனுடைய இரு பாதங்கள். ஆகும்» (புஹாரி முஸ்லிம்)

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta



12- விரல்காளால் சுட்டிக் காட்டுதல்

அத்தஹியாத்தில் விரலசைப்பது சுன்னாவாகும். வாயில் இப்னு ஹுஜ்ர் ரழி அறிவிக்கின்றார்கள் «நபியவர்களுடைய விரல் ஒருவரை அழைப்பது போல் அசைவதை கண்டேன்»(ஆதாரம் நஸாஈ)

அவசியமில்லை

-நீயத்தை வெளிப்படுத்துவது அவசியமில்லை. அதே போல தக்பீரதுல் இஹ்றாம் உடன் சேர்த்து நீய்யதை கூறுதல் என்ன கூற்று அவசியமில்லாதது.

-((சுக்ரன்)) போன்ற சில சொற்களை அதிகரித்தல். ((ரப்பனா வலகல் கம்த்)). இவைகளுக்கு நபியவர்களை தொட்டும் உறுதியான செய்திகள் இல்லை.

-அத்தஹிய்யாதில் ((ஸய்யதினா)) என்று அதிகமாக சொல்லுதல்,

-ஸலாம் கொடுக்கும் போது வலது கையை வலது பக்கமும், இடது கையை இடது பக்கமும் அசைத்தல்.

-ஒருவருக்கு ஒருவர் தங்களிடையே ஹர்மன் என்பதும் மற்றவர் ஜம்அன் என்பது. அது போன்றன.

-தொழுகையின் பின்னர் சிலர் ஆயதுல் குர்ஸி ஓதலும் பின்னர் – ஸூபஹான அல்லாஹி பயுஸப்பிஹூன் என்பது.

-திக்ர், துஆ போன்ற செய்த பின் மஸ்ஹ் செய்தல்.

www.al-feqh.com/ta

8 தொழுகையின் ருகூன்கள், வாஜிப்கள், சுன்னத்கள்

பொருளடக்கம்

தொழுகையின் ருகூன்கள்

தொழுகையின் வாஜிப்கள்

தொழுகையின் சுன்னத்கள்

சுன்னத்தான சொற்கள்

சுன்னத்தான செயல்கள்

முதலாவது - தொழுகையின் ருகூன்கள்

தொழுகையின் ருகூன்கள்

இவற்றின் மீதே தொழுகை நிறுவப்பட்டுள்ளது. அதனை எந்த நிலையிலும் அதனை விடுவது கூடாது. இயலாமுடைய நேரத்தை தவிர ஏனைய நேரத்தில் மறதியாகவோ, வேண்டுமென்றோ விடுவது கூடாது.

1-எண்ணம்

2-பர்ளான தொழுகைக்கு எழுந்து நிற்றல்

3-ஆரம்ப தக்பீர்

4-பாத்திஹா ஓதுதல்

5-ருகூஃ

6-ருகூஃவில் இருந்து நிலைக்கு வருதல்

7-ஏழு உறுப்புக்களை கொண்டு ஸஜ்தா செய்தல்

8-இரண“டு ஸுஜூதுகளிடையே அமர்தல்

9-இறுதி அத்தஹியாத்தில் உட்காருதல்

10- இறுதி அத்தஹியாத்து ஓதுதல்

11- நபியவர்கள் மீது ஸலவாத்து கூறுதல்

12-ஸலாம் கூறுதல்

13-அனைத்திலும் அமைதியை பேணுதல்

14-முறைப்படி செய்தல்

ருகூனை விட்டவர் என்ன செய்ய வேண்டும்.?

1-வேண்டு மென்று விட்டால் தொழுகை பாதிலாகிவிடும். அவர் தொழுகையை மீட்டித் தொழ வேண்டும்.

2- மறதியாக விட்டால் அதற்கு இரு நிலைகள் உண்டு.

அ-ஒருவர் முதல் ரக்அத்தில் ஒரு ருக்னை விட்டார். அதனைஅவர் மறந்து விட்டார். பின்னர்இரண்டாவது ரக்அத்தில் அது ஞாபகம் வந்தால் அவர் அதனை மீண்டும் செய்ய வேண்டிய அவசியமில்லை. மேலும் இரண்டாம் ரக்அத்தை முதலாம் ரக்அத்தாக செய்து மறதிக்காக ஸுஜூது செய்ய வேண்டும்.

உதாரணம் – முதலாவது ரக்அத்தில் பாத்திஹா ஓத வில்லை என்பது இரண்டாவது ரக்அத்தில் ஞாபகம் வந்தால் முதலாவது ரக்அத்தை விட்டு விட்டு இரண்டாவது ரக்அத்தை முதலாவது ரக்அத்தாக கணக்கிட்டுக் கொள்வார்.

ஆ- இரண்டாவது ரக்அத்திற்கு முன்னர் முதலாவது ரக்அத்தில் ஒரு ருக்னை மறதியாக விட்டது ஞாபகம் வந்தால் , அப்போது அவர் மறதியாக விட்டதை உடனே மீண்டும் செய்ய வேண்டும்.

உதாரணம் – ஒருவர் ருகூஃ செய்ய மறந்து விட்டார். பின்னர் ஸுஜூத் செய்யும் போது ருகூஃ செய்யவில்லை என்பது ஞாபகம் வந்தால் உடனே அவர் மீண்டும் ருகூஃ செய்து தொழுகையை பூரணமாக செய்வார்

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

இரண்டாவது – தொழுகையின் வாஜிப்கள்

தொழுகையின் வாஜிப்கள்

மறதியால் ஸூஜூத் செய்ய முடியாத விடயங்கள்

1-தொழுகையின் ஒவ்வொரு நிலையிலும் தக்பீர் கூறல்

2- ருகூஃவில் " ஸூபஹான ரப்பில் அழீம்" என கூறல்

3-இமாமும், தனியாக தொழுபவரும் " ஸமியல்லாஹூ லிமன் ஹமிதா" என கூறல். அது மஃமூன்களுக்கு கடமையில்லை.

4-ருகூஃவில் இருந்து எழும்பும் போது " ரப்பனா லகல் கம்து" என கூற வேண்டும்.

5- ஸூஜூதின் போது " ஸூபஹான ரப்பில் அஃலா" என கூற வேண்டும்.

6- ஸஜதாக்களுக்கிடையில் " ரப்பிஃபிர்லி" என கூற வேண்டும்.

7-முதலாவது அத்தஹியாத்திற்காக உட்காருதல்

8-முதலாவது அத்தஹிய்யாத்.

https://www.al-feqh.com/ta

மூன்றாவது – தொழுகையின் சுன்னத்கள்

தொழுகையின் நிபந்தனைகள், ருகூன்கள், வாஜிப்கள் தவிர்ந்த ஏனையவைகள் சுன்னத்கள் ஆகும். அதவை விடுவது தொழுகையில் தாக்கத்தை செலுத்தாது. அதனை விட்டால் மறதிக்காக ஸுஜூத் செய்ய தேவையில்லை.

சுன்னத்கள் இரண்டு வகைப்படும்.

முதலாவது சொல் ரீதியான சுன்னத்கள்

1- ஆரம்ப துஆ – இது பாத்திஹாவிற்கு முன்னர் ஓதும் துஆவாகும்.

2- அஊது கூறல் - " அஊதுபில்லாஹி மினஸ் ஷைதானிர் ரஜீம்"

3- பிஸ்மி கூறல் " பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்"

4- ருகூஃ, ஸுஜூதில் மேலதிகமாக கேட்கப்படும் தஸ்பீஹ்கள்

5- ஸஜதாவிற்கு இடையில் கேட்கப்பட்டும் ரப்பிஃபிரிலி" துஆவை அதிகமாக கேட்டல்

6- ருகூஃவில் இருந்து எழும்பும் போது ரப்பனா லகல் கம்து" என்பதை அதிகமா கேட்டல்.

7- பாத்திஹாவிற்கு பிறகு ஓதப்படும் சூறாக்களை அதிகரித்தல்.

இரண்டாவது – செயல் ரீதியாக சுன்னத்கள்.

அவை –

1- ஆரம்ப தக்பீருக்காக கையை உயர்த்துதல் அதே போன்று ருகூஃ, அதிலிருந்து எழும்புதல், இரண்டாவது ரக்அத்திற்காக எழும்புதல் போன்ற சந்தர்ப்பங்களில் கையை உயர்த்துதல்.

2- ருகூஃவிற்கு முன்னும் பின்னும் இடது கரத்தின் மீது வலது கரத்தை வைத்தல்.

3- ஸுஜூத் செய்யும் இடத்தை பார்த்தல்.

4- ஸுஜூதின் போது வயிற்றிலிருந்து கைகளை தள்ளி வைத்தல்.

5- இப்திராஷ் - இடக்காலை விரித்து வலக்காலை நட்டி உட்காருவார். பின்னர் கிப்லாவை நோக்கி தனது விரலை விரித்தவராக அவரது தொடையில் வைப்பார். அத்தஹியாத்தை தவிர அனைத்து இருப்பிலும் இவ்வாறே இருக்க வேண்டும்.

6- தவருக் என்பது – வலது காலை நட்டி வைத்து இடது காலை வலக்காலுக்கு கீழால் வெளிப்படுத்தி வைப்பதை குறிக்கும். இரண்டிற்கு அதிகமான ரக்அத்தில் தவர்ருக்கில் அமர்வது சுன்னத்தாகும்.

இப்திராஸ்

தவருக்

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

தொழுகையில் வாஜிபை விட்டால் என்ன செய்ய வேண்டும்.?

தொழுகையில் வாஜிபை விட்டால் என்ன செய்ய வேண்டும்.?

1- வேண்டு மென்று விட்டால் தொழுகை பாதிலாகும். அவர் தொழகையை மீட்டித் தொழ வேண்டும்.

2- மறதியாக விட்டால் அவருடைய தொழுகை கூடும். இரண்டு ஸஜதாக்கள் மறதிக்காக செய்ய வேண்டும்.

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

9 தொழுகையில் ஆகுமான, வெறுக்கத்தக்க செயற்பாடுகள்

பொருளடக்கம்

தொழுகையில் ஆகுமானவைகள்
தொழுகையில் வெறுக்கத்தக்கவைகள்
தொழுகையை முறிப்பவைகள்

www.al-feqh.com/ta

முதலாவது - தொழுகையில் ஆகுமானவை

01- தொழுகையில் கிப்லாவை மாற்றாத வகையில் தேவைகளுக்காக நடப்பது கூடும். உதாரணமாக கிப்லா திசையில் உள்ள கதவை திறப்பதை போன்று..

02- தொழுகையில் பிள்ளைகளை சுமந்திருத்தல்

03- பாம்பு, தேளை கொல்வது

04- அவசியம் ஏற்படின் திரும்புதல்

05- தொழுகையில் அழுதல்

06- தவறு ஏற்பட்டால் ஆண்கள் தஸ்பீஹ் செய்வது, பெண்கள் கை தட்டுவது.

07- இமாம் விடும் தவறை திருத்துதல்.

08- தொழுகையில் கையால் அல்லது விரலால் ஸலாத்திற்கு சைகை மூலம் பதில் கூறல். (கையின் உட்பகுதியை பூமியின் பக்கமும், வெளிப்பகுதியை மேல் அசைத்தும் காட்டுதல்)

09- அவசியமான சந்தர்ப்பங்களில் தொழுபவருக்கு விளங்கும் வண்ணம் செய்கையில் கூறுதல்.

10- புகழுக்குரிய தேவை ஏற்படின் அல்லாஹ்வை புகழ்தல்.

11- எச்சில், மூக்கு சிந்துவது இடது பக்கம் செய்ய வேண்டும்.

12- தொழுகையாளிக்கு இடையில் நடப்பவர்களை தடுத்தல்.

இரண்டாவது – தொழுகையில் தடுக்கப்பட்டவைகள்

1- சிந்தனையை பராக்காக்க கூடிய செயற்பாடுகளை எண்ணியவராக தொழுதல். உதாரணமாக மலசலத்தை அடக்கியவராக, அல்லது பசி, தாகத்தின் நிலையில், அல்லது சாப்பாடு தயாரான நிலையில் அல்லது தொழுகையை திசை திருப்பும் வகையில் பார்த்தல் போன்றன.

2- அவசியமற்ற செயற்பாடுகள், - தொழுகையில் பயபக்தியை இல்லாமல் செய்யக் கூடிய செயற்பாடுகளை செய்தல். உதாரணமாக தேவையின்றி அசைதல், தாடியை, கைக்கடிகாரத்தை, ஆடை, தலைப்பாகையை அசைத்தல். விரல் நெட்டி முறித்தல், கோர்வை செய்தல் போன்ற செயற்பாடுகள்

3- அவசியமின்றி தொழுகையில் திரும்புதல்.

4- இடுப்பு – இடுப்பின் கையை வைத்து தொழுதல். அது மனிதனுடைய இடுப்புப் பகுதியை குறிக்கின்றது. இன்னும் அது யூதர்களுடைய செயற்பாடாகும்.

https://www.al-feqh.com/ta

மூன்றாவது – தொழுகையை முறிப்பவைகள்

1- தொழுகையின் நிபந்தைகளை இல்லாமல் செய்பவைகள். உதாரணமாக, சுத்தத்தை முறிக்கக் கூடியவைகள். வேண்டுமென்று அவ்றத்தை வெளிப்படுத்துவது, உடல் முழுவதையும் கிப்லாவை விட்டு திருப்புதல். அல்லது நீய்யத்தை துண்டித்தல்.

2- வேண்டுமென்று வாஜிப், ருகூனை விடுதல்.

3- தொழுகை அல்லாத ஏனைய செயற்களை அதிகமாக செய்தல். உதாரணம் நடத்தல், அதிகமாக அசைதல்

4- சிரித்தல்

5- வேண்டு மென்று பேசுதல்

6- வேண்டு மென்று உண்ணல், பருகல்

7- வேண்டு மென்று ரக்அத்தை, ருக்னை அதிகரித்தல்

8- இமாமுக்கு முன்னால் மஃமும் வேண்டு மென்று ஸலாம் கொடுத்தல்.

5- தொழுகையில் வாய், மூக்கை மூடுதல்.

6- ஆடைகள், பட்டுன்களை சரி செய்தல்

7- தலைமுடிகளை கோர்தல், பின்னால் கையை கட்டுதல், மேலும் அவர் ஸூஜூது செய்தால் அவருடைய முடி நெற்றியை மறைக்காமல் இருக்க வேண்டும்.

8- கிப்லாவை நோக்கி அல்லது வலதுபக்கம் மூக்கு சிந்துதல்.

9- வானத்தின் பக்கம் பார்வையை உயர்த்துதல்.

10- தேவையின்றி கண்களை மூடுதல்

11- அளவு கடந்து கைகளை ஸூஜூதில் விரித்தல்.

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

10 மறதிக்கான, நன்றிக்கான, திலாவத் ஆகியவற்றிற்கான ஸுஜூத்

பொருளடக்கம்

- மறதிக்கான ஸுஜூத் /
- மறதிக்கான ஸுஜூதின் வரைவிலக்கணம் /
- மறதிக்கான ஸுஜூத் செய்வதற்கான காரணங்கள்
- மறதிக்கான ஸுஜூத் செய்யும் முறை /
- நன்றிக்கான ஸுஜூத் /
- நன்றிக்கான ஸுஜூதின் வரைவிலக்கணம்
- நன்றிக்கான ஸுஜூத் செய்யும் முறை /
- அல்குர்ஆன் ஓதும் போது ஸஜதாவுடைய வசனத்தில் செய்யப்படும் ஸுஜூத் /
- அல்குர்ஆன் ஓதும் போது ஸஜதாவுடைய வசனத்தில் செய்யப்படும் ஸுஜூதின் வரைவிலக்கணம்
- அல்குர்ஆன் ஓதும் போது ஸஜதாவுடைய வசனத்தில் செய்யப்படும் ஸுஜூத் தொழும் முறை
- ஸஜதாவுடைய வசனங்கள்

முதலாவது - மறதிக்கான ஸுஜூத்

மறதிக்கான ஸுஜூத்

இரண்டு ஸஜதாக்கள் அவை இரண்டையும் தொழுபவர் செய்வார். தொழுகையில் மறதி காரணமாக செய்யப்படும் செயற்பாடாகும்.

மறதிக்கான ஸுஜூத் செய்வதற்கான காரணங்கள்

மறதிக்கான ஸுஜூத் செய்வதற்கான காரணங்கள் மூன்றாகும். அவை – சந்தேகம், கூட்டல், குறைத்தல்

1-சந்தேகம்

சந்தேகம்

இரண்டில் எது நடந்தது என சந்தேகம் ஏற்படுவது.

தொழுகையில் ஏற்படும் சந்தேகம் இரண்டு வகைப்படும்.

1-தொழுகைக்கு பின்னரான சந்தேகம்.

இது கவனிக்க வேண்டிய சந்தேகம் கிடையாது.

உதாரணமாக - ஒருவருக்கு சுபஹ் தொழுத பின்னர் அவர் இரண்டு ரக்அத் அல்லது மூன்று ரக்அத் தொழுதாரா? என்ற சந்தேகம் ஏற்படின் இதை கணக்கெடுக்க வேண்டிய சந்தேகம் கிடையாது. அப்போது அவருக்கு எது உறுதியாக தோன்றுமே அதனை எடுக்க வேண்டும்.

2-தொழுகையில் ஏற்படும் சந்தேகம்.

இந்த சந்தேகத்திற்கு இரண்டு நிலைகள் இருக்கின்றன.

(அ) இரண்டில் ஒன்று உறுதியாகுதல்.

இரண்டில் ஒன்று என உறுதியானால் ஸலாம் கொடுத்த பின்னர் மறதிக்கான ஸுஜூத் செய்வார்.

உதாரணம் – ஒருவர் ழுஹர் தொழுகிறார். அப்போது அது இரண்டாவது ரக்அத்தா? அல்லது மூன்றாவது ரக்அத்தா? என சந்தேகம் ஏற்படுகிறது. என்றாலும் அது மூன்றாவது என அவர் உறுதியாக

https://www.al-feqh.com/ta

எண்ணுகிறார். அப்போது அவர் அதனை மூன்றாக எடுத்துக் கொள்வார். அவ்வாரே தொழுகையை பூர்த்தி செய்வார். பின்னர் ஸலாம் கொடுத்த பின்பு இரண்டு ஸஜ்தா செய்வார். நபியவர்கள் கூறினார்கள் «உங்களில் ஒருவருக்கு தொழுகையில் சந்தேகம் ஏற்பட்டால் அவருக்கு உறுதியானதை எடுத்துக் கொள்ளட்டும். பின்னர் ஸலாம் கொடுக்கட்டும். அதன் பின்னர் இரண்டு ஸஜதாக்கள் செய்யட்டும். » (ஆதாரம் இப்னு ஹிப்பான்)

ஸலாம் கொடுத்தல் — மறதிக்கான ஸஜதா செய்தல்

(ஆ) இரண்டில் ஒன்று உறுதியாகாமல் இருத்தல்.

அதில் குறைவான எண்ணிக்கையை எடுத்துக் கொள்வார். பின்னர் தொழுகையை பூர்த்தி செய்து ஸலாம் கொடுப்பதற்கு முன்னர் இரண்டு ஸஜதாக்கள் செய்ய வேண்டும்.



மறதிக்கான ஸஜதா செய்தல் — ஸலாம் கொடுத்தல்

www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

உதாரணமாக- ஒருவர் ழுஹர் தொழுகிறார். அப்போது அது இரண்டாவது ரக்அத்தா? அல்லது மூன்றாவது ரக்அத்தா? என சந்தேகம் ஏற்படுகிறது. அதில் அவருக்கு உறுதியாக எது என தெரியவில்லை? அப்போது அவர் குறைவானதாக உள்ள இரண்டாவதை எடுத்துக் கொள்வார். பின்னர் தொழுகையை பூர்த்தி செய்து ஸலாம் கொடுப்பதற்கு முன்னர் இரண்டு ஸஜதாக்கள் செய்ய வேண்டும்.

நபியவர்கள் கூறினார்கள் «உங்களில் ஒருவருக்கு தொழுகையில் சந்தேகம் ஏற்பட்டால் அவருக்கு மூன்றாவதா? அல்லது நான்காவதா? என்பதில் உறுதியில்லை எனின். சந்தேகத்தை விட வேண்டும். பின்னர் உறுதியானதை எடுக்க வேண்டும். ஸலாம் கொடுப்பதற்கு முன்னர் இரண்டு ரக்அத் ஸுஜூத் செய்யட்டும். »(ஆதாரம் முஸ்லிம்)

2-அதிகரித்தல்

தொழுவர் தொழுகையில் ருகூஃவையோ, ஸுஜூதையோ அதிகரித்தல். இதற்கு இரு நிலைகள் உள்ளன.

1-அது தொழுகையின் போது ஞாபகம் வந்தால்

இதிலிருந்து அவர் மீள வேண்டும். பின்பு தொழுகையை பூரணமாக செய்து, பின்னர் ஸலாம் கொடுத்த பின்பு இரண்டு ஸஜ்தா செய்வார்.

உதாரணமாக – ஒருவர் ழுஹர் தொழும் போது ஐந்தாவது ரக்அதிற்காக எழுப்வி விட்டார் எனின் அவர் உடனே அத்தஹியாத்து இருப்பிற்கு வர வேண்டும். பின்னர் ஸலாம் கொடுத்த பின்பு இரண்டு ஸஜ்தா செய்வார்.

2-தொழுகையின் பின்னர் ஞாபகம் வந்தால்

இதன் போது தொழுகையை பூரணமாக செய்து, பின்னர் ஸலாம் கொடுத்த பின்பு இரண்டு ஸஜ்தா செய்வார். இப்னு மஸ்ஊத் ரழி அறிவிக்கின்றார்கள். «நபி(ஸல்) அவர்கள் லுஹரில் ஐந்து ரக்அத்கள் தொழுதார்கள். உடனே அவர்களிடம் தொழுகை அதிகமாக்கப்பட்டுவிட்டதா? என்று கேட்கப்பட்டது. அதற்கு நபி(ஸல்) அவர்கள் 'என்ன விஷயம்?' எனக் கேட்டார்கள். 'நீங்கள் ஐந்து ரக்அத்கள் தொழுகை நடத்தினீர்கள்' என ஒருவர் கூறினார். நபி(ஸல்) அவர்கள் ஸலாம் கொடுத்ததற்குப் பின்னர் இரண்டு ஸஜ்தாச் செய்தார்கள்»(ஆதாரம் புஹாரி)

3-குறைத்தல்

தொழுகையின் ருகூன், வாஜிப்களின் ஏதாவது ஒன்றை குறைப்பதை இது குறிக்கின்றது.

1-ருகூனை குறைத்தல்.

அந்த ருக்குன் ஆரம்ப தக்பீராக இருப்பின் அத் தொழுகை பாத்திலாகும். ஏனனெனில் அடிப்படையே பூரணமாகவில்லை. ஆரம்ப தக்பீர் தவிர்ந்த ஏனைய ருகூன்கள் எனின் அதற்கு இரண்டு நிலைகள் உண்டு.

(அ) அடுத்த ரக்அத்தில் அது ஞாபகம் வந்தால்

தவறவிடப்பட்ட ருகூன் கணக்கிடப்பட மாட்டாது. அடுத்த ரக்அத்தில் அது பூரணமடையும்.

உதாரணம் - முதலாவது ரக்அதில் ஒருவர் ருகூவை தவற விட்டார். அது இரண்டாம் ரக்அத்தில் ஞாபகம் வந்தால் முன்னர் தவற விடப்பட்ட ரக்அத்தை மீள செய்ய வேண்டியதில்லை. இதன் போது தொழுகையை பூரணமாக செய்து, பின்னர் ஸலாம் கொடுத்த பின்பு இரண்டு ஸஜ்தா செய்வார்.

ஸலாம் கொடுத்தல் — மறதிக்கான ஸஜதா செய்தல்

(அ) அடுத்த ரக்அத்திற்கு செல்வதற்கு முதல் ஞாபகம் வந்தால்

அப்போது அவர் விட்ட ருகூனை திரும்ப செய்ய வேண்டும். பின்னர் தொழுகையை பூரணமாக செய்து, ஸலாம் கொடுத்த பின்பு இரண்டு ஸஜ்தா செய்வார்.

உதாரணம் – ஒருவர் ஒரு ரக்அத்தில் ஸுஜூதையும் அதில் நடு அமர்வையும் விட்டார். அடுத்த ரக்அதின் ருகூஃவின் போது அது ஞாபகம் வந்தால் அவர் மீண்டும் விட்டதை தொடர வேண்டும். பின்னர் தொழுகையை பூரணமாக செய்து, ஸலாம் கொடுத்த பின்பு இரண்டு ஸஜ்தா செய்வார்.

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

2-வாஜிபை குறைத்தல்.

தொழுபவர் வாஜிபை விட்டால் அதற்கு மூன்று நிலைகள் உள்ளன.

(அ) வாஜிபை விட்ட இடத்திருந்து எழும்பும் போது அது ஞாபகம் வந்தால்

அப்போது அந்த இடத்திற்கு அவர் வருவார். அதன் பின்னர் எதுவும் செய்யவேண்டியதில்லை.

(ஆ) வாஜிபை விட்ட இடத்திருந்து எழும்பிய பின்னர் அது அடுத்த ருகூனுக்கு முன்னதாகவே ஞாபகம் வந்தால்

அப்போது அவர் விட்ட வாஜிபை செய்ய வேண்டும். பின்னர் தொழுகையை பூரணமாக செய்து, ஸலாம் கொடுத்த பின்பு இரண்டு ஸஜ்தா செய்வார்.

(இ) வாஜிபை விட்ட இடத்திருந்து எழும்பிய பின்னர் அது அடுத்த ருகூனுக்கு பின்னதாகவே ஞாபகம் வந்தால்

இப்போது அவர் தொழுகையை தொடரவேண்டும். விட்டதை திரும்ப செய்யத் தேவையில்லை. ஸலாம் கொடுப்பதற்கு முன்னர் மறதிக்கான ஸஜதா செய்ய வேண்டும்.

உதாரணமாக – ஒருவர் தொழுகையில் இரண்டாவது ரக்அதில் இரண்டாவது ஸுஜூத் செய்து முதல் மறதியாக அத்தஹியாதில் இருக்காமல் எழும்புகிறார். இப்போது அது ஞாபகம் வந்தால் அப்போது அவர் அத்தஹியாத்திற்காக உட்கார்ந்து கொள்வார். பின்னர் தொழகையை பூரணமாக செய்வார்.

எழும்புவதற்கு முன்னர் ஞாபகம் வந்தால் அப்போது அமர்ந்து அத்தஹியாத்தில் இருப்பார். பின்னர் தொழுகையை பிரணத்துவப்படுத்தி ஸலாம் கொடுத்த பின்னர் இரண்டு மறதிக்கான ஸஜதா செய்ய வேண்டும்.

எழும்பிய பின்னர் ஞாபகம் வந்தால் அத்தஹிய்யாத் நீங்குவதோடு, அவர் ஸலாத்தை பூரணத்துவப்படுத்தி ஸலாம் கொடுக்க முன்னர் மறதிக்கான ஸஜதா செய்ய வேண்டும். அப்துல்லாஹ் இப்னு புஹைனா(ரலி) அறிவித்தார். « நபி(ஸல்) அவர்கள் ஒரு முறை லுஹர் தொழுகை நடத்தினார்கள். அப்போது இரண்டாம் ரக்அத்தில் உட்காரமலே எழுந்துவிட்டார்கள். மக்களும் அவர்களுடன் எழுந்துவிட்டார்கள். தொழுகையை முடிக்கும் தருணத்தில், நபி(ஸல்) அவர்கள் ஸலாம் கொடுக்கப் போகிறார்கள் என்று மக்கள் எதிர்பார்த்திருந்தபோது,உட்கார்ந்த நிலையிலேயே தக்பீர் கூறினார்கள். ஸலாம் கொடுப்பதற்கு முன் இரண்டு ஸஜ்தாக்கள் செய்துவிட்டுப் பின்னர் ஸலாம் கொடுத்தார்கள்» (ஆதாரம் புஹாரி) நாம் முன்னர் பார்த்தவைகள் அனைத்தும் மறதிக்கான ஸுஜூத் என்பது ஸலாம் கொடுப்பதற்கு முன்னும், பின்னும் செய்யலாம்.

https://www.al-feqh.com/ta



மறதிக்கான ஸுஜூதின் இடம்

ஸலாம் கொடுத்த பின்னர்	ஸலாம் கொடுப்பதற்கு முன்னர்
(அ) அதிகரிக்கும் போது (ஆ) சந்தேகத்தின் போது இரண்டில் ஒன்று உறுதியாக இருத்தல். (இ) ருக்னை விட்டு அடுத்த ரக்அத்திற்கு செல்வதற்கு முன்னதாகவே ஞாபகம் வந்தால் (ஈ) வாஜிபை விட்ட இடத்திலிருந்து எழும்பிய பின்னர் அதை அடுத்த ரக்அத்திற்கு பின்னதாக ஞாபகம் வந்தால்	(அ) வாஜிபை விட்ட இடத்திலிருந்து எழும்பிய பின்னர் அதை அடுத்த ரக்காத்துக்கு பின்னதாகவே ஞாபகம் வந்தால் (ஆ) சந்தேகத்தின் போது இரண்டில்

மறதிக்கான ஸுஜூத் செய்யும் முறை

தொழுகையில் ஸுஜூது செய்வதை போன்றே மறதிக்கான ஸுஜூத் செய்ய வேண்டும். இதில் தக்பீர் சொல்லியே ஸுஜூத், அதிலிருந்து எழும்புதல் ஆகியவற்றை செய்ய வேண்டும். அதிலே தொழுகையில் ஸுஜூதில் என்ன கூறுகின்றோமோ அதனையே கூற வேண்டும்.

கேள்வி

1- ஒருவர் தொழுகையை பூரணப்படுத்துவதற்கு முன்னர் ஸலாம் கூறி விட்டு நீண்ட நேரத்திற்கு பின்னர் அது அவருக்கு ஞாபகம் வருமேயானால் அவர் புதிதாக தொழுகையை மீட்டித் தொழுவார். இன்னும் இரண்டு, மூன்று நிமிடங்களில் அவருக்கு ஞாபகம் வந்தால் அவர் தொழுகையை பூர்த்தி செய்து தொழுகைக்கு பின்னால் மறதிக்கான ஸஜதா செய்வார்.

2- மஃமூம்கள் மறதிக்கான ஸுஜூதின் போது இமாமை பின்தொடர்வது வாஜிபாகும். அவர் மறதி நடந்த பின்னர் இமாமோடு சேர்ந்து கொண்டாலும் சரியே

3- மறதிக்கான ஸஜதாக்கள் ஒரே நேரத்தில் வருகிறது. அதில் ஒன்று ஸலாம் கொடுப்பதற்கு முன்னரும், அடுத்து ஸலாம் கொடுத்த்திற்கு பின்னரும் என்றால் இரண்டிற்கும் சேர்த்து ஒன்றாக ஸலாம் கொடுப்பதற்கு முன்னர் மறதிக்கான ஸஜதா செய்வார்.

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

ஆரம்ப தக்பீர்

மறதிக்கான ஸஜதா

நன்றிக்கான ஸஜதா

நன்றிக்கான ஸஜதா

இது அல்லாஹ்வின் அருள் அல்லது தீங்கு தடுபட்டு விட்டால் அல்லாஹ்விற்கு நன்றி செய்வதற்காக செய்யப்படும் ஸூஜூத் ஆகும்.

நன்றிக்கான ஸூஜூதிற்குரிய மார்க்க ஆதாரம். அபீபக்ரா ரழி அவர்கள் அறிவிக்கின்றார்கள் «நபியவர்கள் சந்தோசமான செய்தி அல்லது நற்செய்தி கிடைக்கப் பெற்றால் அல்லாஹ்வுக்கு நன்றி கூறியவர்களாக ஸூஜூது செய்தார்கள்» (1- ஆதாரம் அபூதாவுத்)

மறதிக்கான ஸூஜூத் செய்யும் முறை

இதனை நிறைவேற்ற வுழு அவசியமில்லை. அப்போது தக்பீர் கூறியவராக ஸூஜூத் செய்வார். பின்னர் «சுபஹான ரப்பில் அஃலா»என கூற வேண்டும். அவருக்கு கிடைத்த அருட்கொடைக்காக நன்றி கூறுவார். பின்னர் தக்பீர் கூறாமல் எழும்புவார். அதில் ஸலாம் கொடுக்க கூடாது.

(குர்ஆன் ஓதும் வேளை) ஸஜதாவுடைய வசனத்தின் போது செய்யும் ஸஜதா

(குர்ஆன் ஓதும் வேளை) ஸஜதாவுடைய வசனத்தின் போது செய்யும் ஸஜதா

குர்ஆன் ஓதும் வேளை ஸஜதாவுடைய வசனத்தின் போது செய்யும் ஸஜதா

இதற்கான ஆதாரம். «இப்னு உமர்(ரலி) அறிவித்தார்.

நபி(ஸல்) அவர்கள் ஸஜ்தாச் செய்யும் வசனத்தை எங்களுக்கு ஓதிக் காட்டும்போது அவர்கள் ஸஜ்தாச் செய்வார்கள். எங்களுக்கு நெற்றியை வைக்க இடமில்லாத அளவுக்கு நாங்கள் அனைவரும் ஸஜ்தாச் செய்வோம்»(ஆதாரம் புஹாரி)

தொழுகையில் ஓதுபவர் ஸஜதாவுடைய வசனத்தின் போது ஸஜதா செய்ய வேண்டும். அது வெளிப்படையான அல்லது உள்ரங்கமான தொழகையாக இருப்பினும் சரியே!. அதற்கு வுழுச் செய்ய வேண்டும் என்ற அவசியம் கிடையாது.

ஸஜதாவுடைய வசனத்தின் போது செய்யும் ஸஜதா செய்யும் முறை

ஓதுபவர் அல்லது கேட்பவர் தக்பீர் கூறியவராக ஸஜதா செய்வார். அப்போது «ஸூபஹான ரப்பில் அஃலா» என கூற வேண்டும். அதில்

«ஸஜத வஜ்ஹி லில்லதி கலகஹூ வஷக ஸம்அகு வபஸரகு, பிகவ்லிஹி, வகுவ்வதிஹி" 129, "அல்லாஹூம்ம அக்துப் லி பிஹா இத்தக அஜ்ரன், வழஅ அன்னி பிகா வஸ்ரன், வஜ்அல்லஹா லி இன்தக தஹ்ரன், தகப்பல்ஹா மின்னி கமா தகப்பல்துஹா மின் அப்திக தாவூத்» (ஆதாரம் திர்மிதி).

-அவர் தொழுகையில் இருந்தால் தக்பீர் கூறி ஸூஜூதிலிருந்து எழும்புவார். அது அல்லாத போது தக்பீரும், ஸலாமும் இன்றி எழும்புவர்.

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

ஸஜதாவுடைய வசனம் இடம் பெறும் சூறாக்கள்

- சூரத்து ரஃத் - வசனம் *(15)*	- சூரத்து மர்யம் - வசனம் *(58)*
- சூரத்து இஸ்ரா - வசனம் *(107)*	- சூரத்து ஹஜ் - வசனம் *(77)*
- சூரத்து ஹஜ் - வசனம் *(18)*	- சூரத்து நம்ல் - வசனம் *(25)*
- சூரத்து ஸஜதா - வசனம் *(15)*	- சூரத்து ஷாத் - வசனம் *(24)*
- சூரத்து புஸ்ஸிலத் - வசனம் *(37)*	- சூரத்து நஜ்ம் - வசனம் *(62)*
- சூரத்து இன்ஷிகாக் - வசனம் *(21)*	- சூரத்து அலக் - வசனம் *(19)*
- சூரத்து அஃராப் - வசனம் *(206)*	- சூரத்து அளவுகோல் - வசனம் *(60)*
- சூரத்து அந்நஹ்ல் - வசனம் *(49)*	

கேள்வி

1- வாகனத்தில் பிரயாணம் செய்பவர் ஸஜதாவுடைய வசனத்தை ஓதினால் அவர் வாகனத்தில் இருந்து இறங்கி ஸஜதா செய்ய வேண்டும். அதற்கு அது சிறம்மாக இருப்பின் தலையால் மேலிருந்து கீழ் இறக்கியவாறு ஸஜதா செய்வார்.

2- தொடர்ந்து ஸஜதாவுடைய வசனங்களை ஓதுபவராக இருந்தால் ஒரு தடவை ஸஜதா செய்தால் போதுமானது.

3- தொழுகை தடுக்கப்பட்ட நேரங்களில் கூட இதனை செய்வதில் தவறில்லை.

4- ஓதுபவர் ஸூஜூத் செய்யாது போனால் கேட்பவரும் ஸூஜூத் செய்ய தேவையில்லை. ஏனனில் கேட்பவர் ஓதுபவரையே பின் தொடர்வார்.

5- ஓதுகபரை கடந்து செல்வபர் ஸூஜூது செய்வது அவசியமில்லை. ஏனனில் அவர் ஓதுபவரை பின்தொடர வில்லை.

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

ஜமாஅத் தொழுகை

பொருளடக்கம்

- ஜமாஅத் தொழுகையின் சட்டம்
- ஜமாஅத் தொழுகையின் நுட்பமும் சிறப்பும்
- ஜமாஅத் தொழுகையின் சட்டம்
- சகோதரத்துவதின் வரைவிலக்கணம்
- நயவஞ்சகத்திலிருந்து தேவையற்றவராதல்
- முஸ்லிம்களின் சந்திப்பு
- முஸ்லிம்களின் ஒருமைப்பாடு
- மார்க்கத்தின் உணர்வுகளை வெளிப்படுத்தல்
- முஸ்லிம்களின் உள்ளங்களை ஒருமைப்படுத்தல்
- அல்லாஹ்வின் எதிரிகளின் கிண்டல்கள்
- பாவங்கள் நீங்குதல்
- ஜமாஅத் தொழுகை தனித்து தொழுவதை விட சிறந்தது

ஜமாஅத் தொழுகையின் சட்டம்

சக்தியுள்ள ஆண்களுக்கு ஜமாஅத் தொழுகையை இஸ்லாம் மார்க்கமாக்கியுள்ளது. அதனை விடுவதை பற்றி எச்சரித்துமுள்ளது. அதற்கு வராதவர்களை எரிப்பதற்கு கூட நபியவர்கள் நாடினார்கள். அதே போல கண் தெரியாதவர்களுக்கு கூட நபியவர்கள் அதனை விடுவதற்கு அனுமதியளிக்கவில்லை.

1- இதற்கு ஆதாரமாக அல்லாஹ் கூறுகிறான். {நபியே! போர் முனையில்) அவர்களுடன் நீர் இருந்து, அவர்களுக்கு தொழவைக்க நீர்(இமாமாக) நின்றால் அவர்களில் ஒரு பிரிவினர் தம் ஆயுதங்களைத் தாங்கிக் கொண்டு உம்முடன் தொழட்டும்}. [நிஸா – 102].

அல்லாஹ் அச்ச நேரத்திலும், பிரயாணத்திலும் இதனை செய்யுமாறு ஏவியுள்ளான்.

2- அபூ ஹுறைறா ரழி கூறினார்கள் நபியவர்கள் கூறினார்கள். «ஸுப்ஹு, இஷா ஆகிய தொழுகைகளை விட முனாஃபிக் (வேடதாரி)களுக்குப் பாரமான தொழுகை வேறு எதுவும் இல்லை. அந்த இரண்டு தொழுகைகளையும் (ஜமாஅத்தாகத்) தொழுவதிலுள்ளநன்மையைமக்கள் அறிவார்களானால் தவழ்ந்தாவது அத்தொழுகைக்கு வந்து சேர்ந்து விடுவார்கள். இகாமத் சொல்லுமாறு முஅத்தினுக்கு நான் கட்டளையிட்டுப் பின்னர் ஒருவரை இமாமாக நின்று தொழுகை நடத்துமாறு கூறி, அதன் பின்பு எவரேனும் தொழுகைக்கு வராமல் இருந்தால் அவர்களைத் தீயிட்டுக் கொளுத்த நான் நினைத்தேன்»(புஹாரி முஸ்லிம்)

தொழுகை வாஜிப் இல்லாதவர்களை நபியவர்கள் தீயிட நடவில்லை. மாறாக தொழுகை வாஜிபாகியும் வராத முனாபிகின்களையே நாடினார்கள்.

3- கண் தெரியாதவருடைய செய்தியில் நபியவர்கள் அவருக்கு வீட்டில் தொழ அனுமதித்தார்கள். பின்னர் நபியவர்கள் «தொழுகைக்கான அழைப்பை கேட்கிறீர்களா?».என கேட்டார். அதற்கு அவர் «ஆம்» என்றதும். அப்படியானால் அதற்கு «பதிலளிப்பீராக»(ஆதாரம் முஸ்லிம்)

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta





www.al-feqh.com

4- நாளை (மறுமை நாளில்) முஸ்லிமாக அல்லாஹ்வைச் சந்திக்க விரும்புபவர் «தொழுகைக்கு அழைக்கப்படும் இடங்களில் (பள்ளிவாசல்களில்) அவற்றைப் பேணி(த் தொழுது)வரட்டும். ஏனெனில்,அல்லாஹ் உங்கள் நபி (ஸல்) அவர்களுக்கு நேரிய வழிகளைக் காட்டியுள்ளான். (கூட்டுத்) தொழுகைகள் நேரிய வழிகளில் உள்ளவையாகும். கூட்டுத் தொழுகையில் கலந்துகொள்ளாமல் தமது வீட்டிலேயே தொழுதுகொள்ளும் இன்னாரைப் போன்று நீங்களும் உங்கள் வீடுகளிலேயே தொழுதுவருவீர்களானால் நீங்கள் உங்கள் நபியின் வழிமுறைகளைக் கைவிட்டவர் ஆவீர்கள். உங்கள் நபியின் வழிமுறையை நீங்கள் கைவிட்டால் நிச்சயம் நீங்கள் வழிதவறி விடுவீர்கள்.

அழகிய முறையில் நிறைவுற உளூச் செய்து, பின்னர் இப்பள்ளிவாசல்களில் ஒன்றை நோக்கி வருபவர் எடுத்துவைக்கும் ஒவ்வோர் அடிக்கும் அவருக்கு அல்லாஹ் ஒரு நன்மையை எழுதுகிறான்; ஒரு தகுதியை உயர்த்துகிறான்; அவருடைய பாவங்களில் ஒன்றை மன்னித்துவிடுகிறான். நான் பார்த்தவரை எங்களிடையே நயவஞ்சகம் அறியப்பட்ட நயவஞ்சகரைத் தவிர வேறெவரும் கூட்டுத் தொழுகையில் கலந்துகொள்ளாமல் இருந்ததில்லை. (எங்களில் நோயாளியான) ஒருவர், இருவரின் கைத்தாங்கலில் தொங்கியவாறு அழைத்துவரப்பட்டு (கூட்டுத்) தொழுகையில் நிறுத்தப்பட்டதுண்டு»(ஆதாரம் முஸ்லிம்)

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

ஜமாஅத் தொழுகையின் நுட்பமும், சிறப்பும்

1- அல்லாஹ்விற்காக நேசிக்க கூடிய சகோதரர்களின் அறிமுகம் ஏற்படுகின்றது. அவர்களிடையே அன்பு பரிமாறிப்பட காரணமாக அமைகின்றது. அது ஈமான் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றது.

2- ஒருவர் தொடராக நாற்பது நாட்கள் தொடராக ஆரம்ப தக்பீரை அடைந்து கொள்கின்றாரோ அவர் நரக நெருப்பில் இருந்தும், நயவஞ்சகத்தில் இருந்தும் நீங்கி விடுவார். அனஸ் ரழி அவர்கள் அறிவிக்கின்றார்கள். நபியவர்கள் கூறினார்கள் «யார் நாற்பது நாட்களுக்கு தொடராக ஜமாஅதோடு தொழுகிறாரோ அவர் இரண்டு விடயங்களை விட்டும் நீங்கிவிடுகின்றது. அவை நரகமும், நயவஞ்சகமாகும்» (ஆதாரம் திர்மிதி)

3- முஸ்லிம்களை ஒன்றிணைத்து அவர்களது உள்ளங்களை நன்மையின் பாலும் ஒற்றுமையின் பாலும் ஒன்றுபடுத்துகின்றது.

4- முஸ்லிம்கிடையே பாதுகாப்பு, உதவிகளினை மேம்படுத்துகின்றது.

5- மார்க்க உணர்வுகள் வெளிப்படுகின்றன.

6- முஸ்லிம்களின் உள்ளங்கள் ஒன்றுபடுகின்றன. ஒரே ஸப்பில் கறுப்பன், வெள்ளையன், அரபி, அஜ்னமி, பெரியவன், சிறியவன், பணக்காரன், ஏழை எல்லோருமே பக்கத்து பக்கத்தில் ஒரே இமாமிற்கு பின்னார், ஒரே நேரத்தில் ஒன்றாக தொழ வேண்டும்.

7- அல்லாஹ்வின் எதிரிகளின் கிண்ணடல்கள். முஸ்லிம்கள் பள்ளியில் தொழுகை நிறைவேற்றும் காலமெல்லாம் பலம் பொருந்தியவர்களாக இருப்பர்.

8- பாவங்கள் அழிக்கப்பட்டு, நன்மைகள் உயர்கின்றன. அபூ ஹுறைறா ரழி அவர்கள் அறிவிக்கின்றார்கள். நபியவர்கள் கூறினார்கள் «பாவங்களை இல்லாமல் செய்யும், அந்தஸ்தை உயர்த்தும் ஒரு விடயத்தை நான் அறிவித்து தரட்டுமா என கேட்டார்கள். அதற்கு ஸஹாபாக்கள் ஆம் என்றார்கள். அதற்கு நபியவர்கள் ”கஷ்டமான நேரங்களில் வுழுவை பூரணமாக செய்வது,110 பள்ளிவாயல்களுக்கு அதிகமான எட்டு வைத்துச் செல்வது., ஒரு தொழுகைக்கு பின்னால் அடுத்த தொழுகையை எதிர்பார்த்திருப்பது, இவற்றை பற்றி பிடித்க் கொள்ளுங்கள். »(ஆதாரம் முஸ்லிம்)

https://www.al-feqh.com/ta

9- தனித்து தொழுவதை விட கூட்டாக தொழுவது இருபத்தேழு மடங்கு சிறந்தது. அப்துல்லாஹ் இப்னு உமர் ரழி அவர்கள் அறிவிக்கிறார்கள். «அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

கூட்டாக (ஜமாஅத்துடன்) தொழுவது, உங்களில் ஒருவர் தனியாகத் தொழுவதைவிட இருபத்தைந்து பங்கு அதிகச் சிறப்புடையதாகும்»(ஆதாரம் புஹாரி)

ஜமாஅத் தொழுகையை வீட்டில் தொழுதல்.

தனி நபரோ? அல்லது கூட்டாகவோ அருகில் இருக்கும் பள்ளியில், வீட்டில் தொழுவது கூடாது. ஆனால் அதான் கேட்காது போனால் அல்லது பள்ளி தூரமாக இருக்குமானால் தொழுவதில் பிரச்சினை இல்லை.

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

12 இமாமத்தும் அதனை பின்பற்றுவதும்

www.al-feqh.com/ta

பொருளடக்கம்

- இமாமத் செய்ய தகுதியுடையவர்கள்
- இஸ்லாத்தில் இமாம், மஃமூம்களின் இடம்
- பெண்களின் இடம்
- இமாமை பின்பற்றுவதில் உள்ள சட்டங்கள்
- இமாமை முந்துதல்

இமாமத் செய்ய தகுதியுடையவர்கள்

ஒழுங்கு வரிசையில் –

முதலாவது - அல்குர்ஆனை ஓதக் கூடியவர்கள், அவர்கள் அல்குர்ஆனை மனனம் செய்து அதனை விளங்கியவர்கள்.

இரண்டாவது – சுன்னாவை அறிந்தவர்கள், இதனுடைய பொருளை, சட்டங்களை அறிந்தவர்கள்

மூன்றாவது – ஹிஜ்ரத் செய்தவர்கள், அவர்கள் காபிர்களின் நாட்டிலிருந்து இஸ்லாமிய நாட்டிற்கு ஹிஜ்ரத் சென்றவர்கள். ஹிஜ்ரத் இல்லை எனின் தவ்பாவில் முந்தியவர்கள் அல்லது பாவத்திலிருந்து விடுபட்டவர்கள்.

நான்காவது - வயது மூத்தவர்கள், இதுவே முன்னர் உள்ளவைகளில் உயர்ந்ததாகும். அபீ மஸ்ஊத் ரழி அவர்கள் அறிவிக்கின்றார்கள். நபியவர்கள் கூறினார்கள். «அல்லாஹ்வின் வேதத்தை நன்கு ஓதத் தெரிந்தவரே மக்களுக்குத் தலைமை தாங்கித் தொழுவிப்பார். மக்கள் அனைவருமே சம அளவில் ஓதத் தெரிந்தவர்களாய் இருந்தால் அவர்களில் நபிவழியை நன்கு அறிந்தவர் (தலைமை தாங்கித் தொழுவிப்பார்). அதிலும் அவர்கள் சமஅளவு அறிவுடையோராய் இருந்தால் அவர்களில் முதலில் நாடு துறந்து (ஹிஜ்ரத்) வந்தவர் (தலைமை தாங்கித் தொழுவிப்பார்). அவர்கள் அனைவரும் சம காலத்தில் நாடு துறந்து வந்திருப்பின் அவர்களில் முதலில் இஸ்லாத்தைத் (இஸ்லாமாக) தழுவியவர் (தலைமை தாங்கித் தொழுவிப்பார்» (ஆதாரம் முஸ்லிம்)

இது பள்ளியில் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள இமாமை சார்ந்ததாகும். அல்லது சம்பளம் வழங்காமல் இருக்கும் இமாமுக்குரியதாகும். ஆனால் சம்பளம் வழங்கப்படும் இமாமாக இருப்பின் அல்லது பள்ளிக்கு பொறுப்பானவராக அல்லது அதிகாரம் (ஆட்சியாளராக அல்லது தலைவராக அல்லது பொறுப்பாளராக இருந்தார்.) உள்ள ஒருவராக இருப்பின்

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

அவரே அதற்கு முதன்மையானவர். நபியவர்கள் கூறினார்கள் «ஒருவர் மற்றொரு மனிதருடைய அதிகாரத்திற்குட்பட்ட இடத்தில் (அவருடைய அனுமதியின்றி) தலைமை தாங்கித் தொழுவிக்க வேண்டாம். ஒரு மனிதருக்குரிய வீட்டில் அவரது விரிப்பின் (மனிதர்கள் உட்காரும் தலையணை போன்ற இருப்பு) மீது அவருடைய அனுமதியின்றி அமர வேண்டாம்»(ஆதாரம் முஸ்லிம்)

இஸ்லாத்தில் இமாம், மஃமூம்களின் இடம்

1- மஃமூம் ஒருவராக இருப்பின் – அவர் இமாமின் வலது பக்கத்தில் நிற்பார். இப்னு அப்பாஸ்(ரலி) அறிவித்தார்கள் «ஓர் இரவு நான் நபி(ஸல்) அவர்களுடன் தொழும்போது அவர்களின் இடப்புறமாக நின்றேன். அப்போது அவர்கள் என் தலையின் பின்புறத்தைப் பிடித்துத் தம் வலப்புறத்தில் என்னை நிறுத்தினார்கள்»(புஹாரி முஸ்லிம்)

2- இரண்டு அல்லது அதற்கு அதிகமாக இருப்பின் – வரிசையின் நடுவில் மஃமூம்களுக்கு முன்னால் இமாம் நிற்பார். ஜாபிர் இன்னும் ஜிபார் ரழி அவர்கள் அறிவிக்கின்றார்கள். அவர்களில் ஒருவர் நபியவர்களது வலது பக்கத்திலும் மற்றவர் இடது பக்கதிலும் நின்றனர். «ஜாபிர் ரழி அறிவிக்கிறார்கள் ”நபியவர்கள் அவருக்கு பின்னால் நாங்கள் செல்லும் வரை எங்களை தள்ளி (ஒழுங்குபடுத்தி)னார்கள். »(ஆதாரம் முஸ்லிம்)

3- வரிசைக்கு பின்னால் தனியாக தொழுதல், காரணம் இன்றி இது கூடாது. அவருக்கு ஸப்பை பூரணப்படுத்தும் இடத்தை தவிர வேறிடம் கிடைக்கவில்லை.

பெண்களின் இடம்

1- பெண்கள் ஜமாஅத்தாக தொழ சென்றால் அவர்களுடைய இமாம் அதே ஸப்பில் நடுவில் நிற்பார். இதுவே சுன்னாவாகும்.

2- ஆண்களுக்கு பின்னால் அவர்களுடைய தாய்மார்கள் நிற்பார்கள். ஏனையவர்கள் இறுதி ஸப்பில் நிற்பார்கள்

3- ஆண்களும் பெண்களும் ஒன்றாக ஜமாஅத்தாக தொழ நாடினால், பெண்கள் ஆண்கள் வரிசையை விட்டும் கடைசி வரிசையில் நிற்பார். அபூஹுறைறா ரழி அவர்கள் அவர்கள் அறிவிக்கிறார்கள். நபியவர்கள் கூறினார்கள் «பெண்களுடைய ஸப்புகளில் சிறந்தது இறுதி ஸப்பாகும், தீயது முதற் ஸப்பாகும்»(ஆதாரம் இப்னு மாஜா)

பெண்களுடைய தொழுகை

பெண்கள் ஆண்களின் அருகில்

இமாமை பின்பற்றுவதில் உள்ள சட்டங்கள்

1- வீட்டில் இருக்கும் போது கேட்கும் தக்பீர் சத்தம், வானொலியில் கேட்கும் சத்தம் ஆகியவைகளை கொண்டு ஒருவர் அதனை இமாமாக எண்ணி தொழ முடியாது.

2- பள்ளிக்கு வெளியில் தொடரான ஸப்பாக இருப்பின் இமாமை அங்கு பின்பற்றலாம்.

3- இமாம் பள்ளியில் எங்கு எருந்தாலும் அவரை மஃமும் பின்பற்றலாம்.

https://www.al-feqh.com/ta

4- சுன்னத்தான தொழுகை நிறைவேற்றுபவருக்கு பின்னால் பர்ளான தொழுகையை நிறைவேற்றலாம். உதாரணமாக இஷாத் தொழுகையை தராவிஹ் தொழுகையை நடாத்தும் இமாமிற்கு பின்னால் நின்று தொழுது கொள்ளலாம். அல்லது தவறவிடப்பட்ட பர்ளான தொழுகையை ஜமாஅதின் கூலியை பெறும் நோக்குடன் இவ்வாறு தொழ முடியும். ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் ரழி அறிவிக்கின்றார்கள். «முஆத் ரழி அவர்கள் நபியவர்களுக்கு பின்னால் தொழுதுவிட்டு பின்னர் தனது கூட்டத்தாருக்கு தொழுவிக்கச் சென்றார்கள்»(ஆதாரம் புஹாரி)

பள்ளிக்கு வெளியில் பின்பற்றுதல்

இமாமை முந்துதல்

1- மஃமூம்கள் இமாமை அவர் செய்கின்ற ஒவ்வொரு செயலையும் விரைவாக செய்வது மார்க்கமாகும். நபியவர்கள் கூறினார்கள். «பின்பற்றப்படுவதற்காகவே இமாம் ஏற்படுத்தப்பட்டுள்ளார். எனவே, அவர் தக்பீர் சொன்னால் நீங்களும் சொல்லுங்கள்; அவர் ருகூவு செய்தால் நீங்களும் செய்யுங்கள்; அவர் ஸஜ்தாச் செய்தால் நீங்களும் செய்யுங்கள்»(புஹாரி முஸ்லிம்)

2- இமாமை முந்துவது ஹராமாகும். நபியவர்கள் அதில் கடுமையாக எச்சரிக்கை செய்துள்ளார்கள். «உங்களில் ஒருவர் தொழுகையில் இமாமை முந்தித் தம் தலையை உயர்த்துவதால் அவரின் தலையைக் கழுதையுடை தலையாகவோ அல்லது அவரின் உருவத்தைக் கழுதையுடைய உருவமாகவோ அல்லாஹ் ஆக்கி விடுவதை அஞ்ச வேண்டாமா»(புஹாரி முஸ்லிம்)

3- யார் மறதியாக இமாமை முந்துகிறாரோ அவர் இமாமை பின்பற்றி மீண்டு வருவது அவசியமாகும். .

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

தொடக்குள்ளவருக்கு பின்னால் தொழுதல்

தொடக்குடையவருக்கு பின்னால் தொழுவது கூடாது *(தொடக்கு – சுத்தமில்லாத்தை குறிக்கும்)*, தொழுகை முடியும் வரை அவர் தொடக்குள்ளதை அறியவில்லையனின் மஃமூம்களின் தொழுகை ஏற்றுக் கொள்ளப்படும். இமாம் தொழுகையை மீட்டித் தொழ வேண்டும்.



www.al-feqh.com/ta

13 தகுந்த காரணமுடையவர்களுடைய தொழுகை

தக்க காரணங்கள்

நோய், பயணம், அச்சம்

பொருளடக்கம்

- தவிர்ந்து கொள்ளல் என்பதன் வரைவிலக்கணம்
- நோயாளியின் தொழுகை
- நோயாளியுடைய தொழுகையின் சட்டங்கள்
- பிரயாணியின் தொழுகை
- பிரயாணம் என்பதன் நாட்டம்
- சுருக்கித் தொழுதல்
- தொழுகையை சேர்த்து தொழுதல்
- பேருந்தில் இருப்பவரின் தொழுகை
- அச்ச நேரத் தொழுகை
- அச்ச நேரத் தொழுகை தொழும் முறை

1-நோயாளியின் தொழுகை

நோயாளி தனது சக்திக்குட்பட்ட வரையில் தொழுகையை நிறைவேற்றுவது அவசியமாகும். அவருக்கு முடியாத போது அவருக்கு எவ்வாறு தொழுவது சாத்தியமோ அவ்வாறு தொழ வேண்டும்.

நோயாளி நிற்பதற்கு சக்தி பெற்றவரானால் அவர் நின்று தொழ வேண்டும். நிற்க சக்தியில்லாவிட்டால் உட்கார்ந்து தொழ வேண்டும். உட்கார சக்தி பெறாவிட்டால் சாய்ந்து கொண்டு தொழ வேண்டும். அப்போது அவருடைய முகம் கிப்லாவை முன்னோக்க வேண்டும். சாய்ந்து கொண்டு தொழ முடியாதவர்கள் முதுகை சாய்ந்தவராக தெழ வேண்டும். அவருக்கு இயலுமாக இருப்பின் அவரது காலை கிப்லாவின் பக்கம் நீட்டிக் கொள்ளட்டும்.

அல்லாஹ் கூறுகிறான். {ஆகவே, உங்களால் இயன்ற வரை அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள்} [தகாபுன்–16] இம்ரான் இப்னு ஹூஸைன் ரழி அவர்களுக்கு நபியவர்கள் கூறினார்கள். «நின்று தொழுவீராக, நிற்க சக்தியில்லாத போது உட்கார்ந்து தொழுவீராக, அதற்கு சக்தி பெறவில்லையாயின் சாய்ந்து தொழுவீராக»(ஆதாரம் புஹாரி)

நோயாளியுடைய தொழுகையின் சட்டங்கள்

1- நோயாளி உட்கார்ந்து தொழுதால் அவருக்கு ஸுஜூது செய்ய முடியுமானால் அவர் ஸுஜூது செய்வது வாஜிபாகும்.

2- நோயாளி உட்கார்ந்து தொழுது அவருக்கு ஸுஜூது செய்ய முடியாது போனால் ருகூஃ, ஸுஜூதின் போது உடலை அசைக்க வேண்டும். ருகூஃவை விட ஸுஜூதில் சற்று குனிய வேண்டும். உடலை அசைப்பது கஷ்டமாக இருப்பின் அவர் தனது தலையால் சைகை செய்ய வேண்டும். முதுகை சாய்த்து தொழுபவரும் இவ்வாறே!

3- நோயாளிக்கு ஒவ்வொரு தொழுகைக்கும் வுழுச் செய்வது சிரம்மாக இருப்பின் அல்லது தொழுகையை அதன் உரிய நேரத்தில் தொழுவது சிரம்மமாக இருப்பின் அவர் லுஹர், அஸரையும், இஷா, மஃரிபை சேர்த்து தொழ முடியும்.

4- நோயாளிக்கு புத்தி இருக்கும் வரை அவருக்கு தொழுகை நீங்காது. நோயை காரணம் காட்டி அதில் பொடுபோக்காக இருப்பது கூடாது. அவருக்கு முடியுமான வகையில் தொழ வேண்டும்.

5- நோயாளி கோமாவில் இருந்து பின்னர் தெளிவடைந்தால் தனக்கு முடீயமான வகையில் தொழுகையினை நிறைவேற்ற வேண்டும். கோமாவில் இருந்த போது விட்ட தொழுகையை அவர் மீட்ட தேவையில்லை. ஒருவர் ஓரிரு நாட்கள் கோமாவில் இருப்பின் அவர் விட்ட தொழுகைகளை மீட்டித் தொழ வேண்டும்.

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

தக்பீர்

ஓதுதல்

ருகூஃ

ஸுஜூத்

https://www.al-feqh.com/ta

2-பிரயாணியின் தொழுகை

நான்கு ரக்அத்கள் கொண்ட தொழுகையை பிரயாணி இரண்டு ரக்அத்தாக சுருக்கித் தொழ முடியும். அல்லாஹ் கூறுகிறான்.{நீங்கள் பூமியில் பிரயாணம் செய்யும்போது, காஃபிர்கள் உங்களுக்கு விஷமம் செய்வார்கள் என்று நீங்கள் அஞ்சினால், அப்பொழுது நீங்கள் தொழுகையைச் சுருக்கிக் கொள்வது உங்கள் மீது குற்றம் ஆகாது; நிச்சயமாக காஃபிர்கள் உங்களுக்குப் பகிரங்கமான பகைவர்களாக இருக்கின்றனர்} [நிஸா – 101].

அனஸ் இப்னு மாலிக் ரழி அவர்கள் கூறினார்கள் «நாங்கள் மதீனாவிலிருந்து மக்காவை நோக்கி நபி(ஸல்) அவர்களுடன் புறப்பட்டோம். நபி(ஸல்) அவர்கள் மதீனா திரும்பும் வரை இரண்டிரண்டு ரக்அத்களாக தொழுதார்கள்.»(ஆதாரம் நஸாஈ)

பிரயாணம் என்பதில் நாடப்படுவது

பிரயாணம் என அறியப்படுவதை இது குறிக்கின்றது. அதாவது தொழுகையை குறைவாக நிறைவேற்றும் வகையில் அமைந்த பயணங்கள்.

தொழுகையை சுருக்குதல்.

1- பிரயாணி அவர் வசிக்கும் இடத்திலிருந்து வெளியானதும் சுருக்கித் தொழுவது ஆரம்பிக்கும். அவர்வசிக்கும்இடத்தில்சுருக்கித்தொழுவதுகூடாது. இதனை நபியவர்களது செய்தி உறுதிப்படுத்துகின்றது. நபியவர்கள் (அவர்களது இருப்பிடத்தை விட்டு) வெளியேறிய பின்னர் சுருக்கித் தொழுவார்கள்.

2- ஒருவர் ஓரிடத்திற்கு சென்று அங்கு நான்கு அல்லது அதிற்கு அதிகமாக தங்கினால் அவர் சுருக்கித் தொழ முடியாது. ஆனால் அதனை விட குறைவாக இருப்பின் சுருக்கித் தெழலாம், ஆனால் ஒருவர் எத்தனை நாள் தனது தேவை நிறைவேறும் என்பதை அறியாதவராக இருப்பின் அவர் ஊருக்கு திரும்பும் வரை சுருக்கித் தொழ முடியும்.

3- பிரயாணி ஊரில் இருக்கும் இமாமை பின்பற்றி தொழுதால் அவர் சுருக்கித் தொழ முடியாது.

4- ஊரில் இருப்பவர் சுருக்கித் தொழும் பிரயாணியின் பின்னால் தொழுதால் இமாம் ஸலாம் கொடுத்தபின்னர்தொழுகையைபூரணப்படுத்துவார்.

சேர்த்து தொழுதல்

1- பிரயாணியும், நோயாளியும் லுஹர், அஸர் தொழுகைகளை ஒரே நேரத்தில் சோர்த்து தொழுவது அவசியமாகும். அதே போல மஃரிப், இஷா ஆகிய தொழுகைகளையும் சேர்த்து தொழ வேண்டும். முதல் தொழுகையின் நேரத்தில் தொழுதால் அதற்கு ஜம்உ தக்தீம் எனப்படும். இரண்டாவது தொழுகையின் நேரத்தில் தொழுதால் ஜம்உ தஅஹ்ஹிர் எனப்படும்.

2- மழை காலங்களில் பள்ளிகளில் சேர்த்துத் தொழ முடியும். பெண்களை போன்று வீட்டில் தொழுபவர்களுக்கு அந்த சலுகை கிடையாது.

3- சேர்த்து தொழுதால் சுருக்கித் தொழ வேண்டிய அவசியமில்லை. அவருடைய வசதிக் கேற்ப சில நேரம் சேர்த்து தொழுவார். சில நேரம் சுருக்கித் தொழுவார். அல்லது சில நேரம் சுருக்கித் தொழுவார். கேற்ப சில நேரம் சேர்த்து தொழுவார்.

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

வாகனத்தில் பிரயாணம் செய்பவரின் தொழுகை

1- சுன்னத் தொழுகையாக இருந்தால்.

இவரின் தொழுகை காரணம் இருந்தாலும், இஸ்லாவிட்டாலும் ஏற்றுக் கொள்ளப்படும். «நபியவர்கள் பிரயாணத்தின் போது தனது ஒட்டகத்தில் அதனை முன்னோக்கி தொழக் கூடியவர்களாக இருந்தார்கள் » (ஆதாரம் புஹாரி)

2-பர்ளான தொழுகையாக இருந்தால்.

பர்ளான தொழுகையில் வாகனத்தை விட்டு பூமியில் இறங்க முடியாது அல்லது இறங்குவதற்கு சக்தி இல்லை எனும் போது அல்லது எதிரிகளுக்கு பயந்தால் அப்போது அவரது தொழுகை கூடும். அவற்றுள்

(அ)- கப்பல் போன்றவைகளில் பிரயாணம் செய்யும் போது கிப்லாவை முன்னோக்க, ருகூஃ, ஸுஜூத் செய்ய முடியுமாக இருப்பின் அவர் அப்படியே தொழுகையை நிறைவேற்ற வேண்டும்.

(ஆ)- கிப்லாவை முன்னோக்க முடியும். ஆனால் ருகூஃ, ஸுஜூத் செய்ய முடியாத நிலை எனின் அவர் ஆரம்ப தக்பீர் கூறியவராக வாகனம் செல்லும் திசையை நோக்கியவராக தொழுவார். வாகனம் செல்லும் திசையை நோக்கி ருகூஃ, ஸுஜூத் செய்வார்

https://www.al-feqh.com/ta

3-அச்ச நேரத் தொழுகை

யுத்தம் போன்ற நிலைகளில் இஸ்லாம் இதனை மார்க்கமாக்கியுள்ளது. அதற்கான ஆதாரங்கள் குர்ஆன் சுன்னாவில் இடம் பெறுகின்றன.

1- அல்லாஹ் கூறுகிறான். {நபியே! போர் முனையில்) அவர்களுடன் நீர் இருந்து, அவர்களுக்கு தொழவைக்க நீர்(இமாமாக) நின்றால் அவர்களில் ஒரு பிரிவினர் தம் ஆயுதங்களைத் தாங்கிக் கொண்டு உம்முடன் தொழட்டும்; அவர்கள் உம்முடன் ஸஜ்தா செய்து (தொழுகையை முடித்ததும்) அவர்கள் (விலகிச் சென்று) உங்கள் பின்புறம் (உங்களைக் காத்து நிற்கட்டும்); அப்பொழுது, தொழாமலிருந்த மற்றொரு பிரிவினர் வந்து உம்முடன் தொழட்டும்} [நிஸா – 102].

2- சுன்னாவிலிருந்து நபியவர்கள் தொழுவித்தார்கள். ஸஹாபாக்கள் தொழுதார்கள்.

அச்ச நேரத் தொழுகை நிறைவேற்றும் முறை

அச்ச நேரத்தில் ஊரில் இருப்பராக இருந்தால் அவர் தொழுகையை சுருக்க முடியாது. அவர் பிரயாணத்தில் இருந்தால் சுருக்கித் தொழுவார். அதனை தொழுவது தொடர்பில் இரண்டு கருத்துக்கள் இருக்கின்றன. ஆனால் அவை இரண்டும் ஆகுமானதாகும்.

இரண்டு நிலைகளில் அச்ச நிலைத் தொழுகை வாஜிபாகும்.

முதலாவது நிலை – எதிரியின் தாக்குதலுக்கு பயப்படுதல்

நபியவர்கள் தொழுத்தாக வரக்கூடிய அமைப்பில் அவர் தொழுது கொள்ள வேண்டும். «ஸஹ்ல் இப்னு அபீ ஹஸ்மா(ரலி) கூறினார்

(அச்ச நேரத் தொழுகையில்) கிப்லாவை முன்னோக்கி இமாமும் அவருடன் அவர்களில் ஓர் அணியினரும் நிற்பர். இன்னோர் அணியினர் எதிரிகளை நோக்கித் தங்கள் முகங்கள் இருக்கும் வண்ணம் (தொழாமல்) நிற்பர். அப்போது இமாம் தம்முடன் இருப்பவர்களுக்கு ஒரு ரக்அத் தொழுகை நடத்துவார். பிறகு, அவர்கள் எழுந்து தங்களுக்கு (மீதிமிருக்கும்) ஒரு ரக்அத்தை அந்த இடத்திலேயே இரண்டு சஜ்தாக்கள் செய்து பூர்த்தி செய்து கொள்வர். பிறகு, இவர்கள் மற்றோர் அணியினரின் இடத்திற்குச் சென்றுவிடுவர். அந்த (இரண்டாவது) அணியினர் (இமாமிடம்) வருவார்கள். அவர்களுடன் சேர்ந்து இன்னொரு ரக்அத்தை இமாம் தொழுவார். இப்போது இமாமுக்கு இரண்டு ரக்அத்துக்களாம்விட்டது. பிறகு இவர்கள் (மீதமிருக்கும் ஒரு ரக்அத்தைத் தனியாக எழுந்து) ருகூஉ செய்து இரண்டு சஜ்தாக்கள் செய்து தொழுவார்கள்»(ஆதாரம் புஹாரி)

இதுவே ஊரில் இருப்பவர், பிரயாணம் செய்பவர் ஆகியோர் பஜ்ர் தொழுகையை நிறைவேற்றும் முறையாகும். இன்னும் அவர் மஃரிப் நேரத்தில் ஊரில் இருந்தால் இரண்டு ரக்அத் தொழுவார், பின்னர் பிரவதற்கான நீய்யத் வைப்பார். எஞ்சியவைகளை தன்னளவில் பூர்த்தி செய்து ஸலாம் கொடுப்பார். பின்னர் போய் வந்து எஞ்சியவைகளை அவர்களுடன் இணைந்து தொழுவார். பின்னர் பிரிந்து அத்தஹியாத்தில் இருந்தால் தன்னளில் பூர்த்தி செய்தி அவர்களுடன் காத்திருப்பார். அவர்கள் அத்தஹியாத்தில் இருக்கும் வரை பின்னர் அவர்களுடன் ஸலாம் கொடுப்பார்.

இரண்டாவது நிலை – தொழுகையை அதன் உரிய முறையில் தொழுவதற்கு வாய்பே இல்லாத கடும் அச்சம்.

இந் நிலைகளில் தனது கால்கள் இருக்கும் வையில் தனக்கு ஏற்ற எத்திசையாயினும் கிப்லாவை முன்னோக்கி தொழுவார்கள். இப்னு உமர் ரழி அறிவிக்கிறார்கள். «கடுமையான அச்ச நிலை ஏற்பட்டால் அவர்கள் நடந்தவர்களாகவோ, தம் கால்களால் நின்ற நிலையிலோ வாகனத்தில் பயணம் செய்தவர்களாகவோ கிப்லாத் திசையை முன்னோக்கியபடி, அல்லது முன்னோக்காமல் தொழலாம்». (ஆதாரம் புஹாரி)

தனக்கு ஏற்றாற் போல் ருகூஃ, ஸுஜூதை செய்வார். நடந்து சென்றாலும், வாகனத்தில் சென்றாலும் அல்லது யுத்த வாகனத்தில் அவர் எண்ணம் போல தொழுது கொள்வார். யுத்தம், கடுமையான, கொலைகளின் போது தொழுவது போல தொழுது கொள்வார். அல்லாஹ் கூறுகிறான்

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

{ஆயினும், (பகைவர்களையோ அல்லது வேறெதையுமோ கொண்டு) நீங்கள் பயப்படும் நிலையில் இருந்தால், நடந்து கொண்டோ அல்லது சவாரி செய்து கொண்டோவாகிலும் தொழுது கொள்ளுங்கள்} *[பகரா – 239]*

விமானத்தில் தொழுதல்

கப்பலில் தொழுதல்

யுத்த வாகனத்தில் தொழுதல்

மார்க்கம் இலகுவாக்குகின்றது

இஸ்லாமிய மார்க்கம் சில அம்சங்களுக்கு முக்கியத்துவம் வழங்குகின்றது. இஸ்லாமிய காயிதாவின் அடிப்படையில்

”கஷ்டம் இலகுவை ஏற்படுத்தும்”

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

ஜும்ஆ தொழுகை

பொருளடக்கம்

- ஜும்ஆத் தொழுகையின் சட்டம்
- ஜும்ஆத் தொழுகை யார் மீது கடமை
- ஜும்ஆ நாளின் சிறப்பு
- ஜமாஅத் தொழுகையின் நிபந்தனைகள்
- ஜும்ஆத் தொழுகை முறை
- இரண்டு குத்பாக்கள்
- இரண்டு குத்பாக்களின் சட்டம்
- குத்பாவின் பூரணத்துவம்
- இரண்டு குத்பாக்களில் ஆகுமானவை
- ஜும்ஆத் தொழுகையில் தடுக்கப்பட்டவைகள்
- ஜும்ஆவை அடைதல்
- ஜும்ஆ நாளில் ஆகுமான காரியங்கள்

ஜும்ஆத் தொழுகையின் சட்டம்

ஜும்ஆ தொழுகை பர்ளு ஐன் ஆகும். அது அனைத்து முஸ்லிமான, பருவ வயதை அடைந்த, சக்கியுள்ள அனைவருக்கும் கடமையாகும். அதனை விடுவதற்கு எந்த கரணமும் கிடையாது.

1- அல்லாஹ் கூறுகிறான். {ஈமான் கொண்டவர்களே! ஜுமுஆ உடைய நாளில் தொழுகைக்காக நீங்கள் அழைக்கப்பட்டால், வியாபாரத்தை விட்டுவிட்டு, அல்லாஹ்வைத் தியானிக்க (பள்ளிக்கு) விரைந்து செல்லுங்கள் - நீங்கள் அறிபவர்களாக இருப்பின் இதுவே உங்களுக்கு மிக மேலான நன்மையுடையதாகும்} [பகரா – 239]

2- நபியவர்கள் கூறினார்கள் «மக்கள் ஜுமுஆக்களைக் கைவிடுவதிலிருந்து விலகியிருக்கட்டும்! அல்லது அவர்களின் இதயங்கள்மீது அல்லாஹ் முத்திரை பதித்துவிடுவான்; பிறகு அவர்கள் அலட்சியவாதிகளில் சேர்ந்துவிடுவர்» (ஆதாரம் முஸ்லிம்)

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

யார் மீது ஜும்ஆ கடமை இல்லை?

பெண்கள், சிறுவர்கள், பிரயாணி, நோயாளி, போன்றவர்களுக்கு ஜும்ஆ கடமையில்லை. வேறு ஒருவரோடு அவர்கள் வந்தால் அவர்களுடைய தொழுகை கூடும். அதற்காக கூலியும் கிடைக்கும். அவ்வாறு அவர்கள் சமூகந்தரா விட்டால் லுஹர் தொழ வேண்டும். .

பிரயாணி

சிறுவர்கள்

பெண்கள்

நோயாளி

ஜும்ஆ தினத்தின் சிறப்பு

வார நாட்களில் சிறந்த நாள் வெள்ளிக்கிழமை தினமாகும். அதனை இஸ்லாமிய சமூதாயத்திற்கு சிறந்ததாக அல்லாஹ் ஏற்படுத்தியுள்ளான். அதனுடைய சிறப்புக்கள் பற்றி அதிகமான செய்திகள் வந்துள்ளன.

1- «சூரியன் உதிக்கும் நாட்களில் வெள்ளிக்கிழமையே மிகவும் சிறந்த நாளாகும். அன்று தான் (முதல் மனிதர்) ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்டார்கள். அன்றுதான் சொர்க்கத்திற்குள் அவர்கள் அனுப்பப்பட்டார்கள். அன்றுதான் அவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்கள்»(ஆதாரம் முஸ்லிம்)

2- «ஒருவர் (வெள்ளிக்கிழமை அன்று) குளித்துவிட்டு ஜுமுஆத் தொழுகைக்குச் சென்று, அவரது விதியில் எழுதப்பட்டிருந்த அளவு (கூடுதலாகத்) தொழுதார்; பிறகு இமாம் தமது சொற்பொழிவை (குத்பா) முடிக்கும்வரை வாய்மூடி மௌனமாக உரையைக் கேட்டுவிட்டு, அவருடன் சேர்ந்து தொழுகையை நிறைவேற்றுகிறார். இத்தகையவருக்கு அந்த ஜுமுஆவிலிருந்து அடுத்த ஜுமுஆ வரையும் மேற்கொண்டு மூன்று நாட்கள்வரையும் ஏற்படுகின்ற (சிறு) பாவங்கள் (அனைத்தும்) மன்னிக்கப்படுகின்றன»(ஆதாரம் முஸ்லிம்)

3- «ஐவேளைத் தொழுகைகள், ஒரு ஜுமுஆவிலிருந்து மறுஜுமுஆ, ஒரு ரமளானிலிருந்து மறு ரமளான் ஆகியன அவற்றுக்கிடையே ஏற்படும் பாவங்களுக்குப் பரிகாரங்களாகும்; பெரும் பாவங்களில் ஈடுபடாமல் இருந்தால்.

இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்»(ஆதாரம் முஸ்லிம்)

4- «அல்லாஹ், நமக்கு முந்தைய (யூதர் மற்றும் கிறித்தவ) சமுதாயத்தாரை (வார வழிபாட்டு நாளான) வெள்ளிக்கிழமையிலிருந்து வழிபிறழ விட்டுவிட்டான். எனவே, யூதர்களுக்குச் சனிக்கிழமையும் கிறித்தவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமையும் (வார வழிபாட்டு நாட்களாக) அமைந்தன. பிறகு அல்லாஹ் நம்மைப் படைத்து நமக்கு வெள்ளிக்கிழமையை அறிவித்தான். (வரிசை முறையில்) வெள்ளி, சனி, ஞாயிறு என அமைந்திருப்பதைப் போன்றே மறுமை நாளிலும் அவர்கள் நம்மைப் பின்தொடர்பவர்களாகவே இருப்பார்கள். உலக மக்களில் நாமே (காலத்தால்) பிந்தியவர்களாக இருக்கிறோம்; மறுமை நாளில் (தகுதியால்) முந்தியவர்களாகவும் படைப்பினங்களில் அனைவருக்கும் முன் தீர்ப்பளிக்கப் படுபவர்களாகவும் இருப்போம்.

இதை அபூஹுரைரா (ரலி) அவர்களும் ஹுதைஃபா (ரலி) அவர்களும் அறிவிக்கிறார்கள்»(ஆதாரம் முஸ்லிம்)

5- «அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இரு பெருநாள் தொழுகையிலும் ஜுமுஆவிலும் "சப்பிஹிஸ்ம ரப்பிகல் அஃலா" (87) மற்றும் 'ஹல் அத்தாக்க ஹதீஸுல் ஃகாஷியா" (88) ஆகிய அத்தியாயங்களை ஓதுவார்கள். பெருநாளும் ஜுமுஆவும் ஒரே நாளில் வந்துவிட்டாலும், இரு தொழுகைகளிலும் அவ்விரு அத்தியாயங்களையே ஓதுவார்கள்»(ஆதாரம் முஸ்லிம்)

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

6- சூரியன் உதித்த நாட்களில் சிறந்த நாள் வெள்ளிக்கிழமை, அத்தினத்தில்தான் முதல் மனிதர் ஆதம் (அலை) படைக்கப்பட்டார்கள். அதிலேதான் அவர்கள் பூமிக்கு இறக்கப் பட்டார்கள். அவர்களது பாவமன்னிப்பு (காதுகள்) ஏற்கப்பட்டதும் அதே தினத்தில்தான். ஆதம் (அலை) அவர்கள் மரணித்ததும் ஒரு வெள்ளிக்கிழமை நாளில்தான். மறுமை ஏற்படுவதும் இதே போன்ற ஒரு வெள்ளிக்கிழமையில் தான். வெள்ளிக்கிழமை உதயமானதில் இருந்து சூரியன் மறையும் வரை மனூ, ஜின்களைத் தவிர ஏனைய அனைத்து உயிரனிங்களும் மறுமை ஏற்படுவதை அஞ்சி பூமிக்குள்ளே மூழ்கிக் கொண்டிருக்கின்றன. இத்தினத்தில் ஒரு நேரம் உள்ளது. அந்நேரத்தில் ஒரு முஸ்லிம் தொழுது, பிரார்த்தித்து அல்லாஹ்விடம் எதனைக் கேட்டாலும் கொடுப்பான். கஃபுல் அஹ்பார் (ரஹ்) அவர்கள், அது வருடத்தில் ஒரு நாளிலா? என்று கேட்ட போது, இல்லை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் என்றார்கள். கஃபுல் அஹ்பார் தௌராத்தை வாசித்துப் பார்த்து விட்டு நபி (ஸல்) அவர்கள் உண்மையைத் தான் கூறியுள்ளார்கள் எனக் கூறினார்கள். அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : “பின்பு நான் அப்துல்லாஹ் இப்னு ஸலாம் (ரலி) அவர்களை சந்தித்து கஃபுல் அஹ்பாரிடம் உட்கார்ந்து கற்ற விடயத்தைப் பற்றிக் கூறினேன்”. “அது எந்த நேரம் என்று உமக்குத் தெரியுமா? என்று அப்துல்லாஹ் இப்னு ஸலாம் (ரலி) கேட்க, எனக்கு அறிவித்துத் தாருங்கள் என்று நான் கூறினேன். அது வெள்ளிக்கிழமையின் இறுதி நேரம் என அப்துல்லாஹ் இப்னு ஸலாம் (ரலி) கூறியதும், “அந்நேரத்தில் ஒரு முஸ்லிம் தொழுது, பிரார்த்தித்து அல்லாஹ்விடம் எதனைக் கேட்டாலும் கொடுப்பான்” என்று நபி கூறியுள்ளார்கள், அந்நேரம் தொழுகை தடுக்கப்பட்ட நேரமாக இருக்கும் போது எவ்வாறு வெள்ளிக்கிழமையின் இறுதி நேரமாக அது இருக்கும்? என நான் கேட்டேன். அதற்கு அப்துல்லாஹ் இப்னு ஸலாம் (ரலி) அவர்கள் “யார் தொழுகையை எதிர்பார்த்து உட்கார்ந்திருக்கிறாரோ அவரும் தொழுகையில் இருப்பதாகத்தான் கருதப்படுவார்” என நபி (ஸல்) அவர்கள் கூறவில்லையா? எனக் கேட்டார்கள். நான் “ஆம்” என்றேன். “அதைத் தான் நானும் கூறினேன்” என்று அப்துல்லாஹ் இப்னு ஸலாம் (ரலி) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் அபூதாவுத்)

7- நாட்களில் சிறந்த நாள் வெள்ளிக் கிழமையாகும். அதில் அதிகமதிகம் ஸலவாத்து கூறுங்கள். து எனக்கு எடுத்துக் காண்பிக்கப்படும். ”அதற்கு ஸஹாபாக்கள் நீங்கள் மரணித்து உக்கிய பின்னர் எப்படி? என கேட்டனர். அதற்கு நபியவர்கள் «நபிமார்களின் உடம்பை மண் சாப்பிடாது” என்றார்கள்»(ஆதாரம் அபூதாவுத்)

ஜும்ஆத் தொழுகையின் நிபந்தனைகள்

1- நேரம் – ஜும்ஆவுடைய நேரத்திற்கு முன்னரோ, பின்னரோ அதனை தொழ முடியாது. அதனுடைய நேரம் லுஹர் தொழுகையாகும்.

2- (குறிப்பிட்ட) கூட்டம் வருகை தருதல் – தனிநபர் ஜும்ஆவாக கருதப்பட மாட்டாது. குறைந்து மூன்று பேர் இருக்க வேண்டும்.

3- வசிப்பிடம் – மாரி, கோடை காலங்களில் என எல்லா நோரங்களிலும் சொந்த ஊரில் இருப்பதை குறிக்கும். அவர்கள் மாரியிலும், கோடையிலும் பிரயாணம் செய்யமாட்டார்கள். கூடாரமடித்து மாறி மாறி தங்குபவர்கள், நாட்டுப்புறத்தவர்கள் இவர்களுடைய தொழுகை கூடும். அவர் மீது ஜும்ஆ கடமை இல்லை.

4- இரண்டு குத்பாக்கள் செய்தல் – நபியவர்கள் தொடராக செய்தது போன்று செய்தல்

ஜும்ஆவின் நேரம்

ஜமாஅதாக தொழுதல்

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

நாட்டுப்புறத்தவர்கள்

ஜும்ஆத் தொழுகை நிறைவேற்றும் முறை

ஜும்ஆத் தொழுகை இரண்டு ரக்அத் ஆகும். அதில் ஓதுவதை வெளிப்படுத்த வேண்டும். முதலாவது ரக்அத்தில் பாத்திஹாவிற்கு பின்னால் சூரதுல் ஜும்ஆவையும், இரண்டாவது ரக்அத்தில் பாத்திஹாவிற்கு பின்னால் சூரதுல் முனாபிகூனையும் ஓதுவது சுன்னத்தாகும். அல்லது முதலாவது ரக்அத்தில் பாத்திஹாவிற்கு பின்னால் சூரதுல் அஃலாவையும், இரண்டாவது ரக்அத்தில் பாத்திஹாவிற்கு பின்னால் சூரதுல் ஹாஷியாவையும் ஓதுவது சுன்னத்தாகும் (ஆதாரம் முஸ்லிம்)

இரண்டு குத்பாக்கள்

இரண்டு குத்பாக்களின் சட்டம்

இரண்டு குத்பாக்கள் வாஜிபாகும். அது ஜும்ஆவின் நிபந்தனையாகும். அதிகமான அரபுகள் வந்தால் அரபு மொழியில் குத்பா செய்ய வேண்டும். அரபு அல்லாதவர்களாக இருந்தால் அவர்களுடைய மொழியில் குத்பாக்கள் நிறைவேற்றலாம். அதில் குர்ஆன் வசனங்களை அரபியில் கூறி அதனுடைய அர்த்தங்களை பிற மொழியில் கூற வேண்டும்.

குத்பாவின் பூரணத்துவம்

ஜும்ஆவுடைய குத்பா ருக்கூன் கிடையாது. ஆனால் பின்வரும் அமைப்பினூடாக குத்பாவின் பூரணத்தும் அடங்கியுள்ளது.

1- அல்லாஹ்வை புகழ்தல்

2- அஷ்ஷது அன்லாயிலாக என்று வரும் ஷகாதாவை கூறல்.

3- நபியவர்கள் மீது ஸலவாத்து கூறுதல்

4- அல்லாஹ்வை தக்வா செய்யுமாறு உபதேசம் செய்தல்

5- அல்குர்ஆனிலிருந்து சிலவற்றை ஓதுதல்.

6- உபதேசம் செய்தல்

இரண்டு குத்பாக்களில் ஆகுமானவைகள்

1- மிம்பர் மீது குத்பா செய்தல்

2- மிம்பரில் ஏறும் போதும் இமாம் ஸலாம் கூறுதல்

3- இரண்டு குத்பாக்களுக்கிடையில் சற்று அமர்தல்

4- இரண்டு குத்பாக்களையும் சுருக்கமாக செய்தல்

5- அதில் துஆக்கள் கேட்டல்

ஜும்ஆவில் தடுக்கப்பட்டவைகள்

1- இமாம் உரையாற்றும் போது ஏனையவர்கள் பேசுவது ஹறாமாகும். நபியவர்கள் கூறினார்கள் «இமாம் சொற்பொழிவு நிகழ்த்தும்போது உன் அருகிலிருப்பவரிடம் 'வாய்மூடு!' என்று கூறினால் நீ வீணான காரியத்தில் ஈடுபட்டுவிட்டாய்»(ஆதாரம் புஹாரி)

2- மக்களின் தொட்புயங்களை கடந்து செல்வது வெறுக்கத்தக்கதாகும். ஆனால் குத்பா நறைவேற்றுபவர் செல்லலாம். அல்லது வெற்றிடம் இருப்பின் அப்படி செல்வதில் பிரச்சினையில்லை.

ஜும்ஆவை அடைதல்

ஒரு முஸ்லிம் ஜும்ஆவிற்கு நேரகாலத்தோடு செல்வது அவசியமாகும். யார் தாமதமாகி சென்று இரண்டாவது ருக்கூஃவை அடைகின்றாரோ அவர் ஜும்ஆவை அடைந்து கொள்வார். யார் .இரண்டாவது ருகூஃவை அடையவில்லையோ அவர் லுஹர் தொழ வேண்டும். யார் தூக்கம் காரணமாக ஜும்ஆவை தவற விட்டால் அவர் லுஹர் தொழுகையை நிறைவேற்ற வேண்டும்.

ஜும்ஆ நாளில் ஆகுமான காரியங்கள்

1- சூரதுல் கஃப் ஓதுதல் நபியவர்கள் கூறினார்கள். «யார் ஜும்ஆ நாளில் சூரத்துல் கஃப் ஓதுகிறாரோ அது அடுத்த ஜும்ஆக்களுக்கிடையில் அவருக்கு பிரகாசதாகும்.»(ஆதாரம் ஹாகிம்)

2- நபியவர்கள் மீது அதிகம் ஸலவாத்து கூறுதல். அபூ மஸ்ஊத் அன்ஸாரி ரழி அறிவிக்கிறார்கள். நபியவர்கள் கூறினார்கள் «ஜும்ஆ நாளில் என்மீது அதிகமதிகம் ஸலவாத்து கூறுங்கள். அவர்களுடைய ஸலவாத் எனக்கு எடுத்துக்காட்டப்படும்.» (ஆதாரம் ஹாகிம்)

3- குளித்து நறுமணம் பூசுதல். நபியவர்கள் கூறினார்கள். «ஜும்ஆ நாளில் குளித்துவிட்டு இயன்றவரை சுத்தமாகித் தமக்குரிய எண்ணெய்யைத் தேய்த்துக் கொண்டு தம் வீட்டிலுள்ள நறுமணத்தைப் பூசிக் கொண்டு பள்ளிக்கு வந்து (அங்கு நெருக்கமாக அமர்ந்திருக்கும்) இரண்டு நபர்களைப் பிரித்துவிடாமல், தமக்கு விதிக்கப் பட்டதைத் தொழுதுவிட்டு, இமாம் உரையாற்றத் தொடங்கியதும் வாய் மூடி மவுனமாக இருந்தால் அந்த ஜும்ஆவுக்கும் அடுத்த ஜும்ஆவுக்கும் இடையிலான பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.'»(ஆதாரம் புஹாரி)

ஜும்ஆவில் உள்ள கேள்விகள்

1- மூன்று படிகளை கொண்டதாக மிம்பர் இருப்பது சுன்னத்தாகும். நபியவர்களுடைய மிம்பரும் அவ்வாறே இருந்தது.

2- சூரத்துல் ஜும்ஆ ஓதுவது சுன்னத் கிடையாது. சிலவேளை தொழுகையாளிகள் ஜும்ஆவிற்கு முன்னர் குர்ஆன் ஓதுவதை செவிமடுத்தல், அல்லது கஷீதாக்கள், திக்ர்கள் போன்றவைகளை சத்தம் உயர்த்தி கூறுதல், இவைகள் அனைத்தும் கூடாதவையாகும். ஒரே ஒரு அதானை மாத்திரமே இஸ்லாம் அனுமதித்துள்ளது. அவ்வாறே நபியவர்கள், அபூபக்கர், உமர் ரழி ஆகியோருடைய காலத்தில் இருந்தது. ஆனால் உஸ்மான் ரழி அவர்களுடைய காலத்தில் மக்கள் பெருக்கம் அதிகரித்ததால் சந்தையில் ஜும்ஆவிற்கான நேரம் வந்து விட்டதை ஞாபகப்படுத்த அதான் கூறப்பட்டது.

3- தொழுபவரோ இமாமோ வந்தால் உட்காருவதற்கு முன்னர் இரண்டு ரக்அத் சுன்னத் தொழுதல். நபியவர்கள் கூறினார்கள்«உங்களில் ஒருவர் அல்லது இமாமோ இரண்டு ரக்அத் தொழட்டும். அதனை இரண்டையும் போதுமாக்கிக் கொள்ளட்டும்»(ஆதாரம் இப்னு ஹூஸைமா)

4- விரலை உயர்த்தியே கதீப் துஆ கேட்பார். மழை வேண்டி, மழையை வேறிடத்திற்கு திருப்புதல் போனற நிலைகளில் மாத்திரம் கைகளை உயர்த்த வேண்டும். ஹூஸைன் பின் அப்திர் ரஹ்மான் ரழி அறிவிக்கிறார்கள். «நபியவர்கள் குத்பாவின் போது விரலை காட்டி பிரார்த்தனை செய்வதை நான் பார்த்தேன்»(ஆதாரம் அஹ்மத்)

மூன்று படி மிம்பர்

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

விரலால் சைகை காட்டுதல்

5- ஜும்ஆவிற்கொன்று முன் சுன்னத் ஏதும் கிடையாது. ஆனால் அதானுக்கு முன்னர் உள்ள சுன்னத்தை தொழுவது ஆகுமாகும். «யார் ஜும்ஆ தினத்தில் குளித்து விட்டு தன்னால் முடியுமானவரை சுத்தமாகி கொண்டு, நறுமணம் பூசி, அல்லது அவருடைய வீட்டில் உள்ள நறுமணத்தை தடவி, பள்ளியில் இருவரை பிரிக்காமல் சென்று தனக்கு ஆகுமான தொழுகையை தொழுகிறார். இமாம் மிம்பரில் ஏறினால் அவர் அமைதியாக இருந்தால் ஜும்ஆவிற்கும், அடுத்த ஜும்ஆவிற்கும் இடையே உள்ள அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படும்» (ஆதாரம் தாரமி)

6- ஜும்ஆவின் பின்னர் உள்ள சுன்னத் தொழுகையை நிறைவேற்றுதல். இப்னு உமர் ரழி அறிவிக்கிறார்கள் «நபியவர்கள் ஜும்ஆவிற்கு பின்னர் இரண்டு ரக்அத்கள் சுன்னத் வீட்டில் தொழக் கூடியவராக இருந்தார்கள்».(ஆதாரம் ஜமாஆ) அல்லது நான்கு «உங்களில் யார் தொழுகையாளிகள் இருக்கின்றார்களோ அவர்கள் ஜும்ஆவுடைய நான்கு ரக்அத்தை தொழுது கொள்ளட்டும்» (ஆதாரம் முஸ்லிம்)

7- பெருநாளும் ஜும்ஆவும் ஒரே நாளில் வந்தால் இரண்டையும் தொழுவதே பேணுதலாகும். பொருநாள் தொழுகையை தொழுது அவர் ஜும்ஆ தொழவில்லையனின் அவர் லுஹரை தொழுவது அவசியமாகும். இயாஸ் இப்னு அபீ ரம்லா அஷ்ஷாமி அறிவிக்கிறார்கள். «முஆவியா ரழி அவர்கள் ஸைத் பின் அர்க்கம் ரழியிடம் கேட்பதை நான் பார்த்தேன். நீங்கள் நபியவர்கள் ஜும்ஆவையும், பொருநாளையும் தொழுவதை பார்த்தீர்களா?. அதற்கு ஆம், பொருநாளை பகலின் ஆரம்பத்திலும், ஜும்ஆவிற்கு சலுகை வழங்கினார்கள். யார் உங்களில் ஜும்ஆவிற்கு செல்ல முடியுமோ அவர்கள் செல்லுங்கள் என்றார்கள்»(ஆதாரம் அஹ்மத்)

https://www.al-feqh.com/ta

சுன்னத்தான தொழுகைகள்

சுன்னத்தான தொழுகைகள்

வாஜிப் அல்லாமல் இஸ்லாம் ஆகுமாக்கியுள்ள தொழுகைகள்

சுன்னத்தான தொழுகையின் சிறப்புக்கள்

1- அல்லாஹ்வின் அடியார்கள் அவனது மஹப்பத்தை பெற வேண்டும் என நன்நோக்கில் சுன்னத் தொழுகையை மேற் கொள்கின்றனர். ஹதீஸில் குத்ஸியில் அல்லாஹ் கூறுகிறான்«என் அடியான் கூடுதலான (நஃபிலான) வணக்கங்களால் என் பக்கம் நெருங்கி வந்து கொண்டேயிருப்பான். இறுதியில் அவனை நேசித்துவிடும்போது அவன் கேட்கிற செவியாக, அவன் பார்க்கிற கண்ணாக, அவன் பற்றுகிற கையாக, அவன் நடக்கிற காலாக நான் ஆகிவிடுவேன். அவன் என்னிடம் கேட்டால் நான் நிச்சயம் தருவேன். என்னிடம் அவன் பாதுகாப்புக் கோரினால் நிச்சயம் நான் அவனுக்குப் பாதுகாப்பு அளிப்பேன். ஓர் இறைநம்பிக்கையாளனின் உயிரைக் கைப்பற்றுவதில் நான் தயக்கம் காட்டுவதைப் போன்று, நான் செய்யும் எச்செயலிலும் தயக்கம் காட்டுவதில்லை. அவனோ மரணத்தை வெறுக்கிறான். நானும் (மரணத்தின் மூலம்) அவனுக்குக் கஷ்டம் தருவதை வெறுக்கிறேன்»(ஆதாரம் புஹாரி)

2- பர்ளான தொழுகையில் ஏற்படும் குறைகளுக்கு கூலியாக அமையும். நபியவர்கள் கூறினார்கள். «தொழுகையை பற்றியே நாளை மறுமையில் கேள்வி கணக்கு கேட்கப்படும். அல்லாஹ் மலக்குமார்களிடம் என்னுடைய அடியானுடைய தொழுகை பூரணமாக இருக்கிறதா? அல்லது குறையுள்ளதாக? இருக்கிறதா என பாருங்கள் என்பான். அப்போது அது பூரணமாக இருந்தால் அவருக்கு அது பூரணமாக எழுதப்படும். அதில் குறைகள் இருந்தால் எனது அடியானின் சுன்னத்தான தொழுகையை பாருங்கள் என கூறுவான். அப்போது சுன்னத்தான தொழுகை இருந்தால் அந்த சுன்னத்தான தொழுகை அவருக்கு பர்ளாக பூரணப்படுத்தப்படும். அவ்வாறே அமல்களுக்கு நன்மை லழங்கப்படும்»(ஆதாரம் அபூதாவுத்)

பொருளடக்கம்

- சுன்னத்தான தொழுகையின் வரைவிலக்கணம்
- சுன்னத்தான தொழுகையின் சிறப்புக்கள்
- சுன்னத்தான தொழுகையின் வகைகள்
- ராத்திபான சுன்னத்க்கள்
- வித்ர் தொழுகை
- தராவீஹ் தொழுகை
- லுஹா தொழுகை
- தஹ்யதுல் மஸ்ஜித்
- நன்மை வேண்டி தொழுகை
- வுழுவிற்கு பின்னால் உள்ள தொழுகை
- முழுமையான சுன்னத் தொழுகை
- சுன்னத்தான தொழுகை தடுக்கப்பட்ட நேரங்கள்

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

சுன்னத்தான தொழுகையை வீட்டில் தொழுவது சிறந்த்தாகும்.

பள்ளியில் தொழுவதை விட சுன்னத்தான தொழுகையில் வீட்டில் தொழுவது சிறந்த்தாகும். ஆனால் தராவிஹ் தொழுகையை ஜமாத்துடன் பள்ளியில் தொழுவது சிறந்ததாகும். நபியவர்கள் கூறினார்கள் «ஒரு மனிதனின் தொழுகைகளில் சிறந்தது அவன் தன்னுடைய வீட்டில் தொழுவது தான்; கடமையான தொழுகையைத் தவிர' என்றார்கள்»(ஆதாரம் புஹாரி)

சுன்னத்தான தொழுகைகளின் வகைகள்

அதிகமான சுன்னத் தொழுகைகள் உள்ளன. அவற்றுள் முக்கியமானவையாக -

முதலாவது ராத்திபான சுன்னத்கள்(வலியுறுத்தப்பட்ட சுன்னத்தை இது குறிக்கின்றது.)

இது பர்ளான தொழுகைக்கு பின்னால் தொழப்படும் தொழுகையாகும். இது வலியுறுத்தப்பட்ட சுன்னத்தாகும். அது பத்து அல்லது பன்னிரெண்டு ரக்அத்களாகும்.

- பஜ்ருக்கு முன் இரண்டு
- ழுஹருக்கு முன் இரண்டு அல்லது நான்கு, ழுஹருக்கு பின் இரண்டு
- மஃரிப்க்கு பின் இரண்டு
- இஷாவிற்கு பின் இரண்டு

உமர் ரழி அவர்கள் கூறினார்கள் «நபி(ஸல்) அவர்கள் லுஹருக்கு முன் இரண்டு ரக்அத்கள் லுஹருக்குப் பின் இரண்டு ரக்அத்கள் மஃரிபிற்குப் பின் வீட்டில் இரண்டு ரக்அத்கள் இஷாவிற்குப் பின் வீட்டில் இரண்டு ரக்அத்கள் ஸுப்ஹுக்கு முன் இரண்டு ரக்அத்கள் ஆகிய பத்து ரக்அத்களைத் தொழுததை நான் நினைவில் வைத்திருக்கிறேன். ஸுப்ஹுக்கு முன் உள்ள அந்த நேரம் நபி(ஸல்) அவர்களிடம் யாரும் செல்ல முடியாத நேரமாகும்.»(புஹாரி முஸ்லிம்)

ஆயிஷா ரழி அவர்கள் ழுஹருக்கு முன்னர் நான்கு என கூறியுள்ளார்கள (ஆதாரம் முஸ்லிம்)

முன்	பர்ளான தொழுகை	பின்
இரண்டு ரக்அத்கள்	பஜ்ர்	——
4 ரக்அத்கள்	ழுஹர்	இரண்டு ரக்அத்கள்
——	அஸர்	——
——	மஃரிப்	இரண்டு ரக்அத்கள்
——	இஷா	இரண்டு ரக்அத்கள்

சிறந்த ராதிபான சுன்னத் என்பது நபியவர்கள் பிரயாணத்திலும், ஊரிலும் இருக்கும் போது தொழுத பஜ்ருடைய சுன்னத்தாகும். ஆயிஷா ரழி அவர்கள் அறிவிக்கறார்கள். «நபி(ஸல்) அவர்கள் ஃபஜ்ருடைய ஸுன்னத் அளவிற்கு வேறு எந்த உபரித் தொழுகைக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்ததில்லை»(புஹாரி முஸ்லிம்)

வாஜிபுகளில் குறைவுகள் வராமல் சுன்னத்தாக செய்தல்.

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

ஆயிஷா(ரலி) அறிவித்தார்.

«நபி(ஸல்) அவர்கள் ஸுப்ஹுக்கு முன் இரண்டு ரக்அத்களில் அல்ஹம்து ஓதினார்களா? என்று நான் நினைக்குமளவுக்குச் சுருக்கமாகத் தொழுவார்கள்»(ஆதாரம் புஹாரி) பஜ்ருடைய சுன்னத்தை கழா செய்வது சுன்னத்தாகும்.

1. அவர் சுபஹிற்கு முன்னர் தொழவில்லையாயின் தொழுது கொள்ளலாம். இதனை பின்வரும் செய்தி உறுதிப்படுத்துகின்றது. கைஸ் பின் அம்ரு ரழி அறிவிக்கிறார்கள். நபியவர்கள் ஒரு மனிதர் சுபஹ் இற்கு பின்னர் இரண்டு ரக்அத் தொழுவதை கண்டார்கள். அதற்கு நபியவர்கள் கூறினார்கள். «சுபஹ் தொழுகை இரண்டு ரக்அத்கள் தான்» (ஆதாரம் அபூதாவுத்)

என்றார்கள். அதற்கு அம் மனிதர் நான் சுபஹ் தொழுகையின் முன் சுன்னத் தொழவில்லை. அதனால் தான் தொழுதேன் என்றார்கள். அதற்கு நபியவர்கள் அமைதியாக இருந்தார்கள்.

2. சூரிய உதயத்தின் பின்னர். நபியவர்கள் கூறினார்கள் – «யார் சுப்ஹிற்குரிய சுன்னத்தை தொழவில்லையோ அவர் சூரியன் உதயமாகிய பின்னர் தொழுது கொள்ளட்டும்»(ஆதாரம் திர்மிதி)

கேள்வி

- ளுஹருக்கு பின்னால் நான்கு ரக்அத் தொழுவது சிறப்பு என்பதை உறுதிப்படுத்துகின்றது. நபியவர்கள் கூறினார்கள் " யார் ளுஹருக்கு முன்னும், பின்னும் நான்கு ரக்அத் தொழுகிறாரோ அவருக்கு நரகம் ஹராமாக்கப்பட்டு விடும்." (அதாரம் அபூதாவுத்)

- அஸருக்கு முன்னர் நான்கு ரக்அத் வலியுறுத்தப்படாத சுன்னத் தொழுவது சுன்னத்தாகும். நபியவர்கள் கூறினார்கள் "யார் அஸருக்கு முன்னர் நான்கு ரக்அத் தொழுகிறாரோ அல்லாஹ் அவர் மீது இரக்கம் காட்டுகிறான்." (அதாரம் அபூதாவுத்)

- அதே போன்று வலியுறுத்தப்படாத சுன்னத்தாகவுள்ள அஸர், மஃரிப், இஷாவுடைய முன் சுன்னத்தை மாரக்கமாக்கியுள்ளது. நபியவர்கள் கூறினார்கள் " "ஒவ்வொரு பாங்குக்கும் இகாமத்துக்குமிடையில் ஒரு தொழுகை உண்டு' என்று நபி(ஸல்) அவர்கள் இரண்டு முறை கூறிவிட்டு மூன்றாம் முறை 'விரும்பியவர்கள் தொழலாம்' என்றார்கள்" (புஹாரி முஸ்லிம்). இரண்டு அதான் என்பது "அதானும் இகாமத்தும்"

- மறதி காரணமாக அல்லது தூக்கம் காரணமாக சுன்னத் தொழுகையை கழாச் செய்யலாம். அது வெறுக்கத்தக்க நேரமாக இருந்தாலும் சரியே.. நபியவர்கள் வேலைப்பழு காரணமாக அஸர் தொழுகையின் பின்னர் ளுஹருடைய சுன்னத்தை தொழுதார்கள்.

இரண்டாவது – வித்ரு தொழுகை

வித்ரின் சட்டமும் சிறப்பும்

இது வலியுறுத்தப்பட்ட சுன்னத்தாகும். நபியவர்கள் கூறினார்கள் «அல்லாஹ் ஒருவன் ஒற்றைப்படையை விரும்புகிறான். குர்ஆன் வழங்கப்பட்டவர்களே நீங்கள் வித்ரை நிறை வேற்றுங்கள்» (ஆதாரம் அபூதாவுத்)

www.al-feqh.com/ta

பிராயாணத்தின் போதும் ஊரில் இருக்கும் போதும் நபியவர்கள் வித்ரை பேணுவராக இருந்தார்கள்.

வித்ர் தொழுகையின் முறை

1- ஆக்கக் குறைந்தது ஒரு ரக்அத் ஆகும். ஆகக்கூடியது பதினோரு ரக்அத்களாகும். அல்லது பதின்மூன்று ரக்அத்களாகும். பின்னர் ஒன்றாக வித்ரை தொழுவார்

2-அதில் உயர்வானது முன்றாக பூர்த்தி செய்வதாகும். – இரண்டு ரக்அத் தொழுது ஸலாம் கொடுத்தல், பின்னர் ஒரு ரக்அத் தொழுது ஸலாம் கொடுத்தல், அதனை தொடராக தொழுதால் ஒரு அத்தஹியாத்து ஓத வேண்டும். அதில் முதல் ரக்அதில் சூரதுல் அஃலாவை ஓதுவது சுன்னாவாகும். இரண்டாவது ரக்அத்தில் சூரதுல் காபிருன், மூன்றாவது ரக்அத்தில் சூரதுல் இஃலாஸ் ஓத வேண்டும். அதனை உபை பின் கஃப் ரழியின் செய்தி உறுதிப்படுத்துகின்றது «நபியவர்கள் வித்ர் தொழுகையில் முதல் ரக்அத்தில் ஸப்பிஹிஸ்ம ரப்பிகல் அஃலா, இரண்டாம் ரக்அத்தில் குல்யா அய்யுஹல் காபிரூன், மூன்றாவது ரக்அத்தில் குர்குவல்லாஹூ அஹத் ஆகியவற்றை ஓதக் கூடியவராக இருந்தார்கள்.» (ஆதாரம் நஸாஈ)

வித்ர் தொழுகையின் நேரம்

இஷாவுடைய தொழுகைக்கு பின்னர் இருந்து பஜ்ர் உதயம் ஆரம்பமாகும் வரை.இரவின் மூன்றாவது பகுதியில் அதை நிறைவேற்றுவது சிறந்ததாகும். ஜாபிர் ரழி அவர்களது செய்தியில் நபியவர்கள் கூறினார்கள். «யார் இரவின் இறுதி நேரத்தில் எழுவதை பயப்படுகிறாரோ அவர் அவர் ஆரம்பத்தில் வித்ர் தொழட்டும்» (ஆதாரம் முஸ்லிம்) இதற்கு பின்னால் வித்ர் ஏதும் இல்லை. நபியவர்கள் கூறினார்கள் «இரவில் இரண்டு வித்ர் இல்லை. (ஆதாரம் அபூதாவுத்) இரவின் இறுயில் எழ முடியாது என அஞ்சுபவர் இரவின் ஆரம்பப் பகுதியிலேயே வித்ர் தொழுதுவிடட்டும்! இரவின் இறுதியில் எழ முடியும் என நம்புகின்றவர் இரவின் இறுதியிலேயே வித்ர் தொழட்டும். ஏனெனில், இரவின் இறுதி நேரத்தில் தொழும்போது (வானவர்கள்) பங்கேற்கின்றனர். இதுவே சிறந்ததாகும்»(ஆதாரம் முஸ்லிம்)

வித்ர் தொழுகையின் கேட்கும் துஆ

வித்ர் தொழுகையில் கடைசி ரக்அத்தில் ருகூவில் இருந்து எழும்புவதற்கு (ஆதாரம் அபூதாவுத்) அல்லது அதிலிருந்து உயர்ந்த (ஆதாரம் புஹாரி) பின்னர் தனது கைகளை உயர்த்தி பின்வரும் துஆவை கேட்பார்.

«அல்லாஹூம்ம அஹ்தினி பீமன் ஹதய்த், வஆபினி பீ மன் ஆபய்த், வதவல்லனி பீ மன் தவல்லய்த், வபாரிக் லீ பீமா அஃதய்த், வக்னி ஷர்ர மா கழய்த், பஇன்னக தக்ழி வலா யக்ழி பயின்னகு லா யத்ஹூலு மின் வாயல்த், வலா ய்யிசு மின் ஆதய்த், தபாரக ரப்பனா வதஆலய்த்»(ஆதாரம் திர்மிதி) -இதன் போது பின்னாலுள்ள மஃமும் ஆமீன் கூற வேண்டும். இன்னக தக்ழி பில் ஹக்கி எனும் இடத்தில் அமைதியாக இருக்க வேண்டும்.

கேள்வி

1- வித்ர் தொழுகைக்கு பின்னால் மூன்று முறை «சுபஹானல் மலிகுல் குத்தூஸ் »(ஆதாரம் தாரகுத்னி – இதன் அறிப்பாளவர் வரிசை ஸஹீஹானது.)என கூறுவது சுன்னத்தாகும்.

2- துஆவின் பின்னர் முகத்தை தடவுவதற்கு மார்க்கத்தில் அனுமதி இல்லை. நபியவர்கள் பற்றி வந்துள்ளவைகளில் அதற்கு ஆதாரம் இல்லை.

3- குனூத்தை பொறுத்த வரை அது வருடம் பூராக செய்தால் ஆகுமானது. ஆனால் ரமழான் கடைசியில் மாத்திரம் செய்வது கூடாது. பர்ளான அனைத்து தொழுகைகளிலும் குனுதுன் நவாஸில் ஓதுவது ஆகுமானது.

- குர்ஆன் பூரணமாக ஓதி முடிந்ததும் கத்தம் ஓதுவது மார்க்கத்தில் அனுமதிக்கப்படாத ஒன்றாகும்.

வித்ரை பகலில் கழாச் செய்தல்

வித்ரை பகல் நேரங்களில் கழாச் செய்ய மார்க்கம் அனுமதித்துள்ளது. ஆயிஷா ரழி அவர்கள் அறிவிக்கிறார்கள் நபியவர்கள் இரவில் தவறவிடப்பட்ட தொழுகைகளை 12 ரக்அத்களாக பகலில் தொழுவார்கள். (ஆதாரம் முஸ்லிம்).

www.al-feqh.com/ta

மூன்றாவது – தராவீஹ் தொழுகை

தராவிஹ் என்பது ரமழான் இரவில் நிறைவேற்றப்படும் தொழுகையாகும். ஒவ்வொரு நீண்ட நான்கு ரக்அத்களுக்கு இடையில் சற்று ஓய்வு எடுப்பதால் இதற்கு தராவீஹ் என பெயர் வரக் காரணமாகும்.

தராவிஹ் தொழுகையின் சிறப்பு

நபியவர்கள் கூறினார்கள் «யார் ரமழானை ஈமானோடும், நன்மையை எதிர்பார்த்தும் அடைந்து கொள்கின்றாரோ அவருடைய முன் சென்ற பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன». (புஹாரி, முஸ்லிம்)

தராவிஹ் தொழுகையின் சட்டம்

தராவிஹ் தொழுகை வலியுறுத்தப்பட்ட சுன்னத்தாகும். நபியவர்கள் ரமழான் காலத்தில் இதனை நிறைவேற்ற அனுமதித்துள்ளார்கள். இரவில் நபியவர்கள் ஸஹாபாக்களுக்கு பள்ளியில் தொழுவித்தார்கள். பின்னர் து பர்ளாக ஆகிவிடுமோ என பயந்து விட்டு விட்டார்கள். அதன் பின்னர் ஸஹாபாக்களும் அவ்வாறே செய்தார்கள். (புஹாரி முஸ்லிம்)

தராவிஹ் தொழுகையின் ரக்அத்தின் எண்ணிக்கைகள்

அதில் சிறந்த்து பதினொரு ரக்அத் ஆகும். ஏன்னில் நபியவர்கள் அதிகமாக அதனையே செய்துள்ளனர். ஆயிஷா ரழி அவர்களிடம் நபியவர்களிடம் ரமழான் கால இரவுத் தொழுக பற்றி கேட்கப்பட்ட போது «நபியவர்கள் பதினொரு ரக்அத்திற்கு அதிகமாக தொழவில்லை என பதிலளித்தார்கள்» (ஆதாரம் முஸ்லிம்)

இஷாத் தொழுகையின் நீய்யத்தில் தராவீஹ் தொழுதல்

ஒருவர் இஷாத் தொழுகைக்கு தாமதமாக வந்தால் மனிதர்கள் தராவீஹ் தொழுது கொண்டிருப்பின் அவர்களுடன் இஷாவின் நீய்யத்துடன் இணைந்து கொள்வார். இமாம் ஸலாம் கொடுத்த பின்னர் எழுந்து அவரது தொழுகையை பூரணப்படுத்துவார்.

கேள்வி

1- கியாமு லைல் தொழுகை வருடம் முழுவதும் நிறைவேற்றப்படும் வலியுறுத்தப்பட்ட சுன்னத்தாகும். அதனை விடுவது வெறுக்கத்தக்க செயலாகும். அப்துல்லாஹ்(ரலி) அறிவித்தார். ஒருவர் விடியும் வரை தூங்கி கொண்டே இருக்கிறார். தொழுகைக்கு எழுவதில்லை என்று நபி(ஸல்) அவர்களிடம் கூறப்பட்டது. அதற்கு நபி(ஸல்) அவர்கள் «ஷைத்தான் அவர் காதில் சிறுநீர் கழித்துவிட்டான்' ». (புஹாரி முஸ்லிம்) என்று விடையளித்தார்கள். யார் இரவில் விழித்து அதனை தொழாமல் விடுவது வெறுக்கத்தக்க செயலாகும். அப்தில்லாஹ் பின் அம்ர் இப்னு ஆஸ் ரழி அறிவிக்கின்றார்கள். நபியவர்கள் கூறினார்கள் «அல்லாஹவின் அடியர்களே இரவில் எழுந்து கியாமுல் லைல் தொழுகையை விட்டவர் போல இருக்காதீர்கள்»

2- தூங்கும் போது கியாமுல் லைல்யிற்காக நீய்யத் வைப்பது ஆகுமாகும். இன்னும் தூங்கி எழும்பியதும் துஆக்களை நினைவு ஓதும் போது நீய்யத் வைப்பது சுன்னத்தாகும். ஹுதைஃபா(ரலி) அறிவித்தார்.

நபி(ஸல்) அவர்கள் தஹஜ்ஜுத் (யகூஸ்) தொழுவதற்காக இரவில் எழும்போது பல் துலக்குவார்கள். (புஹாரி முஸ்லிம்) இப்னு அப்பாஸ்(ரலி) அறிவித்தார். என்னுடைய சிறிய தாயார் மைமூனா(ரலி) அவர்களின் வீட்டில் நான் ஒரு நாள் இரவு தங்கினேன். நான் தலையணையின் பக்கவாட்டில் சாய்ந்து தூங்கினேன். நபி(ஸல்) அவர்களும் அவர்களின் மனைவியும் தூங்கினார்கள். இரவின் பாதி வரை கொஞ்சம் முன் பின்னாக இருக்கலாம். நபி(ஸல்) தூங்கினார்கள். பின்னர் விழித்து தங்களின் கையால் முகத்தைத் தடவித் தூக்கக் கலக்கத்தைப் போக்கினார்கள். பின்னர் ஆலு இம்ரான் என்ற அத்தியாயத்தின் இறுதியிலுள்ள பத்து வசனங்களை ஓதினார்கள்.

ஒரு ஆண் இரவுத் தொழுகைக்காக எழுந்தால் பெண்களையும் எழுப்புவது அவசியமாகும். அதே போல பெண்கள் எழுந்தால் அவர்கள் ஆண்களை எழுப்ப வேண்டும். நபியவர்கள் கூறினார்கள் «ஒருவர் தனது குடும்பத்தை இரவில் எழுப்பி இரண்டு ரக்அத் தொழ வைத்தால் அவர்கள் நினைவு கூறப்பட்டவர்களில் உள்ளவராக எழுதப்படுவார்கள்»(ஆதாரம் அபூதாவுத்)

3- இரவுத் தொழுகையில் ஒருவருக்கு தூக்கம் மேலிட்டால் அதனை அவர் விட வேண்டும். அவர் தூக்கம்நீங்கும்வரைஓய்வெடுக்கவேண்டும்.ஆயிஷா ரழி அவர்கள் கூறினார்கள். நபியவர்கள் கூறினார்கள்

https://www.al-feqh.com/ta

«'உங்களில் ஒருவர் தொழுது கொண்டிருக்கும்போது கண் அயர்ந்தால், அவரைவிட்டும் தூக்கக் கலக்கம் நீங்கும் வரை அவர் (தொழுவதை விட்டுவிட்டு) தூங்கட்டும். உங்களிலே அவர் கண் அயர்ந்து கொண்டே தொழுதால் அவர் (தொழுகையில்) பாவ மன்னிப்புக் கோருகிறாரா, தன்னைப் பழிக்கிறாரா என்பது அவருக்குத் தெரியாது» (புஹாரி முஸ்லிம்)'

4- இரவின் மூன்றாவது பகுதியில் பாவமன்னிப்பிலும், பிரார்த்தனையிலும் ஈடுபடுவது ஆகுமானது. அபூ ஹுரைறா ரழி அவர்கள் அறிவிக்கிறார்கள். நபியவர்கள் கூறினார்கள்

«நம்முடைய இறைவன் ஒவ்வொரு இரவும் கீழ் வானத்திற்கு இறங்கி இரவில் மூன்றில் ஒரு பகுதி இருக்கும்போது, 'என்னிடம் யாரேனும் பிரார்த்தித்தால் அதை நான் அங்கீகரிக்கிறேன். யாரேனும் என்னிடம் கேட்டால் அவருக்கு கொடுக்கிறேன். யாரேனும் என்னிடம் பாவமன்னிப்புக் கோரினால் அவரை நான் மன்னிக்கிறேன்' என்று கூறுவான்'»(புஹாரி முஸ்லிம்)

தொழுகைக்காக எழும்புதல்

நான்காவது லுஹா தொழுகை

லுஹாவுடைய நேரத்தில் இதனை இஸ்லாம் சுன்னத்தாக்கியுள்ளது.

லுஹாவுடைய நேரம் – சூரியன் உதித்த்திலிருந்து ஒரு ஈட்டியளவு உயரும் வரையிலாகும். இவ்வாறு உயரும் போது கிட்டத்தட்ட முக்கால் மணித்தியாலங்கள் இருக்கும். அதிகமான சூடு ஆரம்பிக்கும் நேரமே அதில் சிறந்த்தாகும். நபியவர்கள கூறினார்கள் «சுடுமணலில் ஒட்டகக்குட்டியின் கால் (சுடு மணலில் ஒட்டக குட்டிகள் சூட்டில் குதிப்பது) குழம்புகள் கரிந்துவிடும் (பெண் ஒட்டகத்திடம் இருந்து பிரிந்த சிறிய குட்டி) நேரமே அவ்வாபீன் தொழுகையின் நேரமாகும்»(ஆதாரம் முஸ்லிம்)

லுஹா தொழுகையின் சிறப்புகள்

ஹதீஸில் குத்ஸியில் அல்லாஹ் கூறுகிறான்.. «ஆதமுடைய மகனே பகலின் ஆரம்பத்தில் எனக்காக நான்கு ரக்அத் தொழுவீரானால் அதுவே கடைசி பகலில் முக்கியமானதாகும்»(ஆதாரம் முஸ்லிம்)

லுஹா தொழுகையின் எண்ணிக்கை

இரண்டு ரக்அத் தொழுவது ஆகுமாகும். அல்லது நான்கு,ஆறு,எட்டு என எதுவானாலும் தொழலாம். மேலும் எவ்வாறு தொழுதாலும் நபியவர்கள் காட்டித் தந்த பிரகாரம் இரண்டு ரக்அத் முடிந்த்தும் ஸலாம் கொடுத்து தொழுவதே சரியானதாகும்.

- அது ஒவ்வொரு மூட்டிற்குரிய ஸதகாக்களில் ஒன்றாகும். (மனித மூட்டுக்கள்) நபியவர்கள் கூறினார்கள். «உங்களில் ஒருவர் ஒவ்வொரு காலையிலும் (தமது உடலிலுள்ள) ஒவ்வொரு மூட்டிற்காகவும் தர்மம் செய்வது கடமையாகும்;இறைவனைத் துதிக்கும் ஒவ்வொரு துதிச் சொல்லும் (சுப்ஹானல்லாஹ்) தர்மமாகும். ஒவ்வொரு புகழ்மாலையும் (அல்ஹம்து லில்லாஹ்) தர்மமாகும். ஒவ்வொரு "ஓரிறை உறுதிமொழி"யும் (லா இலாஹ இல்லல்லாஹ்) தர்மமாகும்; அவனைப் பெருமைப்படுத்தும் ஒவ்வொரு சொல்லும் (அல்லாஹு அக்பர்) தர்மமே! நல்லதை ஏவுதலும் தர்மமே! தீமைகளைத் தடுத்தலும் தர்மமே! இவை அனைத்திற்கும் (ஈடாக) முற்பகல் நேரத்தில் (ளுஹா) இரண்டு ரக்அத்கள் தொழுவது போதுமானதாக அமையும்.»(ஆதாரம் முஸ்லிம்)

- யார் நான்கு ரக்அத் தொழுகிறாரோ அல்லாஹ் அவருக்கு போதுமானவனாவான். நபியவர்கள் கூறினார்கள்.«ஆதமுடைய மகனே பகலின் ஆரம்பத்தில் எனக்காக நான்கு ரக்அத் தொழுவீரானால் அதுவே கடைசி பகலில் முக்கியமானதாகும்»(ஆதாரம் முஸ்னத் அஹ்மத்)

- யார் ஒருவர் சுபஹ் ஜமஅத்தாக தொழுத பின்னர் சூரியன் உதிக்கும் வரை அல்லாஹ் நினைவு கூர்ந்து பின்னர் லுஹா தொழுகின்றாரோ அவருக்கு ஹஜ், உம்ராவை பூரணமாக செய்த நன்மை கிடைக்கும். நபியவர்கள் கூறினார்கள் «ஆதமுடைய மகனே பகலின் ஆரம்பத்தில் எனக்காக யார் ஒருவர் சுபஹ் ஜமஅத்தாக தொழுத பின்னர் சூரியன் உதிக்கும் வரை அல்லாஹ் நினைவு கூர்ந்து பின்னர் லுஹா

www.al-feqh.com/ta

தொழுகின்றாரோ அவருக்கு ஹஜ், உம்ராவை பூரணமாக செய்த நன்மை கிடைக்கும்.» பின்னர் நபியவர்கள் கூறினார்கள் «பூரணமாக, பூரணமாக, பூரணமாக» (ஆதாரம் திர்மிதி – அல்பானி ரஹ் சரியானது என கூறியுள்ளனர்.)

ஐந்தாவது தஹ்யதுல் மஸ்ஜித்

பள்ளியில் நுழைபவர் உட்காருவதற்கு முன்னர் தொழ வேண்டிய இரண்டு ரக்அத் தொழுகையாகும். அதனுடைய சட்டம், வலியுறுத்தப்பட்ட சுன்னத்ததாகும். அதற்கு ஆதாரமாக நபியவர்கள் கூறினார்கள். «உங்களில் ஒருவர் பள்ளிக்குள் நுழைந்தால் இரண்டு ரக்அத் தொழாமல் உட்கார வேண்டாம்»(புஹாரி முஸ்லிம்)

அவ்விரண்டிற்கும் ராதிபான சுன்னத் அல்லது பர்ழுடைய நன்மை கிடைக்கும். யார் பள்ளியில் லுஹர் தொழ வந்து அவர் ருஹருடய சுன்னத்தை தொழுகிறார் எனின் அவது சுன்னதான தொழுகையாகவே கூலி வழங்கப்படும். அது தஹ்யதுல் மஸ்ஜித் ஆகாது.

தஹ்யதுல் மஸ்ஜித்

ஆறாவது நன்மை நாடித் தொழுதல்.

நன்மையான காரியத்தை நாடி அது நடப்பதற்கு முன்னர் ஓர் அடியான் இரண்டு ரக்அதாக தொழும் தொழுகை இதுவாகும். இஸ்லாம் அவ்வணக்கத்தை அடியானும் ஏற்படுத்தியுள்ளது. அதன் பின்னர் அவன் பிரார்த்தனை செய்ய வேண்டும். நபியவர்கள் நபியவர்களுக்கு அல்குர்ஆனை கற்பித்தது போன்று இதனையும் கற்பித்துள்ளார்கள்.

நன்மை நாடி தொழுதலில் ஓத வேண்டிய துஆ

நபி(ஸல்) அவர்கள் குர்ஆனுடைய அத்தியாயங்களை எங்களுக்குக் கற்றுத் தந்தது போல் எல்லாக் காரியங்களிலும் நல்லதைத் தேர்வு செய்யும் முறையையும் கற்றுத் தந்தார்கள். அவர்கள் கூறினார்கள்: «'உங்களில் ஒருவருக்கு ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் கடமையல்லாத இரண்டு ரக்அத்களை அவர் தொழட்டும். பின்னர் 'இறைவா! உனக்கு ஞானம் இருப்பதால் உன்னிடம் நல்லதை வேண்டுகிறேன். உனக்கு வல்லமை இருப்பதால் உன்னிடம் வல்லமையை வேண்டுகிறேன். உன்னுடைய மகத்தான அருளை உன்னிடம் வேண்டுகிறேன். நீ அனைத்திற்கும் அறிகிறாய். நான் அறிய மாட்டேன். மறைவான என்னுடைய இந்தக் காரியம் என்னுடைய மார்க்கத்திற்கும் என்னுடைய வாழ்க்கைக்கும் என்னுடைய மறுமைக்கும் சிறந்தது என்று நீ அறிந்தால் அதற்குரிய ஆற்றலை எனக்குத் தா! அதை எனக்கு பரக்கத் செய்! இந்தக் காரியம் என்னுடைய மார்க்கத்திற்கும் என்னுடைய வாழ்க்கைக்கும் கெட்டது என்று நீ அறிந்தால் என்னைவிட்டு இந்தக் காரியத்தையும் இந்தக் காரியத்தையும்விட்டு என்னையும் திருப்பி விடு. எங்கிருந்தாலும் எனக்கு நல்லவற்றிற்கு ஆற்றலைத் தா! திருப்தியைத் தா! என்று கூறட்டும். அதன் பிறகு தம் தேவையைக் குறிப்பிடட்டும்».(ஆதாரம் புஹாரி)

நன்மை நாடுவதின் அடையாளம்.

ஒருவர் நன்மையை நாடுவதில் தவறில்லை. எதனை நாட வேண்டும் அல்லது நன்மையை நாடுபவர் காண்பதை கேட்டல் என்று எந்த நிபந்தனையும் கிடையாது. ஆனால் அது பாவமான அல்லது குடும்ப உறவை துண்டிக்கும் செயலாக இருக்க கூடாது. நன்மையான காரியம் நல்லதாக இருப்பின் அது நன்மையே.

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

> **உடலாரோக்கியத்திற்காக இரவுத் தொழுகையை நிறைவேற்றல்**
>
> உடலில் அதிகரிக்கும் குளோஸ்ட்டோல் ஹார்மோன்களை குறைப்பதற்காக இரவின் மூன்றாவது பகுதியில் நேரத்தோடு எழுந்து தொழுகையில் ஈடுபகின்ற போது அதில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக இரத்தத்தில் உள்ள சீனியின் அளவு கூட குறைவடைகின்றது.

ஏழாவது வுழுவின் பின்னாலான இரண்டு ரக்அத் சுன்னத்

அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்.

ஒரு ஃபஜ்ருத் தொழுகையின்போது பிலால்(ரலி) அவர்களிடம் «பிலாலேஸ இஸ்லாத்தில் இணைந்த பின் நிர் செய்த சிறந்த அமல் பற்றிக் கூறும்! ஏனெனில் உம்முடைய செருப்போசையை (பாதணயின் சத்தம்) சொர்க்கத்தில் கேட்டேன்», என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள் «அதற்கு பிலால்(ரலி) 'இரவிலோ, பகலிலோ நான் உளூச் செய்தால் அவ்வுளூவின் மூலம் நான் தொழ வேண்டுமென்று நாடியதைத் தொழாமல் இருப்பதில்லை. இதுதான் என்னுடைய செயல்களில் சிறந்த செயல்' என்று விடையளித்தார்கள்».(ஆதாரம் புஹாரி)

பொதுவான சுன்னத்கள்

எக்காரணமின்றி குறிப்பிட்ட நேரமின்றி செய்யப்படும் இபாத் ஆகும். தொழுகை தடுக்கப்பட்ட நேரம் அல்லாத வேளைகளில் இதனை தொழ முடியும். .

பொதுவான சுன்னத்திற்காக உதாரணங்கள்.

இரவுத் தொழுகை

நபியவர்கள் கூறினார்கள் «கடமையான தொழுகைகளுக்கு பிறகு சிறந்த தொழுகை இரவு நேரத் தொழுகையாகும்.» (ஆதாரம் முஸ்லிம்)

நபியவர்கள்கூறினார்கள்«சுவனத்தில் ஒரு மாளிகை உண்டு. அதன் வெளியில் இருந்து பார்த்தால் உள்ளே தெரியும். உள்ளே இருந்து பார்த்தால் வெளிப்புறம் தெரியும். அதனை உணவளித்தவர்களுக்கும், ஸலாத்தைப் பரப்பியவர்களுக்கும், மக்கள் உறங்கும் வேளையில் இரவில் தொழுதவர்களுக்குமாக அல்லாஹ் ஏற்பாடு செய்துள்ளான்.' என நபியவர்கள் கூறினார்கள்»(ஆதாரம் திர்மிதி)

> **காரணங்களுக்கான தொழுகையும், தொழுகை தடுக்கப்பட்ட நேரங்களும்.**
>
> காரணங்களுக்காக தொழுகை நடுத்துவது ஆகுமாகும். அதாவது காரணம் என்பது, தஹ்யதுல் மஸ்ஜித், ஜனாஸா தொழகை, போன்றவாகும். இதனை தொழுகை தடுக்கப்பட்ட நேரங்களிலும் தொழ முடியும்.

தொழுகை தடுக்கப்பட்ட நேரங்கள்

1- பஜ்ர் தொழுகை முடிந்தலிருந்து சூரியன் உதித்த பின்னரான நேரம். அது கிட்டத்தட்ட முக்கால் மணித்தியாலங்களாகும்.

2- சூரியன் சற்று சாயும் நேரம்.

3- அஸர் தொழுகையின் பின்னர் சூரியன் மறையும் நேரம்.

இதற்குஆதாரமாகஉக்பாஇப்னுஆமிர்ரழிஅவர்கள் கூறினார்கள்«மூன்று நேரங்களில் தொழ வேண்டாம்; அல்லது இறந்தவர்களைப் புதைக்க (அடக்கம் செய்தல்) வேண்டாம் என எங்களுக்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தடை விதித்துவந்தார்கள். சூரியன் உதயமாகத் துவங்கியதிலிருந்து (தெளிவானது) நன்கு உயரும்வரை,

ஒருவர்உச்சிப் பொழுதில் நிற்கும்போது நிழல் விழாது போகும்) நண்பகல் துவங்கியதிலிருந்து சூரியன் (மேற்கு) சாயும்வரை. சூரியன் அஸ்தமிக்கத் (நன்கு) தலைப்பட்டதிலிருந்து நன்கு மறையும்வரை»(ஆதாரம் முஸ்லிம்)

மழை வேண்டித் தொழுதல்

www.al-feqh.com/ta

பொருளடக்கம்

- மழை வேண்டி தொழுதல் என்பதன் வரைவிலக்கணம்
- இஸ்லாத்தில் மழை வேண்டி தொழுதல்
- மழை வேண்டும் தொழுகையின் நேரங்கள்
- மழை வேண்டி தொழுகையின் இடம்
- மழை வேண்டி தொழுகை தொழும் முறை
- மழை வேண்டி தொழுகையின் சட்டங்கள்
- மழை பொழியும் போது ஆகுமான விடயங்கள்

மழை வேண்டுதல்

பூமி காய்கின்ற போது அல்லது மழை குறைகின்ற பொது நீரை வேண்டி நிறைவேற்றப்படும் தொழுகை இதுவாகும்.

மழை வேண்டித் தொழுதல் மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டது என்பதற்கான ஆதாரம்.

மழை வேண்டித் தொழுதல் என்பது வலியுறுத்தப்பட்ட சுன்னத்தாகும். நபியவர் அவ்வாறே செய்ததாக அப்துல்லாஹ் இப்னு ஸைத் ரழி அறிவிக்கிறார்கள் «நபி (ஸல்) அவர்கள் திடலுக்குச் சென்று மழை வேண்டினார்கள். அப்போது கிப்லாவை நோக்கியவர்களாகத் தம் மேலாடையை மாற்றிப் போட்டு இரண்டு ரக்அத்கள் தொழுதார்கள்»(புஹாரி முஸ்லிம்)

மழை வேண்டித் தொழுகையின் நேரம்

பூமி காய்ந்து கிடக்கும் போது, மழை குன்றிய போது, கிணறுகள், ஊற்றுக்களில் தண்ணீர் வற்றிய போது, ஆறுகள் வற்றிய போது, மழை வேண்டித் தொழுவதை இஸ்லாம் மார்க்கமாக்கியுள்ளது. என்றாலும் சூரியன் உதித்து ஈட்டியளவு உயர்ந்த பின்னர் தொழுவது சுன்னத்தாகும். அதாவது பெருநாள் தொழுகை போல பஜ்ருடைய நேரத்திலிருந்து முக்கால் மணித்தியாலங்களின் பின்னர்.

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

மழை வேண்டித் தொழுகையின் இடம்

பள்ளியில் தொழுவதை விட திடலில் தொழுவதே சுன்னாவாகும். நபியவர்கள் அவ்வாரே செய்துள்ளார்கள்.

மழை வேண்டித் தொழுகையின் முறை

1- அது இரண்டு ரக்அத்தாகும். அதில் அதானும் இகாமத்தும் கிடையாது. மேலும் வெளிப்படையாக ஓத வேண்டும்.

2- ஆரம்ப தக்பீருக்கு பின்னால் ஏழு முறை தக்பீர் கூற வேண்டும். இரண்டாவது ரக்அத்திற்காக ஸுஜூதில் இருந்து எழும்பும் தக்பிருடன் ஐந்து தக்பீர் கூற வேண்டும்.

3- ஒவ் வொரு தக்பீரிலும் கையை உயர்த்தி அல்லாஹ்வை புகழ்ந்து நபியவர்கள் மீது ஸலவாத்தும் சொல்ல வேண்டும்.

4- தொழுகையின் பின்னர் இமாம் ஒரு குத்பா நிகழத்த வேண்டும். அதில் அதிகமாக பாவமன்னிப்பு, குர்ஆன் ஓத வேண்டும். பின்னர் மழை வேண்டி வந்துள்ள துஆக்களை கேட்க வேண்டும்.

5- இதன் போது இமாம் கிப்லாவை முன்னோக்கி தனது ஆடையை மாற்றி இடது பக்கத்தை வலமு பக்கமும் வலது பக்கத்தை இடது பக்கமும் ஆக்கிக் கொள்வார்.

மழை வேண்டித் தொழுவதில் உள்ள சட்டங்கள்

1- பாவங்களை விட்டும் தவ்பாச் செய்யம் படி மக்களுக்கு ஞாபகம் ஊட்டி நல்லுபதேசம் செய்ய வேண்டும். தேவை உடையவர்களை விட்டும் பாவிகள் வேளியேற வேண்டும். ஏனனில் பாவத்தினாலேயே மழை தடைப்பட்டுள்ளது. தவ்பா, பாவமன்னிப்பு, தக்வா இவைகளே துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கரிய காரணமாகும். அதே போல பரகத், நலவு நடப்பதற்குரிய காரணியாகும். மேலும் ஸதகா கொடுக்க வலியுறுத்துகின்றது. ஏனனில் அது ரஹ்மத்திற்கான காரணமாகும்.

2- அதற்காக ஒரு நாளை தீர்மானித்து மக்கள் அதற்காக தயாராக இருக்க வேண்டும்.

3- இதன் பொது அச்சத்தோடு, கீழ்படிந்து, பணிவானவர்களாக அல்லாஹ்விடம் வேண்டியவர்களாக செல்ல வேண்டும். இப்னு அப்பாஸ் ரழி அவர்கள் கூறினார்கள். «நபியவர்கள் கீழ்படிந்தவர்களாக, அமைதியாக, பணிவுடன் (அழகையும், அலங்காரத்தையும் விடுதல்) தொழும் இடத்தை அடையும் வரை இருப்பார்கள்»(ஆதாரம் அபூதாவுத்)

https://www.al-feqh.com/ta

4- கையை உயர்த்தியவர்களாக பாவமன்னிப்பு, துஆ போன்றவைகளை அதிகமாக கேட்க வேண்டும்.

மழை பொழியும் போது ஆகுமான செயல்கள்

முதல் முதலாக மழை பொழியும் போது ஆடையை விலக்கி நிற்பது ஆகுமானது. «(ஒரு நாள்) நாங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் இருந்தபோது மழை பெய்தது. உடனே அவர்கள் மழைத் துளிகள் தம்மீது விழும் விதமாக தமது ஆடையைச் சற்று விலக்கினார்கள். நாங்கள், "அல்லாஹ்வின் தூதரே, ஏன் இவ்வாறு செய்தீர்கள்?" என்று கேட்டோம். அதற்கு அவர்கள் "இது (புத்தம் புதிதாக) இப்போதுதான் இறைவனிடமிருந்து வருகிறது" என்று பதிலளித்தார்கள்»(ஆதாரம் முஸ்லிம்)

.com/ta

https://www.al-feqh.com/ta

மழை பொழிவது அல்லாஹ் ஒருவனின் அருளினால் ஆகும்.

அல்லாஹ்வின் கண்ணியத்தாலும் அருளினாலும் தான் மழை பொழிகின்றது என்பதை ஒரு முஸ்லிம் ஈமான் கொள்வது அவசியமாகும். ஆனால் “இன்ன இன்ன நட்சத்திரத்தால் தான் மழை பொழிந்த்து” என சிலர் கூறுவது போன்று கூறுவது ஷிர்க் ஆகும்.

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

கிரகண தொழுகை

பொருளடக்கம்

- கிரகண தொழுகையின் வரைவிலக்கணம்
- கிரகண தொழுகையின் நுட்பம்
- கிரகண தொழுகை
- கிரகண தொழுகையின் சட்டம்
- கிரகண, தொழுகையின் நேரங்கள்
- கிரகண தொழுகை முறை
- கிரகண தொழுகையின் சுன்னத்கள்

சூரிய கிரகணம்

பகல் வேளைகளில் சூரிய வெளிச்சம் நீங்குவதை குறிக்கும்

சந்திர கிரகணம்

இரவு வேளைகளில் சந்திர ஒளி நீங்குதல்

கிரகண தொழுகையின் நுட்பம்

அது இரண்டும் அல்லாஹ்வை பயப்பட வேண்டும் என்பதற்காக அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள அத்தாட்சியாகும். நபியவர்கள் கூறினார்கள் «இவ்விரண்டும் (சூரியன், சந்திரன்) அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் உள்ளவையாகும். எவருடைய மரணத்திற்கோ வாழ்விற்கோ அவற்றுக்குக் கிரகணம் பிடிப்பதில்லை. நீங்கள் கிரகணத்தைக் காணும்போது விரைந்து தொழுங்கள்' என்று கூறினார்கள்»

(ஆதாரம் அபூதாவுத்)

கிரகண தொழுகை

கிரகண தொழுகையின் சட்டம்

இது வலியுறுத்தப்பட்ட சுன்னத்தாகும். நபியவர்கள் கூறினார்கள்.«சூரியன் சந்திரன் ஆகிய இரண்டும் அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் உள்ளவையாகும். எவருடைய மரணத்திற்காகவோ வாழ்விற்காகவோ அவற்றிற்குக் கிரகணம் பிடிப்பதில்லை. கிரகணத்தை நீங்கள் காணும்போது தொழுகைக்கு விரையுங்கள்' என்று கூறினார்கள்»

(புஹாரி முஸ்லிம்)

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

- கிரகண, தொழுகையின் நேரங்கள்

- கிரகரணம் ஆரம்பித்திலிருந்து அது முடியும் வரையில் உள்ளதே அதன் நேரமாகும்.

- கிரகண தொழுகை தொழுபவர் கிரகணம் நீங்கும் வரை திரும்பக் கூடாது. அது நீங்கும் வரை பாவமன்னிப்பு, பிரார்த்தனைகளில் தொடராக ஈடுபட வேண்டும்.

கிரகண தொழுகை முறை

ஆயிஷா(ரலி) அறிவித்தார். «நபி(ஸல்) அவர்கள் காலத்தில் சூரிய கிரகணம் ஏற்பட்டது. மக்களுக்கு நபி(ஸல்) அவர்கள் தொழுகை நடத்தினார்கள். (அத்தொழுகையில்) நீண்ட நேரம் நின்றார்கள். (ருவிலிருந்து) எழுந்து நீண்ட நேரம் நின்றார்கள். இது முதல் நிலையை விடக் குறைந்ததாக இருந்தது. பின்னர் மற்றொரு ருகூவுச் செய்தார்கள். இது முதல் ருகூவை விடக் குறைந்ததாக இருந்தது. பின்னர் நீண்ட நேரம் ஸஜ்தாச் செய்தார்கள். பின்னர் முதல் ரக்அத்தில் செய்தது போன்றே இரண்டாம் ரக்அத்திலும் செய்தார்கள். கிரகணம் விலகியதும் தொழுகையை முடித்தார்கள். மக்களுக்கு உரை நிகழ்த்தினார்கள். (அவ்வுரையில்) அல்லாஹ்வைப் புகழ்ந்து போற்றிவிட்டு, 'சூரியனும் சந்திரனும் அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் உள்ளவையாகும். எவருடைய மரணத்திற்கோ எவருடைய வாழ்வுக்கோ அவற்றுக்குக் கிரகணம் பிடிப்பதில்லை. கிரகணத்தை நீங்கள் கானும்போது அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள். அவனைப் பெருமைப் படுத்துங்கள்; தொழுங்கள்; தர்மம் செய்யுங்கள்' என்று குறிப்பிட்டார்கள். மேலும் தொடர்ந்து 'முஹம்மதின் சமூதாயமே! ஓர் ஆணோ, பெண்ணோ விபச்சாரம் செய்யும்போது அல்லாஹ் கடுமையாக ரோசம் கொள்கிறான். முஹம்மதின் சமுதாயமே! நான் அறிவதை நீங்கள் அறிந்தால் குறைவாகச் சிரித்து அதிகமாக அழுவீர்கள்' என்றும் குறிப்பிட்டார்கள்»(ஆதாரம் புஹாரி)

கிரகணம் ஏற்பட்டால் –

1- தொழுகைக்காக அழைக்க வேண்டும். அதற்கு (ஸலாதுல் ஜமாஆ) எனப்படும்.

2- மக்கள் ஒன்று சேர்ந்தால் இமாம் நீண்ட இரண்டு ரக்அத்கள் தொழுகை நடத்துவார். அதில் கிராஅத்தை வெளிப்படுத்த வேண்டும். ஆரம்பத்தில் பாத்திஹாவை ஓதி நீண்ட சூறாவை ஓத வேண்டும். பின்னர் நீண்ட ருகூஃ செய்ய வேண்டும். பின்னர் அதிலிருந்து“ஸமியல்லாஹு லிமன் ஹமிதா ரப்பனா வலகல் ஹம்த்” என கூறியவாக உயர்வார். பின்னர் பாத்திஹாவை ஓதி முந்திய சூறாவை விட சிறிய நீண்ட சூறாவை ஓதுவார். பின்னர் முதலாவது செய்ததை விட சிறியதாக நீண்ட ருகூஃ செய்ய வேண்டும். பின்னர் அதிலிருந்து“ஸமியல்லாஹு லிமன் ஹமிதா ரப்பனா வலகல் ஹம்த்” என கூறியவாக உயர்வார். பின்னர் நீண்ட இரண்டு ஸஜதாக்கள் செய்வார்.இதில் நடுவே உட்கார்வார். அது நீண்டதாக இருக்காது. பின்னர் இரண்டாவது ஸுஜூதிலிருந்து நேரத்தோடு உயர்வார். பின்னர் முதல் ரக்அத் போலவே இரண்டாவது ரக்அத்திலும் செய்வார். பின்னர் அத்தஹியாத்தில் இருந்து ஸலாம் கொடுப்பார்.

https://www.al-feqh.com/ta

கிரகண தொழுகையில் உள்ள சுன்னத்கள்

1- ஜமாஅத்தாக தொழ வேண்டும். தனியாக தொழுதாலும் அதில் பிரச்சினை இல்லை.

2- பள்ளியில் தொழ வேண்டும். அதற்காக பெண்கள் வந்தால் அதில் தடையில்லை.

3- அதில் நிற்றல், ருகூஃ, ஸஜூத் என்பன நீண்டதாக இருக்க வேண்டும். கிரகணம் நீங்கி விட்டால் அதனை குறுகியதாக பூரணப்படுத்தாலாம்.

4- இரண்டாவது ரக்அத் முதலாவது ரக்அத்தை விட சற்று குறுகியதாக இருக்க வேண்டும்.

5- பின்னர் நல்லுபதேசம் செய்ய வேண்டும். அதன் போது அல்லாஹ்வின் வல்லமைகள் பற்றி ஞாபகமூட்ட வேண்டும். அதில் கிரகணத்தின் சட்டங்கள தெளிவுபடுத்த வேண்டும். அல்லாஹ்வை வழிப்படும் படியும், தடுக்கப்பட்டதை விடும்படியும் உபதேசிக்க வேண்டும்.

6- துஆக்கள், நல்லமல்கள் பாவமன்னிப்பு போன்றவைகளை கிரகணம் நீங்கும் வரை அதிகப்படுத்த வேண்டும்.

7- இதன் போது இரண்டு கரங்களையும் உயர்த்தி பிரார்த்தனை செய்வது ஆகுமானதாகும். அப்துர் ரஹ்மான் இப்னு ஸம்ரத் ரழி அறிவிக்கிறார்கள் «நபியவர்கள் கையை உயர்தியவராக நிற்கும் போது நான் வந்தேன்» (ஆதாரம் முஸ்லிம்)

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

வழிகாட்டல்கள்

1- கிரகணம் சென்ற பின்னர் அதனை கழாச் செய்ய முடியாது

2- நவீன விஞ்ஞானம் மூலம் கிரணம் ஏற்படுவதற்கான காரணங்கள் அறியப்படுகின்றன. அவை இரண்டும் அல்லாஹ்வின் அத்தாடசிகளாகும். அதன் போது ஒரு முஸ்லிம் அல்லாஹ்வை பயந்தவராக அமல்களில் ஈடுபட வேண்டும். நபியவர்களுடைய காலத்தில் சூரிய கிரகணம் ஏற்பட்டால் பயந்தவர்களாக தனது ஆடையை எடுத்துக் கொண்டு வெளிக்கிழம்புவார்கள். இது நபியவர்கள் கடுமையாக பயந்த்தை குறிக்கின்றது.

3- யார் முதல் ருகூஃவை அடைகிறாரோ அவர் அத் தொழுகையை அடைந்து கொள்வார். யார் இரண்டாவது ரக்அத்தை அடைகிறாரோ அவர் இமாம் ஸலாம் கொடுத்த பின்னர் அதன் முறைப்படியே அத் தொழுகையை பூரணமாக நிறை வேண்டும்.

4- தடுக்கப்பட்ட நேரமானாலும் அப்போது கிரகண தொழுகை தொழ முடியும்.

5- கிரணம் பற்றி செய்தியை கேட்டு தொழ முடியாது. தொழுபவர் கிரகணத்தை வெற்றுக் கண்களால் காண வேண்டும்..



18

இரு பெருநாட்கள்

பொருளடக்கம்

- பெருநாளின் வெளிப்பாடுகள்
- இரு பெருநாட்களின் சட்டங்கள்
- இரு பெருநாட்களின் நேரங்கள்
- இரு பெருநாட்களின் தொழுகை முறை
- இரு பெருநாட்களின் இடம்
- இரு பெருநாட்களில் ஆகுமான அம்சங்கள்
- இரு பெருநாட்களில் உள்ளடங்குபவைகள்
- வழிமுறைகள்

பெருநாளின் வெளிப்பாடுகள்

முஸ்லிம்களுடை பெருநாள் இரண்டாகும். அதில் ஈதுல் பித்ர் ரமழானிற்கு பின்னரும். ஈதுல் அழ்ஹா அரபா தினத்திற்கு அடுத்த நாளும் ஆகும். அதனை அல்லாஹ் ஜாஹிலிய்ய மக்களின் விழாக்கழுக்கு பகரமாக எமக்கு ஏற்பாடு செய்திருக்கிறான். அனஸ் ரழி அறிவிக்கிறார்கள். ஜாஹிலிய்ய காலத்தில் ஒவ்வொரு வருடமும் இரு தினங்களில் அவர்கள் விளையாடக் கூடியவராக இருந்தார்கள் நபியவர்கள் மதீனாவுக்கு வந்த போது கூறினார்கள் «அவர்களுக்கு இரு தினம் விளையாடக் கூடிய தினமாக இருந்தது. அதற்கு பகரமாக சிறந்த ஒன்றை அல்லாஹ் ஏற்பாடு செய்துள்ளான். அவை ஈதுல் பித்ர், ஈதுல் அழ்ஹா போன்றவையாகும் »(ஆதாரம் முஸ்லிம்).காபிர்களுடைய விழாக்களில் கலந்து கொள்வது ஹறாமாகும். அது மார்ககத்தின் அடையாளம். அல்லது மார்க்கத்தின் ஒளியாகும். அல்லாஹ் கூறுகிறான். {உமக்கு வந்த உண்மையை விட்டும் (விலகி,) அவர்களுடைய மன இச்சைகளை நீர் பின்பற்ற வேண்டாம். உங்களில் ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் ஒவ்வொரு மார்க்கத்தையும், வழிமுறையையும் நாம் ஏற்படுத்தியுள்ளோம்; அல்லாஹ் நாடினால் உங்கள் அனைவரையும் ஒரே சமுதாயத்தவராக ஆக்கியிருக்கலாம்; ஆனால், அவன் உங்களுக்குக் கொடுத்திருப்பதைக் கொண்டு உங்களைச் சோதிப்பதற்காகவே (இவ்வாறு செய்திருக்கிறான்.} [மாயிதா 48] அல்லாஹ் இரண்டு பொருநாட்களை ஏற்படுத்தியுள்ளான். அது பெருநாள் தொழுகை என அழைக்கப்படுகின்றது. அதுவே சிறந்த வெளிப்பாடாகும்.

இரு பெருநாட்களின் சட்டம்

அது பர்ழு கிபாயாவாகும். அதற்காக சிலர் வந்தால் ஏனையவர்கள் பாவியாவதிலிருந்து நீங்கி விடுவர்.

- அது மிகவும் வலியுறுத்தப்பட்ட ஒன்றாக இருந்தது. அதனை நிறைவேற்றும் படி அவ்வாரே நபியவர்கள் ஏவினார்கள். என்றாலும்லும் பெண்களும் சிறுவர்களும் வயோதிபர்களையும் அதனை நிநைவேற்ற வெளிக்கிளம்புமாறும் ஏவினார்கள். மாதவிடாய் பெண்களை கூட தொழாவிட்டாலும் தொழுமிடத்திற்கு வருமாறு கூறினார்கள் என்றால் அத் தொழுகையின் சிறப்பை இது எடுத்துக்காட்டுகிறது. அது கடமை என்பதற்கான ஆதாரங்களை பார்ப்போம்.

1- அல்லாஹ் கூறுகிறான்.{எனவே, உம் இறைவனுக்கு நீர் தொழுது, குர்பானியும் கொடுப்பீராக} [கவ்தர் 02].

2- நபியவர்கள் பெண்களுக்கும் சேர்த்து ஏவினார்கள். உம்மு அதிய்யா ரழி அறிவிக்கிறார்கள் «இரு பெருநாட்களில் இளம் பெண்களையும், (முதலில் பருவமடைந்த பெண்கள்) திரைக்கப்பால் உள்ள பெண்களையும் (மாதவிடாய்) புறப்படச் செய்யும்படி நபி (ஸல்) அவர்கள் - எங்களுக்குக் கட்டளையிட்டார்கள். மாதவிடாய் ஏற்பட்ட பெண்கள் (நடக்கும் கன்னிகள்) முஸ்லிம்களின் தொழும் இடத்தைவிட்டு ஒதுங்கியிருக்குமாறு அவர்கள் கட்டளையிட்டார்கள்»(ஆதாரம் புஹாரி)

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

இரு பெருநாட்களின் நேரம்

சூரியன் ஈட்டியளவு உயர்வதை கண்கள் பார்கின்ற நேரத்தில் அத் நேரம் ஆரம்பிக்கிறது. அதன் அளவு சூரியன் உதித்து அரை மணி நேரத்திலிருந்து அது நீங்கும் வரையாகும்.

ஈதுல் அழ்ஹா தொழுகையை உழ்ஹியாவை வழங்க வேண்டும் என்பதற்காக முற்படுத்துவது சுன்னாவாகும். அதே போல ஈதுல் பித்ரை ஸகாத்துல் பித்ரை வழங்குவதற்காக வேண்டி பிற்படுத்துவது சுன்னாவாகும்.

இரு பெருநாட்களின் தொழுகை முறை

அது இரண்டு ரக்அத்தாகும். அதில் அதானும் இகாமத்தும் கிடையாது. மேலும் வெளிப்படையாக ஓத வேண்டும்.

1- முதலாவது ரக்அத்தில் ஆரம்ப தக்பீருக்கு பாத்திஹா ஓதுவதற்கு முன்னர் ஏழு தக்பீர் கூற வேண்டும்.

2- அஊது பிஸ்மியுடன் பாத்திஹா ஓத வேண்டும். அதன் பின்னர் ஒரு சூறாவை ஓத வேண்டும். அதில் முதலாவது ரக்அத்தில் சூரதுல் அஃலாவையும். இரண்டாவது ரக்அத்தில் சூரதுல் காஷியாவையும் ஓதுவது சுன்னத்தாகும். அல்லது முதலாவது ரக்அத்தில் சூரதுல் கா பையும். இரண்டாவது ரக்அத்தில் சூரதுல் கமரையும் ஓதுவது சுன்னத்தாகும்.

3- இரண்டாவது ரக்அத்தில் தக்பீர் கட்டிய பின்னர் ஐந்து தக்பீர் கூற வேண்டும். அதில் கைகளை உயர்த்தாமலிருப்பதே சரியானதாகும்.

4- தக்பீர்களுக்கிடையே அல்லாஹ்வை புகழ்ந்து நபியவர்கள் மீது ஸலவாத்து கூற வேண்டும்.

5- பின்னர் ஸலாம் கொடுத்தும் மிம்பர் மீது ஏறி இரண்டு குத்பாக்கள் நிகழ்த்தப்பட வேண்டும். அதிற்கிடைய சற்று இருந்து எழும்ப வேண்டும்.

6- ஈதுல் பித்ரின் போது அப்போதைக்கு தேவையான விடயங்களை மக்களுக்கு உபதேசிக்க வேண்டும். ஈதுல் அழ்ஹாவின் போது உழ்ஹியாவின சட்டங்களை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

பெருநாள் தொழுகையின் இடம்

பள்ளியல்லாத வேறு தொழுமிடத்தில் தொழுவதே சுன்னாவாகும். ஆனால் தேவை ஏற்பட்டால் பள்ளியில் தொழுவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை.

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

பெருநாள் தொழுகையின் ஆகுமானவைகள்

1- ஆண்கள் அழகான ஆடைகளை அணிய வேண்டும். பெண்களை பொறுத்தமட்டில் அழகை வெளிப்பத்தாத, மணம் பூசாமல் தொழுகைக்கு செல்ல வேண்டும்.

2- மஃமூம்கள் தொழுகைக்கு நேரத்தோடு வருகை தருவதோடு முதல் வரிசையில் நிற்க வேண்டும்.

3- நடந்தவராக ஒரு வழியால் சென்று மறு வழியால் வருதல், ஜாபிர் ரழி அறிவிக்கிறார்கள் «நபியவர்கள் பெருநாட்களில் பாதையை மாற்றக் கூடியவராக இருந்தார்கள்»(ஆதாரம் புஹாரி)

4- ஈதுல் பித்ரின் போது ஐந்து அல்லது மூன்று ஈச்சம் பழத்தை சாப்பிட்டு விட்டு செல்ல வேண்டும். ஈதுல் அழ்ஹாவின் போது திரும்பும் வரை அவ்வாறு சாப்பிடுவது கூடாது.

5- ஈதுல் பித்ரை தாமதப்படுத்துவது ஆகுமானதாகும். ஸகாதுல் பித்ரை மக்கள் கொடுக்க வேண்டும் என்பதற்கான அவ்வாறு செய்யப்படுகின்றது. ஈதுல் அழ்ஹாவை பொறுத்த வரையில் தக்பீர் கூறுவது அவசியமாகும்.

பெருநாள் தொழுகையின் சட்டங்களில் உள்ளவை

1- தொழுகை நடைபெறும் இடங்களில் பெருநாள் தொழுகைக்கு முன்னும் பின்னும் எந்த சுன்னத்தான தொழுகையும் இல்லை. ஆனால் பள்ளியில் தொழுகை நடத்தப்படும் என்றால் பள்ளியில் நுழையும் போது தஹ்யதுல் மஸ்ஜித் தொழுகை தொழலாம்.

2- யாராவது பெருநாள் தொழுகையையோ அல்லது அதின் பண்புகளிலோ ஏதாவதை தவற விட்டால் அதனை கழாச் செய்வது சுன்னாவாகும். அதன் இரண்டு ரக்அத்தையும் அதனுடைய தக்பீர் போன்றவற்றை நிறைவேற்றுவார்.

3- "அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், லாயிலாஹ இல்லல்லாஹு வஅல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், வலில்லாஹில் ஹம்து" என தக்பீர் கூறுவார். அதே போல அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர் கபீரா" என்றும் கூறலாம்.

4- தக்பீர் கூறும் போது ஆண்கள் சத்தத்தை உயர்த்துவது சுன்னத்தாகும். பெண்கள் சத்தத்தை தாழ்த்துவது சுன்னாவாகும். ஏன்னில் பெண்கள் தனது சத்தத்தை தாழ்த்துவதே ஏவலாகும்.

5- ஈதுல் பித்ரின் போது பஜ்ரில் இருந்து இமாம் தொழுகைக்கு செல்லும் வரையில் தக்பீரின் நேரமாகும். ஈதுல் அழ்ஹாவின் போது அய்யாமு தஷ்ரீக்குடைய மூன்று நாட்கள் வரை சூரியன் மறையும் வரை தக்பீர் கூறும் முறையாகும். இமாம் தொழுகைக்கு வரும் வரையில் தொழுமிடங்களில் தக்பீர் கூற வேண்டும். அதே போல ஜமாஅத்தாக தொழும் போது, கடைத் தெருக்களில் , வீடுகளிலும் தக்பீரை கூறலாம்.

வழிகாட்டல்கள்

1- அத்தினத்தில் முஸ்லிம்கள் தங்களுக்கிடையில் வாழத்துச் சொல்வது ஆகுமானது. இதன் போது "தகப்பல்லாஹு மின்னா வமின்கும். என கூறலாம்.

2- சந்தோசங்களை வெளிப்படுத்துவதும் ஆகுமானது. அத்தினத்தில் விருப்பத்திற்குரிய, நெருக்கமான உறவுகளோடு சந்தோசத்துடன் வாழ்த்துக்களை பரிமாறிக் கொள்ள வேண்டும்.

3- பெருநாள் தினத்தில் துண்டிக்கப்பட்ட குடும்ப உறவுகளோடு தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும். அவர்களுடைய உள்ளங்களை இணைக்கும் காரியங்களில் ஈடுபட வேண்டும்.

4- கப்றுகளை தரிசிப்பதற்கு மார்க்கத்தில் அனுமதியில்லை. ஏன்னில் அது பெருநாள் தின சந்தோசத்திற்கு எதிரான ஒன்றாகும்.

5- அத்தினத்தில் அல்லாஹ் ஹலாலாக்கிய அமைப்பில் ஆடைகள், உணவுகள் வழங்குவதை இஸ்லாம் அனுமதித்துள்ளது. ஏனனில் அது சந்தோசமான, மகிழ்சியான நாட்களாகும். அல்லாஹ் கூறுகிறான் {அல்லாஹ்வின் அருட்கொடையினாலும், அவனுடைய பெருங்கிருபையினாலுமே (இது வந்துள்ளது, எனவே) - இதில் அவர்கள் மகிழ்ச்சியடையட்டும், அவர்கள் திரட்டி வைத்திருக்கும் (செல்வங்களை) விட இது மிக்க மேலானது" என்று (நபியே!) நீர் கூறும்}[யூனுஸ் 58].

6- தடை செய்யப்பட இஸ்லாம் தடுத்தள்ளவைகளை அன்றய தினம்மேற்கொள்வது கூடாது. ஆண் பெண் கலப்பு, தொழுகையில் பொடுபோக்கு, இசை கேட்டல், இது போன்றவை

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

ஜனாஸா தொழுகை

மையத்தில் செயலாற்றுதல்

மரணிப்பதற்குரிய அடையாளம் தென்பட்டால் அவருக்கு லாயிலாக இல்லல்லாஹ் என்ற கலிமாவை ஞாபகப்படுத்துவது அவசியமாகும். நபியவர்கள் கூறினார்கள் «மரணத்தருவாயில் இருப்பவருக்கு லாயிலாஹ இல்லல்லாஹ் என்று சொல்லிக் கொடுங்கள்»(ஆதாரம் முஸ்லிம்)

அப்போது அவர் மரணித்தால் அவரது கண்களை மூடி, ஆடையால் மறைத்து அவருக்கு தொழுகை நடாத்தி, அடக்கம் செய்வதற்குரிய வேலைகளில் அவசரமாக தயாராக வேண்டும்

மையத்தை குளிப்பாட்டுதலும் அடக்கம் செய்தலும்

மையத்தை கழுவி, கபனிட்டு, அதனை சுமந்து சென்று, தொழுகை நடாத்தி, நல்லடம் செய்வது பர்ழு கிபாயாவாகும். அவ்வாறு செய்தால் ஏனையவர்கள் பாவியாவதில் இருந்து தப்பத்துக் கொள்வர்.

பொருளடக்கம்

- மையத்தில் செயலாற்றுதல்
- மையத்தை குளிப்பாட்டுதலும் அடக்கம் செய்தலும்
- மையத்தை குளிப்பாட்டுவதன் சட்டங்கள்
- மையத்தை குளிப்பாட்டுதல், கபனிடுதல் முறைகள்
- ஜனாஸா தொழுகை
- ஜனாஸா தொழுகையின் ருகூன்கள்
- ஜனாஸா தொழுகையின் சுன்னத்கள்
- ஜனாஸா தொழுகை நிறைவேற்றும் முறை
- மையத்தை சுமந்து செல்லல், அதனை அறிவித்தல், நல்லடக்கம் செய்தல்
- ஆறுதல் கூறுதல்
- கப்றுகளை தரிசித்தல்
- ஜனாஸாவில் தடுக்கப்பட்ட விடயங்கள்
- ஜனாஸாவுடைய சட்டங்கள்

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

மையத்தை குளிப்பாட்டுவதன் சட்டங்கள்

1- நேர்மையாளர், உண்மையாளர், குளிப்பின் சட்டங்களை அறிந்தவர் என அறியப்பட்டவரையே மையத்தை குளிப்பாட்ட தேர்ந்தெடுப்பது அவசியமாகும்.

2- மரணித்தவர் குளிப்பாட்ட யாரையாவது வஸியத் செய்திருப்பின் அவரை முற்படுத்த வேண்டும். பின்னர் குளிப்பின் சட்டங்கள் தெரிந்த நெருங்கியவர்கள் செய்வர். அவ்வாறில்லாது போனால் குளிப்பின் சட்டங்களை அஅறிந்தவறை முற்படுத்த வேண்டும்.

3- ஆண் மையத்தை ஆண்களும், பெண் மையத்தை பெண்களும் குளிப்பாட்ட வேண்டும். அவர்களுடைய கணவன்மார்கள் அவர்களை கழுகுவார்கள். ஆயிஷாரழி அவர்களுக்கு நபியவர்கள் கூறினார்கள். «எனக்கு முன்னர் நீ மரணித்தால் உன்னை குளிப்பாட்டி கபனிட்டு தொழுவித்து, பின்னர் அடக்கம் செய்வேன்»(ஆதாரம் இப்னு மாஜா)

என்றாலும் ஏழு வயதிற்குட்பட்ட பிள்ளைகளை ஆணும் பெண்ணும் குளிப்பாட்டலாம். என்றாலும் ஒரு முஸ்லிம் காபிரான ஆண்கள், பெண்களை குளிப்பாட்ட முடியாது. அவர்களது ஜனாஸாக்களை தூக்க முடியாது. அதற்கு கபனிடவும் முடியாது. அவர்களுக்கு தொழுகை நடத்தவும் முடியாது. அவர் நெருக்கமாக இருந்தாலும் சரியே. உதாரணம் தந்தை.

4- யுத்த்த்தில் ஷஹீதாக்கப்பட்டவரை குளிப்பாட்ட தேவையில்லை. அவருக்கு கபனிடவோ, தொழுவிக்கவோ அவசியமில்லை. அனால் அவருடைய அடையுடன் அடக்கம் செய்ய வேண்டும்.

5- ஒரு குழந்தை பூரண உடலை அடையாமல் பெண்ணின் உடலில் இருந்து விழுந்தால் அது நான்கு மாதமான ஆணாக அல்லது பெண்ணாக இருந்தால் அதனை குளிப்பாட்டி கபனிட்டு தொழுகை நடாத்த வேண்டும். ஏன்னில் நான்கு மாதத்தின் பின்னர் அது மனிதனாக மாறும்.

6- குளிப்பாட்டும் நீர் சுத்தமான ஆகுமான நீராக இருப்பது நிபந்தனையாகும்.மறைவான இடத்தில் ஏனையவர்களது தொடர்புகள் இல்லாத வண்ணம் கழுவ வேண்டும்.

மையத்தை குளிப்பாட்டும் முறை

1- குளிப்பாட்டுவதற்காக மையத்தை கட்டிலில் வைத்தல். பின்னர் அதனுடைய அவ்ரத்தை மறைத்தல். அறையை பார்த்தவராக மையத்தின் ஆடையை நீக்குதல்

2- குளிப்பாட்டும் போது கையில் ஒரு துணியை வைத்திருப்பது ஆகுமானதாகும்.

3- பின்னர் குளிப்பாட்டுபவர் மையத்தின் தலையை உயர்த்தி வயிற்றில் கைளை நுழைத்து பிசைவார். அப்போது மையத்தின் முன் பின் துவாரங்களால் வெளிப்படுவதை கழுவ வேண்டும்.

4- குளிப்பிற்கான நீயத்தை வைத்தவராக

5- தொழுகைக்காக வுழுச் செய்வது போல மையத்திற்கு வுழுச் செய்ய வேண்டும். நாசிக்கு நீர் செலுத்தும் இடத்தில் வாயையும் மூக்கையும் மஸஹ் செய்தால் பொதுமானது.

https://www.al-feqh.com/ta

6- இலந்த நீரால், சவர்க்காரம் அல்லது அது போன்றவற்றால் மையத்தின் தலையையும் தாடியையும் கழுவ வேண்டும்.

7- வலப்புற உறுப்பை கழுவி பின்னர் இடப்புற உறுப்பை கழுவ வேண்டும். பின்னர் ஏனைய உறுப்பை குழுவி பூரணப்படுத்த வேண்டும்.

8- இறுதியாக கற்பூரத்தால் சுத்தம் செய்வது ஆகுமானது.

9- மையத்தை துடைத்தல்.

10- பெண்களின் முடியை பின்னால் வைத்து முடிய வேண்டும்.

கவனிக்க

- ஒரே தடவையில் சுத்தமடைந்தால் ஒரே தடவையில் கழுவுவது வாஜிபாகும். அல்லது சுத்தமாகும் வரையில் கழுவதானால் மூன்று முறை கழுவுவதே சுன்னத்தாகும்.

- தண்ணீர் கிடைக்காத சந்தர்ப்பமாக அல்லது உடல் துண்டிக்கப்பட்ட சந்தர்பமாக இருப்பின் மண்ணால் தயம்ம் செய்ய வேண்டும்.

- மையத்தை குளிப்பாட்டுபவர் குளிப்பது ஆகுமானதாகும்.

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

குளிப்பாட்டுவதற்காக மையத்தை கட்டிலில் வைத்தல்

குளிப்பாட்டும் போது கையில் ஒரு துணியை வைத்திருப்பது

குளிப்பாட்டுபவர் மையத்தின் தலையை உயர்த்துதல்

வயிற்றில் கைளை நுழைத்து பிசைதல்

தொழுகைக்காக வுழுச் செய்வது போல மையத்திற்கு வுழுச் செய்யதல்

இலந்த நீரால் மையத்தின் தலையையும் தாடியையும் கழுவுதல்

வலப்புற உறுப்பை கழுவி பின்னர் இடப்புற உறுப்பை கழுவுதல்

மையத்தை துடைத்தல்

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

மையத்தை கபனிடுதல்

1- ஆண்களுக்கு கபன் மூன்று துணிகளில் இடப்படும். அது உடலைப் பூரணமாக மறைக்க வேண்டும். ஆனால் அது கடும் இறுக்கமாக இருக்கமாக இருக்க கூடாது. பெண்களைப் பொறுத்தமட்டில் ஐந்து துண்டுகளில் அதாவது கீழாடை , தலையில் கட்டும் தண்டு, முழு ஆடைய கபனிடும் இரு துண்டு ஆகியவனையாகும். ஆண் குழுந்தைகளைப் பொறுத்தமட்டில் ஒரு துணி போதுமானது. என்றாலும் மூன்று துணி பாவிப்பது கூடும். பெண் குழந்தையை பொறுத்த வரை சட்டையும், இரண்டு துணிகளும் போதுமானது.

2- மூன்று துணிகளிலும் வாசனைத் திரவியத்தை பயன்படுத்துவது ஆகுமானது. நபியவர்கள் கூறினார்கள் «நீங்கள் மையத்தை கபனிடும் (வாசனைத் திரவியம்) போது ஒற்றைப்படையாக நிறைவேற்றுங்கள்» (ஆதாரம் இப்னு ஹிப்பான்)

3- துணிகளை ஒன்றன் மேல் ஒன்றாக வைக்க வேண்டும். அற்றில் கற்பூரம், வாசனைத் திரவம் போன்றவைகளை பூச வேண்டும். இஹ்றாம் கட்டிய ஒருவரானால் அவருக்கு வாசனைகள் எதுவும் பூசம் கூடாது. நபியவர்கள் கூறினார்கள் «அவர்களுக்கு மணம் பூச வேண்டும்»(ஆதாரம் புஹாரி)

துணிகளில் மணம் பூசுதல்

4- மையத்தை நேர்த்தியாக படுக்க வைப்பது அவசியமாகும். வலது புறம் இருந்து இடது புறமாகவும், இடது இருந்து வலமாகவும், அடுத்த அடுத்த பகுதிகளை கபனிட வேண்டும். தலைப்பகுதியில் முடிச்சுக்கள் போட வேண்டும். மையத்தை அடக்கம் செய்யும் போது முடிச்சுக்களை அவிழ்த்து விட வேண்டும்.



நேர்த்தியாக மையத்தை வைத்தல்

5- உடலின் அனைத்து பகுதிகளையும் மறைப்பது வாஜிபாகும். துணி இருந்து அவை உடலை மறைக் போதுமானதாக இல்லாது போனால் அதனை கொண்டு தலையை மறைக் வேண்டும். காலை இலைகளை (ராகத்தான பூமியில் முளைத்தவைகள்) கொண்டு மறைக்க வேண்டும். முஸ்அப் ரழி அவர்கள் மரணித்த போது நபியவர்கள் «அவரது தலையை மறைக்கும் படியும் அவர்களது காலை இலைகளை கொண்டு காலை மறைக்கும் படியும் ஏவினார்கள்» (ஆதாரம் புஹாரி).

அனைத்து உடலையும் மறைத்தல்.

6- இஹ்றாம் அணிந்த நிலையில் உள்ளவரை அதே ஆடையோடு நல்லடக்கம் செய்ய வேண்டும். அதில் ஆண்களுடைய தலையை மறைப்பது கூடாது. நபியவர்கள் கூறினார்கள்

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

«அவரை இலந்தை நீரை கொண்டு கழுவுங்கள். அவர்களை இரண்டு ஆடையால் கபனிடுங்கள். அவர்களுகைகு மணம் (மையத்தை கபனிடும் போது மணம் பூசுதல்.) பூச வேண்டாம். அவர்களுடைய தலையை மறைக்க (தலையை மறைக்காமல் விடுதல்) வேண்டாம். ஏனனில் நாளை மறுமையில் அவர் தப்பியா சுறியவராக எழுப்பப்படுவார் (லப்பைக அல்லாஹூம்ம லப்பைக் என கூறுதல்)» (ஆதாரம் புஹாரி)

ஜனாஸாத் தொழுகை

ஜனாஸாத் தொழுகையின் ருகுன்கள்

1- சக்தியுள்ளவர் எழுந்து நிற்றல்

2- நான்கு தக்பீர் கூறல்

3- பாத்திஹா ஓதுதல்

4- நபியவர்கள் மீது ஸலவாத் கூறுதல்

5- மய்யத்திற்காக பிரார்த்தித்தல்

6- ஒழுங்குற செய்தல்

7- ஸலாம் கொடுதல்

ஜனாஸா தொழுகையின் சுன்னத்கள்

1- ஓதுவதற்கு முன்னர் அஊது பில்லாஹி மினஸ் ஷைதானிர் ரஜீம் என கூறல்

2- முஸ்லிம்களுக்கு தனக்குள் துஆ செய்தல்

3- உள்ரங்கமாக ஓதுதல்

4- ஸப்புகளை அதிகரித்தல். மூன்று ஸப்புகள் அதிகமாக இருத்தல்.

ஜனாஸா தொழுகை நிறைவேற்றும் முறை

ஆண் மையத்தாக இருந்தால் இமாம் அதன் தலைப் பகுதியிலும். பெண் மையத்தாக இருந்தால் அதன் நடுப் பகுதியிலும் நிற்க வேண்டும். மஃமூம்கள் இமாமிற்கு பின்னால் தொழுகையில் நிற்பது போன்று நிற்க வேண்டும். பின்னர் நான்கு ரக்அத்கள் கூறப்படும். அதில்

1- முதலாவது ரக்அத்தில். அது ஆரம்ப தக்பீராகும். அதில் அஊதி, பிஸ்மியுடன் பாத்திஹா ஓத வேண்டும்.

2- இரண்டாவது தக்பீரில் அத்தஹியாத்திக் இருதியில் ஓதுவது போன்று நபியவர்கள் மீது ஸலவாத்து கூற வேண்டும்.

3- மூன்றாவது தக்பீரில் தனக்காகவும், மையத்திற்காகவும், முஸ்லிம்களுக்காகவும் துஆ செய்ய வேண்டும். அதில் «அல்லாஹும்மபிர் லஹு வர்ஹம்ஹு வஆபிஹி வபு அன்ஹு வஅக்ரிம் நுஸுலஹு வவஸ்ஸிஃ முத்கலஹு வக்ஸில்ஹு பில்மாயி வஸ்ஸல்ஜி வல்பரதி வநக்கிஹி மினல் கதாயா கமா நக்கைத்தஸ் ஸவ்பல் அப்யள மினத் தனஸி வ அப்தில்ஹு தாரன் கைரன் மின் தாரிஹி வஅஹ்லன் கைரன் மின் அஹ்ஹி வஸவ்ஜன் கைரன் மின் ஸவ்ஜிஹி வ அத்ஹில்ஹுல் ஜன்ன(த்)த வஅயித்ஹு மின் அதாபில் கப்ரி» (ஆதாரம் முஸ்லிம்) பெண் மையத்தாக இருப்பின் அதன் எழுவாயை பெண்ணாக மாற்றி ஓத வேண்டும். அது வேளை மரணித்து்து சிறு பிள்ளை அல்லது குறையில் (பூரணமாக உடலைபட பெறாமல் விழுந்த உடல்) விழுந்தது என்றால் நபியவர்கள் கூறினார்கள் «அல்லாஹம்ம அஜ்அலகு துஹ்ரன் லிவாலிதாஹி, வபரதன் (முற்படுத்தல்) வஅஜ்ரன், வஷபீஅன், முஜாபா» (ஆதாரம் புஹாரி) அல்லாஹூம்ம தகில் மவாஸீனகுமா, அஃழம் பிஹி அஜூரஹூமா, அவ் அல்கஹஹூ பிஸாலிஹி ஸலபில் முஃமினின், வஜ்அலது பி கபாலதில் இப்றாஹீம். வக்ஹூ பிரஹ்மதிக அதாப ஜஹீம்.

4- நான்காவது தக்பீரில் சிறுது நேரம் அமைதியாக இருந்து வலது பக்கம் ஒரு முறை ஸலாம் கொடுப்பார். அல்லது இரு பக்கமும் கொடுப்பார்.

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

மையத்தை சுமந்து செல்லல், அதனை அறிவித்தல், நல்லடக்கம் செய்தல்

ஜனாவுக்கு தொழுகை நடாத்திய பின்னர் உடனடியாக அதனை அடக்கம் செய்வது சுன்னாவாகும். ஜனாஸாவில் கலந்து கொண்டவர் சுமந்து செல்வது ஆகுமானது. கப்ரில் இறங்குபவர் «பிஸ்மில்லா அலா மில்லதி ரசூலில்லாஹ்» (ஆதாரம் திர்மிதி) என கூறியவாக குழிக்குள் (பூமியில் ஆழமாக தோண்டப்படும் குழி) வலது பக்கமா உடலையும் முகத்தையும் கிப்லாபை நோக்கி வைப்பார். பின்னர் கபனின் மூடிச்சை அவிழ்த்து விடுவார். பின்னர் மண்ணால் குழியை மூடி விடுவார்.

அடக்கம் செய்ய வருவர் மூன்று முறை கைகளால் மண்ணை போடுவது சுன்னாவாகும். மண்ணால் மூடி பூமியில் இருந்து சற்று உயர்த்தி இருக்க வேண்டும். அதன் மீது கம்போ அல்லது கல்லோ வைக்க வேண்டும். தண்ணீர் தெளிக்க வேண்டும். அடையாளத்திற்காக கப்றின் ஓரங்களில் கற்களை வைப்பதில் பிரச்சினையில்லை.

ஆறுதல் கூறல்.

பெறுமையை கடைப்பிடிப்பதற்கும், அவர்களது சோதனை நீங்கவும் மரணித்தவர்களின் குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் கூறுவது ஆகுமானது. «லில்லாஹி மா அஹத, வலகு மா அஃதா, வலிகுல்லி ஷையின் இன்தகு பிஅஜ்லின் முஸம்மா பலிதஸ்பிர், வலிதஹ்தஸிப்” இன்னும் “அஃழம அல்லாஹூ அஜ்ரக வஅஹ்ஸன அஸாஅக, வகபர லிமய்யதிக» (ஆதாரம் புஹாரி)

ஜனாஸாவை தூக்குவதில் பங்கேற்றல்

குழி

கப்ரில் மண் போடுதல்.

கப்றில் அடையாளம் வைத்தல்.

ஜனாஸாவுடன் பெண்கள் செல்வது

ஜனாஸாவுடன் பெண்கள் செல்வது மார்க்கம் காட்டித்தராத ஒன்றாகும். உம்மு அதிய்யா ரழி அறிவிக்கிறார்கள் ஜனாஸாவை பித் தொடர்வதற்கு நாங்கள் தடுக்கப்பட்டோம். அதே போல அது எங்களுக்கு கடமையாக்கப்படவில்லை»(இப்னு மாஜா)

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

கப்றை தரிசித்தல்

மையத்திற்காக பிரார்த்தனை செய்ய வேண்டும். எனும் நோக்கில் மண்ணறைகளை தரிசிப்பது சுன்னாவாகும். நபியவர்கள் கூறினார்கள். «நபியர்கள் கப்றுகளை தரிசிப்பதை எங்களுக்கு தடுத்தார்கள். பின்னர் மறுமையை ஞாபகம் ஊட்டும் என்பதால் அதனை சரிசிக்கச் சொன்னார்கள்»(ஆதாரம் முஸ்லிம்)

கப்றுகளை தரிசிக்கும் போது ஓத வேண்டிய துஆ

«அஸ்ஸலாமு அலைக்கும் தாரு கவ்மி முஃமினீன் வஇன்னா இன்ஷா அல்லாஹு பிகும் லாஹிகூன். (ஆதாரம் முஸ்லிம்) அல்லது அஸ்ஸலாமு அலா அஹ்லித் தியார் மினல் முஃமினீன, வல் முஸ்லிமீன். வயர்ஹமுல்லாஹூ முஸ்தக்திமீன் மின்னா முஸ்தஃஹிரீன். வஇன்னா இன்ஷா அல்லாஹ் பிகும் லாஹிகூன். (ஆதாரம் முஸ்லிம்) "அஸ்அலுல்லாஹூ லனா வலகும் அல்ஆபியா»(ஆதாரம் முஸ்லிம்)

அவர்களுக்காக்க பாவமன்னிப்பு, அருள் செய்யம்படியும் நாம் கேட்கலாம்.

ஜனாஸாவில் தடுக்கப்பட்டவைகள்

1- சத்தமிட்டு ஓலமிட்டு அழுதல். (சத்தத்தை உயர்த்தி ஒப்பாரி வைத்தல்) அல்லாஹ்வின் நாட்டத்தை திட்டியவராக ஒப்பாரி வைத்தல்«என் சமுதாயத்தாரிடையே நிலவுகின்ற நான்கு நடைமுறைகள் அறியாமைக் கால வழக்கங்களாகும். (பெரும்பாலான) மக்கள் அவற்றை (இலேசில்) கைவிடமாட்டார்கள். (அவையாவன:) குலப்பெருமை பாராட்டுவது, (அடுத்தவரின்) பாரம்பரியத்தைக் குறைகூறுவது, கிரக(மாற்ற) ங்களால் மழை பொழியும் என எதிர் பார்ப்பது மற்றும் ஒப்பாரிவைத்து அழுவது.

ஒப்பாரிவைக்கும் வழக்கமுடைய பெண், தான் இறப்பதற்கு முன் பாவமன்னிப்புக் கோரி (அதிலிருந்து) மீளாவிட்டால், மறுமை நாளில் தாரினால் ஆன நீளங்கியும் சொறிசிரங்குச் சட்டையும் அணிந்தவளாக அவள் நிறுத்தப்படுவாள் (துணி)" என்று நபி (ஸல்) கூறினார்கள்.»(ஆதாரம் முஸ்லிம்)

2- கண்ணங்களில் அடித்து, ஆடையை கிழித்து, முடியை பிய்த்து ஓலமிடுதல்.. «(துக்கம் ஏற்பட்டால்) கன்னங்களில் அறைந்து கொள்பவன், அல்லது சட்டைப் பைகளைக் கிழித்துக் கொள்பவன், அல்லது அறியாமைக் கால வழக்கப்படி புலம்புகிறவன் நம்மைச் சார்ந்தவன் அல்லன்" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) கூறினார்கள்.» (ஆதாரம் முஸ்லிம்)

கப்றில் ஒளி ஏற்றுவது, நிறம் பூசுவது கூடாது.

www.al-feqh.com/ta

3- மண்ணறைகளில் தீபம் ஏற்றுதல்«கப்றுகளை தரிசிக்கும் பெண்களை நபியவர்கள் சபித்தார்கள். அதன் மீது பள்ளிகட்டுவதையும், ஒளியூட்டுவதையும் (ஒளி விளக்குகள்) தடுத்தார்கள்.» (ஆதாரம் திர்மிதி)

4- கப்ரின் மீது உட்காருதல், அதற்கு வர்ணம் அடித்தல், அதன் மீது கட்டு கட்டுதல்«கப்றுகளை கல்லறையாக்குவதையும் (நிறம் தீட்டுதல்) அதன் மீது கட்டடம் கட்டுவதையும், அதில் உட்காருவதையும் தடுத்தார்கள்» (ஆதாரம் முஸ்லிம்)

5- கப்ருகளிடம் பரகத் வேண்டுதல், அதனை தவாப் செய்தல் கப்றுகளிடத்தில் துஆ கேட்டல் போன்றன ஷிர்க் ஆகும். அல்லாஹ் கூறுகிறான். {(நபியே!) நீர் கூறும்: "அல்லாஹ் நாடினாலன்றி நான் எனக்கே யாதொரு நன்மையோ அல்லது தீமையோ செய்து கொள்ள சக்தியில்லாதவன்; மறைந்திருப்பவற்றை நான் அறிபவனாக இருந்தால் நன்மைகளை அதிகமாகத் தேடிக்கொண்டிருப்பேன்; (அந்நிலையில் எவ்விதமான) தீங்கும் என்னைத் தீண்டியிராது - நம்பிக்கை கொள்ளும் மக்களுக்கு நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவனும், நன்மாராயம் கூறுபவனுமேயன்றி வேறில்லை}[அஃராப் – 188]

கப்றில் தவாப் செய்வது கூடாது

6- பள்ளியில் அடக்கம் செய்வது, அடக்கம் செய்யப்படும் இடத்தில் பள்ளி கட்டுவது, அங்கு தொழுவது போன்றன கூடாது. நபியவர்கள் கூறினார்கள்.« யூத கிறிஸ்தவர்கள் மீது சாபம் உண்டாவதாக அவர்கள் நபிமார்களின் அடக்கஸ்தலங்களை வணக்கஸ்தலங்களாக ஆக்கிக் கொண்டனர். » (ஆதாரம் புஹாரி)

ஜனாஸாவின் சட்டங்களில் உள்ளவைகள்

1- ஜனாஸாத் தொழுகையை ஒருவர் தவற விட்டால் அவர் அடக்குவதற்கு முன்னரோ அல்லது பின்னரோ தொழுது கொள்ள முடியும். நபியவர்கள் பள்ளியை சுத்தம் செய்யும் பெண் மரணித்த செய்தியை அறிந்த போது அவருடைய கப்றடியே தொழுதார்கள். (ஆதாரம் புஹாரி)

மரணித்தவருக்காக உணவு தயாரித்தல்

https://www.al-feqh.com/ta

2- மரணித்தவரின் குடும்பத்திற்கு உணவுகளை தயார்படுத்திக் கொடுப்பது ஆகுமானதாகும். அவர்கள் உணவு தயாரிப்பதிலிருந்து கவலையில் மூழ்கியிருப்பர். ஜஃபர் இப்னு அபீதாலிப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் மரணித்த செய்தியை நபி அவர்கள் மக்களுக்கு அறிவித்து விட்டு, «ஜஃபரின் குடும்பத்தினருக்காக நீங்கள் உணவு தயாரியுங்கள். ஏனெனில் சமைத்து உண்ணுவதை விட்டும் பராக்காக்கி விடக்கூடிய விடயம் அவர்களுக்கு நடந்துள்ளளது." என்று கூறினார்கள். (அறிவிப்பவர்: (அப்துல்லாஹ் இப்னு ஜஃபர் ரலியல்லாஹு அன்ஹுமா) » (ஆதாரம் புஹாரி).

3- சத்தத்தை உயர்த்தாமல், ஒப்பாரி வைக்காமல் அமைதியாக அழ முடியும். நபியவர்களுடைய மகன் மரணித்த போது நபியவர்கள் «'கண்கள் நீரைச் சொரிகின்றன் உள்ளம் வாடிக் கொண்டிருக்கிறது; எனினும், இறைவன் விரும்பாத எந்த வார்த்தையையும் நாங்கள் கூற மாட்டோம். இப்ராஹீமே! நிச்சயமாக நாங்கள் உன்னுடைய பிரிவால் அதிகக்கவலைப்படுகிறோம்' என்றார்கள்»(ஆதாரம் அபூதாவுத்)

4- போரில் மரணித்தவரை குளிப்பாட்டாமல் அப்படியே அடக்கம் செய்ய வேண்டும். அவருக்கு தொழுகை நடத்த தேவையில்லை. «நபியவர்கள் ஷஹீத்களை இரத்தத்தோடு குளிப்பாட்டாமல் அடக்கம் செய்யுமாறு ஏவினார்கள்»(ஆதாரம் புஹாரி)

5- ஹஜ் உம்ராவில் இருப்பவர் இஹ்ராம் அணிந்த நிலையில் மரணித்தால் அவரை குளிப்பாட்ட வேண்டும். மணம் பூசக் கூடாது. அவருடைய தலையை மறைக்க கூடாது. அவருக்கு தொழுகை நடத்த வேண்டும். ஹஜ்ஜில் இஹ்ராமோடு மரணித்தவருக்கு நபியவர்கள் கூறினார்கள் «இலந்தை நீரால் அவரை குளிப்பாட்டி, இரண்டு துணியால் கபனிடுங்கள், அவரது தலையை மறைக்க வேண்டாம். அவர் மறுமை நாளில் தல்பியா கூறியவராக வருவார்» (ஆதாரம் புஹாரி)

ஷஹீதை அவரது ஆடையுடனே அடக்குதல்

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta



www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

1

நோன்பின் சிறப்பும், சட்டமும்

பொருளடக்கம்

- நோன்பின் வரைவிலக்கணம்
- நோன்பின் சிறப்பு
- நோன்பு வணக்கமாக்கபட்டதன் நோக்கம்
- நோன்பின் சட்டம்
- நோன்பு கடமையாவதற்கான நிபந்தனைகள்
- ரமழான் நோன்பு
- ரமழான் மாதத்தின் சிறப்புக்களில் சில
- ரமழான் மாதம் நுழைவதை எவ்வாறு அறிவது?
- ரமழானில் நோன்பை விடுதல்

மொழிரீதியாக நோன்பின் விளக்கம்

ஒரு செயலைச் செய்வதிலிருந்து தவிர்ந்து கொள்ளல்

இஸ்லாத்தில் நோன்பின் விளக்கம்

அதிகாலையிலிருந்து (பஜ்ர் நேரம்) சூரியன் மறையும் வரை உண்ணல், பருகல், உறவு கொள்ளல் ஆகியவற்றில் இருந்து விலகி இருப்பதன் மூலம் அல்லாஹ்வை வணங்குதல்

நோன்பின் சிறப்பு

{நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் (அல்லாஹ்வை) அஞ்சி நடப்பதற்காக உங்களுக்கு முன்பிருந்தோர் மீது விதியாக்கப்பட்டது போன்று உங்கள் மீதும் நோன்பு விதியாக்கப்பட்டுள்ளது.

கணக்கிடப்பட்ட சில தினங்களில் (அது நிறைவேற்றப்பட வேண்டியதாகும்). ஆனால் உங்களில் எவர் நோயாளியாக அல்லது பயணத்தில் இருக்கிறாரோ (அவர்) வேறு நாட்களில் கணக்கிட்டு (நோற்று)க் கொள்ளட்டும். எனினும் (முதுமை அல்லது நிரந்திர நோய் போன்ற காரணங்களால்) நோன்பு நோற்பதைக் கடினமாகக் காண்பவர்கள் அதற்குப் பகரமாக ஒரு ஏழைக்கு உணவளிக்கட்டும். எனினும், எவரேனும் தானாக விரும்பி அதிகமாகக் கொடுத்தால் அது அவருக்கு நல்லது. நீங்கள் அறிந்தவர்களாக இருந்தால் நீங்கள் நோன்பு நோற்பதே உங்களுக்கு நல்லதாகும்.

ரமழான் மாதம் எத்தகையதென்றால் அதில்தான் மனிதர்களுக்கு வழிகாட்டியாகவும், நேர்வழியைத் தெளிவுபடுத்தக் கூடியதாகவும் (சத்தியத்தையும் அசத்தியத்தையும்) பிரித்தறிவிக்கக் கூடியதாகவுள்ள அல்குர்ஆன் இறக்கப்பட்டது. எனவே உங்களில் யார் அந்த மாதத்தை அடைந்து கொள்கின்றாரோ அவர் அதில் நோன்பு நோற்கட்டும். யார் நோயாளியாக அல்லது பயணத்தில் இருக்கின்றாரோ (அவர்) வேறு நாட்களில் கணக்கிட்டு (நோற்று)க் கொள்ளட்டும். அல்லாஹ் உங்களுக்கு இலகுவையே விரும்புகின்றான். அவன் உங்களுக்கு கஷ்டத்தை விரும்பவில்லை. (நோன்பின்) எண்ணிக்கையை நீங்கள் முழுமைப் படுத்துவதற்காகவும், அல்லாஹ் உங்களை நேர்வழியில் செலுத்தியதற்காக அவனைப் பெருமைப் படுத்துவதற்காகவும் நீங்கள் நன்றி செலுத்துவதற்காகவும் (இவ்வாறு செய்தான்).}

[அல்குர்ஆன் 2 : 183- 185]

நோன்பிற்குப் பாரிய சிறப்பும், மகத்தான பன்மடங்கு கூலியும் உண்டு, நோன்பை மதித்து, கண்ணியப்படுத்தும் விதத்தில் அல்லாஹ் அதனைத் தனக்குரியதெனக் கூறியுள்ளான். நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து அறிவிக்கும் ஹதீஸ் குத்ஸியில் கூறினார்கள் : «ஆதமுடைய மகனின் செயல்கள் அனைத்திற்கும் நன்மை பன்மடங்காகக் கப்படும், ஒரு நன்மை பத்தாக, அதிலிருந்து எழுநூறாகப் பெருகும்". அல்லாஹ் கூறினான் : "நோன்பைத் தவிர, ஏனெனில் அது எனக்குரியது, நானே அதற்குக் கூலி வழங்குவேன். அவனது இச்சை மற்றும் உணவை எனக்காகவே விடுகின்றான்". நோன்பாளிக்கு இரு மகிழ்ச்சிகள் உள்ளன. ஒன்று அவன் நோன்பு திறக்கும் போது, மற்றது தனது இரட்சகனை சந்திக்கும் போது. அவனுடைய வாயிலிருந்து வரும் வாடை(அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : புஹாரி 5972) அல்லாஹ்விடத்தில் கஸ்தூரியை விட நறுமணமானது»(முஸ்லிம் 1151).

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

நோன்பு வணக்கமாக்கபட்டதன் நோக்கம்

1. அல்லாஹ்வின் கட்டளைக்கு பதிலளிப்பதிலும், அவனது சட்டதிட்டங்களுக்குக் {கட்டுப்படுவதிலும் இறையச்சத்தை வரவழைத்தல். அல்லாஹ் கூறுகின்றான் நீங்கள் அல்லாஹ்வை அஞ்சி நடப்பதற்காக }[அல்குர்ஆன் 2 : 183].

2. பொறுமையின் பால் ஆத்மாவைப் பயிற்றுவித்தல், இச்சைகளை மிகைக்கும் வகையில் மனோதிடத்தை வலுப் படுத்தல்.

3. அறம், வறியவர், தேவையுடையவர் களுக்கு இரக்கம் காட்டுதல் போன்ற வற்றிற்குப் பயிற்றுவித்தல். ஏனெனில் நோன்பாளி பட்டினியை உணர்ந்தால் தனது தேவையுடைய சகோதரர் பால் உள்ளம் இரங்கி அவர்களுடைய தேவைகளை உணரும்.

4. நோன்பின் மூலம் உடலாரோக்கியம் ஏற்படுதல்.

நோன்பின் சட்டம்

அல்லாஹ் மார்க்கமாக்கியுள்ள நோன்பு பின்வருமாரு வகைப்படும் :

1. கடமையான நோன்பு

அது இரு வகைப்படும் :

1. அல்லாஹ்வே அடியார்கள் மீது விதியாக்கிய நோன்பு, அதுதான் ரமழான் மாத நோன்பு, இது இஸ்லாத்தின் தூண்களில் ஒன்று.

2. அடியார்கள் தமக்குத்தாமே விதியாக் காரணமாயிருந்த நோன்பு. நேர்ச்சை நோன்பு, குற்றப்பரிகார நோன்பு போன்றவற்றை உதாரணமாகக் கூறலாம்.

2. ஸுன்னத்தான நோன்பு

அல்லாஹ் கடமையாக்காமல் விரும்பிய அனைத்து நோன்புகளும் ஸுன்னத்தான நோன்பாகும், உதாரணமாக : திங்கள், வியாழன் நோன்பு, ஒவ்வொரு மாதமும் மூன்று நாட்கள் நோன்பு நோற்றல், ஆஷூரா நோன்பு, துல்ஹஜ் மாதம் முதல் பத்து தினங்களில் நோற்றல், அரபா நோன்பு துல்ஹஜ் மாதம் 9ம் நாள்.

நோன்பு கடமையாவதற்கான நிபந்தனைகள்.

1. இஸ்லாம், காபிர்களுக்குக் கடமையில்லை.

2. பருவமடைதல், சிறுவர் மீது கடமையாகாது. எனினும் முடியுமாயிருந்தால் பழகும் நோக்கில் நோன்பு நோறக்க ஏவ வேண்டும்.

3. பகுத்தறிவு, பைத்தியகாரர் மீது கடமையாக மாட்டாது.

4. சக்தி, நோன்பு நோற்க சக்தி பெறாதவருக்குக் கடமையில்லை.

ரமழான் நோன்பு

ரமழான் நோன்பு இஸ்லாத்தின் ஐம்பெரும் தூண்களில் ஒன்றாகவும், இறைவன் தனது அடியார்களுக்கு விதியாக்கிய ஒரு கடமையாகவும் இருக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் {(அல்லாஹ்வை) அஞ்சி நடப்பதற்காக உங்களுக்கு முன்பிருந்தோர் மீது விதியாக்கப்பட்டது போன்று உங்கள் மீதும் நோன்பு விதியாக்கப்பட்டுள்ளது. }. [அல்குர்ஆன் 2 : 183].

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : «இஸ்லாம் ஐந்து தூண்களின் மீது நிர்மாணிக்கப்பட்டுள்ளது,. .»(ஆதாரம் : புஹாரி 8, முஸ்லிம் 16) அதில் ரமழானில் நோன்பு நோற்பதையும் கூறினார்கள்.

ரமழானின் சிறப்புக்களில் சில

1. ரமழானில் பகலில் நோன்பு நோற்பதாலும், இரவில் நின்று வணங்குவதாலும் முன்சென்ற பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : «யார் ரமழான் மாதத்தில் விசுவாசம் கொண்டவராகவும், நன்மையை எதிர்பார்த்தவராகவும் நோன்பு நோற்கிறாரோ அவருடைய முன்னைய பாவங்கள் (புஹாரி, முஸ்லிம்) மன்னிக்கப்படும். இன்னும் யார் ரமழான் இரவில் விசுவாசம் கொண்டவராகவும், நன்மையை எதிர் பார்த்தவராகவும் நின்று வணங்குகின் றாரோ அவருடைய முன்னைய பாவங் களும் மன்னிக்கப்படும்»(புஹாரி, முஸ்லிம்).

2. லைலதுல் கத்ர் இரவில் நின்று வணங்குபவரின் முன்சென்ற பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : «யார் ரமழான் மாதத்தில் விசுவாங் கொண்டவராகவும், நன்மையை எதிர்பார்த்தவராகவும் நோன்பு நோற்கிறாரோ அவருடைய முன்னைய பாவங்கள் மன்னிக்கப்படும். இன்னும் யார் லைலதுல் கத்ர் இரவில் விசுவாங் கொண்டவராகவும், நன்மையை எதிர்பார்த்தவராகவும் நின்று வணங்குகின்றாரோ அவருடைய முன்னைய பாவங்களும் மன்னிக்கப் படும்»(புஹாரி முஸ்லிம்).

3. ரமழானில் உம்ராச் செய்வது நபி (ஸல்) அவர்களுடன் ஹஜ் செய்வதற்கு ஈடானது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : «ரமழானில் உம்ராச் செய்வது ஹஜ் செய்வதற்கு அல்லது என்னுடன் ஹஜ் செய்வதற்கு ஈடானது»(ஆதாரம் முஸ்லிம்).

4. ரமழான் மாதம் வந்துவிட்டால் சுவன வாயில்கள் திறக்கப்பட்டு, நரக வாயில்கள் மூடப்பட்டு, ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றனர். நல்லறங்களின் பால் உள்ளங்கள் முன்னோக்குகின்றன. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : «ரமழான் மாதம் நுழைந்துவிட்டால் வானத்தின் வாயில்கள் திறக்கப்பட்டு, நரக வாயில்கள் மூடப்பட்டு, ஷைத் தான்கள் விலங்கிடப்படுகின்றனர். »(புஹாரி முஸ்லிம்). பாவமீட்சி பெறுவதைத் துரிதப்படுத்தி, பாவங்களை விட்டும் தூரமாகி, அல்லாஹ்விடம் முன்னோக்கிச் செல்வது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் அவசியமாகும்

5. ரமழான் அல்குர்ஆன் இறங்கிய மாதம், எனவே அதில் அல்குர்ஆன் ஓதுவதை அதிகப்படுத்த வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான் : {ரமழான் மாதம் எத்தகையதென்றால் அதில்தான் மனிதர் களுக்கு வழிகாட்டியாகவும், நேர் வழியைத் தெளிவுபடுத்தக் கூடியதாகவும் (சத்தியத்தையும் அசத்தியத்தையும்) பிரித் தறிவிக்கக் கூடியதாகவுள்ள அல்குர்ஆன் இறக்கப்பட்டது}[அல்குர்ஆன் 2 : 185].

6. ரமழான் நன்கொடை, தர்மம், செலவளிப்பதற்கான மாதமாகும். இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: «நபி (ஸல்) அவர்கள் மக்களில் அதிக கொடைவள்ளலாக இருந்தார்கள், ரமழான் மாதத்தில்தான் அதிகமாக தர்மம் செய்வார்கள். ஏனெனில் ஒவ்வொரு வருடமும் ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களை ரமழான் மாதம் முழுதும் சந்திப்பார்கள். அப்போது நபியவர்கள் அல்குர்ஆனை அவர்களிடம் ஓதிக் காண்பிப்பார்கள். அவர்கள் ஜிப்ரீல் (அலை) அவர்களை சந்திக்கும் போது காற்றை விட வேகமாக நன்கொடை வழங்குவார்கள்.»(புஹாரி முஸ்லிம்).

ரமழான் மாதம் நுழைவதை எவ்வாறு அறிவது?

பிறை தென்படுவதன் மூலம் ரமழான் மாதம் நுழைவதை அறியலாம். ஷஃபான் மாதம் 29ம் நாள் சூரியன் அஸ்தமித்ததற்கு பின்னர் தலைப்பிறை தென்பட்டால் ரமழான் மாதம் ஆரம்பித்து விடுகின்றது. அத்தினம் பிறை தென்படாவிட்டால், அல்லது மேகமூட்டம், புழுதி, புகை மண்டலம் போன்றவற்றால் பிறை காண முடியாவிட்டால் ஷஃபான் மாதத்தை 30க பூர்த்தி செய்தல் வேண்டும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: «நீங்கள் அதனைக் (பிறையை) கண்டு நோன்பு பிடியுங்கள். மீண்டும் அப்பிறையைக் கண்டு நோன்பை விடுங்கள். உங்களுக்கு மேக மூட்டம் ஏற்பட்டால் நீங்கள் 30 நாட்களாக அதனை கணக்கிட்டுக் கொள்ளுங்கள்» (புஹாரி முஸ்லிம்).

ரமழானில் நோன்பை விடுதல்

தக்க காரணமின்றி ரமழானில் நோன்பு பிடிக்காமலிருப்பது, அல்லது இடையில் விடுவது ஹறாமான பெரும்பவாங்களில் ஒன்றாகும். அவ்வாறு நோன்பை விட்டு விட்டு பாவமன்னிப்புக் கோராவிடின் ஆயுள் முழுதும் நோன்பு நோற்றாலும் ஈடாகமாட்டாது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: «அல்லாஹ் வழங்கிய சலுகைக்காகவன்றி யார் ரமழானில் நோன்பை விடுகின்றரோ அதற்காக அவர் காலம் முழுதும் நோன்பு நோற்றாலும் ஈடாக மாட்டாது».(ஆதாரம் அபூதாவுத்) இவ்வாறு நோன்பு விடுதற்கான தண்டனை விபரீதமானது. நபி (ஸல்) அவர்கள் கூறுவதைத் தான் கேட்டதாக அபூ உமாமா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "நான் தூங்கிக் கொண்டிருக்கும் போது கனவில் இருவர் என்னிடம் வந்து (அதற்கு மத்தியில்.) எனது தோள்புயத்தைப் (சந்துப் பகுதி – முழங்கையிலிருந்து கக்கம் வரையிலுள்ள பகுதி..) பிடித்து என்னை கரடுமுரடானஒருமலைக்குக்கொண்டுசென்றுஅதில் ஏறுமாறு என்னிடம் கூறினார்கள். நான் "என்னால் முடியாது" என்றேன். அதற்கு அவ்விருவரும் "நாம் உமக்கு இலகுவாக்கித் தருகின்றோம் (ஏறுங்கள்) என்றார்கள்". நான் ஏறி, உச்சியை அடைந்ததும் பாரிய சத்தங்களைக் கேட்டேன். "இது என்ன சத்தம்?" என வினவிய போது "இது நரகவாதிகள் ஊளையிடும் (அலறல் சத்தம்.) சத்தம்" எனக் கூறினர். பின்பு என்னை அழைத்துச்செல்லப் பட்டது, அங்கு கணுக்கால்களில்

www.al-feqh.com/ta

(கரண்டைக் காலோடு இருக்கும் எலும்பு) விலங்கிடப்பட்ட, தாடைகள் (வாயினை நெருங்கியுள்ள பகுதிகள்) கிழிக்கப்பட்டு இரத்தம் வழியும் நிலையில் ஒரு கூட்டத்திற்கு அருகாமையில் இருந்தேன். "இவர்கள் யார்?" என்று கேட்க, "இவர்கள்தான் நோன்பு திறக்கும் நேரம் வரமுன் நோன்பை(அவர்களுடைய நோன்பு பூரணமாகுவதற்கு முன்னால் நோன்பை திறந்தார்கள்)விட்டவர்கள்" என்றார்கள். (ஆதாரம் இப்னு ஹிப்பான்)

ரமழானில் முன்னோர்கள்

முன்னோர்களின் முன்மாதிரி முஹம்மத் (ஸல்) அவர்கள்

இமாம் இப்னுல் கய்யிம் (ரஹ்) கூறுகின்றார்கள்: «ரமழானில் பலவிதமான வணக்கங்களில் ஈடுபடுவது நபிவழியா கும். ஒவ்வொரு வருடமும் ரமழான் மாதம் ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களை சந்தித்து, அல்குர் ஆனை அவர்களிடம் ஓதிக் காண்பிப் பார்கள். அவர்கள் ஜிப்ரீல் (அலை) அவர்களை சந்திக்கும் போது காற்றை விட வேகமாக நன்கொடை வழங்குவார் கள். அவர்கள் மக்களில் அதிக கொடை வள்ளலாக இருந்தார்கள், ரமழான் மாதத் தில்தான் அதிகமாக தர்மம் செய்வார்கள். தர்மம், அறம், அல்குர்ஆன் ஓதுதல், தொழுகை, திக்ரு, இஃதிகாப் போன்ற வணக்கங்களை அதிகப்படுத்துவார்கள். இதர மாதங்களை விட இம்மாதத்திற்கு வணக்கத்தில் முக்கியத்துவம் கொடுப் பார்கள். எந்தளவுக்கெனில், சில சமயம் தொடர்ந்து இரவு, பகலாக வணக்கத்தில் கழிப்பதற்காக இரண்டு அல்லது பல நாட்கள் நோன்பை விடாமல் தொடர் வார்கள். (நோன்பு திறக்காமல் பல நாட்கள் தொடர்வது "விஸால்" எனப் படும், இது நபி (ஸல்) அவர்களுக்கு மாத்திரம் அனும்மதிக்கப் பட்ட ஒன்று.)» (ஸாதுல் மஆத் பீ ஹதீ ஹைரில் இபாத்)

ரமழனில் அல்குர்ஆனும் முன்னோரும்

சில சிறப்புக்குரிய நோரங்களில்- குறிப்பாக லைலதுல் கத்ர் இரவைத் தோடும் ரமழானின் பிற்பகுதி இரவுகளில்- அந்நேரங்களைப் பயன் படுத்தும் விதத்தில் அல்குர்ஆன் ஓதுவதை அதிகப்படுத்துவது விரும்பத் தக்கது. ரமழான் முதல் நாள் இரவு வந்ததும் இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் தனது சகாக்களை ஒன்று சேர்த்து அல்குர்ஆனை முழுமையாக ஓதி முடிக்கும் வரை ஒவ்வொரு ரக்அத்திலும் தலா இருபது வசனங்கள் என ஓதித் தொழுகை நடத்துவார்கள். ஸஹர் வேளையில் அல்குர்ஆனின் மூன்றி லொரு பகுதி முதல் பாதி வரை ஓதுவார் கள், தினமும் நோன்பு திறக்கும் போது ஒவ்வொரு தடவை ஓதி முடிப்பார்கள். ஒவ்வொரு தடவையும் ஓதிமுடிக்கும் போது ஏற்றுக் கொள்ளப்படும் ஒரு துஆ உண்டு எனக் கூறுவார்கள். (ஸிபதுஸ் ஸப்வத் (4-170))

தொழுகையில் ஓதுவதல்லாமல் ரமழானில் தினமும் இரு தடவைகள் குர்ஆனை ஓதி முடிப்பார்களென இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களைப் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸிபதுஸ் ஸப்வாத் (2-255))

ரமழானில் இரவுத் தொழுகையும் முன்னோரும்

«உமர் (ரலி) அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் மக்கள் ரமழானில் நூற்றுக் கணக்கான 22 வசனங்கள் ஓதி இருபது ரக்அத்கள் தொழுவார்கள், உஸ்மான் (ரலி) அவர்களது காலத்தில் நீண்டநேரம் தொழுவதால் தடிகளில் ஊண்டிக் கொள்வார்கள் என ஸாஇப் இப்னு யஸீத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். » (ஆதாரம் – சுனனுல் குப்ரா இமாம் பைஹகீ)அப்துல்லாஹ் இப்னு அபீ பக்ர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : «நாங்கள் ரமழானில் இரவுத் தொழுகை முடிந்து செல்வோம், பஜ்ர் உதயமாகிவிடுமோ என அஞ்சி பணியாட்களிடம் ஸஹர் உணவைப் துரிதப்படுத்துமாறு வேண்டுவோம்» (முவத்தா மாலிக் – அப்துல் பாகி) என்று எனது தந்தை கூறுவார். 24

நாபிஃ (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: நாபிஃ (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: «இப்னு உமர் (ரலி) அவர்கள் ரமழான் மாதத்தில் இரவில் வீட்டில் தொழுவார் கள். மக்கள் பள்ளியிலருந்து சென்றதும் ஒரு தோற்பையில் சிறிது நீர் எடுத்துக் கொண்டு மஸ்ஜிதுந் நபவிக்குச் சென்று விடுவார்கள். பின்னர் ஸுபஹ் தொழாமல் அங்கிருந்து திரும்ப மாட்டார்கள். »(ஆதாரம் – சுனனுல் குப்ரா இமாம் பைஹகீ)

2 நோன்பின் கட்டாயக் கடமைகள், அதில் செய்ய அனுமதிக்கப்பட்டவை, ஸுன்னத்துக்கள், வெறுக்கத்தக்கவை, அதனை முறிப்பவை

பொருளடக்கம்

நோன்பின் கட்டாயக் கடமைகள்

நோன்புடன் செய்ய அனுமதிக்கப் பட்டவை

நோன்பின் ஸுன்னத்துக்கள்

நோன்பின் வெறுக்கத்தக்கவை

நோன்பை முறிப்பவை

நோன்பின் கட்டாயக் கடமைகள்

முதல் கடமை : அதிகாலை (பஜ்ர்) உதயமாகியதில் இருந்து சூரியன் மறையும் வரை நோன்பை முறிக்கக் கூடியவற்றிலிருந்து தவிர்ந்திருத்தல்

அல்லாஹ் கூறுகின்றான் : {பஜ்ர் நேரம் என்ற வெள்ளை நூல் (இரவு நேரம் என்ற) கறுப்பு நூலிலிருந்து தெளிவாகும் வரை நீங்கள் உண்ணுங்கள், பருகுங்கள். பின்னர் இரவு வரை நோன்பைப் பூர்த்தி செய்யுங்கள்} [அல்குர்ஆன் 2 : 187.)].

வெள்ளை நூல், கறுப்பு நூல் என்பதன் பொருள் – வெள்ளை என்பது பகல், கறுப்பு என்பது இரவாகும்.

இரண்டாவது கடமை : நிய்யத் (மனதால் எண்ணுதல்).

இவ்வாறு நோன்பை முறிக்கக் கூடியவற்றிலிருந்து தவிர்ந்திருப்பதன் மூலம் அல்லாஹ்வை வணங்குவதை நாடுதல் வேண்டும் «செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே அமைகின்றன, ஒவ்வொரு மனிதருக்கும் அவர் எண்ணியதுதான் கிடைக்கின்றது»(புஹாரி முஸ்லிம்).

நோன்பில் நிய்யத் வைத்தல்

கடமையான நோன்பாக இருந்தால் பஜ்ர் உதயமாக முன்னர் இரவிலேயே நிய்யத் வைத்தல் அவசியமாகும். மேலதிகமான நோன்பாக இருந்தால் அவ்வாறு அவசியமில்லை, சூரியன் உச்சிக்கும் வரும் வரை நோன்பை முறிக்கக் கூடிய எதனையும் செய்யாவிட்டால் பகலிலும் நிய்யத் வைத்து நோன்பைத் தொடரலாம். ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : «ஒரு தினம் நபி (ஸல்) அவர்கள் உங்களிடம் உண்பதற்கு ஏதும் உண்டா? என வினவினார்கள். நாம் “இல்லை” என்றோம். அப்படியாயின் “நான் நோன்பிருக்கின்றேன்” என்றார்கள்.» (ஆதாரம் முஸ்லிம் 1154).

www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

நோன்புடன் செய்ய அனுமதிக்கப் பட்டவை

1. குளித்தல், உஷ்னத்தைத் தணிக்க நீரில் மூழ்குதல்.

2. உமிழ்நீர், இருமல்நோய்ச் சளி போன்றவற்றை விழுங்குதல்

3. தொண்டையினுள் செல்லாத வகையில் நாவினால் மாத்திரம் உணவுகளை ருசி பார்த்தல்

4. வாசனைகள், நறுமணங்களை நுகர்தல்

நோன்பாளி மிஸ்வாக் குச்சி அல்லது பற்தூரிகை பயன்படுத்தல்

நோன்பு காலங்களில் எந்நேரத்திலும் பல் துலக்கலாம். அது மத்தியாணத்திற்கு முன்னரும் பின்னரும், மிஸ்வாக் குச்சி ஈரமாக இருந்தாலும், காய்ந்திருந்தாலும் சரி. எனினும் மிஸ்வாக் அல்லது பற்தூரிகை ஈரமனாதாக இருந்தால் தொண்டையினுள் ஏதும் செல்லாமல் கவனித்துக் கொள்ள வேண்டும், அவ்வாறு சென்றால் நோன்பு முறிந்து விடும்.

நோன்பின் ஸுன்னத்துக்கள்

1. ஸஹர் உணவு உண்ணதல், அதனை பஜ்ரு நெருங்கும் வரை பிற்படுத்துதல்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: «நீங்கள் ஸஹர் உணவு உண்ணுங்கள், ஏனெனில் ஸஹர் உணவில் பரகத் உள்ளது»(புஹாரி முஸ்லிம்).

ஒரு சிறு கவளம் உணவு, அல்லது தண்ணீர் மிடர் உட்கொள்வதன் மூலமும் ஸஹர் உண்ட நன்மையைப் பெறலாம். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : «ஸஹர் உணவு உண்பது பரகத் ஆகும், ஒரு தண்ணீர் மிடர் குடிப்பதன் மூலம் சரி அதனை விட்டுவிட வேண்டாம். ஏனெனில் அல்லாஹ்வும் அவனது வானவர்களும் ஸஹர் உண்வு உண்பவர் மீது ஸலவாத் கூறுகின்றனர். »(ஆதாரம் அஹ்மத்).

ஸஹர் உணவைத் தாமதப்படுத்துவது விரும்பத்தக்கதாகும். ஸைத் இப்னு ஸாபித் (ரலி) அவர்கள் கூறினார்கள்: «நாம் நபி (ஸல்) அவர்களுடன் சேர்ந்து ஸஹர் உணவு உண்டுவிட்டு தொழுகைக்காக எழுந்து சென்றோம். அவ்விரண்டிற்கும் இடையில் எவ்வளவு நேரம் இருந்தது? என அனஸ் (ரலி) அவர்கள் வினவ, "ஐம்பது வசனங்கள் ஓதும் நேரஅளவு" என (ஸைத்) பதிலளித்தார்கள்.» (புஹாரி முஸ்லிம்).

அதான் கூறும்போது பருகுதல்

தனது கையில் குடிபானம் இருக்கும் போது பஜ்ர் அதான் ஒலிக்கக் கேட்டால் அவருக்கு கையிலிருப்பதைக் குடித்து முடிக்கலாம். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : «பாத்திரம் கையிலிருக்கும் போது உங்களில் ஒருவர் அதான் ஒலிக்கக் கேட்டால் தனது தேவை முடியும் வரை அப்பாத்திரத்தை வைக்க வேண்டாம்» (ஆதாரம் அபூதாவுத்).

பஜ்ருடைய நேரம் வந்துவிட்டதா என்று சந்தேகத்தில் இருப்பவருக்குத் தான் இந்த நபிமொழி என அறிஞர்கள் கூறியுள்ளனர். பஜ்ர் உறுதியாகிவிட்டால் அதன் பின் அவருக்கு உண்ண, பருக முடியாது. அவ்வாறு செய்தால் நோன்பு முறிந்து விடும். பிறிதொரு நாளில் அதனை நோற்க வேண்டும்.

அதான் கூறும்போது பருகுதல்

2. நோன்பு திறப்பதை துரிதப்படுத்துதல்

சூரியன் அஸ்தமித்தது உறுதியானால் நோன்பு திறப்பதை அவசரப்படுத்துவது விரும்பத்தக்கதாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: «நோன்பு திறப்பதை அவசரப் படுத்தும் கலமெல்லாம் மக்கள் நலவிலேயே இருந்து கொண்டிருக்கின் றார்கள்» (ஆதாரம் அபூதாவுத்).

கனிந்த பேரீத்தம் பழங்கள், அது கிடைக்கா விட்டால் உலர்ந்த பேரீத்தம் பழங்களை ஒற்றைப்படையாக உண்டு நோன்பு திறப்பது விரும்பத்தக்கது. அதுவும் கிடைக்காவிட்டால் சில தண்ணீர் மிடர்கள் கொண்டு திறக்க வேண்டும். அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: «நபி (ஸல்) அவர்கள் மஃரிப் தொழ முன்னர் சில கனிந்த பேரீத்தம் பழங்களை உண்டு நோன்பு திறப்பார்கள். கனிந்த பேரீத்தம் பழங்கள் கிடைக்காவிட்டால் உலர்ந்த (ஒரு மிடர் குடி நீர்) பேரீத்தம் பழங்களை உண்பார்கள். அதுவும் கிடைக்காவிட்டால் சில மிடர் தண்ணீர் குடிப்பார்கள்.» (ஆதாரம் திர்மிதி) கிடைக்காவிட்டால் நோன்பு திறப்பதாக உள்ளத்தால் நினைத்துக் கொள்ள வேண்டும்.

3. நோன்பு திறக்கும் போது துஆக் கேட்டல்

நபி (ஸல்) அவர்கள் நோன்பு திறந்தால் பின்வருமாறு கூறுவார்கள்: «தஹபழ் ழமஉ, வப்தல்லதில் உரூகு, வஸபதல் அஜ்ரு இன்ஷாஅல்லாஹ்» (ஆதாரம் அபூதாவுத்). பொருள் : தாகம் தீர்ந்தது, நரம்புகள் நனைந்தன, கூலி உறுதியாகி விட்டது இன்ஷாஅல்லாஹ்.

மேலும் நபியவர்கள் கூறினார்கள்: «நிச்சயமாக நோன்பாளிக்கு அவன் நோன்பு திறக்கும் போது ஒரு பிரார்த்தனை இருக்கின்றது, அது தட்டப்பட மாட்டாது» (ஆதாரம் இப்னு மாஜா).

www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

தவறுதலாக நோன்பு திறந்தவர்

சூரியன் அஸ்தமித்து விட்டதாகவோ, பஜ்ர் இன்னும் உதயமாகவில்லை என்றோ தவறுதலாக நினைத்துக் கொண்டு நோன்பு திறந்தால் அவர் அதனை மீட்டத் தேவையில்லை.

அல்லாஹ் கூறுகின்றான்: {நீங்கள் எதில் தவறு செய்தீர்களோ அதில் உங்கள் மீது குற்றமில்லை, எனினும் உங்களது உள்ளங்கள் வேண்டுமென்றே கூறுவது உங்கள் மீது குற்றமாகும்}[அல்குர்ஆன் 33 : 05].

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : (நிச்சயமாக அல்லாஹ் தவறையும், மறதியையும், பலவந்தப்படுத்தப்பட்டு செய்வதையும் எனது சமூகத்திற்கு மன்னித்து விட்டான்) (ஆதாரம் இப்னு மாஜா).

4. மானக்கேடான செயல், வீண்களியாட் டங்களை விட்டுவிடுதல்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: «உங்களில் ஒருவர் நோன்பு நோற்றால் அவர் கெட்ட பேச்சுக்கள் (கெட்ட வார்த்தை, உடலுறவு, அதோடு தொடர்பானவைகளையும் குறிக்கும்) பேச வேண்டாம், சத்தமிட்டு தர்க்கிக்க (சண்டையிடுதல், கூச்சலிடுதல்.) வேண்டாம், அவருக்கு யாராவது ஏசினால் அல்லது சண்டையிட்டால் “நான் நோன்பாளி” என்று கூறட்டும்.».(புஹாரி முஸ்லிம்).

மேலும் நபியவர்கள் கூறினார்கள்: «பொய்யான பேச்சையும், பொய்யான செயலையும் விடாதவர் தம் உணவையும் பாணத்தையும் விடுவதில் அல்லாஹ் வுக்கு எந்தத் தேவையுமில்லை».(ஆதாரம் அபூதாவுத்)

5. வணக்க வழிபாடுகளை அதிகப் படுத்தல்

அல்குர்ஆன் ஓதுதல், அல்லாஹ்வை நினைவுகூர்தல், தராவீஹ் தொழுதல், லைலதுல் கத்ர் இரவை உயிர்ப்பித்தல், முன்பின் ஸுன்னதுக்கள் தொழுதல், தர்மம், அறம், நல்வழிகளில் செலவளித்தல் போன்றவற்றை அதிகப்படுத்துதல், நோன்பு திறக்க உதவுதல், உம்ராச் செய்தல் போன்ற இக்காலங்களில் செய்யும் சிறந்த வணக்கங்களாகும். ஏனெனில் ரமழானில் செய்யப்படும் வணக்கங்களுக்கு நன்மைகள் பன்மடங்காக்கப்படுகின்றன. இப்னு அப்பாஸ் ரழி அவர்கள் கூறினார்கள் –«நபி (ஸல்) அவர்கள் மக்களில் அதிக கொடைவள்ளலாக இருந்தார்கள், ரமழான் மாதத்தில்தான் அதிகமாக தர்மம் செய்வார்கள். ஏனெனில் ஒவ்வொரு வருடமும் ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களை ரமழான் மாதம் முழுதும் சந்திப்பார்கள் அப்போது நபியவர்கள் அல்குர்ஆனை அவர்களிடம் ஓதிக் காண்பிப்பார்கள். அவர்கள் ஜிப்ரீல் (அலை) அவர்களை சந்திக்கும் போது காற்றை விட வேகமாக நன்கொடை வழங்குவார்கள்» (ஆதாரம் புஹாரி).

6. ரமழானில் இறுதிப் பத்து தினங்களில் முழுமுயற்சியுடன் வணக்கங்களில் ஈடுபடல்.

ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: «ரமழானின் இறுதிப் பத்து தினங்கள் வந்துவிட்டால் நபி (ஸல்) அவர்கள் தனது வேட்டியை வரிந்து கட்டிக் கொண்டு, ("வேட்டியை வரிந்து கட்டுவார்கள்" என்பது வழமையைக் காண வணக்கத்தில் அதிக முயற்சி செய்வதைக் குறிக்கும் சிலேடையான வார்த்தை. பெண்கள், மற்றும் உடலுறவை விட்டும் ஒதுங்கியிருப்பதைக் குறிக்கும் மிக நாகரீகமான வார்த்தை என்றும் இதற்கு விளக்கம் கூறப்பட்டுள்ளது.) அவ்விரவுகளை, உயிர்ப்பிப்பார்கள், தனது மனைவியரையும் எழுப்பி விடுவார்கள்(வணக்க வழிபாடுகளின் முக்கியத்துவம்)» (ஆதாரம் புஹாரி).

நோன்பின் வெறுக்கத்தக்கவை

1. வுழூவின் போது வாய் கொப்பளிப்பதிலும், மூக்கினுள் நீர் செலுத்துவதிலும் அளவுகடந்து செய்தல்.

அதன் மூலம் சிலவேளை நீர் உள்ளே செல்ல வாய்புள்ளது என்பதற்காகவே வெறுக்கப்படுகின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: «நீங்கள் நோன்பாளியாக இல்லாத வரை மூக்கினுள் நன்றாக நீர் செலுத்துங்கள்» (ஆதாரம் அபூதாவுத்).

https://www.al-feqh.com/ta

2-இச்சையுடன் மனைவியை முத்தமிடல்

உணர்ச்சி அதிகமாகும் என்றோ, விந்து வெளிப்படும் என்றோ அஞ்சினால் நோன்பாளி தனது மனைவியை இச்சையுடன் முத்தமிடுவது வெறுக்கத் தக்கதாகும். உணர்ச்சிகளைத் தூண்டும் அனைத்துக் காரியங்களையும் விட்டுத் தூரவாகி இருப்பது நோன்பாளிக்கு அவசியமாகும். தனது நோன்பு பாலாகும் எனும் அச்சம் இல்லாவிடில் முத்தமிடுவது குற்றமில்லை. ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: «நபி (ஸல்) அவர்கள் நோன்பு நோற்ற நிலையில் தன் மனைவியரை கட்டியணைப்பார்கள், முத்தமிடுவார்கள், அவர்கள் உங்களில் தம் உடல் உணர்ச்சியை அதிகம் கட்டுப்படுத்தக் கூடியவர்களாக இருந்தார்கள்(அவருடைய தேவை)» (புஹாரி முஸ்லிம்) இதனால் வயோதிபரன்றி வாலிபர்கள் மேற்கண்ட காரியங்களில் நோன்புடன் ஈடுபடுவது வெறுக்கத்தக்கதாகும். அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகின்றார் கள்: «ஒரு மனிதர் நபியவர்களிடம் நோன்பாளிக்கு மனைவியைக் கட்டி யணைப்பது பற்றிக் கேட்ட போது அனுமதித்தார்கள். மற்றொருவர் வந்து கேட்டதும் தடுத்தார்கள். அவர்கள் அனுமதியளித்தவர் வயோதிபராகவும், தடுத்தவர் வாலிபராகவும் இருந்தார்.கள்.» (ஆதாரம் அபூதாவுத்).

நோன்பை முறிப்பவை

1. ரமழான் பகலில் வேண்டுமென்றே உண்ணல், பருகல்

அல்லாஹ் கூறுகின்றான்: {பஜ்ர் நேரம் என்ற வெள்ளை நூல் (இரவு நேரம் என்ற) கறுப்பு நூலிலிருந்து தெளிவாகும் வரை நீங்கள் உண்ணுங்கள், பருகுங்கள். பின்னர் இரவு வரை நோன்பைப் பூர்த்தி செய்யுங்கள்} [அல்குர்ஆன் 2 : 187].

தொழிலுக்காக நோன்பை விடுதல்

போறணைகள், மற்றும் கடின வேலைகள் செய்வோரும் பிறரைப் போன்றுதான், அவர்களுக்கும் தமது தொழிலுக்காக நோன்பை விட முடியாது.

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

சுர்மா இடுவது நோன்பை முறிக்காது.

இன்சுலின் ஊசி நோன்பை முறிக்காது

ஊட்டச்சத்து மருந்து நோன்பை முறிக்கும்

சில குறிப்புக்கள்

மறதியாக உண்டால், பருகினால் அவருடைய நோன்பு முறியமாட்டாது, நினைவு வந்ததும் நிறுத்திக் கொள்ள வேண்டும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: «தான் ஒரு நோன்பாளி என்பதை மறந்து ஒருவர் உண்டால், அல்லது பருகினால் அவர் தனது நோன்பை பூரணப்படுத்தட்டும். ஏனெனில் அவருக்கு அல்லாஹ்தான் உணவும், பாணமும் புகட்டியுள்ளான்". அவருடைய நோன்பு முறியமாட்டாது» (ஆதாரம் முஸ்லிம்).

ஊட்டச்சத்தாக வாய்வழியாக உள்ளே செல்லும் அனைத்தும் நோன்பை முறிக்கும். உதாரணமாக ஊட்டச்சத்து ஊசிகளைக் குறிப்பிடலாம். இன்சுலின் போன்றவற்றின் மூலம் நோன்பு முறிய மாட்டாது. ஏனெனில் அது உணவாக செலுத்தப்படுவதில்லை.

தேவைக்காக வாய்வழியாக செலுத்தப் படும் மருத்துவ கெமராக்கள், ஆஸ்துமா ஸ்ப்ரே போன்றவையும் நோன்பை முறிக்காது.

சுர்மா, கண், காதுக்குள் செலுத்தப்படும் சொட்டுமருந்துகளும் நோன்பை முறிக்க மாட்டாது. ஏனெனில் இதன் மூலம் நோன்பு முறியும் என்பதற்கான ஆதாரம் ஏதும் கிடையாது, அத்துடன் கண் வழமையாக ஊட்டச்சத்து செலுத்தப் படும் வழியல்ல. அதே போன்றுதான் காதும். எனினும் மூக்கினுள் வடிக்கப் படும் சொட்டு மருந்தைத் தவிர்ந்து கொள்வது நல்லது, ஏனெனில் அதன் சுவை உணரப்பட வாய்ப்புள்ளது, மட்டுமன்றி நபியவர்கள் நோன்டன் மூக்கினுள் அதிக நீர் செலுத்துவதைத் தடையும் செய்துள்ளார்கள். (ஆதாரம் திர்மிதி)

ஆஸ்துமா ஸ்ப்ரே நோன்பை முறிக்காது

https://www.al-feqh.com/ta

உணவல்லாத வேறொன்றை, ஸிகரட் போன்ற தீங்கு விளைவிக்கும் ஒன்றை உட்கொண்டாலும் நோன்பு முறிந்து விடும். ஏனெனில் அவை வாய்வழியாகத் தான் உட்செலுத்தப்படுவதுடன், உண்ணல் பருகலில் அடங்குகின்றன.

தூசி, பற்களுக்கிடையில் இருக்கும் சிறு உணவுப் பொருட்கள் போன்ற தவிர்ந்து கொள்ள முடியாதவற்றால் நோன்பு முறிய மாட்டாது.

புகைபிடித்தல் ஸிகரட் நோன்பை முறிக்கும்

பற்களுக்கிடையிலுள்ள உணவுகளால் நோன்பு முறியாது.

2. உடலுறவு கொள்ளல்

அல்லாஹ் கூறுகின்றான்: {நோன்பு கால இரவில் உங்கள் மனைவியிடம் உறவு கொள்வது உங்களுக்கு ஆகுமாக்கப் பட்டுள்ளது}[அல்குர்ஆன் 2 : 187].

எனவே நோன்பு நோற்ற நிலையில் உடலுறவு கொண்டால் நோன்பு முறிந்து விடும். அத்தினத்தை அவர் கழாச் செய்வதுடன், பாரிய குற்றப்பரிகாரம் ஒன்றும் அவர் மீது கடமையாகின்றது. அது ஓர் அடிமையை உரிமையிடுவது, கிடைக்காவிட்டால் இரு மாதங்கள் தொடர்ச்சியாக நோன்பு நோற்பது, முடியாவிட்டால் அறுபது ஏழைகளுக்கு உணவளிப்பது. அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : «நபி (ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து "அல்லாஹ்வின் தூதரே! நான் அழிந்து விட்டேன்" என்றார். நபியவர்கள் "உமக்கு என்ன நேர்ந்தது?" என வினவ, "நான் ரமழானில் (நோன்பு நோற்ற நிலையில்) மனைவியுடன் உறவு கொண்டு விட்டேன்" என்றார்கள். அதற்கு நபியவர்கள் "உன்னால் ஓர் அடிமையை உரிமையிட முடியுமா?" என்று கேட்டார்கள். அவர் "இல்லை" என்றார். "இரண்டு மாதங்கள் தொடர்ந்து நோன்பு நோற்க உன்னால் முடியுமா?" என்றார்கள். அவர் "இல்லை" என்றார். "அறுபது ஏழைகளுக்கு உணவளிக்க உம்மால் முடியுமா?" என்று கேட்க, அதற்கும் அவர் "இல்லை" என்றார். நபியவர்கள் "அமர்வீராக" என்றதும், அவர் அமர்ந்தார். நபியிடம் பேரீத்தம் பழம் நிறைந்த ஒரு பெரிய (அதிக நிறையுள்ள) கூடை கொண்டு வரப்பட்டது. நபி (ஸல்) அவர்கள் "இதைப் பெற்று தர்மம் செய்வீராக" என்றார்கள். அம்மனிதர், "இறைத்தூதர் அவர்களே! என்னை விட ஏழையாக இருப்போருக்கா நான் தர்மம் செய்ய வேண்டும்? என்று கேட்க, நபியவர்கள் தமது கடைவாய்ப் பற்கள் தெரியுமளவு சிரித்து விட்டு, "உனது குடும்பத்திற்கே உணவளியும்" என்றார்கள்»(புஹாரி முஸ்லிம்).

மேற்கண்ட நபிமொழியில் உள்ள ஒழுங்குமுறைப் படியே பரிகாரம் செலுத்த வேண்டும். நோன்பு நோற்க சக்தியில்லாவிட்டால் தான் தர்மம் செய்ய வேண்டும், அடிமை உரிமையிட வசதியில்லாவிட்டால் தான் நோன்பு நோற்க வேண்டும்.

இதில் சம்பந்தப்படும் பெண்ணைப் பொறுத்தவரையில் அவளும் கணவுடன் இவ்விடயத்தில் இணங்கிச் சென்றால் அவளும்

www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

பரிகாரம் நிறைவேற்ற வேண்டும். மாறாக கணவன் அவளை நிர்ப்பந்தித்தால் நோன்பு முறிந்து விடும், அதனைக் கழாச் செய்ய வேண்டும், ஆனால் குற்றப்பரிகாரம் செலுத்தத் தேவையில்லை.

• நோன்பு முறியும் விடயத்தில் உடலு றவைப் போன்றுதான் சுயஇன்பம் அனுபவித்து, அல்லது தொடுதல், முத்தமிடுதல் மூலம் சுயநினைவுடன் விந்து வெளியேற்றுதலும் நோன்பை முறித்து விடும். ஏனெனில் நோன்பின் நோக்கத்துடன் முரண்படும் இச்சையைச் சார்ந்தது. குற்றப் பரிகாரமின்றி கழா மாத்திரம் செய்ய வேண்டும். குற்றப்பரிகாரம் ஆதாரபூர் வமாக உடலுறவுக்கு மாத்திரம் தான் விதியாக்கப்பட்டுள்ளது.

• கட்டியணைத்தல், தொடுதல், உடலுறவு பற்றி சிந்தித்தல் மூலம் மதனநீர் வெளிப்பட்டால் நோன்பு செல்லுபடி யாகும். இச்சந்தர்ப்பத்தில் நோன்பு முறியும் என்பதற்குத் தெளிவான ஆதாரமில்லை.

• தூக்கத்திலோ அல்லது நோயினால் இச்சையின்றி நோன்பு முறிய மாட்டாது. ஏனெனில் அதில் அவரது சுயவிருப்பம் ஏதும் கிடையாது.

• பஜ்ருக்கு முன்னர் உடலுறவு, விந்து வெளிப்படுதல் மூலம் குளிப்பு கடமையான நிலையில் அதிகாலையில் எழுந்தாலும் நோன்பு செல்லுபடியாகும். எனினும் ஸுபஹ் தொழுகையை ஜமாஅத்துடன் தொழுவதற்காக குளித் துக்கொள்ள வேண்டும். நபி (ஸல்) அவர்கள் உடலுறவின் மூலம் குளிப்புக் கடமையான நிலையில் பஜ்ர் வேளையை அடைவார்கள். பின்பு குளித்து, நோன்பு நோற்பார்கள். *(ஆதாரம் : புஹாரி 1926, முஸ்லிம் 1109.)*

3. வேண்டுமென்றே வாந்தியெடுத்தல்

இரைப்பையிலிருந்து உணவு, பாணங் களை வேண்டுமென்றே வாய்வழியாக வெளியேற்றுவதே வாந்தியாகும். எனினும் தனது கட்டுப்பாட்டை மீறி வாந்தி வந்தால் நோன்பு முறியாது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் யாருக்கு வாந்தி வருகின்றதோ அவர் கழாச் செய்யத் தேவையில்லை, வேண்டு மென்றே வாந்தியெடுப்பவர் கழாச் செய்ய வேண்டும். *(ஆதாரம் : அபூதாவூத் 2380, திர்மிதீ 720.)*

4. மாதவிடாய் மற்றும் பிரசவ இரத்தம்

சூரியன் அஸ்தமிக்க சில வினாடிகள் முன்னரும் சரி மாதவிடாய், அல்லது பிரசவ இரத்தம் வெளிப்பட்டால் நோன்பு முறிந்து விடும், அதனைக் கழாச் செய்ய வேண்டும்.

பயனுள்ள ஒரு தகவல்

குறிப்பிட்ட கருவிகளைப் பயன்படுத்தி உடலிலிருந்து இரத்தம் வெளியேற்றும் முறையான “ஹிஜாமத்” நோன்பை முறிக்க மாட்டாது என்பதே வலுவான கருத்தாகும். நபி (ஸல்) அவர்கள் நோன்பாளிக்கு முத்தமிடுவதையும், ஹிஜாமத்தையும் அனுமதி வழங்கினார் கள் என அபூ ஸஈத் அல்குத்ரீ (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். எனினும் உடல் பலவீனப்படுவதைக் கருதி அவ்வாறு செய்வதைத் தவிர்ந்து கொள்வது நன்று. “நீங்கள் நோன்பாளி ஹிஜாமத் செய்வதை வெறுக்கக் கூடிய வர்களாக இருந்தீர்களா?” என்று அனஸ் (ரலி) அவர்களிடம் வினவப் பட்ட போது “உடல் பலவீனத்திற்காகவன்றி நாம் அதனை வெறுக்கவில்லை” என்றார்கள்.

காயம், பல் பிடுங்குதல், மூக்கிலிருந்து இரத்தம் வழிதல், பரிசோதனைக்காக ஊசி மூலம் இரத்தம் எடுத்தல், இரத்த தானம் செய்தல் போன்றவற்றால் வெளிப்படும் இரத்தம் நோன்பை முறிக்காது.

https://www.al-feqh.com/ta

3

ரமழானில் நோன்பு விடுவதற்கான சலுகைகளும், அதனைப் பிறிதொரு நாளில் நோற்றலும் (கழாச் செய்தல்)

www.al-feqh.com/

பொருளடக்கம்

ரமழானில் நோன்பு விடுவதற்கான சலுகைகள்

பிறிதொரு நாளில் நோன்பு நோற்றல்

ரமழானில் நோன்பு விடுவதற்கான சலுகைகள்

1. நோய்

நோயாளிக்கு நோன்பு விட அனுமதி உண்டு.

அல்லாஹ் கூறுகின்றான்: {உங்களில் எவர் நோயாளியாக அல்லது பயணத்தில் இருக்கிறாரோ (அவர்) வேறு நாட்களில் கணக்கிட்டு (நோற்று)க் கொள்ளட்டும்}[அல்குர்ஆன் 2 184].

நோயின் காரணமாக நோன்பு நோற்க சிரமம், அல்லது தீங்குகள் ஏற்படும் என்றாலே நோன்பு விட அனுமதியுண்டு. சிரமமில்லாத சிறு நோய்களுக்கல்ல.

நோயாளி நோன்பு விடுதல்

குணப்படுத்த முடியுமான நோயாக இருந்து, நோன்பை விட்டால் அவர் அடுத்த ரமழானிற்கு முன்னர் அதனைக் கழாச் செய்திட வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான்: {உங்களில் எவர் நோயாளியாக அல்லது பயணத்தில் இருக்கிறாரோ (அவர்) வேறு நாட்களில் கணக்கிட்டு (நோற்று)க் கொள்ளட்டும்}[அல்குர்ஆன் 2 184]

தீராத நோயாக இருந்தால், அல்லது நோன்பு நோற்க சக்தியற்ற நிலையிலுள்ள வயோதிபராக இருந்தால் அதனைக் கழாச்செய்யத் தேவையில்லை. பதிலீடாக ஒவ்வொரு நோன்பிற்கும் ஓர் ஏழை விகிதம் அரை ஸாவு (ஒரு ஸாவு என்பது நடுத்தர ஒரு மனிதருடைய இரு கையால் நான்கு முறை அள்ளும் அளவாகும். அதனைக் கிலோ கிராமில் கணிக்கும் போது சுமார் 2.25 கி. கிராம் எடையைக் கொள்கின்றது. எனவே அரை ஸாவு என்பது சுமார் 1125 கிராம் ஆகும்.) அளவு உணவளிக்க வேணடும்.

2. பிரயாணம்

பிரயாணிக்கு ரமழானில் நோன்பை விட முடியும், பதிலாக அடுத்த ரமழானிற்கு முன்னர் அதனைக் கழாச் செய்ய வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான்: {உங்களில் எவர் நோயாளியாக அல்லது பயணத்தில் இருக்கிறாரோ (அவர்) வேறு நாட்களில் கணக்கிட்டு (நோற்று)க் கொள்ளட்டும்}[அல்குர்ஆன் 2 184]

www.al-feqh.com/ta

தொழுகையை சுருக்கித் தொழ முடியுமான பிரயாணங்களில் தான் நோன்பையும் விட அனுமதியுண்டு. மார்க்கத்தில் அனுமதக்கப்பட்ட நடைமுறையில் பிரயாணம் என்று வரும் போது அதில் தான் சுருக்கித் தொழவும், நோன்பு விடவும் முடியும். அப்பிரயா ணம் பாவமாக, அல்லது நோன்பை விடு வதற்கான தந்திரோபாயமாக இருந்தால் அதில் நோன்பை விட முடியாது.

பிரயாணி நோன்பு நோற்றால் அவருடைய நோன்பு செல்லுபடியாகும். அனஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள் : «நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் ஒரு பிரயாணத்தில் இருந்தோம். எங்களில் நோன்பு நோற்றவர் விட்டவரையோ, நோன்பை விட்டவர் நோற்றவரையோ குறை கூறவில்லை»(ஆதாரம் புஹாரி).

எனினும் பிரயாணத்துடன் நோன்பு நோற்பதால் சிரமமோ, விபரீதங்களோ ஏற்பட்டால் அவர் நோன்பு விடுவதுதான் சிறந்தது. நபி (ஸல்) அவர்கள் பிரயாணத்தில் நோன்பு நோற்று, அதிக உஷ்னத்தால் நிழல் கொடுக்கப்பட்டுக் கொண்டிருந்த ஒருவரைக் கண்டார்கள். மக்கள் அவரைச் சூழ்ந்து கொண்டிருந் தார்கள். நபியவர்கள் கூறினார்கள் : «பிரயாணத்தில் நோன்பு நோற்பது நற்செயலல்ல»(ஆதாரம் புஹாரி).

3- கர்ப்பமும், பாலூட்டுதலும்

கர்ப்பிணி, மற்றும் பாலூட்டும் தாய்மார் தமக்கோ, தமது குழந்தைகளுக்கோ பாதிப்பு ஏற்படுமென அஞ்சினால் நோன்பை விட்டுவிட்டு பிறிதொரு நாளில் கழாச் செய்யலாம். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: «நிச்சயமாக அல்லாஹ் பிரயாணிக்கு நோன்பையும் (நான்கு ரக்அத்) தொழுகையில் பாதியையும், பிரயாணி, கர்ப்பிணி, பாலூட்டும் தாய் (மூவரு)க்கும் நோன்பையும் வீழ்த்தியுள்ளான்» (ஆதாரம் திர்மிதி)

தமது குழந்தைகளுக்காக நோன்பை விட்டால் கழாச் செய்வதுடன் அரை ஸாவு அளவு (1.25 கிலோகிராம்) உணவளிக்கவும் வேண்டும். இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: «கர்ப்பிணி, பாலூட்டும் தாய் தமது குழந்தைக்காக அஞ்சினால் நோன்பு விட்டுவிட்டு, கழாச் செய்யட்டும்» (ஆதாரம் அபூதாவுத்)

4. மாதவிடாய் மற்றும் பிரசவ இரத்தம்

ரமழானில் மாதவிடாய் அல்லது பிரசவ இரத்தம் ஏற்பட்ட பெண் நோன்பு விடுவது அவசியமாகும். நோற்றாலும் செல்லுபடியாக மாட்டாது, அதனைக் கழாச் செய்ய வேண்டும். ஆஇஷா (ரலி) அவர்களிடம் மாதவிடாய்ப் பெண் தொழுகையில்லாமல் நோன்பை மாத்திரம் கழாச் செய்வது பற்றி கேட்கப் பட்ட போது «எங்களுக்கு அது ஏற்படும், அப்போது நோன்பைக் கழாச் செய்யும் படி ஏவப்படுவோம், தொழுகையைக் கழாச் செய்யும்படி ஏவப்பட மாட்டோம்" என்றார்கள்»(புஹாரி முஸ்லிம்).

பிறிதொரு நாளில் நோன்பு நோற்றல்

- தக்க காரணமின்றி ஒரு முஸ்லிம் ரமழான் நோன்பை விட்டால் அல்லாஹ்விடம் மீண்டு, பாவமீட்சி பெறுவது அவசியாகும். ஏனெனில் அது பாரிய குற்றமாகவும், பெரும் பாவமாகவும் இருக்கின்றது. தௌபாச் செய்வதுடன், விட்ட நோன்புகளை தாமதப்படுத்தாமல் உடனடியாக நோற்றுவிட வேண்டும். ஏனெனில் இவர் சட்டரீதியாக நோன்பு விட அனுமதிக்கப்பட்டவரல்ல. எனவே உரிய நேரத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய இந்நோன்புகளை உடனடி யாக நோற்க வேண்டுமென்பதே வலு வான கருத்தாகும்.

- மார்க்கம் அனுமதித்த காரணங்களான மாதவிடாய், பிரசவ இரத்தம், நோய், பிரயாணம் போன்றவற்றிற்காக நோன்பு விட்டால் அதனை சக்தி பெற்றவர் கழாச் செய்ய வேண்டும். எனினும் உடனடியாக அவசியமில்லை. அடுத்த ரமழானிற்கு முன்னர் நோற்க வேண்டும். ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் «ரமழா னின் சில நோன்புகள் நோற்க வேண்டியி ருக்கும், நபி (ஸல்) அவர்களுடனான வேலைப்பளுவால் ஷஃபான் மாதம்தான் அதனை கழாச் செய்யும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கும்»(ஆதாரம் : முஸ்லிம் 335).

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

எனினும் பொறுப்புத் துறக்கும் விதமாகவும், பேணுதலுக்காக வும் அதனைத் துரிதப் படுத்துவது நன்று. சிலவேளை நோய் போன்ற தடங்கள் ஏதும் பிற்காலத்தில் நிகழலாம்.

• நோன்பு விடுவதற்கான காரணம் ஒருவரிடம் அடுத்த ரமழான் வரை தொடர்ந்து கொண்டே இருந்தால் அவ்விரண்டாவது ரமழானிற்குப் பின்னர் விட்ட நோன்புகளைக் கழாச் செய்ய வேண்டும்.

• தக்க காரணமின்றி அவ்வாறு பிற்படுத்தினால் கழாச் செய்வதுடன் சேர்த்து, ஒவ்வொரு நோன்பிற்கும் பதிலாக அரை ஸாவு அளவு உணவும் அளிக்க வேண்டும் என்பதே பெரும் பான்மை அறிஞர்களின் கருத்தாகும். ஹனபி மற்றும் ழாஹிரி மத்ஹபைச் சார்ந் தவர்களிடம் கழா மாத்திரம் செய்தால் போதுமானது.

• கழாச் செய்யும் போது தொடராக நோற்க வேண்டும் என்ற நிபந்தனை கிடையாது. சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு பிரித்தும், தொடராகவும் நோற்கலாம். அல்லாஹ் கூறுகின்றான் : {உங்களில் எவர் நோயாளியாக அல்லது பயணத்தில் இருக்கிறாரோ (அவர்) வேறு நாட்களில் கணக்கிட்டு (நோற்று)க் கொள்ளட்டும்} [அல்குர்ஆன் 2 : 184] இவ்வசனத்தில் தொடர்ச்சியை அல்லாஹ் நிபந்தனையிட வில்லை. அவ்வாறிருந்தால் தெளிவு படுத்தியிருப்பான்.

• ரமழான் நோன்பு கழாச் செய்ய இருந்தால் ஸுன்னத்தான நோன்புகளை விட அதனை முற்படுத்த வேண்டும். ஏனெனில் கடமையான நோன்பு முன்னி லைப்படுத்தப் பட வேண்டும். எனினும் அதற்கு மாற்றமாக நோற்றால் தவறேதுமில்லை, குறிப்பாக முஹர்ரம் 10, அரபா தினம், ஷவ்வாலின் 6 நோன்புகள் போன்ற நாள் குறிக்கப்பட்டு வந்துள்ள நோன்புகள் தவறிவிடாமல் இருக்க அவற்றை நோற்க முடியும்.

• மரணிக்கும் வரை தக்க காரணங்களுக்காக கழாச் செய்வதை விட்டுவிட்டால் அவருக்கு குற்றமேதுமில்லை, ஏனெனில் அவர் இதில் பராமுகமாக இருக்க வில்லை. காரணமின்றி விட்டால் அந் நோன்புகளுக்குப் பதிலாக ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும். நேர்ச்சை நோன்பாக இருந்தால் குடும்பத்தார் அதனை நோற்பர்.

பொதுவாக கடமையான நோன்பை- ரமழான் அல்லது நேர்ச்சை- விட்டுவிட்டு ஒருவர் மரணித்தால் அதனைக் குடுப்பத்தார் நோறக்க வேண்டும் என்ற கருத்தையும் சில அறிஞர்கள் கூறியுள்ளனர். நபி (ஸல்) அவர்கள் பொதாக கூறினார்கள் : «தன் மீது நோன்பு கடமையான நிலையால் யார் மரணிக்கிறாரோ அவருக்குப் பதிலாக அவருடைய குடும்பத்தார் நோறகட்டும்»(புஹாரி முஸ்லிம்). இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : "ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து «எனது தாய் தன் மீது ஒரு மாத கால நோன்பு கடமையான நிலையில் மரணித்து விட்டார், அவருக்கு பதிலாக நான் நோற்கவா?" என்று கேட்க, "ஆம், அல்லாஹ்வுக்கு செலுத்த வேண்டிய கடன்தான் நிறைவேற்ற மிகவும் ஏற்றது என்றார்கள்»(புஹாரி முஸ்லிம்).

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

4 மேலதிக நோன்பு

மேலதிக நோன்பு

அல்லாஹ்வை நெருங்கும் நோக்கில் நோற்கப்படும் கடமையல்லாத அனைத்து நோன்புகளும் மேலதிகமான (ஸுன்னத்தான) நோன்புகளாகும்

பொருளடக்கம்

மேலதிக நோன்பின் வரைவிலக்கணம்

நோன்பு நோற்க ஸுன்னத்தான நாட்கள்

1. ஷவ்வால் மாத 6 நோன்புகள்

2. துல்ஹஜ் மாத 9 நோன்புகள்

3. ஆஷூரா (முஹர்ரம் 10ம் நாள்) நோன்பு

4. சந்திர மாத நடுப்பகுதி (13, 14, 15ம் தின) நோன்பு

5. திங்கள், வியாழன் நோன்பு

6. ஒரு நாள் விட்டு ஒரு நாள் நோன்பு நோற்றல்

7. முஹர்ரம் மாத நோன்பு

8. ஷஃபான்மாத நோன்பு

நோன்பு நோற்கத் தடைவிதிக்கப்பட்ட,

மற்றும் வெறுக்கப்பட்ட நாட்கள்

நோன்பிற்குப் பாரிய சிறப்பும், மகத்தான பன்மடங்கு கூலியும் உண்டு, நபி (ஸல்) அவர்கள் (அல்லாஹ்விடமிருந்து அறிவிக்கும்) ஹதீஸ் குத்ஸியில் கூறினார்கள்: «ஆதமுடைய மகனின் செயல்கள் அனைத்திற்கும் நன்மை பன்மடங்காக்கப்படும், ஒரு நன்மை பத்தாக, அதிலிருந்து எழுநூறாகப் பெருகும்". அல்லாஹ் கூறினான்: "நோன்பைத் தவிர, ஏனெனில் அது எனக்குரியது, நானே அதற்குக் கூலி வழங்குவேன்» (புஹாரி முஸ்லிம்).

நோன்பு நோற்க ஸுன்னத்தான நாட்கள்

1. ஷவ்வால் மாத 6 நோன்புகள்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: «யார் ரமழானில் நோன்பு நோற்று அதனைத் தொடர்ந்து ஷவ்வால் மாதம் 6 நோன்புகள் நோற்கின்றாரோ அவர் காலம் முழுதும் நோன்பு நோற்றவர் போலாவார்» (ஆதாரம் முஸ்லிம்) இவற்றைத் தொடராகவும், விட்டு விட்டும் நோற்கலாம்.

2. துல்ஹஜ் மாத 9 நோன்புகள்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : «இந்தப் பத்து நாட்களை விட (துல் ஹஜ் முதல் 10) நற்காரியங்கள் செய்ய அல்லாஹ்வுக்கு மிக விருப்பத்திற்குரிய நாட்கள் இல்லை". "அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரிவதை விடவா?" என்று நபித்தோழர்கள் கேட்டனர். அதற்கு நபியவர்கள், "ஆம், அறப்போர் புரிவதை விட (இந்நாட்களில் நற்காரியங்கள் செய்வது தான் சிறந்தது), ஒரு மனிதரைத் தவிர, தனது உடல், பொருள் அனைத்துடனும் சென்று, பின் எதனையும் கொண்டு திரும்பாத (உயிர்த்தியாகம் செய்த)வரைத் தவிர என்றார்கள்»(ஆதாரம் புஹாரி), அத்தினங்களில் அல்லாஹ்வை நினைவு கூர்தல், "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்ற கலிமா, அல்குர்ஆன் ஓதல், தர்மம், 10ம் நாளைத் தவிர ஏனைய நாட்களில் நோன்பு நோற்றல் போன்ற வணக்கங்களைச் செய்வதில் முனைப் புடன் செயற்படுவது விரும்பத்தக்கது.

துல்ஹஜ் 9ம் நாளாகிய அரபா தினத்தில் ஹாஜிகள் அல்லாதோர் நோன்பு நோற்பது இன்னும் சிறந்தது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : «அரபா தின நோன்பு, அல்லாஹ் அதன் மூலம் அதற்கு முன்னுள்ள, பின்னுள்ள இரு வருடங்களின் பாவங்களுக்கான பரிகாரமாக ஆக்குவானென நான் எதிர்பார்க் கின்றேன்»

(ஆதாரம் முஸ்லிம்)

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

3. ஆஷூ ரா நோன்பு

ஆஷூ ரா

அது முஹர்ரம் மாதத்தின் 10ம் நாள்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: «ஆஷூ ரா தின நோன்பு, அல்லாஹ் அதன் மூலம் அதற்கு முன்னுள்ள வருடத்தின் பாவங்களுக்கான பரிகாரமாக ஆக்குவா னென நான் எதிர்பார்க்கின்றேன்»(ஆதாரம் முஸ்லிம்).

இந்நோன்பின் பின்னனி பற்றி இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கும் நபிமொழியில் பதிவாகியுள்ளது: «நபி (ஸல்) அவர்கள் மதீனா வந்த போது யூதர்கள் ஆஷூ ரா நோன்பு நோற்பதை அவதானித்து, “இது என்ன?” என்று வினவினார்கள். அதற்கு அவர்கள், “இது நல்லதொரு தினம், இந்நாளில்தான் அல்லாஹ் இஸ்ரவேலர்களைத் தமது எதிரிகளிடமிருந்து காத்தான், எனவே நபி மூஸா அத்தினத்தில் நோன்பு நோற்றார்கள்” என்றார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், “உங்களை விட மூஸாவைப் பின்பற்ற நான்தான் தகுதியா னவன்” என்று கூறித் தானும் நோன்பு நோற்று, பிறரையும் நோற்குமாறு ஏவினார்கள்.» (ஆதாரம் புஹாரி) அத்துடன் யூதர்களுக்கு மாறும் செய்வதற்காக 9ம் நாளையும் சேர்த்து நோற்பது விரும்பத்தக்கது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: «அடுத்த வருடமும் நான் இருந்தால் 9ம் நாளையும் நோற்பேன்» (ஆதாரம் முஸ்லிம்)

4. சந்திர மாத நடுப்பகுதி (13, 14, 15ம் தின) நோன்பு

அய்யாமுல் பீழ்

அது சந்திர மாத நடுப்பகுதி 13, 14, 15ம் தினங்களாகும். பூரண சந்திரனின் பிரகாசத்தால் அவ்விரவுகள் ஒளிவுடன் இருப்பதனாலேயே அய்யாமுல் பீழ் எனப்படுகின்றன.

கதாதா இப்னு மில்ஹான் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: «நபி (ஸல்) அவர்கள் எங்களுக்கு அய்யாமுல் பீழ் நாட்களில் நோன்பு நோற்குமாறு ஏவுவார்கள், “அவை காலம் முழுதும் நோற்கும் நோன்பிற்கு ஈடானதெனவும்” கூறுவார்கள்» (ஆதாரம் இப்னு ஹிப்பான்).

5. வாராந்தம் திங்கள், வியாழனில் நோன்பு நோற்றல்

நபி (ஸல்) கூறினார்கள்: «திங்கள், வியாழன் ஆகிய தினங்களில் செயல்கள் அல்லாஹ்விடம் சமர்ப்பிக்கப்படுகின் றன. நான் நோன்பு நோற்ற நிலையில் என்னுடைய செயல்கள் சமர்ப்பிக்கப்படு வதை விரும்புகின்றேன்»(ஆதாரம் திர்மிதி).

https://www.al-feqh.com/ta

www.al-feqh.com/ta

6. ஒரு நாள் விட்டு ஒரு நாள் நோன்பு நோற்றல்

ஸுன்னத்தான நோன்புகளில் நபி தாவூத் (அலை) அவர்களின் நோன்பு முறையாகும். அவர்கள் ஒரு நாள் விட்டு ஒரு நாள் நோன்பு நோற்பார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : «அல்லாஹ்விடம் விருப்பத்திற்குரிய நோன்பு தாவூத் (அலை) அவர்களுடைய நோன்பாகும். அவர்கள் ஒரு நாள் விட்டு ஒரு நாள் நோன்பு நோற்பார்கள்» (ஆதாரம் நஸாயி).

7. முஹர்ரம் மாத நோன்பு

«கடமையான நோன்புக்கு அடுத்து சிறந்த நோன்பு முஹர்ரம் மாதத்தில் நோற்கப்படும் நோன்பாகும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். » (ஆதாரம் முஸ்லிம்).

8. ஷஃபான் மாத நோன்பு

நபி (ஸல்) அவர்கள் ஏனைய மாதங்களை விட ஷஃபானில் அதிகமாக ஸுன்னத்தான நோன்பு நோற்பார்கள். உஸாமா இப்னு ஸைத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : «நான் நபி (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதரே! ஷஃபான் மாதத்தில் தாங்கள் நோன்பு நோற்பதைப் போன்று ஏனைய மாதங்களில் நோற்பதைக் காணோம்?" என்று கேட்டேன். "அது ரஜப், ரமழான் ஆகிய இரு மாதங்களிடையில் மக்கள் பராமுகமாக இருக்கும் மாதமாகும், அம்மாதத்தில் செயல்கள் அகிலத்தாரின் இரட்சகனிடம் சமர்ப்பிக்கப்படுகின்றன. நான் நோன்பு நோற்ற நிலையில் என்னுடைய செயல்கள் சமர்ப்பிக்கப் படுவதை விரும்புகின்றேன்" என்று கூறினார்கள். (ஆதாரம் நஸாயி)

"ஷஃபான் நடுப்பகுதியை அடைந்தால் ரமழான் வரை நோன்பு நோற்காதீர்»(அதாரம் இப்னு ஹுஸைமா).

என்ற நபி மொழியில் வந்திருக்கும் தடை ஒன்றோ ஷஃபானின் இறுதிப்பாதியில் மாத்திரம் நோற்பது, அல்லது ரமழானுடன் சேர்த்து நோற்பதைக் குறிக்கின்றது. ஷஃபான் ஆரம்பத்திலிருந்தே நோற்றால், அதனை ரமழானுடன் சேர்க்காத பட்சத்தில் நோன்பு நோற்கத் தடையில்லை.

நோன்பு நோற்கத் தடைவிதிக்கப்பட்ட, மற்றும் வெறுக்கப் பட்ட நாட்கள்

1. நோன்பு நோற்கத் தடைவிதிக்கப்பட்ட, நாட்கள்

1. இரு பெருநாள் தினங்களிலும் (ஈதுல் பித்ர், ஈதுல் அழ்ஹா) நோன்பு நோற்பது ஹராமாகும். அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : நபி (ஸல்) அவர்கள் இரு தினங்களில் நோன்பு நோற்பதைத் தடை செய்தார்கள் ஈதுல் அழ்ஹா, ஈதுல் பித்ர் ஆகிய தினங்களாகும். (ஆதாரம் முஸ்லிம்)

2. ஈதுல் அழ்ஹா பெருநாள்த் தினத்திற்கு அடுத்து வரும் மூன்று நாட்களான "அய்யாமுத் தஷ்ரீக்" நாட்களிலும் நோன்பு நோற்பது ஹராமாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : «அய்யாமுத் தஷ்ரீக் நாட்கள் உண்ணல், பருகலுக்கான நாட்களாகும்» (ஆதாரம் முஸ்லிம்). எனினும் ஹஜ் செய்யச் சென்று அங்கு "தமத்துஃ" அல்லது "கிரான்" முறையில் ஹஜ் செய்து, பிராணி அறுத்துப் பலியிட வசதியில்லாவிடில் அவர்கள் இம்மூன்று நாட்களில் நோற்கலாம். அல்லாஹ் கூறுகின்றான் : {நீங்கள் பாதுகாப்பாக (மக்காவை) அடைந்து உம்ராவை முடித்து விட்டு ஹஜ் வரை (தடுக்கபட்டவைகளில் "தமத்துஃ" முறையில்) சுகத்தை அனுபவித்தால் பலிப்பிராணியிலிருந்து சாத்தியமானது பரிகாரமாகும். (உங்களில் எவர்) அதைப் பெற்றுக் கொள்ள வில்லையோ அவர் ஹஜ் காலத்தில் மூன்று நாட்களும், (ஊர்) திரும்பியதும் ஏழு (நாட்களு)மாக நோன்பு நோற்கட்டும்} [அல்குர்ஆன் 2 : 196]

3. சந்தேகற்குரிய நாளில் நோன்பு நோற்பதும் ஹராமாகும். ஷஃபான் மாதம் 30ம் நாளிரவு பிறை தென்படாமல் மேகமூட்டமாக இருந்தால் சில வேளை இது ரமழானின் முதல் நாளாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் நேன்பு நோற்பதே இதன் அர்த்தமாகும். அம்மார் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : «யார் சந்தேகற்குரிய நாளில் நோன்பு நோற்கின்றாரோ அவர் அபுல் காஸிம் (ஸல்) அவர்களுக்கு மாறு செய்து விட்டார்» (ஆதாரம் திர்மிதி (அது ஹஸன் தரமாகும்))

https://www.al-feqh.com/ta

2. நோன்பு நோற்க வெறுக்கப்பட்ட நாட்கள்

1. ரஜப் மாதத்தில் மாத்திரம் குறிப்பாக நோன்பு நோற்பது வெறுக்கத்தக்கதாகும். ரஜப் மாதத்தை மாத்திரம் கண்ணியப் படுத்துவது அறியாமைக் கால அடையா ளங்களில் உள்ளது. அம்மாதத்தில் மாத்திரம் குறிப்பிட்டு நோற்பது அவர்க ளுடைய அடையாளத்தை உயிர்ப்பிப்பது போன்றாகும்.

2. வெள்ளிக்கிழமையில் மாத்திரம் குறிப்பிட்டு நோன்பு நோற்பதும் வெறுக்கத்தக்கதாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் «நீங்கள் வெள்ளிக்கிழமை மாத்திரம் நோன்பு நோற்க வேண்டாம். அது அந்நாளுக்கு முன் அல்லது பின் ஒரு தினம் சேர்த்து நோற்றாலே தவிர» (ஆதாரம் முஸ்லிம்). அல்லது வழமையான நோன்பு தினங்களில் வெள்ளிக்கிழமை இடம் பெற்றாலும் வெறுக்கத்தக்கதாக மாட் டாது.

3. நோன்பில் "விஸால்" செய்வது வெறுக்கத் தக்கதாகும். விஸால் என்பது இரு நாட்கள் தொடராக (இடையில் நோன்பு திறக்காமல்) நோன்பு நோற்பதாகும். இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : «நபி (ஸல்) அவர்கள் விஸால் செய்வதைத் தடுத்தார்கள். அப்போது சிலர் நீங்கள் விஸால் செய்கின்றாரே? என்று கேட்டனர். நபியவர்கள் "நான் உங்களைப் போன்றல்ல, எனக்கு உணவளிக்கப்படுகின்றது, நீர் புகட்டப் படுகின்றது" என்றார்கள்» (புஹாரி முஸ்லிம்). அல்லது வழமையான நோன்பு தினங்களில் வெள்ளிக்கிழமை இடம் பெற்றாலும் வெறுக்கத்தக்கதாக மாட் டாது.

சில வழிகாட்டல்கள்

1. வணக்க வழிபாடுகளில் மார்க்க விதிகளைப் பேணுவது முஸ்லிமுக்கு அவசியமாகும். மார்க்கம் தடுத்த முறையில் நோன்பு நோற்பதோ, நபி (ஸல்) அவர்கள் குறிப்பாக்காத நாட்களைக் குறித்து புதிய நோன்புகளை உருவாக்குவதோ கூடாது. உதாரணமாக ரஜப் மாதம் 27ம் நாள் (மிஃராஜ்) நோன்பு, ஷபான் மாதம் 15ம் நாள் போன்றன புதிதாக உருவாக்கப்பட்ட நோன்புகளே. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : «எமது இம்மார்க்கத்தில் இல்லாத ஒன்றை யார் உருவாக்கின்றாரே அது தட்டப்பட்டு விடும்» (ஆதாரம் முஸ்லிம்)

2. காபிர்களின் அடையாளச் சின்னங் களைக் கௌரவப் படுத்துவதை விட்டும் முஸ்லிம் தூரமாயிருக்க வேண்டும். அவர்களுடைய பண்டிகை நாட்களுக் கென்று நாம் நோன்பு போன்ற பிரத்தியே கமாக வணக்கம் ஏதும் செய்யக் கூடாது.

மருத்துவ ரீதியில் நோன்பு

தோல் நோய்களுக்கான நிவாரணியில் நோன்பு பங்கு வகிக்கின்றது. காரணம், நோன்பு குருதியில் தண்ணீரின் வீதத்தைக் குறைக்கின்றது. அதன் விளைவாக தோளிலும் அதன் வீதம் குறைந்து, தோளில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, பக்ட்ரீரியா மற்றும் தொற்று நோய்களைத் தடுக்கவும் செய்கின்றது

www.al-feqh.com/ta

www.global-minbar.com/ha

5 லைலதுல் கத்ர் (புனித இரவு)



பொருளடக்கம்

லைலதுல் கத்ர் எனப் பெயர் வரக் காரணம் என்ன?
லைலதுல் கத்ரின் சிறப்பும் மதிப்பும்
அது எந்த இரவு?
லைலதுல் கத்ர் இரவில் செய்ய வேண்டிய விரும்பத்தக்க நற்செயல்கள்
லைலதுல் கத்ர் இரவின் அடையாளங்கள்

லைலதுல் கத்ர் எனப் பெயர் வரக் காரணம் என்ன?

1. கண்ணியமிக்க இரவு என்பதால், அல்லாஹ் கூறுகின்றான் : {இவர்கள் அல்லாஹ்வை மதிக்க வேண்டிய முறையில் மதிக்கவில்லை} [அல்குர்ஆன் 6 : 91].

அதாவது, அல்குர்ஆன் அவ்விர வில் இறக்கப்பபட்டதாலும், வானவர்கள் இறங்குவதுடன், பரகத், அல்லாஹ்வின் அருள், பாவமன்னிப்பு போன்றன இறங்குவதாலும் அவ்விரவு கண்ணிய மானதாக இருக்கின்றது. அல்லது அவ்விரவை உயிர்ப்பிப்பவர் கண்ணியத் திற்குரியவராக மாறுகின்றார் என்ற காரணத்தினாலும் இதற்கு அப்பெயர் வந்திருக்கலாம்.

2. இங்கு கத்ர் என்பதற்கு நெருக்கடி என்ற அர்த்தமும் உண்டென மற்றுமொரு கருத்துள்ளது. அல்லாஹ் கூறுகின்றான்: {எவர் மீது அவருடைய உணவு வசதி நெருக்கடியாக்கப் பட்டுள்ளதோ...} [அல்குர்ஆன் 65 : 07].

இங்கு நெருக்கடி என்பது அவ்விரவு எதுவெனக் கூறப் படாமல் மறைக்கப்பட்டிருப்பதாகும். அல்லது வனவர்களின் அதிக வருகையால் பூமி அவ்விரவில் நெருக்கடிக்கு உள்ளாகும் என்பதாகும்.

3. இங்கு கத்ர் என்பது விதி என்ற மூன்றாவது கருத்தும் உள்ளது. அதாவது அவ்விரவில்தான் அவ்வருடத்திற்கான விதிகள் தீர்மானிக்கப்படுகின்றன. அல்லாஹ் கூறுகின்றான் : {அதில் முக்கியமான ஒவ்வொரு விடயமும் தீர்மானிக்கப்படுகின்றது} [அல்குர்ஆன் 44 : 04.]

லைலதுல் கத்ரின் சிறப்பும் மதிப்பும்

1. அதில்தான் அல்குர்ஆன் இறக்கப் பட்டது.

அல்லாஹ் கூறுகின்றான் : {நிச்சயமாக அதனை (குர்ஆனை) கண்ணியமிக்க இரவில் இறக்கினோம்} [அல்குர்ஆன் 97 : 01]

www.al-feqh.com/ta

www.global-minbar.com/ha

www.al-feqh.com/ta

2. அது ஆயிரம் மாதங்களை விட சிறந்தது.

அல்லாஹ் கூறுகின்றான் : {கண்ணிய மிக்க அந்த இரவு ஆயிரம் மாதங்களை விடச் சிறந்தது} [அல்குர்ஆன் 97 : 03].

அதாவது லைலதுல் கத்ர் இரவு இல்லாத ஆயிரம் மாதங்களில் நற்கருமங்கள் செய்வதை விட அவ்விரவில் செய்வது சிறந்தது.

3. ஜிப்ரீல் (அலை) அவர்கள் உட்பட வானவர்கள் அவ்விரவில் இறங்கு கின்றனர்.

அல்லாஹ் கூறுகின்றான்:{அதில் வானவர்களும், ஆன்மாவும் (ஜிப்ரீலும்) தம் இறைவனின் கட்டளையின் படி (நடைபெற வேண்டிய) சகல காரியங் களுடனும் இறங்குகின்றனர்} [அல்குர்ஆன் 97 : 04]

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: «லைலதுல் கத்ர் 27 அல்லது 29ம் இரவிலாகும், அவ்விரவில் வானவர்கள் பூமியிலுள்ள கற்களின் எண்ணிக்கையை விட அதிகமானோர் இறங்குவார்கள்» (ஆதாரம் இப்னு ஹுஸைமா).

4. அது சாந்தியானது.

அல்லாஹ் கூறுகின்றான்: {சாந்தி (நிலவியிருக்கும்) அது விடியற்காலை உதயமாகும் வரை இருக்கும்} [அல்குர்ஆன் 97 : 05]. அதாவது அவ்விரவு முழுவதும் நலவுதான் நடைபெறும், அதன் ஆரம்பத்திலிருந்து அதிகாலை வரை எவ்வித கெடுதிகளும் இல்லை..

5. அது பரகத் செய்யப்பட்ட இரவு

அல்லாஹ் கூறுகின்றான் : {ஹா மீம், தெளிவான இவ்வேதத்தின் மீது சத்தியமாக, நாம் அதனை பாக்கியமுள்ள ஓர் இரவில் இறக்கினோம்} [அல்குர்ஆன்44 : 01-3]. என இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள். «அது லைலதுல் கத்ர் இரவுதான் ».

6. அதில்தான் வருடத்தின் விதிகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

அல்லாஹ் கூறுகின்றான் : {அதில் முக்கியமான ஒவ்வொரு விடயமும் தீர்மானிக்கப்படுகின்றது} [அல்குர்ஆன் 44 : 04].

www.global-minbar.com/ha

www.al-feqh.com/ta

7. லைலதுல் கத்ர் இரவில் விசுவாசங் கொண்டவராகவும், நன்மையை எதிர் பார்த்தவராகவும் நின்று வணங்குபவரின் முன்சென்ற பாவங்கள் மன்னிக்கப்படு கின்றன.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : «யார் லைலதுல் கத்ர் இரவில் விசுவாசங் கொண்டவராகவும், நன்மையை எதிர் பார்த்தவராகவும் நின்று வணங்குகின் றாரோ அவருடைய முன்னைய பாவங் கள் மன்னிக்கப்படும்» (புஹாரி முஸ்லிம்).

அது எந்த இரவு?

ரமழானின் இறுதிப்பத்தில், குறிப்பாக அதன் ஒற்றைப்படை இரவுகளான 21, 23, 25, 27, 29 ஆகிய இரவுகளில் முஸ்லிம் முயற்சி செய்து தேடுவதற்காக அல்லாஹ் அதனை மறைத்துள்ளான். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : «ரமழானின் இறுதிப் பத்திலுள்ள ஒற்றைப்படை இரவுகளில் நீங்கள் லைலதுல் கத்ரைத் தேடிக் கொள்ளுங்கள்» (புஹாரி முஸ்லிம்). பலவிதான ஆதாரங்களுக்கு மத்தியில் இணக்கப்பாட்டுக்கு வரும் விதத்தில் இது வருடத்துக்கு வருடம் வேறுபட்டு வரும் என சில அறிஞர்கள் கூறியுள்ளனர்.

லைலதுல் கத்ர் இரவில் செய்ய வேண்டிய விரும்பத்தக்க நற்செயல்கள்

1. இஃதிகாப் பள்ளியில் நன்மை நாடித் தரித்தல்

இது லைலதுல் கத்ருக்கு மாத்திரம் குறிப்பானதன்றி, இறுதிப்பத்தின் அனைத்து இரவுகளிலும் செய்ய வேண்டிய வணக்கமாகும். ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: «நபி (ஸல்) அவர்கள் ரமழானின் இறுதிப்பத்தில் இஃதிகாப் இருப்பார்கள்.» (புஹாரி முஸ்லிம்).

2. அவ்விரவில் விசுவாசத்துடனும், நன்மையை எதிர் பார்த்தும் நின்று வணங்குதல்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : «யார் லைலதுல் கத்ர் இரவில் விசுவாசங் கொண்டவராகவும், நன்மையை எதிர் பார்த்தவராகவும் நின்று வணங்குகின் றாரோ அவருடைய முன்னைய பாவங் கள் மன்னிக்கப்படும்» (புஹாரி முஸ்லிம்).

3. பிரார்த்தனை புரிதல்

ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : «அல்லாஹ்வின் தூதரே! நான் லைலதுல் கத்ர் இரவை அடைந்தால் என்ன பிரார்த்தனையைக் கேட்பது?" என்று நபி (ஸல்) அவர்களிடம் கேட்டேன். அதற்க வர்கள் "நீர் "அல்லாஹும்ம இன்னக அபுவ்வுன் துஹிப்புல் அப்வ பஃபு அன்னீ" என்று கூறுவீராக" என்றார்கள்» (ஆதாரம் திர்மிதி). பொருள் : இறைவா நீ மன்னிக்கக் கூடியவன், மன்னிப்பை விரும்புபவன், எனவே என்னை மன்னிப்பாயாக.

4. வணக்கத்தில் கவனம் செலுத்த குடும்பத்தினரையும் எழுப்பி விட வேண்டும்.

ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : «ரமழானின் இறுதிப் பத்து தினங்கள் வந்துவிட்டால் நபி (ஸல்) அவர்கள் தனது வேட்டியை வரிந்து கட்டிக் கொண்டு, அவ்விரவுகளை, உயிர்ப்பிப்பார்கள், தனது மனைவியரையும் எழுப்பி விடுவார்கள்» (ஆதாரம் புஹாரி)

www.global-minbar.com/ha

www.al-feqh.com/ta

லைலதுல் கத்ர் இரவின் அடையாளங்கள்

1. அவ்விரவு அதிக உஷ்னமோ, குளிரோ இல்லாமல் நடுநிலையாகவும், பிரகசமா னதாகவும் இருக்கும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : «எனக்கு லைலதுல் கத்ர் இரவு காட்டப் பட்டு, பின்பு மறக்கடிக்கப்பட்டது, அது இறுதிப்பத்தின் இரவுகளிலாகும். அவ் விரவு நடுநிலையாகவும், (சூடாகவோ குளிராகவோ இருக்காது) பிரகாசமாகவும் இருக்கும், (பிரகாசமாக) அதிக உஷ்னமானதாகவோ, குளிரானதாகவோ இருக்க மாட்டாது» (ஆதாரம் இப்னு ஹுஸைமா).

2- மறுதினம் காலையில் சூரியன் ஒளிக்கதிர் இன்றி வெண்மையாக வெளிப்படும்.

லைலதுல் கத்ருடைய அடையாளங்களை பற்றி உபைய் இப்னு கஃப் (ரலி) அவர்களிடம் வினவப்பட்ட போது «அத்தினத்தில் சூரியன் ஒளிக்கதிரின்றி உதிக்கும்" என்றார்கள். ஸஹீஹ் முஸ்லிமின் மற்றுமொரு அறிவிப்பில் "ஒளிக்கதிரின்றி வெண்மையாக உதிக்கும்" என இடம்பெற்றுள்ளது». (ஆதாரம் திர்மதி)

சில வழிகாட்டல்கள்

1. ரமழானின் இறுதிப்பத்து இரவுகளில் இறை வணக்கத்தில் அதிக கவனம் செலுத்துவது அவசியமாகும். அவைதான் வருடத்தின் அனைத்து இரவுகளிலும் சிறந்தவை.

2. சிறந்த நேரங்களையும், நல்ல காலங்களையும் வீண், விளையாட்டு, பொருட்கள் கொள்வனவு செய்வதிலும், தேவையின்றி சுற்றித் திரிவதிலும் கழிக்காமல் இருப்பது முஸ்லிமுக்கு அவசியமாகும்.

6 இஃதிகாப்

மொழியில் ரீதியில் இஃதிகாபின் விளக்கம்

ஒன்றைப் பற்றிப்பிடத்து, அதிலேயே மனதைக் கட்டுப்படுத்தி வைத்தல்.

இஸ்லாத்தில் இஃதிகாபின் விளக்கம்

அல்லாஹ்வை வணங்குவதற்காகவே பள்ளியில் தரித்தல்

இஃதிகாப் சட்டமயமாதல்

இஃதிகாப் சிறந்த, மகத்தான வணக்கங்களில் ஒன்று. . ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : «நபி (ஸல்) அவர்கள் மரணிக்கும் வரை ரமழானின் இறுதிப்பத்தில் இஃதிகாப் இருப்பார்கள். பின்பு அன்னாரின் மனைவியரும் இருந்தார்கள். » (ஆதாரம் புஹாரி).

இஃதிகாப் எமக்கும், முன் சென்ற சமூகத்திற்க்கும் மார்க்கமாக்கப்பட்டது. அல்லாஹ் கூறுகின்றான்: {இன்னும் என் வீட்டைச் சுற்றிவருபவர்கள், தங்கியிருப் பவர்கள் ருகூஃ செய்பவர்கள், ஸுஜுது செய்பவர்கள் ஆகியோருக்காகத் தூய்மை யாக அதனை வைத்திருக்க வேண்டு மென இப்ரீஹீமிடமிருந்தும், இஸ்மாஈலி டமிருந்தும் நாம் உறுதி மொழி வாங்கி னோம்} [அல்குர்ஆன் 2 125].

இஃதிகாபின் சட்டம்

இஃதிகாப் அனைத்துக் காலங்களிலும் செய்யப்படும் ஸுன்னத்தான வணக்கம். ரமழானின் இறுதிப்பத்தில் இருப்பது மிகச் சிறந்தது. ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் அக்காலங்களில் தொடராக இஃதிகாப் இருந்து வந்துள்ளார்கள். (ஸாதுல் மஆத்).

பொருளடக்கம்

இஃதிகாபின் வரைவிலக்கணம்

இஃதிகாப் சட்டமயமாதல்

இஃதிகாபின் சட்டம்

இஃதிகாபின் நிபந்தனைகள்

இஃதிகாப் இருக்கும் காலம்

ரமழானின் இறுதிப் பத்து நாட்களில் இஃதிகாப் இருத்தல்

இஃதிகாபின் நோக்கம்

இஃதிகாப் இருப்பவர் செய்ய அனுமதிக்கப்பட்டவை

இஃதிகாபை முறிப்பவை

இஃதிகாபின் நிபந்தனைகள்

1. நிய்யத் வைத்தல்

அல்லாஹ்வை நெருங்கவும், அவனை வணங்கவும் பள்ளியில் தரிப்பதாக உள்ளத்தால் நினைத்துக் கொள்ள வேண்டும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: «செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே அமைகின் றன» (புஹாரி முஸ்லிம்).

2. ஜமாஅத் தொழுகை நடைபெறும் பள்ளியில் தான் இஃதிகாப் இருக்க வேண்டும்.

பள்ளி அல்லாதவற்றில் இஃதிகாப் இருந்தால் செல்லுபடியாக மாட்டாது. அல்லாஹ் கூறுகின்றான்:



ஜும்ஆப் பள்ளி

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

{இன்னும் நீங்கள் பள்ளியில் தனித்து இஃதிகாபில் இருக்கும் போது உங்கள் மனைவிய ருடன் கூடாதீர்கள்} [அல்குர்ஆன் 2 : 187]. நபி (ஸல்) அவர்களும் பள்ளியில்தான் இருந்துள்ளார்கள். ஜமாஅத் தொழுகை நடைபெறாத பள்ளியில் இஃதிகாப் இருப்பதானது கடமையான ஜமாஅத் தொழுகையை விட நேரிடும், அல்லது ஒவ்வொரு நேரமும் பள்ளியிலிருந்து வெளியேறும் நிலை ஏற்படும். இது இஃதிகாபுடைய நோக்கத்திற்கு முரண் படுகின்றது.

பெண்களைப் பொறுத்தவரை அவர்கள் ஜமாஅத் தொழுகை நடைபெற்றாலும், நடைபெறாவிட்டாலும் சகல பள்ளிகளி லும் பித்னா இல்லாவிடின் இஃதிகாப் இருக்கலாம். அவர்கள் இருப்பதால் பாலியல் ரீதியான பித்னாக்கள் ஏற்படு மென்றால் இஃதிகாப் இருக்க முடியாது.

இஃதிகாப் இருக்கும் பள்ளி ஜும்ஆப் பள்ளியாக இருப்பது நல்லது, எனினும் அது நிபந்தனை கிடையாது.

3. பெருதொடக்கிலிருந்து (குளிப்பு கடமையாவதில் இருந்து) சுத்தமாகி இருத்தல்.

குளிப்புக் கடமையானவர், மாதவிடாய்ப் பெண், பிரசவ இரத்தம் ஏற்பட்ட பெண் ஆகியோர் இஃதிகாப் இருக்க முடியாது.



நோன்பு இஃதிகாப் இருப்பதற்கான நிபந்தனையில்லை.

நோன்பு இஃதிகாப் இருப்பதற்கான நிபந்தனையாகக் கருதப்பட மாட்டாது. உமர் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்க ளிடம் “நான் அறியாமைக் காலத்தில் மஸ்ஜிதுல் ஹராமில் ஓரிரவு இஃதிகாப் இருப்பதாக நேர்ச்சை வைத்திருந்தேன்” என்று கேட்டார்கள். நபியவர்கள் «நீர் உம்முடைய நேர்ச்சையை நிறைவேற் றும்” என்றார்கள்»(ஆதாரம் புஹாரி).

நோன்பு இஃதிகாபிற்கான நிபந்தனை யாக இருந்தால் இரவில் அதனை நிறை வேற்ற முடியாது. ஏனெனில் இரவில் நோன்பு நோற்பதில்லை. அத்துடன் ஷவ்வால் மாதத்தின் முதல் பத்து தினங் களில் நபியவர்கள் இஃதிகாப் இருந்துள் ளார்கள். (ஆதாரம் முஸ்லிம்)

இந்தப் பத்து தினங்களில் நோன்பு நோற்க ஹராமான பெருநாள் தினமும் அடங்கும். மேலும் நோன்பு, இஃதிகாப் ஆகிய இரண்டும் வெவ்வேறான வணக்கங்கள், அதில் ஒன்று செல்லு படியாக மற்றது நிபந்தனையாக இடப் படமாட்டாது.

இஃதிகாப் இருக்கும் காலம்

எத்தனை நாளும், எவ்வளவு காலமும் இஃதிகாப் இருக்கலாம். எனினும் அதன் காலம் ஒரு நாளை விடக் குறையாமல் இருப்பது சிறந்தது. ஏனெனில் நபி (ஸல்) அவர்களோ, நபித்தோழர்களோ அவ்வாறு குறைவாக இருந்ததாக எவ்வித ஆதாரமும் இல்லை.

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

ரமழானின் இறுதிப் பத்து நாட்களில் இஃதிகாப் இருத்தல்

இஃதிகாபிற்கு மிகச் சிறந்த காலம் இதுவே. ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : «நபி (ஸல்) அவர்கள் மரணிக்கும் வரை ரமழானின் இறுதிப்பத்தில் இஃதிகாப் இருப்பார்கள். பின்பு அன்னாரின் மனைவியரும் இருந்தார்கள்» (ஆதாரம் புஹாரி).

ரமழானின் இறுதிப்பத்தில் இஃதிகாப் இருக்க விரும்புபவர் எப்பள்ளியில் இருக்க விரும்புகின்றாரோ அதில் ரமழான் 21ம் நாள் பஜ்ர் கொழுகையுடன் நிய்யத் வைத்து இவ்வணக்கத்தில் நுழைய வேண்டும். ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : «நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு ரமழானிலும் இஃதிகாப் இருப்பார்கள். பஜ்ர் தொழுததும் தான் இஃதிகாப் இருக்கும் இடத்திற்குச் செல்வார்கள்» (ஆதாரம் புஹாரி).

ரமழனின் இறுதிநாள் சூரிய அஸ்தமனத்துடன் இஃதிகாப் நிறைவுக்கு வந்துவிடும். பெருநாள் தினத்தின் பஜ்ருக்கு பள்ளியிலிருந்து வெளியாகுவதே அதிகமான ஸலபுகளின் முன்னோர் வழிமுறையாகும்.

இஃதிகாபின் நோக்கம்

இஃதிகாபின் நோக்கம் உலகத்தையும், அதில் லயித்திருப்பதையும் விட்டு சிறுது காலம் வணக்கத்திற்காக மாத்திரம் ஒதுங்குவதாகும், எனவே அதற்காக உள்ளத்தை உலக மோகங்களிலிருந்து விடுவித்துக் கொள்வது இஃதிகாப் இருப்பவருக்கு அவசியமாகும்.

இஃதிகாப் இருப்பவர் செய்ய அனுமதிக்கப்பட்டவை

1. உண்ணல், பருகல்- அவற்றை எடுத்து வர யாருமில்லையெனின்-, மலசலகூடம் செல்லல் போன்ற அவசியத் தேவைகளுக் காக பள்ளியிலிருந்து வெளியேறுதல். ஆஇஷா (ரலி)

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

அவர்கள் கூறுகின்றார்கள் : «நபி (ஸல்) அவர்கள் இஃதிகாப் இருக்கும் போது தனது தலையை என் பக்கம் நீட்டுவார்கள். நான் அவர்களுக்குத் தலை சீவி விடுவேன். (தலையை வாருதல்) அவர்கள் அடிப்படைத் தேவைக்காகவே தவிர (இஃதிகாப் இருக்கும் போது) வீட்டிற்கு வர மாட்டார்கள்»(ஆதாரம் முஸ்லிம்) .

2. முடி சீவுதல், இதற்கு ஆதாரமாக மேற்கண்ட நபிமொழியைக் கூறலாம்.

3. மக்களுடன் பயனுள்ள விடயங்களைப் பேசுதல், அவர்களின் நிலை பற்றி வ கேட்டறிதல், எனினும் இஃதிகாபின் நோக்கத்தைக் கருதி அவற்றை அளவுடன் வைத்துக் கொள்ள வேண்டும்.

4. தனது மனைவி, உறவினர்களை சந்தித்தல், அவர்களை வழியனுப்புவதற்காக இஃதிகாப் இருக்கும் இடத்திலிருந்து வெளியே வருதல். ஸபிய்யா பின்து ஹுயைய் ரலி அவர்கள் கூறுகின்றார்கள் «நபி ஸல் அவர்கள் இஃதிகாப் இருக்கும் போது இரவு நேரத்தில் நான் அவர்களை சந்திக்கச் சென்று, அவர்களுடன் பேசினேன். பின்பு நான் வீடு திரும்ப எத்தனித்த போது அவர்களும் என்னுடனே சேர்ந்து வந்தார்கள்» (எனது வீட்டிற்கு)» (புஹாரி முஸ்லிம்) .

இஃதிகாபை முறிப்பவை

1. அவசியமின்றி வேண்டுமென்றே பள்ளியிலிருந்து வெளியேவருதல். அது குறைவானநேரமாகஇருந்தாலும் சரி. ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: «நபி (ஸல்) அவர்கள் இஃதிகாப் இருக்கும் போது அடிப்படைத் தேவைக்காகவே தவிர வீட்டிற்கு வர மாட்டார்கள்» (ஆதாரம் முஸ்லிம்), அத்துடன் அவ்வாறு வெளியேறும் போது இஃதிகாபின் கட்டாயக் கடமையான பள்ளியில் தரிப்பது இல்லாமல் போய் விடுகின்றது.

2. மனைவியுடன் உடலுறவு கொள்ளுதல். அது இரவிலானாலும் சரி. அல்லாஹ் கூறுகின்றான் : .{இன்னும் நீங்கள் பள்ளியில் தனித்து இஃதிகாபில் இருக்கும் போது உங்கள் மனைவிய ருடன் கூடாதீர்கள்} [அல்குர்ஆன் 2 : 187].

உடலுறவைப் போன்றுதான் சுயஇன்பம் அனுபவித்தல், மனைவியுடன் உடலுறவல்லாமல் வேறு விதத்தில் அனுபவித்தல் போன்ற காரணத்தால் விந்து வெளியாக்குதலும் இஃதிகாபை முறித்து விடும்.

https://www.al-feqh.com/ta

3. இஃதிகாபை முறிப்பதாக உறுதி கொள்ளல்.

சில குறிப்பிட்ட தினங்கள் இஃதிகாப் இருக்க நிய்யத் வைத்துவிட்டு, பின்பு அதை இடைநிறுத்தினால் மீண்டும் அதனைக் கழாச் செய்யலாம்.

ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : «நபி (ஸல்) அவர்கள் இஃதிகாப் இருக்க விரும்பினால் பஜ்ர் தொழுததும் இஃதிகாப் இருக்கும் இடத்திற்குச் செல்வார்கள். (பள்ளியில் இஃதிகாப் இருக்கும் இடம்) ரமழானின் இறுதிப்பத்தில் இஃதிகாப் இருக்க விரும்பிய போது தனக்கொரு கூடாரம் அமைக்க ஏவி, (கூடாரம்) கூடாரமும் அமைக்கப்பட்டது. ஸைனப் (ரலி) அவர்களும் கூடாரம் அமைக்க ஏவி, கூடாரமும் அமைக்கப்பட்டது. ஏனைய மனைவியரும் கூடாரம் அமைக்க ஏவி, கூடாரமும் அமைக்கப்பட்டது. நபி (ஸல்) அவர்கள் பஜ்ர் தொழுததும் பள்ளியில் நிறைய கூடாரங்கள் இருக்கக் கண்டார் கள். நீங்கள் நல்ல விடயத்தையா விரும்பு கின்றீர்கள்?, (அதிலிருந்து நபியவர்கள் பயந்தார்கள்) என்று கேட்டுவிட்டு, தனது கூடாரத்தைக் கலைக்குமாறு பணித்தார்[109] கள், இஃதிகாபையும் ரமழானில் இடை நிறுத்தினார்கள். (கூடாரத்தை அவிழ்த்தல்) ஷவ்வால் மாதத்தின் முதல்பத்தில் இஃதிகாப் இருந்தார்கள்»(புஹாரி முஸ்லிம்)

4. இஃதிகாப் இருப்பவர் நோய் விசாரிக்க செல்லவோ, ஜனாஸாவைப் பின்தொடரவோ முடியாது, தனது இஃதிகாப் இருக்கும் இடத்தில் அல்லாஹ்வை வணங்குவதிலேயே தொடர்ந்திருப்பார்.



www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

1 ஸகாத் அதன் சட்டமும் நிபந்தனைகளும்.

ஸகாத் என்றால் மொழிரீதியாக

வளர்த்தல், அதிகரித்தல்.

ஸகாத் என்றால் பரிபாசையில்.

குறிப்பிட்ட ஒரு கூட்டத்தினருக்கு குறிப்பிட்ட நேரத்தில் கொடுக்கப்படும் குறிப்பிட்ட தொகை பணம் ஆகும்.

பொருளடக்கம்.

ஸகாத்தின் வரைவிலக்கணம்

இஸ்லாத்தில் ஸகாதின் இடம்

ஸகாத்தை மறுப்பவரின் சட்டம்

ஸகாத் கடமையானதன் நுட்பம்

ஸகாத்தின் சிறப்பு

ஸகாத் கடமையாகும் பொருட்கள்

ஸகாத் கடமையாவதற்கான நிபந்தனைகள்.

இஸ்லாத்தில் ஸகாதின் இடம்

ஸகாத் இஸ்லாத்தின் அடிப்படை கடமைகளில் ஒரு கடமையாகும், அது இஸ்லாத்தின் தூன்களில் மூன்றவாது தூன் ஆகும். அல்லாஹ் கூறுகிறான் – {ஸகாதை கொடுங்கள்}[நூர் – 56].

நபியவர்கள் கூறினார்கள் -«வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை என்றும் முஹம்மத் அவர்கள் இறைத்தூதர் என்றும் உறுதியாக நம்புதல், தொழுகையை நிலை நிறுத்துதல், ஸகாத் வழங்குதல், ஹஜ் செய்தல், ரமாலானில் நோன்பு நோற்றல், ஆகிய ஐந்து காரியங்களின் மீது இஸ்லாம் நிறுவப்பட்டுள்ளது'»(புஹாரி, முஸ்லிம்).

ஸகாத்தை மறுப்பவரின் சட்டம்

ஸகாத்தை மறுப்பவர் ஒன்று அது மார்க்கத்தில் இல்லை என்று மறுப்பார் இல்லையெனில் கஞ்சத்தனத்தால் மறுப்பார்.

1-இஸ்லாத்தில் ஸகாத் இல்லை என்று மறுப்பவர்.

யார் ஸகாத் வாஜிப் என்று அறிந்து அதனை மறுக்கிறாரோ அவர் அல்லாஹ்வையும் அவன் தூதரையும் பொய்பித்ததன் காரணத்தால் இறை மறுப்பாளர் ஆகி விடுகிறார். இதற்கு ஆதாரமாக இஜ்மா அமைகிறது(வாஜிப் என்பதை மறுத்தல்.).

2-கஞ்சத்தனத்தால் ஸகாதை மறுப்பவர்.

யார் கஞ்சத்தனத்தால் ஸகாத்தை மறுக்கிறாரோ அவரிடம் இருந்து வற்புறித்தி பெறப்படும். அதன் மூலம் அவர் இறை நிராகரிப்பாளனாக ஆக மாட்டார். அவர் பெரும் பாவங்களில் ஒரு பாவத்தை செய்த போதிலும், நபி (ஸல்) அவர்கள் ஸகாத்தை மறுப்பவரை பற்றி குறிப்பிடும் போது கூறினார்கள்: «பொன், வெள்ளி ஆகியவற்றைச் சேகரித்து வைத்துக்கொண்டு அவற்றுக்குரிய கடமையை (ஸகாத்) நிறைவேற்றாமல் இருப்பவருக்கு, மறுமை நாளில் நரக நெருப்பில் அவற்றைப் பழுக்கக் காய்ச்சி, உலோகப் பாளமாக மாற்றி, அவருடைய விலாப்புறத்திலும் நெற்றியிலும் முதுகிலும் சூடு போடப்படும். அவை குளிர்ந்து விடும்போதெல்லாம் மீண்டும் அவ்வாறே (பழுக்கக் காய்ந்த பாளமாக) மாறிவிடும்.

www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

இவ்வாறு ஒரு நாள் அவர் தண்டிக்கப்படுவார். அ(ந்)த (ஒரு நாளி)ன் அளவு ஐம்பது ஆயிரம் ஆண்டுகளாகும். இறுதியில் அடியார்களிடையே இறுதித்தீர்ப்பு வழங்கப்படும். அப்போது தாம் செல்லவேண்டிய சொர்க்கத்தின் பாதையை, அல்லது நரகத்தின் பாதையை அவர் காண்பார்» (ஆதாரம் முஸ்லிம்).

அவர் அதற்கல்லாது கொல்லப்பட வேண்டியவராக இருப்பின் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு ஸகாத் வழங்கும் வரை இருக்க வேண்டும். அல்லாஹ் கூறுகிறான் – {ஸகாதை கொடுத்து வந்தால் அவர்கள் வழியில் விட்டு விடுங்கள்}. [தவ்பா - 5].

நபி (ஸல்) அவர்கள்: «மனிதர்கள், வணக்கத்திற்குத் தகுதியானவன் அல்லாஹ்வையன்றி வேறுயாருமில்லை; முஹம்மத் இறைத்தூதர் என்று உறுதியாக நம்பி, தொழுகையை நிலை நிறுத்தி, ஸகாத்தும் கொடுக்கும் வரை அவர்களுடன் போரிட வேண்டும் என்று நான் கட்டளையிடப்பட்டுள்ளேன். இவற்றை அவர்கள் செய்து விடுவார்களானால் தம் உயிர், உடைமைகளை என்னிடமிருந்து பாதுகாத்துக் கொள்வார்கள்.. இஸ்லாத்தின் வேறு உரிமைகளில் (அவர்கள் வரம்பு மீறனாலே) தவிர! மேலும் அவர்களின் விசாரணை இறைவனிடமே உள்ளது'»(புஹாரி, முஸ்லிம்).

ஸகாதை மறுப்பவர்களோடு கலீபா அபூபக்கர் யுத்தம் செய்தார்கள்.«'அல்லாஹ்வின் மீதாணையாக! தொழுகையையும் ஸகாத்யும் வேறுபடுத்திப் பார்ப்பவர்களுடன் நான் போர் புரிந்தே தீருவேன். ஏனெனில், ஸகாத் என்பது பொருளாதாரக் கடமையாகும். அல்லாஹ்வின் மீதாணையாக! இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் செலுத்திவந்த ஒரு கயிற்றை இவர்கள் இப்போது என்னிடம் செலுத்த மறுத்தாலும் அதை மறுத்ததற்காக அவர்களுடன் போர் புரிவேன்' என்றார்கள்»(ஆதாரம் புகாரி).

ஸகாத் கடமையானதன் நுட்பம்

1- கஞ்சத்தனம் மற்றும் பாவங்களில் இருந்து உள்ளங்களைசுத்தப்படுத்தல். அல்லாஹ் கூறுகிறான்– {(நபியே!) அவர்களுடைய செல்வத்திலிருந்து தர்மத்திற்கானதை எடுத்துக் கொண்டு, அதனால் அவர்களை உள்ளும் புறமும் தூய்மையாக்குவீராக,.}. [தவ்பா - 103].

2. பணத்தை சுத்தப் படுத்தி அதனை அதிகரிக்க செய்தல், மற்றும் அதில் , விருத்தி ஏற்படுத்தல். நபியவர்கள் கூறினார்கள் «ஸகாத் உங்கள் செல்வத்தில் எதனையும் குறைத்து விடாது» (ஆதாரம் முஸ்லிம்).

3. அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அடி பணிகிறானா , பணத்தின் மோகத்தை விட அவனை நேசிக்கிறானா என்றும் அடியனை சோதிப்பதற்காக.

4. அன்பை ஏற்படுத்தும் வகையில் ஏழை எளியவர்களுடன்நல்லமுறையில்நடந்துஅவர்களின் தேவைகளைநிறைவுசெய்வதற்கும்ஆகும், அவ்வாறு செய்யும் போது இஸ்லாமியர்களுக்கு மத்தியில் ஒரு சமுக நல்லிணக்கத்தை ஏற்படுத்துகிறது.

5. அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்வதை பழக்கப் படுத்திக் கொள்வதற்காக.

ஸகாத்தின் சிறப்பு

1.அல்லாஹ்வின் அருட்கொடையை பெற காரணமாக அமைகிறது, அல்லாஹ் கூறுகிறான் – {ஸகாத்தை கொடுப்போருக்கும்}[அஃராப் - 156].

2.அல்லாஹ்வின் உதவியை பெற நிபந்தனையாக இருக்கிறது, அல்லாஹ் கூறுகிறான். {அல்லாஹ்வுக்கு எவன் உதவி செய்கிறானோ, அவனுக்கு திடனாக அல்லாஹ்வும் உதவி செய்வான். நிச்சயமாக அல்லாஹ் வலிமை மிக்கோனும், (யாவரையும்) மிகைத்தோனுமாக இருக்கின்றான்.

06- அவருடைய நோக்கம் அல்லாஹ்வுக்காகவும் மறுமைக்காகவும் இருப்பது அவசியமாகும் இந்த கண்ணியமான இடத்திலே அவர் செய்கின்ற செயற்பாடுகள் அவர் மொழிகின்ற வார்த்தைகள் எல்லாம் அல்லாஹ்வுக்காக இருக்க வேண்டும் உலகத்தினுடைய அனைத்து நோக்கங்களையும் அவர் தவிர்ந்து கொள்வார்

07- உம்ராவிலும் ஹஜ்ஜிலும் மார்க்கம் சொல்கின்ற அனைத்தையும் அவர் கற்றுக் கொள்வது அவசியமாகும். அது பற்றி தெரிந்தவரிடம் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும். அதிமான மக்கள் ஹஜ்ஜைப் பற்றி அறியாதவர்களாக செல்கின்றனர். அதன் காரணமாக சில வேளைகளில் அவர்களுடைய ஹஜ் முறிக்கூடியதாகவும் அமைகின்றன.

இஹ்ராமுடைய சட்டங்கள்

இஹ்ராம் ஆடையை அணிந்து அவரின் தலையில் இருந்து குளிக்கின்ற போதோ அல்லது வுழுச் செய்கின்ற போது முடிகள் விழுந்தால் எந்த சிக்கலையும் ஏற்படுத்தாது இவ்வாறுதான் தாடியில் இருந்தும் மீசையிலிருந்தம் மற்றும் நகங்கள் வேண்டுமென்று விழுந்தாலும் ஆண்களாக இருந்தாலும் சரி பெண்களாக இருந்தாலும் சரி எந்த சிக்கலையும் ஏற்படுத்தாது .

இஹ்ராமுடைய ஆடையை அணிந்தவருக்கு கை வைத்திய பொருட்களை அதிலே நலன்கள் இருப்பதற்காக வைத்து இருக்க முடியும்

எண்ணத்திலே நிபந்தனையிடப்படுபவைகள்

யாருக்கு நோய் இருக்கின்றதோ அல்லது யார் அவர் மயங்கிடுவார் என்று பயப்படுகிறாரோ அவர் இஹ்ராமுடைய நேரத்திலே லப்பைக் அல்லாஹும்ம உம்ரா அல்லது பஇன்ன ஹபஸ்னி ஹாபிஸ் பமஹ்லி ஹய்து ஹபஸ்தனி என்று கூறுவது நிபந்தனையாகும். அயிஷா ரழி அவர்கள் கூறினார்கள் «ழுபாஆ பின்த ஸுபைர் இருக்கும் போது நபியவர்கள் வந்தார்கள். அப்போது அவளிடம் ஹஜ் செய்ய நாடுகின்றாயா என கேட்டார்கள். அதற்கு அவர், நான் நோயை தவிர எதனையும் பெறவில்லை என கூறினார்." (நோய்) அப்போது அவளுக்கு கூறினார்கள் "நீ ஹஜ்ஜை நிறைவேற்று அதோடு நிபந்தை என்னவெனில் "அல்லாஹும்ம மஹ்லி ஹய்து ஹபஸ்தனி» (புஹாரி முஸ்லிம்) என்று கூறுவிராக அப்படி கூறினால" அனைத்து விடயங்களையும் நீ பெற்றுக் கொள்வாய். என்றார்கள்.



https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta



https://www.al-feqh.com/ta

5 வணக்கமும் தல்பியாவும்



பொருளடக்கம்

வணக்கம்

வணக்கத்தின் வரைவிலக்கணம்

வணக்கத்திற்கான எண்ணம்

வணக்கத்திற்கான வகைகள்

மூன்று வணக்கங்களுக்குமான வித்தியாசம்

தல்பியா

தல்பியாவின் வரைவிலக்கணம்

தல்பியாவின் சட்டம்

தல்பியாவின் நேரமும் தல்பியாவின் இடங்களும்

வணக்கம்

மொழிநடையில் வணக்கத்திற்கான கருத்து

வணக்க வழிபாடுகள்

பரிபாசையில்

ஹஜ் செய்பவரும் உம்ரா செய்பவரும் கூறுகின்றதும், செய்வதுமாகும்.

வணக்கத்தின் எண்ணம்

ஒருவர் இஹ்றாம் அணிய நாடினால் குளித்து சுத்தமாகி இஹ்ராம் ஆடையை அணிந்து கொள்வார். ஆண்கள் தைக்கப்பட்ட அடைகளை அணிமாட்டார். ஹஜ், உம்ராவினை நிறைவேற்ற வேண்டும் என்ற தூய எண்ணத்தில் அவர் நுழைவார். அவர் செய்ய எண்ணிய வணக்கத்தை வாயல் மொழிவது அப்போது ஆகுமானது. ஆரம்பத்தில் உம்ராவை செய்து பின்னர் ஹஜ்ஜை நிறைவேற்ற நாடினால் "லப்பைக அல்லாஹூம்ம உம்ரத முதமத்திஅன் பிஹா இலல் ஹஜ்" அல்லது "லப்பைக அல்லாஹூம்ம உம்ரத" பின்னர் ஹஜ்ஜின் போது " லப்பைக அல்லாஹூம்ம ஹஜ்ஜன்" கிரான் செய்பவர் – "லப்பைக அல்லாஹூம்ம ஹஜ்ஜன்". கிரான் செய்பவர் உம்ரா ஹஜ்ஜிற்கிடையில் "லப்பைக அல்லாஹூம்ம ஹஜ்ஜன் வஉம்ரதன்" என கூறுவார். அனஸ் ரழி அவர்கள் அறிவிக்கின்றார்கள் நபியவர்கள் கூறக்பின்வருமாறு கூறக்கேட்டேன். «லப்பைக உம்ரதன் வஹஜ்ஜன்» (புஹாரி முஸ்லிம்), அவர் மொழியவில்லை என்னறால் மனதால் எண்ணிக் கொள்ளலாம்..

வணக்கத்தின் வகைகள்

1-தமத்து

தமத்து என்றால் ஹஜ் உடைய காலத்திலேயே மக்காவுக்குச் சென்று ஹஜ்ஜுக்கும் உம்ராவுக்கும்ஒரே வருடத்தில் வெவ்வேறாக இஹ்ராமுடைய ஆடையை அணிவதை குறிக்கும்

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

தமத்துஃ அடிப்படையில் செய்யக்கூடியவர் முதலாவதாக மக்காவுக்குச் சென்று அவர்களுடைய உம்ராவின் வேலைகளை செய்வார். தவாபு செய்தல் மற்றும் தொங்கோட்டம் ஓடுதல் பின்பு முடியை குறைத்து அல்லது நீக்கி பின்னர் தம்முடைய இஹ்றாமை களைந்து ஆடைகளை அணிவார். பின்னர் துல்ஹஜ் மாதம் எட்டாவது நாள் அவர் அவர் ஹஜ்ஜுக்காக இஹ்ராம் உடைய ஆடையை அணிவார். அவர் தமத்து செய்த காரணத்தில் ஹதி கொடுப்பது கட்டாயமாகும்.

2-கிரான்

ஹஜ்ஜுக்கும் உம்ராவுக்கும் ஒரே தடவையில் இஹ்ராமுடைய ஆடையை அணிதல். அல்லது உம்ராவுக்காக இஹ்ராம் உடையை ஆடையை அணிந்து விட்டு தவாஃப் செய்ய முன்பதாக ஹஜ் உடைய அமல்களை செய்தல் . கிரான் என்றால் ஹஜ் உடைய செயற்பாடுகள் முடிகின்ற வரைக்கும் இஹ்றாம் உடைய ஆடையுடைய தொடர்ந்து இருப்பார். கிரானுக்காக வேண்டி ஹதி கொடுப்பது அவசியமாகும்.

3-அல் இப்ராத்

-வணக்கங்களில் சிறப்பானது தமத்து ஆகும். அதனை நபி ஸல் அவர்கள் தனது தோழர்களுக்கு (முஸ்லிமில் வரும்ஆயிஷா ரழி அறிவிக்கும் செய்தி) ஏவினார்கள். அதன்பின்னர் கிரான் அதன் பின்னர் இஃப்ராத் ஆகும்.

மூன்று வழக்கங்களுக்கும் இடையிலான வித்தியாசம்

	தமத்து	கிரான்	இப்ராத்
அமைப்பு	உம்ரா செய்தல் பின்னர் ஹஜ் செய்தல்	உம்ராவும் ஹஜ்ஜும்	ஹஜ் மாத்திரம் செய்வது
இஹ்றாம்	இரண்டு தடவைகள் இஹ்ராமுடைய ஆடையை அணிந்து பின்னர் களைந்து பின்னர் ஹஜ்ஜுக்காக அணிவது	உம்ராவுக்கும் ஹஜ்ஜிற்கும் ஒரே தடவையில் இஹ்ராமுடைய ஆடையை அணிதல்	ஹஜ்ஜுக்காக மாத்திரம் இஹ்ராமுடைய ஆடையை அணிவார்
தல்பியா	முதலாவது இஹ்ராம் அணிந்த போது “ லப்பைக உம்ரத”. ஹஜ்ஜிற்காக இஹ்ராம் அணிந்த பின்னர் “லப்பைக ஹாஜ்ஜன்” அல்லது “லைப்பைக உம்ரத முதமத்திஅன் பிஹா இல் ஹஜ்”	இஹ்றாம் அணியும் போது “லப்பைக உம்ரத வ ஹாஜன்”	லப்பைக ஹாஜன் என்று சொல்லுவார்
ஹதி	ஹதி அவசியமாகும்	அதிலே ஹதி அவசியமாகும்.	ஹதி கொடுப்பது அவசியமில்லை.
தவாஃப்	அதிலே இரண்டு தவாஃபும் தொங்கோட்டம் முதலாவது உம்ராவுக்கும் இரண்டாவது ஹஜ்ஜுக்கும்	அதிலே ஒரு தவாஃபு அவசியமாகும் அது ஹஜ்ஜுக்குரிய தவாஃப் ஆகும்	அதிலே கட்டாயம் ஒரு தவாஃப் செய்ய வேண்டும் அது ஹஜ்ஜுக்குரிய தவாஃப் ஆகும்
தொங்கோட்டம்	அதிலே இரண்டு தொங்கோட்டம் முதலாவது உம்ராவுக்கும் இரண்டாவது ஹஜ்ஜுக்கும்	அதிலே ஒரு தொங்கு தோட்டம் அவசியமாகும் அது ஹஜ்ஜுக்குரிய தொங்கு தோட்டம் ஆகும்	அதிலே கட்டாயம் ஒரு தொங்கோட்டம் ஓட வேண்டும் அது ஹஜ்ஜுக்குரிய தொங்கோட்டம் ஆகும்

தல்பியா செல்லுதல்

தல்பியா செல்லுதல்

இஹ்ராமுடைய ஆடையை அணிந்தவரின் வார்த்தை "லப்பாக் அல்ஸாகும்மா லப்பைக் லா சரீக்க லக லப்பைக் இன்னல் ஹம்த வன்நிவுமத லக வல் முல்க லா சரீக்க லக"

உமர் அவர்களின் வார்த்தை நபியவர்கள் இவ்வாறு தான் சொன்னார்கள் (புஹாரி முஸ்லிம்) «லப்பாக் அல்ஸாகும்மா லப்பைக்» என்பது உனது அழைப்பிற்கு விடையளித்து விட்டேன் என்று பொருளாகும்.

உமர் அவர்களின் வார்த்தை நபியவர்கள் இவ்வாறு தான் சொன்னார்கள் 65

லப்பாக் அல்ஸாகும்மா லப்பைக் என்பது உனது அழைப்பிற்கு விடையளித்து விட்டேன் என்று பொருளாகும்.

இன்னும் அவனுக்கு நன்றி செலுத்துவதோடு, அவனது ஏவல்களுக்கு கட்டுப்படுவதையும் தவ்ஹீதை வெளிப்படுத்துவதையும் இணைவைப்பதிலிருந்து நீங்குவதையும் பொதிந்துள்ளது.

தல்பியா நபிவழியாகும். தல்பியாவின் போதும் ஆண் அவருடைய சத்தத்தை உயர்த்துவான். குழப்பத்தை பயத்தை பெண் அவளுடைய சத்தத்தை தாழ்த்துவாள்.

தல்பியாவின் நேரமும் அதனுடைய இடங்களும்

இஹ்ராம் கட்டியவர் இஹ்ராம் கட்டிய தன் பின்னால் தல்பியாவை ஆரம்பிப்பார் அதனை அவர் அதிகமாக சொல்லுவார். பின்வரும் இடங்களில் அதிகமாக மேற்கொள்வார். அவை -

உயரத்தில் ஏறும் போது ஓடையில் அமைதியாக இருக்கும் போது, கடமையான தொழுக்களை தொழும் போது, இரவையும் பகலையும் அடைகின்ற போது

உம்ராவில் கஃபாவை சந்திக்கும் போதும் ஹஜருல் அஸ்வதை சந்திக்கும் போதும் தல்பியா சொல்வதை விட்டுவிடுவார். மேலும் ஹஜ்ஜில் முதலாவது ஜம்ராவிலும் பெருநாள் தினத்தில், கல் எரியும் போதும் விட்டு விடுவார்

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta



https://www.al-feqh.com/ta

6

ஹஜ் உம்ரா செய்யும் முறை

ஹஜ் செய்யும் முறை

யார் ஹஜ்ஜை நாடி வருகிறாரோ அவர் தமத்து அடிப்படையில் வருவார் அல்லது கிரான் அடிப்படையில் வருவார் அல்லது முப்ரதாக வருவார் தமத்து அடிப்படையில் வருபவர் உம்ராவுக்குப் பின்னால் இஹ்ராமுடைய ஆடையை களைவார் .கிரான் அடிப்படையில் அல்லது முப்ரதாக வருபவர் இஹ்ராமுடன் தொடர்ந்து இருப்பார்கள் ஹஜ் உடைய செயல்கள் எட்டாவது நாள் ஆரம்பித்து 13வது நாள் முடிவடையும் இவைகள் தான் இந்த நாட்களுக்கு ஏற்ற விளக்கமாகும்

துல்ஹஜ் எட்டாவது நாள் (யவுமுத்தர்வியாவாகும்)

(இந்த நாளைக்கு யவ்முதருவியா என்று சொல்லப்படும். நிச்சயமாக ஹாஜிகள் தேவையான அளவு நீரை மினாவிலும் அரஃபாவிலும் தங்குவதற்காக எடுத்துக் கொள்வார்கள்.

ஏனெனில் நிச்சயமாக அவ்விரண்டிலும் நீர் கிடையாது)

01- எட்டாவது நாள் ளுகருக்கு முன்னாள் ஹஜ்ஜுக்கான இஹ்ராம் ஆடையை அணிவது சுன்னத்தாகும். அவர் இருக்கும் இடத்திலிருந்தே இஹ்ராம் ஆடையை அணிந்து கொள்வார் .அவர் மக்காவில் இருந்தால் மக்காவிலிருந்து அணிந்து கொள்வார். அவர் மினாவில் இருந்தால் மினாவிலிருந்து அணிந்து கொள்வார். அவர் குளிப்பார் .நறுமணங்களைப் பூசிக் கொள்வார். மேலும் இஹ்ராமுடைய ஆடையை அணிந்து கொள்வார் மேலும் ஹஜ்ஜுக்காக தல்பியா சொல்லுவார் «லப“பைக“கல“லாஹூம்ம ஹஜ்ஜன், லப்பாக் அல்ஸாகும்மா லப்பைக் லா சரீக்க லக லப்பைக் இன்னல் ஹம்த வன்நிவுமத லக வல் முல்க லா சரீக்க லக» (ஆதாரம் புகாரி).

பொருளடக்கம்

ஹஜ் செய்யும் முறை
துல்ஹஜ்ஜின் எட்டாம் நாள்
துல்ஹஜ்ஜின் ஒன்பதாவது நாள்
துல்ஹஜ்ஜின் பத்தாவது நாள்
துல்ஹஜ்ஜின் பதினோராவது நாள்
துல்ஹஜ்ஜின் பன்னிரண்டாவது நாள்
துல்ஹஜ்ஜின் பதின்மூன்றாவது நாள்
உம்ரா செய்யும் முறை

*02-*மினாவுக்குச் சென்று மினாவிலேயே ளுஹரையும் அஸரையும் மஃரிபையும் இஷாவையும் தொழுவார். மறுநாள் சுபஹ் தொழுகையயும் தொழுவார் .தொழுகைகளை அதனுடைய நேரத்திற்கு தொழுவதார். நான்கு ரக்அத் தொழுகைகளை சுருக்குவார். ஒன்பதாவது நாள் சூரியன் உதயமாகும் வரை மினாவிலேயே இருப்பார் அந்த நேரத்தில் தல்பியாவை அதிகமாகச் சொல்வது சுன்னத்தாகும்

https://www.al-feqh.com/ta



இஹ்ராமுடைய ஆடையை அணிவது

நறுமணம் பூசுவது

குளிப்பது

மினா

துல்ஹஜ் ஒன்பதாவது நாள் (யவுமு அரபாவாகும்)

01-இந்த நாளில் சூரியன் உதித்தால் ஹாஜிகள் எல்லாம் தல்பியா சொன்னவர்களாக அரபாவுக்கு விரைந்து செல்வார்கள். மேலும் அவருக்கு முடியுமாக இருந்தால் நமிராவுக்கு சென்று சூரியன் சாய்கினற வரை இருப்பது சுன்னத்தாகும். எனவே சூரியன் சாய்ந்தால" ளுஹருடைய நேரமாக ஆகிவிடும் முஸ்லிம்களின் இமாமிற்கு அல்லது அவர்களுடைய உதவியாளருக்கு நிலைமைக்கு ஏற்ற முறையில் உபதேசிப்பது சுன்னத்தாகும். அதிலே தவ்ஹீதை மீட்டி மீட்டி கூறுவார். ஹஜ்ஜின் சட்டங்களை மீட்டி மீட்டி கூறுவார். இந்த மார்க்கத்தின் முக்கியமான விடயங்களையும் கூறுவார்.

02-பின்னர் ளுஹரையும் அஸரையும் சேர்த்து சுருக்கி தோழுவிப்பார். இந்த நாளிலே ஹாஜிகளுக்கு கிப்லாவை முன்னோக்குமாறு அவசரப்படுத்துவார். அதிகமாக முயற்சி செய்து அமைதியோடும் பணிவோடும் பலவீனத்தோடும் பிரிந்து துவா கேட்குமாறு சொல்லுவார்.

நபி அவர்கள் சொன்னார்கள் «துஆக்களில் மிகச் சிறந்தது அரஃபா அன்றில் கேட்கின்ற துஆ ஆகும் மேலும் நான் கூறுவதிலும் எனக்கு முன் இருந்த நபிமார்கள் கூறுவதிலும் மிகச் சிறந்தது லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர்» (ஆதாரம் திர்மிதி).

03-சூரியன் மறைந்ததன் பின்னால் ஹஜ் செய்யக்கூடியவர் தன்னுடைய அறையில் இருந்து முஸ்தலிஃபாவுக்குச் செல்வார். சூரியன் மறைய முன்னர் செல்வது அவருக்கு கூடாது. சூரியன் மறைய முன்னர் அவர் சென்றிருந்தாலும் இரவிலே திரும்பி வருவார். அவர் திரும்பவில்லை ஆயின் ஒரு ஆட்டை பரிகாரமாக கொடுக்க வேண்டும்.

நமிரா


அரபா

முஸ்தலிஃபா

https://www.al-feqh.com/ta

வழிகாட்டல்கள்

01-ஹஜ் செய்யக் கூடியவர் அரபாவில் இருந்தாலும் ஒன்பதாவது நாள் அரபாவில் இருப்பதாக உறுதி கொள்ளுவார். அவர் நின்றாலும் அல்லது இருந்தாலும் அல்லது உறங்கினாலும் அல்லது பிரயாணம் செய்தாலும் சரியே.

02-அரபாவில் தரித்தல் என்பது ஹஜ் உடைய ருகண்களில் இருந்து ஒரு ருகுன் ஆகும். அது இல்லாமல் ஹஜ்ஜு சீராக மாட்டாது. அரபாவில் தரிப்பது இல்லாமல் போனால் ஹஜ்ஜு இல்லாமல் போய்விடும். நபி ஸல் அவர்கள் சொன்னார்கள் «ஹஜ்ஜு என்பது அரபாவில் தடுப்பதாகும்» (ஆதாரம் அஹ்மத்).

03-அரபாவில் தருகின்ற நேரம் ஒன்பதாவது நாள் பஜ்ரு உதயமானதிலிருந்து பத்தாவது நாள் ஃபஜ்ரு உதயமாகும் வரை ஆகும். இந்த நேரத்தில் ஒருவர் ஒரு வினாடி தரித்தாலும் அவருடைய ஹஜ்ஜு சரியானதாகும். யார் தரிக்க வில்லையோ அவருடைய ஹஜ்ஜு சீரற்றதாக ஆகிவிடும். இப்னு அப்பாஸ் ரலி அவர்கள் சொன்னார்கள் «யார் ஃபஜ்ரு உதயமாக முன்னர் அறபாவை அடைந்து கொள்கிறாரோ அவர் ஹஜ்ஜை அடைந்து கொண்டார்» (அல்பானி ரஹ் அதனை ஸஹீஹ் என கூறுகின்றனர்.).

04-அரபா அனைத்தும் இருக்கக்கூடிய இடங்களாகும் நபி அவர்கள் பாலைவனத்திற்கு அண்மையில் இருக்கும் கிப்லாவை முன்னோக்கி வராக மலையிலே இருந்தார்கள். அதிலே அவர் ஏறவில்லை. நபி அவர்கள் சொன்னார்கள் «நான் இங்கே இருந்தேன் அரபா எங்கெங்கிலும் இருக்க முடியும்»(ஆதாரம் முஸ்லிம்). அவருக்கு முடியும் என்றால் நபி அவர்கள் இருந்த இடத்தில் இருப்பார் இல்லாவிடின் வேற ஒரு இடத்தில் இருப்பார் அரபாவுக்கு முன்னால் இருக்கின்ற அருணா என்ற ஓடைஓடையிலே இருக்க முடியாது. பாலைவனத்திலும் இருக்க முடியாது. மலையிலும் இருக்க முடியாது. அரஃபாவுக்கு குறிப்பிட்ட எல்லை இருக்கிறது. பழைய எல்லைகளும் இருக்கின்றன. தற்போது புதிய எல்லைகளும் தெளிவாக இருக்கின்றன. அனைத்து பக்கத்திலிருந்தும் அதனுடைய இல்லை தெளிவாக விளங்கும்.

5-ஹாஜ்ஜுக்கு இந்த நாள் உடைய மகத்துவத்தையும் சிறப்பையும் ஞாபகம் செய்வது அவசியமாகும். நிச்சயமாக அல்லாஹ் அவனுடைய அடியார்களை பாதுகாத்து இருக்கிறான். அவன் நினைத்தவர்களை மலக்குகள் விரும்புகின்றவர்களையும் பாதுகாக்கிறான். நபி ஸல் அவர்கள் சொன்னாரகள் «இறைவன் நரகத்தில் இருந்து அதிகமாக அடியார்களை வெளியாக்குகின்ற வேறு எந்த நாழும் இல்லை என்றார்கள். பின்பு மலக்குகலை நெருங்கி அவர்கள் விரும்புகின்றவர்களையும் பாதுகாக்கிறான்.» (ஆதாரம் முஸ்லிம்). இந்த நாலால் இருக்கின்ற சிறப்பான நேரங்களை பயன்படுத்துவது ஹாஜ்ஜூக்கு அவசியமாகும். புதிதாக தவ்பா கேட்பார் தன்னை சுய பரிசோதனை செய்வார் . சுற்றாத்திரிந்தும், வீண் பேச்சு, விவாதம் போன்றவைகளில் நேரங்களை களிக்க மாட்டார்.

பத்தாவது நாள் முஸ்தலிபாவுக்குச் பிரிந்து சென்று அங்கே தங்குவார்

01-சூரியன் மறைநத்தன் பின்னர் அரபாவில் இருந்து முஸ்தலிபாவுக்கு அமைதியாகவும் கன்னியத்தோடும் இறவனை தல்பியா சொல்லியவராக செல்வது சுன்னத் ஆகும்.

02-முஸ்தலிபாவை வந்தடைந்தவுடன் பொருட்களை இறக்க முன்னர் இசாவையும் மஃரிபையும் சேர்த்து இஷாவை சுருக்கி தொழுவார்.

03-இன்றிரவு முஸ்தலிபாவில் தரிப்பவருக்கு நேரகாலத்தோடு பஜ்ரை தொழுவது அவசியமாகும். பஜ்ருக்கு முன்னர் வெளியாகுவது கூடாது. தேவைகள் இருந்தால் பிரச்சினையில்லை. பலவீனமானவர்கள், பெண்கள், சிறுவர்கள் அவர்களை கண்கானிப்பவர்கள். அல்லது ஹாஜூகளுக்கு பணிவிடை செய்வார்கள். இவர்களுக்கு சந்திரன் மறைசதால் முன்னர் போக முடியும்

04-ஹாஜிகள் பஜ்ரை தொழுதால் மஸ்அரில் ஹராமிடத்தில் வருவது விறும்பத்தக்கதாகும். மேழும் கிப்லாவை முன்னோக்குவார். துஆவையும் தக்பீரையும் கையை உயர்த்தி அதிகமாக்குவார். சூரியன் நன்றாக மஞ்சலாகும் வரை அவ்வாறு தொடர்ந்திருப்பார். இது முஸ்தலிபாவில் எந்த இடத்தில் இருந்தாழும் கூடும் நபி ஸல் அவர்கள் சொன்னார்கள் «இதோ நான் இங்கே இருந்தேன் எங்கிலும் இருக்க முடியும்»(ஆதாரம் முஸ்லிம்). ஜம்உ என்றால் முஸ்தலிபா ஆகும்

05-முஸ்தலிபாவிலிருந்து திரும்பியவுடன் முதலாவதுக ஜமராத்துக்கு மாத்திரம் எறிய ஏழு கற்களை புறக்குவது அவசியமாகும். ஏனைய நாட்கள் மினாவிலோ அல்லது எந்த இடத்திலிருந்தும் கற்களை புறக்கி எரிவது கூடும்

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

துல் ஹஜ் பத்தாவது நாள் (பெருநாள் தினம்)

01-பஜ்ரை தொழுவார். பின்னர் சூரியன் உதயமாக முன்னர் துஆவுக்காகவும், திக்ருக்காகவும் பிரிந்து விடுவார்.

02-ஹாஜிகள் சூரியன் உதயமாக முன்னர் முஸ்தலிபாவில் இருந்து பிரிந்து மினாவை நோக்கி வருவார். அப்பாதையிலே அதிகமாக தல்பியா சொல்வார். அவர் ஓடையை அடைந்தால் அவசரமாக செல்வார். அந்த ஓடை மினாவிற்கும் முஸ்தலிபாக்கும் இடையில் இருப்பதாகும். அவர் மினாவை அடைந்தால் பெருநாழுக்கான செயல்களை செய்வார்

அவைகள் சுருக்கமாக: ஜம்ரா அகபாவிற்கு கல் எரிதல். பலியிடல் .முடியை சிரைத்தல். அல்லது குறைத்தல். தவாப் செய்தல். தொங்கோட்டம் ஒடுதல்.

03-ஹாஜிகள் மினாவை அடைந்த பின்னர் ஜம்ரதுல் அகபாவிற்கு செல்வார். அது தான் ஜம்ராக்களில் மினா பக்கம் இறுதியானது ஆகும் .முதலாவது மக்கா பக்கம் இருப்பது ஆகும். அவ்விடத்துக்கு வந்தவுடன் தல்பியாவை நிறுத்தி விடுவார். ஜமராத்துக்கு ஏழு கற்களையும் தொடர்ச்சியாக எரிவார். அதனுடைய விரும்பத்தக்க நேரம் பெறுநாள் தினம் பஜ்ரில் இருந்து ஆரம்பமாகிறது. பஜ்ருக்கு முன்னர் இரவின் இருதிப்பகுதியில் எறிவதும் கூடும் .எறிவதற்கான நேரம் 11வது நாள் பஜ்ர் வரை தொடர்ந்திருக்கும்

வழிகாட்டல்கள்

-முஸ்லிமுக்கு அவனுடைய சகோதர்களாகிய ஏனைய ஹாஜ்களுக்கு கல் எரியும் போதும் ஏனைய வனக்கங்களின் போதும் நோவினை கொடுக்காமல் இருப்பது அவசியமாகும்.

-கல் எரியக்கூடியவர் கற்கல் கற்தடாகத்தில் விழுகிறது என்று உறுதி கொல்வது அவசியமாகும். சில மனிதர்கள் எரியும் கற்கல் இன்னுமொருவரது பக்கம் செல்கிறது. அல்லது எரியப்படும் இடத்துக்கு செல்லாது என்று நினைத்தல். இன்னும் சில மனிதர்கள் நாங்கள் தூரத்தில் இருந்து எரிகிறோம் அவைகள் எரியப்படும் இடத்துக்கு செல்லாது என்று நினைத்தல் இப்படிப்பட்ட எண்னங்களால் அக்கடமை நிறைவேறமாட்டாது

கல்லறியும் ஒரு முஸ்லிம் அதில் பெரிய கற்கள், பாதணிகளை மிதமிஞ்சி வீசுவதை தவிர்ந்து கொள்ள வேண்டும். மேலும் சிரிய அளவிலான கற்களை வீசுவதே சுன்னத்தாகும். ஜாபிர் ரழி அறிவிக்கும் செய்தியில் «நபியவர்கள் ஜம்ராத்தில் சிறிய கற்களால் எறிவதை நான் பார்த்தேன்» (ஆதாரம் முஸ்லிம், ஆள்காட்டி விரலுக்கிடையில் வைத்து வீசப்படும் கற்கள்.)

-அனைத்து கற்களையும் ஒரே தடவையில் எறிந்தால் அது ஒரு கல்லாகத்தான் கருதப்படும். எரியப்படும் இடத்தில் விழுந்தால் சீராகாது உரிய இடத்தில் எறிவதுதான் அவசியமாகும்.

04-தலைமுடியை சிரைபார் அல்லது குறைப்பார். சிரைப்பது என்பது மிகச் சிறந்ததாகும். பெண்கள் ஒரு மூட்டின் அளவு குறைப்பார்கள்.

05-மக்காவுக்கு வந்து தவாஃபுல் இஃபாளாவை செய்வார். இந்த தவாஃபுக்கு பின்னால் இரண்டு ரக்அத்துகள் தொழுவார். இஹ்ராமுடைய ஆடையை கழட்டி அதன் பின்னால் தவாஃப் செய்வது மிகச் சிறந்ததாகும். முடியை சிறை வைத்ததற்கும் கல்லெறிந்து அதற்கும் பின்னால் வழமையாக ஆடையை அணிந்து கொள்வார். மேலும் நறுமணம் பூசிக் கொள்வார். ஆயிஷா ரலி அவர்கள் சொன்னார்கள் «நபி ஸல் அவர்கள் இஹ்ராமுடைய ஆடையை அணிகின்ற போதும், இன்னும் தவாஃப் செய்வதற்கு முன்னால் கழற்றும் போதும் நறுமணம் பூசி விட்டேன்»(புஹாரி முஸ்லிம்)

06-தவாஃப் உடைய நேரம் பெருநாள் தினத்தில் ஃபஜர் உதயமான பின்னால் ஆரம்பமாகும். முஸ்தலிபாவிலிருந்து வரும் பலவீனமானவர்கள் அடுத்த நாள் பஜ்ர் ஆரம்பிப்பதற்கு முன்னதாக பிற்படுத்தி செய்து கொள்ளலாம். எனின் பெருநாளின் பின்னர் பிற்படுத்துவது ஆகுமானது.

07- தவாஃபுல் இஃபாளாவை முடித்த பின்னர் தமத்து செய்தவர் ஸஃபா மர்வா மலைகளுக்கு மத்தியில் தொங்கோட்டம் ஒடுவார். இப்ராத், கிரான் முறையில் செய்தவர் தவாஃபுல் குதூம் இற்கு பின்னால் தொங்கோட்டம் ஓடினால் அவர்களுக்கு தவாஃபுல் இஃபாளா வுக்கு பின்னால் தொங்கோட்டம் கிடையாது. தவாஃபுல் இஃபாளாவை தோங்கோட்டத்தையும் முடித்ததன் பின்னர் அவர் தொங்கோட்டம் ஓடவில்லை என்றால் தொங்கோட்டம் ஒடுவார். பெருநாள் தினத்தில் செய்கின்ற கிரியைகள் எல்லாம் பூரணமாகி விட்டால் பதினோராவது நாள் மினாவிலேயே தரிப்பதற்கு திரும்பி வருவார்

https://www.al-feqh.com/ta

ஒழுங்குபடுத்தப்பட்ட பெருநாள் தின கிரியைகள்

முந்திய ஒழுங்குமுறையில் செய்வது நபிவழியாகும். கற்களை எறிதல் பின்பு பலியிடல் பின்பு முடிகளை சிரைத்தல் பின்பு தவாஃப் செய்தல் பின்பு யார் தொங்கோட்டம் ஓடவில்லையோ அவர் தொங்கோட்டம் ஓடுவார். சிலதை விட சிலதை முட்படுத்துவது கூடும். நபி ஸல் அவர்கள் அதற்கு அனுமதி அளித்தார்கள். ஒருவர் முடியை சிரைத்து பின்னர் கல்லெறிந்தால் அது கூடுமானது. அறுத்துப் பலியிடல் செய்து விட்டு தவாப் செய்து பின்னர் கல்லெறிந்தாலும் ஆகுமானது. நபி ஸல் அவர்கள் சொன்னார்கள் «நீங்கள் செய்யுங்கள் குற்றம் கிடையாது »(புஹாரி முஸ்லிம்).

1 ஜம்ரதுல் அகபா விற்கு கல்லேரிதல்

2 ஹத்யு கொடுத்தல்

3 சிரைத்தல் அல்லது குறைத்தல்

4 தவாபு செய்தல்

5 ஸபா மர்வாகிடையில் தொங்கோட்டம் ஓடுதல்


6 மினாவில் தரித்தல்

முதலாவது தடை நீங்குதல் இரண்டாவது தடை நீங்குதல்

முதலாவது தடை நீங்குதல் : இஹ்ராமினால் உண்டான அனைத்து தடைகளை விட்டும் நீங்குவதாகும். பெண்களுடன் உடலுறவு கொள்வதையும் அவர்களுடைய அவர்களை கட்டிப்பிடிப்பது, திருமண உடன்படிக்கைகளை மேற்கொள்வதை செய்ய முடியாது. பின்னால் வருகின்ற இரண்டு விடயங்களையும் செய்வார் ஜம்ரதுல் அகபாக்கு கல் எறிவார். முடியை சிரையைப்பார். தவாப் செய்வார். தொங்கோட்டம் அவசியம் என்றால் தொங்கோட்டம் ஓடுவார் .

இரண்டாவது தடை நீங்குதல் : இது இஹ்ராமினால் உண்டான அனைத்து தடைகளையும் நீங்குவதாகும் . இரண்டாவது தடவை நீங்கல் என்பது முன்னர் சொன்ன அனைத்து காரியங்களையும் நீக்குகின்றது.

- தடை நீங்குவதற்கும் அறுத்துப் பலியிடுவதற்கும் தொடரபு கிடையாது. அவர் 11 ம் நாளில் ஹதி கொடுத்தாலும் சரியே. இன்னும் பெருநாள் தினத்திற்குரிய கடமைகளை செய்தாலும் சரியே. அவர் அறுத்துப் பலியிடவில்லையன்றாலும் அவர் தடைநீங்கப்பட்டவராவார்.

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

1-அய்யாமுத் தஷ்ரீக்

துல்ஹஜ் மாதம் 11,12,13, ஆகிய நாட்களுக்கு அய்யாமு தஷ்ரிக் சொல்லப்படும். ஏனனில் அந்த நாட்களில் உழ்ஹிய்யா இறைச்சி கயவைக்கப்படும். அல்லது சூரிய ஒளியில் காயவைப்பதை குறித்து நிற்கின்றது.

மேலும் நபி ஸல் அவர்கள் சொன்னார்கள் «அறிந்து கொள்ளுங்கள் நிச்சயமாக அந்த நாட்கள் உண்ணுவதற்கும் பருகுவதற்கும் இறைவனை ஞாபகம் செய்வதற்குரிய நாட்களாகும்»(ஆதாரம் அபூதாவூத்).

பதினோராவது நாளும் அதன் இரவும்

பதினோராவது நாள் மினாவில் தரிப்பது அவசியமாகும். பதினொராவது நாள் சூரியன் மறைந்த பிறகு மூன்று ஜம்ராவிற்கும் ஏழு கற்கல் எறிவது அவசியமாகும்.(அவைகள் மூனறு ஹவ்ல்கள். அவைகழுக்கு நிலையான தூன்கள் உள்ளன. அவைகள் மினாவின் இறுதிப்பக்கமும் மக்காவின் முதல் பக்கமும் உள்ளன. முதலில் சிறியது பின்னர் நடுத்தரமானது, பின்னர் பெரியது என அமையப் பெற்றுள்ளது. மினாவிலிருந்து மக்கா நோக்கி அதன் எல்லைகளாகும்.)

கல் எறிவதன் அமைப்பு

முதலாவது ஜமராவில் மூலமாக ஆரம்பிப்பார். ஏழு முறை எரிவதையும் தொடர்ச்சியாக எறிவார். ஒவ்வொரு எரிவதற்கும் இடையில் தக்பீர் சொல்லுவார். எறிகின்ற கற்கள் உரிய இடத்தில் விழுவது அவசியமாகும். அவ்விடத்திலேயே சற்று முன்னோக்கி சென்று கைகள் இரண்டையும் உயர்த்தி இறைவனிடம் பிரார்த்திப்பார்.

நடுத்தர ஜம்ரத் - முதலாவதை அறிந்த அடிப்படையில் ஜம்ரதுல் உஸ்தாக்கு எரிவார். பின்பு கைகள் இரண்டையும் உயர்த்தி துஆ கேட்பார்.

ஜம்ரதுல் அகபா விற்கு எறிவார் துவா கேட்பதை விட்டு விடமாட்டார்.

ஜம்ரத் ஊலா

ஜம்ரதுல் வுஸ்தா

ஜம்ரதுல் அகபா

பன்னிரெண்டாவது நாளும் பன்னிரண்டாவது நாள் இரவும்

பன்னிரண்டாவது நாள் மினாவில் தரிப்பது அவசியமாகும். பின்னர் முன்னர் குறிப்பிட்டது போன்று சூரியன் சாயந்ததன் பின்னால் பதினோராவது நாள் எரிந்ததைப் போல மூன்று ஜம்ராத்திற்கும் கல்லெரிவார்.

அவர் அவசரத்தை நாடினால் ஜம்ராத்திற்கு கல் எறிந்துவிட்டு அவர் மினாவிலிருந்து சூரியன் மறைவதற்கு முன்னர் சென்றுவிடுவார். சூரியன் மறைந்து விட்டால் அவர் அங்கேயே தங்க வேண்டும். மறுநாளும் (பதின் மூன்றாம் நாளும்) அவர் எறிவது அவசியமாகும். அதிலே அவருக்கு அதிகமான நலவுகள் இருக்கின்றன. அல்லாஹ் கூறுகிறான் {குறிப்பிடப்பட்ட நாட்களில் அல்லாஹ்வை திக்ரு செய்யுங்கள்; எவரும்(மினாவிலிருந்து) இரண்டு நாட்களில் விரைந்துவிட்டால் அவர் மீது குற்றமில்லை; யார்(ஒரு நாள் அதிகமாக) தங்குகிறாறோ அவர் மீதும் குற்றமில்லை; (இது இறைவனை) அஞ்சிக் கொள்வோருக்காக (கூறப்படுகிறது); அல்லாஹ்வை நீங்கள் அஞ்சிக் கொள்ளுங்கள்; நீங்கள் நிச்சயமாக அவனிடத்திலே ஒன்று சேர்க்கப்படுவீர்கள் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்}[பகறா – 203]. அதாவது அய்யாமுத் தஷ்ரீக் உடைய முதல் இரண்டு நாட்களை முற்படுத்தல் அல்லது பதிமூன்றை தாமதிப்பதாகும்.

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

பதின் மூன்றாவது நாளும் அந்த நாள் இரவும்

பதின்மூன்றாவது நாள் சூரியன் சாய்ந்து தன் பின்னால் முந்தையநாள் எறிந்ததை போன்று அவர் எறிவார். இந்த நாளுடன் சூரியன் மறைந்த பின்னால் கல் எரிவதற்கான நேரம் முடிவடைகிறது

கல்லெறிவதைப் பிற்படுத்தல்.

ஹாஜிகள் கல்லெறிவதை எரியாமல் அவர் பிற்படுத்தினால் அவருக்கு பின்பு எறிய முடியும். அந்த மூன்று நாட்களுக்குள் கல் எறிவது அனுமதிக்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தினால் எப்படி கல்லெறிவது.

மூன்று ஜமராத்திற்கும் முதலாவது நாளிலே எரிய ஆரம்பிப்பார் . பின்னர் ஜமரது சுஃரானவுக்கு போவார். அங்கும் அபடியே எறிவார். சூரியன் சாய்ந்த பின்னர் அங்கு அவர் இருக்கமாட்டார்.

தவாபுல் வதாஃ

ஹாஜ்ஜ் மக்காவில் இருந்து வெளியாக நினைத்தால் தவாபுல் வதாஃ செய்வார். அது ஹஜ்ஜின் வாஜிப்களில் உள்ளதாகும். அதற்கு பிறகு தவாப் கிடையாது .மாதவிடாயுடன், மகப்பேறு இரத்தம் உள்ள பெண்கள் தவாபுல் வதாஃ செய்ய மாட்டார்கள்

தவாபுல் இபாலாவை தவாபுல் வதாஃ வரை பிற்படுத்தல்

ஹாஜ் தவாபுல் இபாலாவை தவாபுல் வதாஃ நேரத்துக்கு பிற்படுத்த முடியும். ஆனால் மிகச்சிறப்புக்கு மாற்றமானது. தவாபுல் இபாலாவின் எண்ணத்துடன் இரண்டு தவாபுகளையும் செய்வது சரியானதாகும். தவாபுல் வதாக்குப்பின்னால் தொங்கோட்டம் ஓடவும் முடியும்

தவாபில் உள்ள நுட்பம் (பயன்கள்)

தவாபிலும் தொங்கோட்டத்திலும் கல்லேரிவதிலும் அல்லாஹ்வின் ஞாபகம் ஏற்படுகின்றன.

உம்றா செய்யும் முறை

01-உம்ரா செய்கின்றவர் மீகாத்திற்கு வந்தால் குளிப்பார். நருமணம் பூசுவார். இஹ்ராம் ஆடையை அணிவார். உம்ராவிற்கான நீய்யத்தை வைத்து "லப்பைக் உம்ரா" என கூருவார்.

இஹ்ராமாடையை அணிவது

நருமணம் பூசுதல்

குளிப்பது

02-தல்பியா சொல்வதில் மார்க்கமாக்கப்பட்டது. «லப்பைக் அல்லாஹும்ம லப்பைக் லப்பைக் லா சரீக்க லக லப்பைக் இன்னல் ஹம்த வந்நிஃமத லக வலமுல்க லா சரீக்க லக்» (ஆதாரம் புகாரி) அவர் கஃபாவை காணும் வரையும் ஹஜருல் அஸ்வதை சந்திக்கும் வரை தல்பியா சொல்லுவார் .

03-மஸ்ஜிதுல் ஹராமுக்கு நுழைய செல்வார். அவரின் வலது பக்கத்தால் செல்வார். பள்ளிக்குள் நுழையும் துவாவை ஓதுவார் .

04-தல்பியாவை நிறுத்தி தவாபை ஆரம்பிப்பார். ஹஜருல் அஸ்வதையும் அவருக்கு முடியுமென்றால் சந்தித்து முத்தமிடுவார். இல்லையென்றால் அதனை சுட்டிக்காட்டுவார் .

05-கஃபாவை அவருக்கு இடது பக்கமாக்கி 7 சுற்றுக்கள் சுற்றுவார்கள். ஹஜருல் அஸ்வதில் ஆரம்பித்து அவ்விடத்திலே முடிப்பார் .

https://www.al-feqh.com/ta

06-ரமல் என்றால் பாய்ச்சல் அல்லாத அவசர நடைக்கு சொல்லப்படும். அனைத்து தவாபிலும் வலது தோல் புஜத்தை வெளிக்காட்டுவது சுன்னத்தாகும். அவருடைய இரண்டு போர்வையின் இரு ஓரங்களையும் இடது தோல் புயத்துக்கு கீழே வைப்பார்

தவாபின் நிபந்தனைகள்

பின்வருவன தவாபின் நிபந்தனைகளாகும். நிய்யத்தும் சுத்தமும் அவ்ரத்தை நீக்குவதும், ஏழு தவாப் செய்வதும், ஹஜருல் அஸ்வதால் ஆரம்பித்தல். அவருக்கு இடது பக்கத்தில் கஃபாவை நோக்குதல். தொழுகையும் ஜனாஸாவும் எதிரில் வராவிட்டால் தொடர்ச்சியாக செய்வார். தொழுகை நேரமானால் தொழுதுவிட்டு தவாபை ஆரம்பிப்பார். ஹஜருல் அஸ்வதிலிருந்து கஃபாவின் எல்லா பகுதிகளிலிருந்தும் தவாப் செய்யலாம்.

07-தவாபில் அவர் விரும்புவதை இறைவனிடம் கேட்பார். ருக்னுல் யமானுயை தான்டும் நேரத்தில் தக்பீர் சொல்லுவார். அவருக்கு முடியாமல் போனால் தக்பீர் சொல்லாமல் சுட்டிக்காட்டுவார் .ஹஜருல் அஸ்வதற்கும் ருக்னுல் யமானிக்குமிடையில் «ரப்பனா ஆதினா பித்துந்யா ஹஸநதன் வபில் ஆகிரதி ஹஸநதன் வகினா அதாபந்நார் என்று ஓதுவார் » (ஆதாரம் அபூதாவுத்)

07-தவாபில் அவர் விரும்புவதை இறைவனிடம் கேட்பார். ருக்னுல் யமானுயை தான்டும் நேரத்தில் தக்பீர் சொல்லுவார். அவருக்கு முடியாமல் போனால் தக்பீர் சொல்லாமல் சுட்டிக்காட்டுவார் .ஹஜருல் அஸ்வதற்கும் ருக்னுல் யமானிக்குமிடையில் (ரப்பனா ஆதினா பித்துந்யா ஹஸநதன் வபில் ஆகிரதி ஹஸநதன் வகினா அதாபந்நார் என்று ஓதுவார்) 80

08- ஏழாவது தவாபை சுற்றி முடிந்தால் அவருடைய தோல் புஜத்தை மூடிக்கொள்வார். வெளிப்படுத்துவது உம்ராவின் தவாபிலும் தவாபில் குதூமிலும் சுன்னத்தாகும். பின்னர் மகாமு இப்ராஹீமை நோக்கி முடிந்தால் இரண்டு ரக்ஆத்கள் தொழுவார் முதலாம் ரக்காதில் பாத்திஹாவின் பின்னர் காபிரூனை ஓதுவார். இரண்டாவதில் இஹ்லாசை ஓதுவார் .முடியாவிட்டால் விரும்பிய நேரத்தில் தொழுவார்.

வழிகாட்டுதல்கள்

01-முஸ்லிமுக்கு ஏனையவர்களை நெருக்காமல் இருப்பது அவசியமாகும். ஒருவருக்கொருவர் முட்டி மோதி ஹஜருல் அஸ்வதை முத்தமிடச்சென்று கஷ்டத்தை ஏற்படுத்தாமல் இருப்பதும் மக்கள் நெருக்கடிக்கு உள்ளாகும் என்றால் முத்தமிடாமல் இருப்பதும் அவசியமாகும்

02-முடியுமானதை தவாபிலே கேட்பார். தவாபுக்கு என்று குறிப்பிட்ட துஆ கிடாயாது. அவர் தவாபில் குர்ஆன் ஓதினாலும் பிரச்சினை கிடாயாது.

03-தோள் பக்கத்தை வெளிப்படுத்துவது உம்ராவின் தவாபிலும், தவாபுல் குதூமிலும், ஏழு சுத்துக்களிலும் சுன்னத்தாகும்

04-பெண்ணுக்கு தவாபில் அழகை வெளிப்படுத்திவதும், நறுமன வாசனைகளை வெளிப்படுத்துவதும், திக்ராலும் துஆவாலும் சத்தத்தை உயர்த்தாமல் இருப்பது சுன்னத்தாகும்

9-ஸபா மலைக்கு செல்லும் போது அதனை நெருங்கியவருடன் ஓதுவார். அல்லாஹ் கூறுகிறான் {நிச்சயமாக 'ஸஃபா' 'மர்வா' (என்னும் மலைகள்) அல்லாஹ்வின் அடையாளங்களில் நின்றும் உள்ளன; எனவே எவர் (கஃபா என்னும்) அவ்வீட்டை ஹஜ் அல்லது உம்ரா செய்வார்களோ அவர்கள் அவ்விரு மலைகளையும் சுற்றி வருதல் குற்றமல்ல; இன்னும் எவனொருவன் உபரியாக நற்கருமங்கள் செய்கிறானோ (அவனுக்கு) நிச்சயமாக அல்லாஹ் நன்றியறிதல் காண்பிப்பவனாகவும்இ (அவனுடைய நற்செயல்களை) நன்கறிந்தவனாகவும் இருக்கின்றான்}. [பகறா – 158].

10-ஸபா மலையில் ஏரி, கிப்லாவை முன்னோக்கி, கைகளை உயர்த்தி தக்பீர் சொல்லி, அல்ஹம்து சொல்லி, «லாஇலாஹ வஹ்தகு லா சரீக்கலகு லகுல் முல்கு வலகுல் ஹம்து வகுவ அலா குல்லி சைய்யின் கதீர் ல் இலாஹ இல்லல்லாஹு வஹ்தஃ வநசர அப்தஃ வஹசமல் அஹ்சாப வஹ்தாஃ» (ஆதாரம் புகாரி) என்று மூன்று முறை கூறி துஆ கேட்பார்.

நபியவர்களிகளின் அறிவிப்பில் «ஸபாவில் செய்த்தை போன்று மர்வாவிலும் செய்வார்» (ஆதாரம் முஸ்லிம்)

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

11-ஸபாவில் இருந்து மர்வாவை நோக்கி இறங்கி விரைந்து செல்வார். பச்சை அடையாளங்கள் உள்ள இடங்களில் சற்று வேகமாக ஓடுவார். (அவை இரண்டு இடங்களும் ஹாஜரா அலை அவர்கள் ஓடிய இடங்களாகும்.) மேலும் மர்வாவில் ஏறி ஸபாவில் செய்தவைகளை செய்வார்.

12-ஸபாவுக்கும் மர்வாக்குமிடையில் தோங்கோட்டம் ஒடுவார் (போவது ஒரு சுற்றாகும் வருவது ஒரு சுற்றாகும்) .

- தோங்கோட்டம் ஒடுபவர் சுத்தமாக இருப்பது சுன்னத்தாகும் .அவர் தொடக்குடன் இருந்தாலும் ஏற்றுக்கொள்ளப்படும் .

தொடர்ச்சியாக செய்வது தொங்கோட்டத்திலும் தவாபிலும் சுன்னத்தாகும்

ஸபா மர்வாக்கிடையில் தொங்கோட்டம் ஓடுதல்

13-தொங்கோட்டம் ஓடியதன் பின்னர் தலை தெளிவாக விளங்கும் வரை முடிகளை குறைப்பார். பெண்கள் ஒரு இன்ச் அளவு குறைப்பார்கள். ஆண்கள் சிரைப்பது மிகச்சிகந்ததாகும். அபூ ஹுரைரா ரழி அவர்கள் கூறினார்கள் நபி ஸல் அவர்கள் சொன்னார்கள் «தலையை சிரைப்பவர்களை நீ மன்னிப்பாயாக தோழர்கள் கேட்டார்கள் முடியை குறைப்பவர்கள் சொன்னார்கள் தலையை சிரைப்பவர்களை நீ மன்னிப்பாயாக இவ்வாறு 3 முறை கேட்டதன் பின்னர் சொன்னார்கள் தலையை குரைப்பவர்களை நீ மன்னிப்பாயாக என்று சொன்னார்கள் ». (ஆதாரம் புகாரி) அவர் முதமத்தியாக இருந்தால் உம்ராக்கு பின்னர் ஹஜ் செய்பவர் இவருக்கு நேரம் இருக்கிறது. உம்றாவில் முடியை குறைப்பது ஏற்றமானதாகும். பின்னர் ஹஜ்ஜின் போது தலையை சிரைப்பார்.

14-இஹ்ராமிலிருந்து வெளியாவுதல் அது உம்ராவை முடிப்பதாகும். பெண் தவாப் செய்வதிலும் தொங்கோட்டம் ஓடுவதிலும் ஆண்களைபோன்றவர்கள்தான். தொங்கோட்டத்தில் பச்சை தூன்களுக்கு மத்தியில் விரைந்து செல்லமாட்டார். தலையை சிரைக்கமாட்டார். தனது முடியிலிருந்து1இஞ்சளவு குறைப்பாள் . அது விரலின் 1மூட்டின் அளவாகும்

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta



https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

ஹஜ்ஜின் அர்க்கான்களும் வாஜிப்களும் சுன்னதாகமும்

பெருளடக்கம்

ஹஜ்ஜின் ருகூன்கள்

ஹஜ்ஜின் வாஜிப்கள்

ஹஜ்ஜின் சுன்னத்கள்

ஹஜ்ஜின் ருகூன்கள்

01-இஹ்ராம் :

நபி ஸல் அவர்கள் சொன்னார்கள் «நிச்சயமாக செயற்கலெல்லாம் என்னங்களை கொண்டே அமைகின்றன ஒவ்வெரு மனிதனுக்கும் அவன் என்னியது கிடைக்கும் அவனுடைய ஹிஜ்ரத் இந்த உலகத்திற்காகவும் தான் மனக்க இருக்க்ம் பென்னுக்காகவும் இருந்தால் அவருடைய ஹிஜ்ரத்தின் மூலமாக அவன் நாடியது கிடைக்கும்»(ஆதாகம் புகாரி)

02-ஸபா மர்வாக்கு மத்தியில் தொங்கோட்டம் ஓடுதல்.

நபி ஸல் அவர்கள் கூறினார்கள் «நீங்கள் தொங்கோட்டம் ஓடுங்கள் நிச்சயமாக அல்லாஹ் தொங்கோட்டத்தை கடமையாக்கியுள்ளான்» (ஆதாரம் அஹ்மத்)

03- ஹஜ் என்பது அறபாவாகும்

அரபாவில் தரித்தல் நபி ஸல் அவர்கள் கூறினார்கள் «ஹஜ் என்பது அறபாவாகும் ».(ஆதாரம் திர்மிதி)

04-தவாபுல் இபாலா

அல்லாஹ் கூறுகிறான் {(அந்தப் புனிதமான) பூர்வீக ஆலயத்தை 'தவாஃபும்' செய்ய வேண்டும்.} [ஹஜ் - 29].

வாஜிபாதுல் ஹஜ்

யார் ஹஜ்ஜின் ருகுன்களில் இருந்து ஓர் ருகுனை விடுகிறாரோ அவர் இஹ்ராமுடன் இருந்தாலும் அவரின் செயற்பாடுகள் வணக்கம் ஆகமாட்டாது. நிச்சயமாக அவர் நிய்யத்து வைக்கவில்லை. நிய்யத்து இல்லாமல் வணக்கம் கிடையாது. ருகுனாக அல்லது வேறு எதுவாக இருந்தாலும் திரும்ப அவர் செய்ய வேண்டும்.

வாஜிபாதுல் ஹஜ்

01-மிகாத்தில் இருந்து இஹ்ராம் அனிதல். மிகாத்தை குறிப்பிட்ட பின்னர் நபி ஸல் அவர்கள் சொன்னார்கள் «அவைகளிடம் வேறு இடங்களில் இருந்து ஹஜ் உம்ராக்காக அவைகள் வருபவர்களுக்கானது» .(ஆதாரம் புகாரி)

02- அரபாவில் தரித்தல். பகலில் நிப்பவர் சூரியன் மறையும் வரை அரபாவில் தரிக்க வேண்டும். நிச்சயமாக நபியவர்கள் சூரியன் மறையும் வரை அரபாவில் தரித்தார்கள்

03-முஸ்தலிபாவில் தரித்தல். நபி ஸல் அவர்கள் முஸ்தலிபாவில் தரித்து விட்டு சொன்னார்கள் «என்

https://www.al-feqh.com/ta

சமூகம் அவர்களின் வணக்கமாக எடுக்கட்டும் இந்த வருடத்தின் பின்னர் அவைகளை நான் சந்திக்க மாட்டேன்»(ஆதாரம் இப்னு மாஜா), நிச்சயமாக நபி ஸல் அவர்கள் முஸ்லிம்களில் பலவீனமானவர்களுக்கு நடு நிசித்து பிறகு முஸ்தலிபாவில் செல்வதற்கு அனுமதியளித்தார்கள்.

04-அய்யாமுத்தஸ்ரிக்கில் மினாவில் தரித்தல். நபியவர்கள் «ஆட்டு இடையர்களுக்கு மினாவில் தங்குவதற்கு அனுமதியளித்தார்கள்.» (ஆதாரம் அபூ யூஃதி அவரது முஸ்கதில்). இது மினாவில் தரிப்பதுதான் அடிப்படை என்பதை குறிக்கின்றது.

05-ஜ்மராத்துக்கு கல் எரிதல். அல்லாஹ் கூறுகிறான் {குறிப்பிட்ட நாட்களில்}[பகரா- 203]. குறிட்ட நாட்கள் என்பது அய்யாமுத் தஷ்ரீகை குறிக்கின்றது.

கல் எரிவது இறைவனை ஞாபகம் செய்வதற்காகும். நபி ஸல் அவர்கள் சொன்னார்கள் «கஃபாவை தவாப் செய்வதும் ஸபா மர்வாக்கிடையில் தொங்கோட்டம் ஓடுதலை நிறைவேற்றுவது அல்லாஹ்வை ஞாபகம் செய்வதற்காகும்»(ஆதாரம் அபூதாவுத்)

06-தலையை சிரைத்தல் அல்லது குறைத்தல். அல்லாஹ் கூறுகிறான் {உங்களுடைய தலையை சிரைத்தவர்களாகவும், கத்தரித்துக் கொண்டவர்களாகவும் நுழைவீர்கள்} [பத்ஹ் - 27].

07-தவாபுல் வதாஃ : இப்னு அப்பாஸ் ரழி கூறினார்கள் «மனிதர்கள் இறுதி வணக்கமாக தவாப் செய்வது அவர்களின் காலத்தில் மாதவிடாய் பெண்களுக்கு இலகு படுத்துவதற்காக ஏவப்பட்டது»(ஆதாரம் முஸ்லிம்)

ஹஜ்ஜின் சுன்னத்கள்

01-இஹ்ராமுக்காக குளித்தல் மேலும் நறுமனம் பூசுதல்.

02-வெள்ளை நிற வேட்டியையும் போர்வையையும் அணிதல்.

03-இஹ்ராம் அணிந்ததில் இருந்து ஜமரதுல் அகபாவிற்கு செல்லும் வரை தல்பியா சொல்லுதல்

04-முப்ரதும், காரினும் தவாபுல் குதூம் செய்தல்.

05-தவாபுல் குதூமின் ஆரம்ப மூன்று சுற்றிலும் விரைந்து செயற்படுதல்

06-தவாபில் குதூமில் புஜத்தை வெளிப்படுத்தல்: போர்வையின் நடுப்பகுதியை வலது தோளின் கீழ் வைப்பார் இரண்டு ஓரத்தையும் இடது தோளின் கீழ் வைப்பார்

07-அரபா இரவு மினாவில் தரித்தல்

08-ஹஜருல் அஸ்வதை முத்தமிடுதல்

09-முஸ்தலிபாவில் இஷாவையும் மஃரிபையும் சேர்த்து முற்படுத்தி தொழுதல்.

10- முடியுமானால் பஜ்ரில் இருந்து சூரியன் உதயமாகும் வரை முஸ்தலிபா மஸ்அரில் ஹராமில் தரிப்பார். முடியாவிட்டால் முஸ்தலிபா எங்கிலும் தரிப்பார்

ஹஜ்ஜின் சுன்னத்கள்

யார் ஹஜ்ஜின் சுன்னத்திலுருந்து ஒன்றை விடுகிறாரோ அவர் மீது குற்றமில்லை. அவரது ஹஜ் சரியானதாகும்.

வாஜிபுல் ஹஜ்

யார் ஒரு வாஜிபை விடுகிறாரோ அவர் விட்ட குறைக்காக கட்டாயம் பரிகாரம் செய்ய வேண்டும்

8

உம்ராவின் அர்க்கான்களும் வாஜிப்களும் சுன்னதாகளும்

https://www.al-feqh.com/ta

உம்ராவின் ருகூன்கள்

01-இஹ்ராம் :

நபி ஸல் அவர்கள் சொன்னார்கள் «செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொருத்தே அமைகின்றன. ஒவ்வொருவருக்கும் அவர் எண்ணியதே கிடைக்கிறது. ஒருவரின் ஹிஜ்ரத் (துறத்தல்) உலகத்தைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தால் அதையே அவர் அடைவார். ஒரு பெண்ணை நோக்கமாகக் கொண்டால் அவளை மணப்பார். எனவேஇ ஒருவரின் ஹிஜ்ரத் எதை நோக்கமாகக் கொண்டதோ அதுவாகவே அமையும்»(ஆதாரம் புகாரி)

02-ஸபா மர்வாக்கு மத்தியில் தொங்கோட்டம்

ஓடுதல் நபி ஸல் அவர்கள் கூறினார்கள் « நீங்கள் தொங்கோட்டம் ஓடுங்கள் நிச்சயமாக அல்லாஹ் தொங்கோட்டத்தை கடமையாக்கியுள்ளான்» (ஆதாரம் அஹ்மத்).

03-தவாப்

அல்லாஹ் கூறுகிறான் {புனித கஃபாவை தவாவ் செய்யுங்கள்}[ஹஜ் – 29].

இஹ்ராம்

பொருளடக்கம்

உம்ராவின் ருகூன்கள்
உம்ராவின் வாஜிப்கள்
உம்ராவின் சுன்னத்க்கள்

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

உம்ராவின் வாஜிப்கள்

01-மிகாத்தில் இருந்து இஹ்ராம் அணிதல்.

மிகாத்தை சென்ன பிறகு நபி ஸல் அவர்கள் சொன்னார்கள் «அவைகளிடம் வேறு இடங்களில் இருந்து ஹஜ் உம்ராக்காக அவைகள் வருபவர்களுக்கானது»(ஆதாரம் புகாரி) என்றார்கள்

2-முடியை சிரைத்தல் அல்லது குறைத்தல்

அல்லாஹ் கூறுகிறான் {உங்களுடைய தலையை சிரைத்தவர்களாகவும், கத்தரித்துக் கொண்டவர்களாகவும் நுழைவீர்கள்.}[பத்ஹ் - 27].

உம்ராவின் சுன்னத்கள்

ருகூன்கள், வாஜிபுகள் அல்லாதவைகள் சுன்னத்கள் ஆகும். அவை பின்வருமாறு -

கவனத்திற் கொள்க

01-யாராவது உம்ராவுன் ருகுன்களில் ஒர் ருக்னை விட்டால் அதனை செய்யாமல் உம்ரா பூரணமாக மாட்டாது

02- யாராவது உம்ராவுன் வாஜிப்களில் ஒர் வாஜிபை விட்டால் அவர் பரிகாரம் செய்ய வேண்டும். வேண்டும் (ஒர் மாடு ஒர் ஆடு ஒர் ஒட்டகம்)

03- யாராவது சுன்னத்களில் ஒர் சுன்னத்தை விட்டால் அவர் மீது குற்றம் கிடையாது. அவருடைய உம்ரா சரியானதாகும்

குளித்தல்



முடியை சிரைத்தல் மேலும் குறைத்தல்

இஹ்ராம்

9

பித்யாவும் ஹத்யும் கொடுத்தல்

முதலாவது பித்யா

பித்யா

ஹஜ் செய்பவர் அல்லது உம்ரா செய்பவர் வாஜிபானதை அல்லது தடுக்கப்பட்டதை செய்தால் அவர் மீது கடமையாகும்

முதலாவது : வாஜிபை விட்டால் பித்யா கொடுப்பது

யார் உம்ராவுடைய அல்லது ஹஜ்ஜின் வாஜிப்களை விடுகிகாரோ முஸ்தலிபாவில் தரிப்பது, முடியை சிரைத்தல் இது போன்றவைகள். இவைகளை விட்டால் அவருக்கு தம்வு கொடுப்பது அவசியமாகும். தம்வு என்றால் (ஒட்டகத்தில் ஏழில் ஒரு பங்கும். மாடில் ஏழில் ஒரு பங்கும். இரண்டு வயது பூர்த்தியான ஆடு. *(என்றால் 1வருடம் பூரணமானது)* அல்லது செம்மறி ஆட்டின் குட்டியை *(ஆறு மாதங்கள் தாண்டியது)* ஹரத்திலே ஏழைகழுக்கு கொடுக்கப்படும்

முடியாமல் போனால் 10 நாளைகளுக்கு நோன்பு பிடிப்பார் 3நோன்புகள் ஹஜ்ஜிலும் 7வீட்டுக்கு வந்த பின்னர் பிடிப்பார். அல்லாஹ் கூறுகிறான் {அல்லது தர்மம் கொடுத்தல் வேண்டும்இ அல்லது குர்பானி கொடுத்தல் வேண்டும் பின்னர் நெருக்கடி நீங்கிஇ நீங்கள் சமாதான நிலையைப் பெற்றால் ஹஜ் வரை உம்ரா செய்வதின் சவுகரியங்களை அடைந்தோர் தனக்கு எது இயலுமோ அந்த அளவு குர்பானி கொடுத்தல் வேண்டும்; (அவ்வாறு குர்பானி கொடுக்க) சாத்தியமில்லையாயின்இ ஹஜ் செய்யும் காலத்தில் மூன்று நாட்களும்இ பின்னர் (தம் ஊர்) திரும்பியதும் ஏழு நாட்களும் ஆகப் பூரணமாகப் பத்து நாட்கள் நோன்பு நோற்றல் வேண்டும். இ(ந்தச் சலுகையான)துஇ எவருடைய குடும்பம் மஸ்ஜிதுல் ஹராமின் பக்கத்தில் இல்லையோ அவருக்குத் தான் - ஆகவே அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் வேதனை கொடுப்பதில் கடுமையானவன் என்பதை அறிந்து கொள்ளுங்கள்*[பகறா - 196].*

பொருளடக்கம்

பித்யா

பித்யாவின் வரைவிலக்கணம்

வாஜிபை விட்டதற்கான பித்யா

தடையை செய்த்தற்கான பித்யா

ஹத்யு

ஹத்யுவின் வரைவிலக்கணம்

ஹத்யுவின் வகைகள்

ஹத்யு பலியிடும் இடம்

ஹத்யு பலியிடும் நேரம்

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

இரண்டாவது :தடைகளை செய்த்தற்கான பித்யா

01-தைக்கப்பட்ட ஆடையை அணிந்ததற்கு, தலையை மூடியதெற்கு, நறுமணம் பூசியதற்கு, முடியை சிரைத்ததற்கு ,நகம்களை களைந்ததற்கு வழங்கப்படுவதை குறிக்கின்றது.

அவர்கள் பின்வரும் மூன்று விடயங்களில் ஒன்றை தெரிவு செய்து செய்வார்.

1-மூன்று நாள் நோன்பு

2- அறுபது ஏழைகழுக்கு உணவளிப்பது. ஒவ்வெருவருக்கும் அரை ஸாஃ அரிசி அல்லது அது போன்றது

3-ஆட்டை பலியிடுவது

அல்லாஹ் கூறுகிறான் {அல்லது தர்மம் கொடுத்தல் வேண்டும்இ அல்லது குர்பானி கொடுத்தல் வேண்டும் பின்னர் நெருக்கடி நீங்கிஇ நீங்கள் சமாதான நிலையைப் பெற்றால் ஹஜ் வரை உம்ரா செய்வதின் சவுகரியங்களை அடைந்தோர் தனக்கு எது இயலுமோ அந்த அளவு குர்பானி கொடுத்தல் வேண்டும்; (அவ்வாறு குர்பானி கொடுக்க) சாத்தியமில்லையாயின்இ ஹஜ் செய்யும் காலத்தில் மூன்று நாட்களும்இ பின்னர் (தம் ஊர்)திரும்பியதும் ஏழு நாட்களும் ஆகப் பூரணமாகப் பத்து நாட்கள் நோன்பு நோற்றல் வேண்டும். இ(ந்தச் சலுகையான) துஇ எவருடைய குடும்பம் மஸ்ஜிதுல் ஹராமின் பக்கத்தில் இல்லையோ அவருக்குத் தான் - ஆகவே அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் வேதனை கொடுப்பதில் கடுமையானவன் என்பதை அறிந்து கொள்ளுங்கள்[பகறா - 196]

மேற்சொன்ன 5 விடையங்களையும்வேண்டும் என்றோ அல்லது கஃப் ரழி செய்ததை போல தேவைக்கு செய்தாலோ அவர் பித்யா கொடுப்பார், யார் மறந்து செய்கிறாரோ அவருக்க் குற்றமில்லை

ஹத்யுவின் சட்டங்கள்

ஹாஜ்ஜிக்கு அவர் முதமத்தியாகவோ காரிநாகவோ இருந்தால் பலியிடுபவர்களின் ஹத்யை சாப்பிட முடியும். நபி ஸல் அவர்கள் சொன்னார்கள் பித்யா உழ்கியாவை போல கூலி வழங்கப்படமாட்டாது. நிச்சயமாக பித்யா என்பது முதமத்தீக்காகும். உழ்கிய்யா என்பது ஹாஜிக்கும் ஏனையவர்களுக்கும் சுன்னத்தாகும்.

போர்வையால் தலையை மறைத்தல்

தைக்கப்பட்ட ஆடை அணிவது

நறுமணம் பூசுதல்

நகம்களை வெட்டுதல்

முடியை சிரைத்தல்

https://www.al-feqh.com/ta

02-முதலாவது தடை நீங்கியதன் பின்னர் உடலுரவு அல்லது பெண்குறி அல்லாத இடத்தில் கட்டியனைத்தல்

இதுவும் முந்திய பித்யாவை போன்றது தான்

03-முதல் தடை நீங்க முன்னர் உடலுரவுக்கான பித்யா



ஒட்டகம்

ஒரு ஒட்டகத்தை (பதனா: ஒட்டகம்) பலியிட வேண்டும். அதனை பெறவில்லை என்றால் ஹஜ்ஜில் மூன்று நோனபும் ஏழு நோன்புகள் வீடு திரும்பியதும் பிடிப்பார். அவருடைய ஹஜ் வீணாகிவிடும். அதனை பூர்த்தி செய்வது கடமையாகும். அதனை அடுத்த வருடத்திற்குள் நிறைவேற்ற வேண்டும்.

4-உம்ராவிலே உடலுறவில் ஈடுபட்டால் அதற்கான பித்யா

ஆடு

ஒரு ஆடு. அவரின் அவரின் உம்ரா இல்லாமல் போய்விடும். அதனை மீட்டுவது அவசியமாகும்

5-வேட்டை பிராணியை கொலை செய்ததற்கான பித்யா

வேட்டைபிராணியை போன்றது. ஒன்றிருந்தால் அதைப்போன்ற ஒன்றை எடுப்பதற்கு விருப்பம் கொடுக்கப்படுவார். அல்லது அதன் பொறுமதிக்கு உணவு வாங்கி இரண்டு அள்ளாக (முத்கள்) (இரண்டு முத்துகள்: அரை சாஃ ஆகும் கிட்டத்தட்ட 1020 கிராம் ஆகும்) பிரித்து ஏழைகளுக்கு உணவு கொடுப்பார். அல்லது ஒவ்வோரு இரண்டு முத்துகளுக்கும் நோன்பு பிடிப்பார் .வேட்டை பிராணியை போன்றதின் நாட்டம் அது அல்ல அதைப் போன்றதாகும்.

உதாரணமாக - ஒரு எருமை மாட்டை கொன்றால் ஒரு ஒட்டகம் கொடுப்பது அவசியமாகும். ஏனென்றால் இரண்டும் ஒப்பானது ஆகும்.

அல்லது அதன் பொறுமதிக்கு உணவு வாங்கி முத்துகலாக பிரித்து ஏழைகளுக்கு இரண்டு முத்துகள் வீதம் உணவு கொடுப்பார். அல்லது ஒவ்வெரு இரண்டு முத்துகளுக்கும் நோன்பு பிடிப்பார் .ஒரு கழுதையை வேட்டையாடினாலும் அல்லது ஆடைடை வேட்டையாடினால் கூட மாட்டை பித்யா கொடுப்பார். இன்னும் அது போன்றது இல்லையென்றால் அல்லது அதன் பொறுமதிக்கு உணவு வாங்கி முத்துகலாக பிரித்து ஏழைகளுக்கு இரண்டு முத்துகள் வீதம் உணவு கொடடப்பார் அல்லது ஒவ்வெரு இரண்டு முத்துகளுக்கும் நோன்பு பிடிப்பார்.

ஹஜ்ஜிலும் உமராவிலும் திருமண உடன்படிக்கை கூடாது. அதற்கு பித்யாவும் கிடையாது.



https://www.al-feqh.com/ta

இரண்டாவதாக : ஹத்யு கொடுத்தல்

ஹத்யு கொடுத்தல்

இறைவனை நெருங்க ஹரத்திலே மிருகங்களில் இருந்து கொடுக்கப்படுகின்றது. அல்லது தமத்துவ், கிரான் இஹ்ஸாருக்காக கொடுக்கப்படுவது ஆகும்.

ஹத்யின் வகைகள்

01-தமத்துவ்க்கும் கிரானுக்கமான ஹத்யு

முதமத்திக்கும் காரினுக்கும் ஹத்யு கடமையாகும். அது ஒரு ஆடு அல்லது எழில் ஒரு பங்கு ஒட்டகம் அல்லது எழில் ஒரு பங்கு மாடு ஆகும். அதற்கு முடியாவிட்டால் பத்து நாளைக்கு நோன்பு பிடிப்பார் . மூன்று நோன்பு ஹஜ்ஜிலும் பத்து நோன்பு வீட்டிலும் பிடிப்பார். அவர் மக்காவாசியாக இருந்தால் அவருக்கு ஹத்யும் நோன்பும் கிடையாது. அல்லாஹ் கூறுகிறான் *{இ(ந்தச் சலுகையான) துஇ எவருடைய குடும்பம் மஸ்ஜிதுல் ஹராமின் பக்கத்தில் இல்லையோ அவருக்குத் தான்}* [பகறா - 196].

2-சுன்னத்தான ஹத்யு

முப்ரதான ஹாஜியும் உம்ரா செய்பவரும் சுன்னத்தாகவும், முதமத்தியும் காரினும் கடமைக்கு மேல் கொடுக்கின்ற ஒன்றாகவும் அல்லது இஹ்ராம் அணியாதவர் மக்காவிலே அல்லாஹ்வின் நெருக்கத்தை பெற கொடுப்பதாகும். பலியிடுவதாகும். நபியவர்கள் *«100 ஒட்டகங்களை நபி ஸல் அவர்கள் அன்பளிப்பாக கொடுத்தார்கள்»*(ஆதாரம் புகாரி)

இது சுன்னத்தான ஹதி, முதமத்தியும் காரினும் அதனை சாப்பிட முடியும். அவர்கள் அதனை உண்ணுவது சுன்னத்தாகும். நபி ஸல் அவர்கள் *«ஒட்டகத்தை சமைத்தும், அதன் சூப்பை குடிப்பதற்கும் ஏவினார்கள்»*(ஆதாரம் திர்மிதி)

03-ஹதயுல் இஹ்ஸார்

இஹ்ஸார் என்றால் உம்ராவையும் ஹஜ்ஜையும் அல்லது இரண்டையும் சேர்த்து செய்யமுடியாமல் போவதாகும்.

யார் உம்ராவுக்ோ அல்லது ஹஜ்ஜுக்கோ இஹ்ராம் அணிந்து கஃபாவிற்குல் நுழைவதை எதிரி தடுத்தால் அல்லது ஒரு விபத்தின் மூலம் நுழைய முடியாமல் போனால் அவர் அவ்விடத்திலே ஹத்யு கொடுத்து இஹ்ராமிலிருந்து நீங்குவார். அல்லாஹ் கூறுகிறான் *{குர்பான் கொடுக்க வேண்டும்}*[பகறா - 196]. ஹத்யுல் இஹ்ஸார் - ஓர் ஆடு அல்லது ஒட்டகத்தின் ஏழில் ஒரு பங்கு அல்லது மாட்டில் ஏழில் ஒரு பங்கு

ஹத்யு பலியிடுவதற்கான இடம்

தமத்துவுடைய கிரானுடைய சுன்னத்தான ஹத்யு ஹரத்தின் எல்லைக்குல் அறுப்பார். ஏழைகளுக்கு பிரித்து கொடுப்பார். ஹரத்திற்கு வெளியே பலியிட்டால் கூலி வழங்கப்பட மாட்டாது .

மேலும் ஹத்யுல் இஹ்ஸார் அவர் தடுக்கப்பட்டிருந்த இடத்தில் பலியிடுவார்

ஹத்யுவை பலியிடுவதற்கான நேரம்

01-தமத்து, கிரான், சுன்னத்தான ஹத்யு

அதனுடைய நேரம் பெருநாள் தொழுத்தில் இருந்து இறுதி அய்யாமுத்தஷ்ரிகின் சூரியன் மறையும் நேரமாகும்

அது பதின்மூன்றாவது நாளாகும்.

02-தடுக்கப்பட்டதற்கான ஹத்யு

அது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நேரங்களில் செய்யப்படும்

n.com/ta

https://www.al-feqh.com/ta

10 உழ்கிய்யா

பொருளடக்கம்

உழ்கிய்யாவின் வரைவிலக்கணம்
உழ்கிய்யாவின் சட்டம்
உழ்கிய்யா பலியிடும் நேரம்
உழ்கிய்யா கொடுப்பவர்கள்
உழ்கிய்யா கொடுப்பது சுன்னத்தானவர்கள்
உழ்கிய்யாக்களில் சிறந்தது
உழ்கிய்யாவின் குறைகள்
உழ்கிய்யாவின் பங்கு

உழ்கிய்யா

அல்லாஹ்வின் பொருத்தத்திற்காக பலியிடும் நாளில் அறுக்கப்படும் பிராணிகள்

உழ்கிய்யாவின் சட்டம்

அது வலியுருத்தப்பட்ட சுன்னத்தாகும். அல்லாஹ் கூறுகிறான் {இன்னும் அவனுக்காக அறுத்துப் பலிடுவீராக} [அல்கவ்தர் – 12].

அனஸ் ரழி கூறினார்கள்«நிச்சயமாக நபி ஸல் அவர்கள் கொம்புள்ள (அம்லஹ் என்றால் கறுப்பும் வெள்ளையும் வந்தது. ஆனால் வெள்ளை அதிகமாக இருக்கும்) இரண்டு ஆடுகளை (அக்ரன் என்றால் கொம்புள்ளது ஆகும்) உழ்கிய்யா கொடுத்தார்கள். பிஸ்மில் சொல்லி தக்பீர் சொனார்கள். அவைகளின் மேலில்(அது கழுத்திற்கு பக்கமாக உள்ள பகுதியாகும்.) கால் வைத்தார்» (ஆதாரம் புகாரி)

உழ்கிய்யா பலியிடுவதற்கான நேரம்

அதனுடைய நேரம் பெருநாள் தொழுததில் இருந்து இறுதி அய்யாமுத்தஸ்ரிகின் சூரியன் மறையும் நேரமாகும்.

(துல் ஹஜ் மாதம் 11 12 13வது நாள் ஆகும்)

உழ்கிய்யா கொடுக்கப்படுபவர்கள்

01- ஓர் ஆடு ஒரு மனிதனுக்கு கொடுக்கப்படும். அவரோடு விரும்பியவர்களை சேர்த்துக் கொள்ளலாம் நபி ஸல் அவர்கள் உழ்கிய்யாவை பலியிடும் போது «பிஸ்மில் சொல்லி முஹம்மதையும் முஹம்மதின் குடும்பத்தையும் முஹம்மதின் சமூகத்தையும் பொருந்திக்கொல்வாயாக». (புஹாரி முஸ்லிம்) என்றார்கள்

*02-*ஏழு பேருக்காக மாட்டையும் ஒட்டகத்தையும் வழங்கலாம். ஏழு பேர் மாட்டிலும் ஒட்டகத்திலும் சேர்ந்து கொள்ள முடியும். «நபி ஸல் அவர்கள் ஒட்டகத்திலும்(பதனா: ஆண் ஒட்டகம் அல்லது பெண் ஒட்டகம்) மாட்டிலும் ஒவ்வொரு ஏழு பேரையும் சேர சொன்னார்கள்». (ஆதாரம் முஸ்லிம்) என ஜாபிர் ரழி அவர்கள் அறிவிக்கிறார்கள்.

https://www.al-feqh.com/ta

உழ்கிய்யா கொடுப்பதில் சுன்னத்தானவர்கள்

1-ஆறு மாதம் வயதுடைய செம்பரி ஆடு.

2- ஒரு வயதுடைய நாட்டு ஆடு.

3-இரண்டு வயதுடைய மாடு.

4-ஐந்து வயதுடைய ஒட்டகம்.

உழ்கியாக்களில் மிக சிறந்தது

மிகச்சிறந்தது ஒட்டகத்தை பூரணமாக கொடுப்பது. அது பொறுமதி கூடியதானதும் ஏழைகளுக்கு மிக பிரயோசனமானதாகும். பின்னர் மாட்டை பூரணமாக கொடுப்பது. பின்னர் ஆடு. பின்னர் ஏழு பேர் சேர்ந்து ஓர் ஒட்டகம். பின்னர் ஏழு பேர் சேர்ந்து ஓர் மாடு ஆகும்.

உழ்கியாவின் குறைகள்

01-கொடுப்பதற்கு தடையுள்ள குறைகள் (கொடுப்பதற்கு தடையானது : உழ்கிய்யா கொடுக்க முடியாதது)

-குருடான மிருகம்

பார்வையில் குரையுள்ளது மேலும் பார்வையற்றது

-முடமான மிருகம்

நடக்க சக்தி அல்லாதது

-மெலிந்த மிருகம்

வேடிக்கையானது மூளை இல்லாதது

-நோயுள்ள மிருகம் என அறியப்பட்ட மிருகம்

அதற்கு ஆதாரம், பராஃ பின் ஆஸிப் ரழி அறிவிக்கிறார்கள். நிச்சயமாக நபி ஸல் அவர்கள் சொன்னார்கள் «கண்குருடான, நொண்டி, சுகயீணமுற்ற, மெலிந்த மிருகங்களை (மூளை அற்றது) உழ்கிய்யா கொடுக்கக் கூடாது" என்றார்கள் » (ஆதாரம் முஸ்லிம்) இப்படி குறையுற்றவற்றையும் அது போல உள்ளவைகளையும் குறிக்கின்றது.

https://www.al-feqh.com/ta

2-கொடுப்பதற்கு தடை அல்லாத குறைகள்

-வால் அற்றது

வால் அற்றது

-கொம்பு அற்றது

கொம்பு படைக்கப்படாதது

-விதை துண்டிக்கப்பட்டது

விதை துண்டிக்கப்பட்டதைக் குறிக்கும்

-காது கிழிந்தது, கொம்பு உடைந்தது.

உழ்கிய்யாவில் கொடுக்க முடியும், கொடுக்க முடியாது என்பதை போல தான் பித்யாவிலும் ஹத்யுவிலும் சொல்லப்படும் .

மூளை இல்லாதது



குருடானது

நொண்டியானது

கொம்பு உடைந்தது

கொம்பு இல்லாதது

வால் இல்லாதது

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta

உழ்கிய்யாவை பங்கு பிரித்தல்

அதற்கு சொந்தக்காரர் 1/3 பங்கை உண்ண முடியும். 1/3 பங்கை ஹத்யு கொடுப்பார். 1/3 பங்கை ஸதகா கொடுப்பார்.

அனைத்தையும் ஸதகா கொடுத்தாலும் கூடும். அதற்கு அதிகமாக உண்ணவும் முடியும்.

பயன்கள்

யார் உழ்கியாவை நாடுகிறாரோ அவர் 10 நளைக்கு அறுக்கும் வரையில் அவருடைய முடியையும் நகத்தையும் அவருடைய உடம்பில் இருந்து எடுக்கக் கூடாது.

உம்முஸலமா அவர்கள் சொன்னார்கள் நிச்சயமாக நபி ஸல் அவர்கள் சொன்னார்கள் «10 வது நாள் வந்து உங்களில் ஒருவர் உழ்கிய்யா கொடுக்க நாடினால் அவரின் உடம்பிலிருந்து எதையும் அகற்ற மாட்டார்» (ஆதாரம் முஸ்லிம்), உழ்கிய்யா கொடுப்பவரின் குடும்பம் உழ்ஹியாவை எடுப்பதற்கு தடை கிடையாது.

நட ப ன இணை யதளங கள

أكاديمية البلدة الطيبة
Balda Tayiba Academy

Imam Academy
أكاديمية الأئمة والخطباء

أكاديمية شيخ الإسلام ابن تيمية

حوّاء
أكاديمية

الهدى أكيدمي
Alhudaa academy

Al-Huda Academy

AIA
African Islamic Academy

AIA
African Islamic Academy

ইলম একাডেমি
2024

أكاديمية الإمامين
علم
ابن باز - ابن عثيمين

KAP
KNOWLEDGE ACADEMY
PHILIPPINES
2024

تدارس

جامعة ابن كثير الدولية
Ibn Kathir International University
of Humanities and Islamic Sciences